Registered as Newspaper




# உதயன்

பக்கங்கள் - 16+24 விலை 40 செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :294 புரட்டாதி 03ஆம் நாள் சனிக்கிழமை 19 செப்ரெம்பர் 2020 வள்ளுவர் ஆண்டு 2051

## மாவையின் முயற்சிக்கு விக்னேஸ்வரன் ஆதரவு!

### தமிழ் மக்கள் பேரவையில் இணையுமாறும் அழைப்பு

யாழ்ப்பாணம், செப். 19

ஜனநாயகம் மற்றும் மனிதநேய பண்புகளுக்கு கிஞ்சித்தும் இடமளிக்காமல் தற்போதைய அரசு மேற்கொண்டுவரும் தமிழ் மக்களுக்கு எதிரான அடக்குமுறைகளுக்கு எதிராக எல்லா அரசியல் கட்சிகளையும் ஒன்றுதிரட்டி எவ்வாறான எதிர்ப்பு நடவடிக்கைகள் மற்றும் போராட்டங்களை நடத்தலாம் என்று தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா 15 ▶

## ஓரணியில் தமிழ்த் தேசியக் கட்சிகள்



# ராஜபக்ச அரசுக்கு 3 நாள்கள் கெடு!

யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 19

போரில் இறந்த போராளிகள் மற்றும் மக்களை நினைவுகூருவதற்கு ராஜபக்ச அரசு விதித்துள்ள தடைகளை உடனடியாக நீக்க வேண்டும். நினைவுகூருவது தமிழ் மக்களின் உரிமை. அதற்கான தடையை நீக்கக் கோரி ராஜபக்சக்களுக்கு கடிதம் அனுப்பி வைக்கப்படும். மூன்று நாள்களுக்குள் சாதகமான பதில்கள் கிடைக்காவிடின், தமிழர் தாயகத்தில் ஜனநாயக ரீதியிலான தொடர் போராட்டங்கள் முன்னெடுக்கப்படும். இவ்வாறு தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் ஓரணியாக நேற்று அறிவித்தனர். 15 ▶

### பகிடிவதை விவகாரம்:

## 4 சிங்கள மாணவர்கள் உடனடியாக நிறுத்தம்

### ஒத்துழைப்பு வழங்கிய மாணவர்கள் விடுதியிலிருந்து வெளியேற்றம்

யாழ்ப்பாணம், செப்.19

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற சமூக ஊடகங்கள் ஊடான பாலியல் பகிடிவதையுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் இனம் காணப்பட்ட இரண்டு ஆண் மாணவர்களும், இரண்டு பெண் மாணவிகளும் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் இடைநிறுத் 14 ▶



## அரசியல் பின்னணியிலேயே பகிடிவதைகள் அரங்கேறின

### துணைவேந்தர் அதிர்ச்சித் தகவல்

யாழ்ப்பாணம், செப்.19

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற சமூக ஊடகங்கள் ஊடாக பாலியல் பகிடிவதைகளின் பின்னணியில் அரசியல் செயற்பாடுகள் இருக்கின்றன என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் எஸ். சிறிசற்குணராஜா தெரிவித்துள்ளார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நேற்றுக் காலை இடம் 15 ▶

## இந்திய றோலர் மோதியதில் உள்ளூர்ப் படகு மூழ்கியது!

### தெய்வாதீனமாக தப்பினர் மீனவர்கள்

யாழ்ப்பாணம், செப். 19

பருத்தித்துறை கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்ட உள்ளூர்ப் படகை, இந்திய இழுவைப் படகொன்று மோதி மூழ்கடித்துள்ளது. படகும் அதிலிருந்த வலைகளும் மூழ்கிய நிலையில் மீனவர்கள் மூவர் இன்னொரு படகின் 16 ▶

## கட்டைப்பிராயில் பஸ் மோதி பெண் ஒருவர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், செப்.19

யாழ்ப்பாணம் கட்டைப்பிராயில் நேற்று மாலை நடந்த விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். தனியார் பஸ்ஸும், மோட்டார் சைக்கிளும் 15 ▶

உள்ளே... குருதி

## முறைப்பாட்டை ஏற்பதற்கு கோப்பாய் பொலிஸ் மறுப்பு

யாழ்ப்பாணம், செப்.19

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பீடத்தில் கல்வி பயிலும் தென்பகுதியைச் சேர்ந்த மாணவர்கள் மீது இணையம் ஊடாக மேற்கொள்ளப்பட்ட பாலியல் பகிடிவதை தொடர்பில் யாழ்ப்பாணப்' 14 ▶

## சொல்ல முடியாதளவு மோசமான பகிடிவதை

யாழ்ப்பாணம், செப்.19

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினுள் இடம்பெற்றதாகச் சொல்லப்படும் சமூக ஊடகம் ஊடான பகிடிவதைகளைப் பொதுவெளியில் கூற முடியாது. அந்தளவுக்கு மோசமான பகிடிவதைகள், அவற்றைப் பகிடிவதைகள் என்று 15 ▶

## ஆளுங்கட்சி எம்.பிக்களுக்கு ஜனாதிபதி அவசர அழைப்பு

கொழும்பு, செப்.19

ஸ்ரீலங்கா பொதுஜனபெரமுனவின் நாடாளுமன்றக்குழுக் கூட்டம் எதிர்வரும் 21ஆம் திகதி ஜனாதிபதி கோத்தாபய 16 ▶

# வயலுக்குச் செல்கின்றபோது அச்சுறுத்தும் இராணுவத்தினர்

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் குற்றச்சாட்டு

வவுனியா, செப்.19

**வவுனியா வடக்கின் தனிக்கல்லு பகுதியில் அமைந்துள்ள வயல் நிலங்களுக்குச் செல்வதற்கு இராணுவத்தினர் அனுமதி மறுக்கின்றனர் என்று வயல் செய்கையாளர்கள் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் குற்றம் சாட்டினர்.**

வவுனியா வடக்கு பிரதேசத்தின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் கு.திலீபன் தலைமையில் நேற்று நடைபெற்றது. அதில் மேற்கண்டவாறு குற்றஞ்சாட்டினர்.

தனிக்கல்லு பகுதியில் அமைந்துள்ள எருக்கலம்பிலவு பகுதியில் 500 ஏக்கருக்கும் மேற்பட்ட வயல்நிலங்கள் நூறு வருடங்கள் பழமையானவை. பரம்பரையாகவுள்ள அந்த விவசாய நிலங்களுக்குச் செல்வதற்கு இராணுவத்தினர் அனுமதி மறுக்கின்றனர். காணி உறுதியை தந்தபின்னர் காணிக்குள் இறங்குமாறு இராணுவத்தினர் அச்சுறுத்தல் விடுக்கின்றனர். இதனால் இராணுவத்தினரின் கடுமையான நெருக்குவாரத்துக்குள் வயல் செய்கையாளர்கள் தள்ளப்பட்டுள்ளனர். தனிக்கல்லு பகுதி மாத்திரமன்றி எல்லைப்பகுதிகளிலுள்ள காணிகளிலும் இதே பிரச்சினை நிலவுகின்றது. வயலிலுள்ள சிறிய பற்றையை துப்புரவாக்குவதற்குச் சென்றாலும் காணியின் உறுதியை பிரதி எடுத்து இராணுவத்தினரிடம் கொடுத்தபின்னரே நாங்கள் வயலுக்குள் செல்ல அனுமதிக்கின்றனர். இந்த நிலைமை மாற்றப்படவேண்டும் என்று கோரினர்.

இந்த விடயம் தொடர்பாக எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பேச வருமாறு ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத் தவிசாளர் தெரிவித்தார். (த110)

## வங்காள விரிகுடாவில் வலுவடையும் தாழமுக்கம்

### மீனவர்களுக்கு எச்சரிக்கை

கொழும்பு,செப்.19

மத்திய, வடகிழக்கு மற்றும் கிழக்கு வழைகுடாவில் குறைந்த தாழமுக்க நிலை வலுவடைந்து வருகிறது. எனவே கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளவர்கள் அந்தப் பகுதியை விட்டு வெளியேறுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

கடற்றொழில் மற்றும் நீரியல்வளத் திணைக்களம் நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மத்திய, வடகிழக்கு மற்றும் கிழக்கு வங்காள விரிகுடா பிரதேசத்தில் வடக்கு அச்சரேகை 06 - 16 மற்றும் கிழக்கு அச்சரேகை 83 - 96 வலயத்துக்கு குறைந்த தாழ்வு வலயம் வலுவடைந்துள்ளது.

இந்தப் பிரதேசங்களில் கடும் காற்று வீசக்கூடிய நிலை உள்ளது. அதனால் பிரதேசத்தில் கடற்றொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள கடற்றொழில் படகுகள் அங்கிருந்து வெளியேறி, பாதுகாப்பான கடல் பிரதேசத்தை நோக்கிச் செல்லுமாறு ஆலோசனை வழங்கப்பப்பட்டுள்ளது.

நாட்டைச் சூழவுள்ள கடல் பகுதியில் காற்றின் வேகம் அடிக்கடி மணித்தியாலத்துக்கு 69- 70 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக்கூடும். இதன் காரணமாக கடற்றொழிலுக்காக செல்லும் மீனவர்கள் கவனம் செலுத்த வேண்டும் என்றும் அந்த அறிக்கையில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (க-இ)

## இழப்பீடு வழங்கும் சுற்றறிக்கை வடக்கு அலுவலர்களுக்கு வந்தது

யாழ்ப்பாணம்,செப்.19

கடமையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் போது காயங்களுக்கு உள்ளாகும் அரச உத்தியோகத்தர்களுக்கு இழப்பீடு வழங்குவது தொடர்பான சுற்றறிக்கை வடக்கு மாகாண பிரதம செயலாளர் செயலகத்தால் திணைக்களத் தலைவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும்போது காயத்துக்கு உள்ளாகும். அரச உத்தியோகத்தர்களுக்கான நட்ட ஈட்டுக்கு விண்ணப்பிக்கும்போது 22/93 அரச நிர்வாகச் சுற்றறிக்கை மற்றும் அதன் திருத்தங்கள் தொடர்பாக காலத்துக்குக் காலம் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகள் முழுமையாகப் பின்பற்றப்படல் வேண்டும்.

கடமையின்போது காயத்துக்கு உள்ளாகும் மாகாண அரச சேவையைச் சேர்ந்த அலுவலர்கள் இழப்பீடு பெற்றுக் கொள்வதற்கு மாகாண இழப்பீட்டுக் குழுவின் அனுமதி பெறப்படல் வேண்டும், மரணமடையும் போது அல்லது முழுமையாக இயலாமைக்கு உள்ளாகும்போது மேற்படி மாகாண இழப்பீட்டுக் குழுவின் அனுமதியைப் பெற்றதன் பின்னர் இழப்பீடு தொடர்பான மேலதிக நடவடிக்கைகளுக்காக முழுமையான ஆவணங்கள் யாவும் பொது நிர்வாக அமைச்சின் இழப்பீட்டுக் குழுவுக்கு அனுப்புதல் வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-9)

## 25 பேருக்கு பி.சி.ஆர் பரிசோதனை

யாழ்ப்பாணம், செப்.19

கைதடி அரச முதியோர் இல்லத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் 25 பேருக்கு கொரோனா பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இப்பரிசோதனை யாழ். போதனா வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்டது.பரிசோதனையின்போது எவருக்கும் தொற்று இல்லை என்று உறுதிப்படுத்தப்பட்டது.

வெளியிடங்களிலிருந்தும் பல முதியவர்கள் இந்த இல்லத்தில் இணைந்துள்ளனர். இதனையடுத்து அவர்களுக்கு மிகவும் நெருக்கமாக சேவையாற்றும் பணியாளர்களுக்கே பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. முதியோர் இல்லத்தில் சுகாதார நடவடிக்கைகள் தொடர்ந்தும் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு வாரமும் இலங்கை செஞ்சிலுவை சங்கத்தால் மருந்து விசிறி தொற்று நீக்கம் செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-17)

## அரசுடைமையானது மரக்கடத்தல் வாகனம்

சாவகச்சேரி,செப்.19

அனுமதிப்பத்திரமின்றி மரங்கள் கடத்திய வாகனம் சாவகச்சேரி நீதிமன்றால் அரசுடைமையாக்கப்பட்டது. 2017 ஆம் ஆண்டு அனுமதிப்பத்திரமின்றி மரங்கள் கடத்தினர் எனக் குற்றஞ்சாட்டி, சாவகச்சேரி பகுதியைத் சேர்ந்த நபருக்கு எதிராக பொலிஸாரால் சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. வழக்கு விசாரணை நடைபெற்று வந்தது. இந்த வழக்கின் தீர்ப்பு நேற்று வாசிக்கப்பட்டது. வாகனத்தை அரசுடைமையாக்குமாறு நீதிமன்றால் உத்தரவிடப்பட்டது. (க-9)

## ரயில் முன் பாய்ந்து முகாமையாளர் சாவு

கொழும்பு, செப். 19

பிரபல நிதி நிறுவனம் ஒன்றின் அநுராதபுர கிளை முகாமையாளராக இருந்த அதிகாரி ரயில் முன் பாய்ந்து உயிர்மாய்த்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு கோட்டையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி நேற்றுப் பயணித்த யாழ்.தேவி எக்ஸ்பிரஸ் ரயில் முன்பாக பாய்ந்து உயிர்மாய்த்தார் என்று தெரிவிக்கப்பட்டது. அவருக்கு வயது 37. சடலம் மதவாச்சி ரயில் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டது. பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (தஇ)

## துப்பாக்கியுடன் ஒருவர் கைது


பன்றிகெய்தகுளத்தில் சட்டவிரோதே துப்பா க்கியுடன் ஒருவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

வீட்டில் சட்டவிரோதமாகத் துப்பாக்கியை (இடியன்துவக்கு) மறைத்து வைத்துள்ளனர் என்று ஓமந்தை பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.உபபொலிஸ் பரிசோதகர் அருளானந்தம் தலைமையிலான குழுவினர் அந்த வீட்டில் சோதனையிட்டு, துப்பாக் கியை மீட்டனர். (க-110)

### உயிரைப் பணயம் வைத்த சேவை;

## பொதுசுகாதார பரிசோதகர்களுக்கு வழங்கப்பட்டன மோ.சைக்கிள்கள்

### பட்டம் வழங்கவும் நடவடிக்கை என ஜனாதிபதி தெரிவிப்பு



கொழும்பு, செப். 19

ஆபத்தான சூழ்நிலையாக இருந்த கொவிட் 19 நோய்த் தொற்று காலத்தில் உயிரை பணயம் வைத்து செயலாற்றிய பொது சுகாதார பரிசோதகர்களுக்கு ஜனாதிபதியால் அடையாள ரீதியாக உத்தியோகபூர்வ மோட்டார் சைக்கிள்கள் வழங்கும் நிகழ்வு ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது.

2015 ஆம் ஆண்டு தொடக்கம் பொது சுகாதார பரிசோதகர் எவருக்கும் மோட்டார் சைக்கிள் வழங்கப்படவில்லை.

சேவைக் காலத்தில் மோட்டார் சைக்கிள் கிடைக்காத, நாடு முழுவதும் தெரிவுசெய்யப்பட்ட 26 சுகாதார மருத்துவ பிரிவுகளில் சேவையாற்றுகின்ற 749 பொது சுகாதார பரிசோதகர்களுக்கும் முதன்மை அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்ட மேலும் 56 பொது சுகாதார பரிசோதகர்களுக்கும் மோட்டார் சைக்கிள்கள் வழங்கி வைக்கப்பட்டன.

பொது சுகாதார பரிசோதகர்களை இணைத்துக்கொள்ளும்போது 2 வருடங்கள் முழுமையான பயிற்சிநெறிக்கு உள்வாங்கப்படுவர். பயிற்சிக் காலத்தை நீடித்து பட்டமொன்றை பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பத்தையும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுடன் கலந்துரையாடி ஏற்படுத்தித் தருவேன் என்று நிகழ்வில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்தார். (த)

## பத்திரிகை விநியோகத்தர் மீது நேற்று அதிகாலை வாள்வெட்டு

யாழ்ப்பாணம், செப். 19
யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் பத்திரிகை யொன்றின் விநியோகப் பணியில் ஈடுபட்டிருந்த வரை வழிமறித்த கும்பல், அவரை வாளால் வெட்டிவிட்டு அவருடைய தொலைபேசி, பணப்பை, மோட்டார் சைக்கிள் என்பனவற்றைப் பறித்துச் சென்றுள்ளது.
இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை 4.30 மணி யளவில் இடம்பெற்றுள்ளது. கோண்டாவிலைச் சேர்ந்த பாலசந்திரன் மதனகரன் (வயது 43) என்பவரே வாள்வெட்டுக்கு இலக்காகி தெல்லிப் பழை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். சுன்னாகம் பொலிஸார் மேலதிக விசாரணை களை மேற்கொண்டு வருகின்றனர். (ம-26)

வடமாகாணத்தில்

# 22 முகாம்களில் வாழ்கின்ற 409 குடும்பங்களுக்கு வீடுகள்

ஜனாதிபதி பரிந்துரை



கொழும்பு, செப். 19
வடமாகாணத்தில் 22 முகாம்களில் வாழ்கின்ற 409 குடும்பங்களுக்கு வீடுகளை அமைத்து மீண்டும் உடனடியாக அவர்களைக் குடி யேற்றுவதற்கு அவசியமான நடவ டிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பரிந்துரைத்துள்ளார்.
கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மா ணத்துறை மற்றும் கட்டடப் பொருள்கள் தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் எதிர்கால திட்டங்கள் தொடர்பாக நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந் துரையாடலிலேயே ஜனாதிபதி இவ்வாறு பரிந்துரைத்துள்ளார் என்று அவரின் ஊடகப்பிரிவால் அனுப்பிவைக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டு ள்ளது. (ம-இ)



## அமெரிக்கத் தூதுவர் சபாநாயகருடன் சந்திப்பு

கொழும்பு,செப்.19
இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலெய்னா டெப்லிட்ஸ், சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர் தனவை நேற்றுச் சந்தித்தார்.
நாடாளுமன்றத்திலுள்ள சபாநாயகரின் அலுவலகத் தில் சந்திப்பு இடம்பெற்றது.
சந்திப்பில் அமெரிக்காவின் இலங்கைக்கான வதி விடப் பிரதிநிதி ஜெப்ரி சனின் மற்றும் 11 அமெரிக்கத் தூதரகத்தின் அரசியல் அதிகாரி மற்றும் நாடாளு மன்றச் செயலாளர் நாயகம் தம்மிக்க தஸநாயக்க ஆகியோரும் கலந்து கொண்டனர். (க-இ)

## பாதுகாப்பு உறுதியாகும் வரை விமான நிலையங்கள் திறக்கா



கொழும்பு, செப். 19
இலங்கையில் சுகாதாரப் பாதுகாப்பு நூறு வீதம் உறு திப்படுத்தப்படும் வரையில், நாட்டிலுள்ள விமான நிலை யங்கள் திறக்கப்படா என சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரி வித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததா வது:
இலங்கையில் கொரோனா வைரஸை முற்றாக ஒழிப்ப தற்கு சுகாதாரத் தரப்பினர் வேலைத்திட்டங்களை முன் னெடுத்து வருகின்றனர்.
இதன்படி நாட்டில் வாழும் 2 கோடியே 20 இலட்சம் மக்க ளின் சுகாதாரப் பாதுகாப்பு நூறு வீதம் உறுதிப்படுத்தப்பட்டு, அது தொடர்பாக சுகாதாரத் தரப்பினர் ஆலோசனைகளை வழங்கும் வரையில் விமான நிலையங்களைத் திறக்க எண் ணவில்லை - என்றார்.
கொரோனாப் பெருந்தொற் றைத் தொடர்ந்து கடந்த மார்ச் மாதம் முதல் இலங்கையில் விமான நிலையங்கள் மூடப்பட் டன. இந்தக் காலப்பகுதியில் வெளிநாடுகளிலுள்ள இலங் கையர்களை மாத்திரம் நாட் டுக்கு அழைத்துவரும் நடவடிக் கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக் கது. (ம-இ)

## பாதுகாக்கப்பட்ட பகுதிகளாக 25 வனங்கள்!

கொழும்பு, செப். 19
நாட்டில் பாதுகாக்கப்பட்ட பகுதிக ளாக 25 வனப்பகுதிகளை வர்த் தமானியில் அறிவிப்பதற்கு வனப் பாதுகாப்புத் திணைக்களம் தீர்மானித்துள்ளது.
அநுராதபுரம், மொனராகலை, காலி மற்றும் குருணாகல் ஆகிய மாவட்டங்களில் காணப்படும் வனப்பகுதிகள் இதில் பெயரிடப் பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட் டுள்ளது.
இந்த நிலையில் 73 ஏக்கர் நிலப் பரப்புக்கும் அதிகளவான பகுதி இவற்றில் உள்ளடக்கப்பட்டுள்ள தாக வனப் பாதுகாப்பு திணைக் களத்தின் பணிப்பாளர் நாயகம் வேரகொட தெரிவித்துள்ளார்.
எதிர்வரும் இரண்டுவார காலப்ப குதிக்குள் குறித்த வர்த்தமானி வெளியிடப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-இ)

## சுகாதாரப் பாதுகாப்பு வழிமுறைகளை பின்பற்றாமை இலங்கைக்கு ஆபத்து

இராணுவத் தளபதி



கொழும்பு, செப்.19
கொவிட்19 சுகாதாரப் பாதுகாப்பு வழிமுறைகளைப் பின்பற்றா மல் பொதுமக்கள் நடந்துகொள் வது இலங்கைக்குப் பாரதூரமா னது என்று இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.
இராஜகிரியவிலுள்ள கொரோ னாக் கட்டுப்படுத்தல் தேசிய செயற்பாட்டு மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததா வது: நாட்டில் சமூகத்தினுள் வைரஸ் தொற்றுக்குள்ளானவர் கள் இனங்காணப்படாவிட்டா லும் வெளிநாடுகளிலிருந்து வருகை தரும் பெரும்பாலான வர்கள் தொற்றுக்குள்ளாகியுள் ளமை இனங்காணப்படுகிறது.
எனினும் சமூகத்தில் தொற்றா ளர்கள் இனங்காணப்படாவிட் டாலும் வைத்தியசாலைகளில் நூற்றுக்கணக்கானோர் சிகிச்சை பெற்று வருகின்றனர். பொதுமக் கள் இந்த நிலைவரத்தை மறந்து சுகாதாரப் பாதுகாப்பு வழிமுறைகளைப் பின்பற்றா மல் நடந்து கொள்வது பாரதூர மானதாகும் -என்றார். (ம-இ)

## பதவியைத் துறந்தார் விக்னேஸ்வரன்



யாழ்ப்பாணம், செப். 19
தமிழ் மக்கள் பேரவை யின் இணைத்தலைவர் பதவியில் இருந்து சி.வி. விக்னேஸ்வரன் விலகியுள்ளார். தமிழ் மக்கள் பேரவையை ஒரு வெகுஜன அமைப் பாகவும் பரந்துபட்ட அமைப்பாகவும் உருவாக் கும், மாற்றும் நோக்கத்துடன், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ் வரன், பேரவையின் இணைத்தலைவர் பதவி யில் இருந்து விலகியுள்ளார்.
தமிழ் மக்கள் பேரவையை மீள வலுப்படுத்தவும், மீளவும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உள் ளிட்ட கட்சிகளை உள்ளெடுக்கவும் இந்த முடிவை விக்னேஸ்வரன் எடுத்துள்ளார் என்று கூறப்படுகின்றது.
விக்னேஸ்வரன் மட்டுமல்லாமல், கடந்த தேர்த லில் ஏதாவதொரு கட்சியுடன் தம்மை அடையா ளப்படுத்திய பேரவையின் ஏனைய உறுப்பினர் களும் பதவி விலகவுள்ளனர். (ஒ.இ)

## நியூ டயமண்ட் கப்பல்கப்டனுக்கு அழைப்பாணை

கொழும்பு, செப்.19
தீ விபத்துக்குள்ளான எம்டி நியூ டயமண்ட் கப்பலின் கப்டனை கொழும்பு கோட்டை நீதிவான் நீதி மன்றில் ஆஜராகுமாறு அழைப் பாணை அனுப்பப்பட்டுள்ளது.
கொழும்பு மேலதிக நீதிவான் பிரியந்த லியனகே செப்ரெம்பர் 28 ஆம் திகதி கேப்டனை நீதிமன் றத்தில் ஆஜராகுமாறு உத்தரவிட் டுள்ளார். குற்றப்புலனாய்வுப் பிரிவி னர் மற்றும் சட்டமா அதிபர் திணைக் களத்தின் கோரிக்கையை பரிசீலித்த பின்னரே இந்த உத்தரவு பிறப்பிக் கப்பட்டுள்ளது. கப்பலின் கேப்டன் தற்போது காலியில் உள்ள கொரோனா தனிமைப்படுத்தல் நிலையத்தில் தனிமைப்படுத்தலில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-இ)

# அரச, தனியார் துறைகளுடைய திறனின்மை பெரும் பிரச்சினை

## அபிவிருத்தி புரட்சிக்கு தயாராகுமாறு ஜனாதிபதி உத்தரவு

- மாவட்ட ரீதியாக 1500 புதிய வீடுகள்
- வீட்டை கொள்வனவு செய்வதற்கு நீண்டகால கடன்
- குறைந்த வருமானமுடைய 70,100 குடும்பங்களுக்கு வீட்டு வசதி



கொழும்பு, செப். 19
தனது அவதானத்தின்படி நாட்டில் உள்ள பொதுவான பிரச்சினை எவரும் தமது பணிகளை சரிவர செய்யாதிருப்பதாகும் என்று தெரிவித்த ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, அரச, தனியார் துறைகளில் காணப்படுகின்ற மந்தகதியிலான செயற்பாடுகள் கவலைக்குரிய விடயமாகும் என்றும் குறிப்பிட்டார்.
கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை மற்றும் கட்டடப்பொருள்கள் தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் எதிர்கால திட்டங்கள் தொடர்பாக நேற்று பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டார் என்று அவரின் ஊடகப்பிரிவு அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.
அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:
'அனைத்து குடும்பங்களுக்கும் வசதியான வீடு' பெற்றுக்கொடுப்பது 'சுபீட்சத்தின் நோக்கு' கொள்கைப் பிரகடனத்தின் எதிர்பார்ப்பாகும். வீடொன்றின் தேவை இருந்தாலும் அதனை தனியாக நிறைவு செய்து கொள்ள முடியாமை பெரும்பாலானவர்களுக்கு உள்ள பிரச்சினையாகும். நகர, கிராமிய மற்றும் தோட்ட மக்களின் வீட்டுத் தேவையை தீர்க்க வேண்டியது அவர்களின் வாழ்க்கைத் தரம் உயர்வடையும் வகையிலேயாகும் என்று ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டார்.
'உங்களுக்கு வீடு நாட்டுக்கு எதிர்காலம்' எண்ணக்கருவை அடிப்படையாகக்கொண்டு தனது அமைச்சு ஏற்கனவே கிராம சேவையாளர் பிரிவுகள் ரீதியாக குறைந்த வருமானமுடையவர்களுக்கு 14 ஆயிரத்து 22 வீடுகளை நிர்மாணித்து வருவதாக இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த குறிப்பிட்டார். இத்திட்டத்தின் கீழ் ஐந்து வருடங்களில் 70 ஆயிரத்து 100 வீடுகளை நிர்மாணிக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது.
ஒக்டோபர் 5ஆம் திகதி கொண்டாடப்படுகின்ற உலக குடியிருப்பு தினத்திற்கு இணையாக 'சிறந்த தொடர்மாடி வீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வெரெல்லவத்த, மிஹிந்துபுர, பறங்கியாகும்புர, தஹய்யாகம, மத்தேகொட, சொய்சாபுர மற்றும் தங்கல்ல நகரை மையப்படுத்திய வகையில் ஆயிரத்து 500 வீடுகளை நிர்மாணிப்பதற்கு திட்டமிட்டுள்ளதாகவும் இந்திக்க அனுருத்த மேலும் குறிப்பிட்டார்.
அனைத்து நிர்மாணப் பணிகளுக்கும் அரச, தனியார் தரப்பினரையும் இணைத்துக்கொள்வதன் முக்கியத்துவம் பற்றி ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். வீட்டை கொள்வனவு செய்வதற்கு 6.25 வீத வருடாந்த வட்டி வீதத்தில் 30 வருட காலத்திற்குள் செலுத்தும் வகையில் அரச வங்கி மூலம் கடன் வழங்குவதற்கு பொறிமுறை ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. மத்திய வகுப்பினரின் வருமானத்திற்கு ஏற்ற தொடர்மாடி வீடுகளை நிர்மாணிப்பதற்கு அவசியமான காணிகள் அமைச்சுக்கு இலவசமாக வழங்கப்படுமென்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.
நாடு முழுவதும் ஐந்து இலட்சத்து இருபத்தாறாயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு மலசலகூட வசதி இல்லை என்று சுட்டிக்காட்டிய பொருளாதார புத்தெழுச்சி தொடர்பான ஜனாதிபதி செயலணியின் தலைவர் பசில் ராஜபக்ச, சுகாதார வசதிகளை வழங்குவதை துரிதப்படுத்துமாறு குறிப்பிட்டார். ஜனாதிபதியின் செயலாளர் பீ.பி.ஜயசுந்தர, அமைச்சுக்கள் மற்றும் இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்கள், துறைசார் நிறுவனங்களின் பிரதானிகள் மற்றும் நிர்மாணத்துறை ஊழியர்கள், முதலீட்டாளர்கள் உள்ளிட்ட பலர் இக்கலந்துரையாடலில் கலந்து கொண்டனர் .என்றுள்ளது. (ம-இ)



# மூலிகை மரங்கள் நடுகை ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப்.19
மூலிகையினால் தன்னிறைவு என்ற ஜனாதிபதியின் கோரிக்கைக்கிணங்க நேற்றைய தினம் நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் மூலிகை மரங்கள் நடும் வேலைத்திட்டம் சுதேச மருத்துவ திணைக்களத்தினரால் நடைமுறைப்படுத்தப்பட்டது.
இந்த வேலைத்திட்டம் யாழ்ப்பாண மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ம.பிரதீபன் தலைமையில் இடம்பெற்றது. இதனடிப்படையில், யாழ்ப்பாண மாவட்ட செயலகத்திலும் நேற்றுமுன்தினம் மூலிகை மரங்கள் நடப்பட்டன.
வடக்கு மாகாணம் முழுவதும் சமூக மருத்துவ உத்தியோகத்தர்களினால் ஒவ்வொரு திணைக்களங்கள் மற்றும் பாடசாலைகள் வாயிலாக மூலிகை மரங்கள் நடும் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.
ஜனாதிபதியினால் மூலிகை வாரமாக அறிவிக்கப்பட்டதற்கு இணங்கவே இந்தச் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டது. எனினும் இது தொடர்ச்சியாக வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படும். மூலிகை தொடர்பாக பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் எமது பிரதான நோக்கம் என்று ஆயுள்வேத திணைக்கள ஒருங்கிணைப்பாளர் கா.நடராசா தெரிவித்துள்ளார். (ற-20)



# பயிற்சிப் பட்டறை

கிளிநொச்சி, செப். 19
பிரதேச அபிவிருத்திக்கான திட்டமிடல் பயிற்சிப் பட்டறை ஒன்று கடந்த புதன், வியாழக்கிழமைகளில், கிளிநொச்சி நண்பர்கள் விடுதியில் நடத்தப்பட்டது. ஐரோப்பிய ஒன்றிய நிதி அனுசரணையுடன் அபிவிருத்திக்கான உதவு ஊக்க இலங்கை மையம் நிறுவனம் இந்தப் பயிற்சிகளை வழங்கியது.
இதில் கண்டாவளை பிரதேச சமூக மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகளும், சிவில் சமூக மட்ட அமைப்பின் ஒன்றியப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். (ப-21)

# பளை ஆரம்பப் பாடசாலைக்கு அச்சுப் பதிக்கும் இயந்திரம்

கிளிநொச்சி, செப்.19
பளை, கச்சார்வெளிப் பகுதியைச் சேர்ந்த மறைந்த நா. பூபாலசிங்கம் ஞாபகார்த்தமாக அவரின் பிள்ளைகளினால் பளை இந்து ஆரம்ப வித்தியாலயத்துக்கு அச்சுப் பதிக்கும் இயந்திரம் ஒன்று கடந்த புதன்கிழமை வழங்கப்பட்டது.
இதன்போது 12 வெள்ளைப் பலகைகளும் கையளிக்கப்பட்டன. இந்த இயந்திரம் மற்றும் வெள்ளைப் பலகைகள் பாடசாலை அதிபரிடம் அவரின் பிள்ளைகளால் கையளிக்கப்பட்டது. (ற-6)



# நாட்டின் சந்தையில் வாகனங்கள் பற்றாக்குறை

கொழும்பு.செப்.19
தற்போது 5 சதவீத வாகனங்கள் மாத்திரம் சந்தையில் விற்பனைக்கு உள்ளன என்று இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் இன்டிக சம்பத் மெரஞ்சீஜ் தெரிவித்துள்ளார். எதிர்வரும் மாதங்களுக்கு விற்பனை செய்வதற்குப் போதுமான வாகனங்கள் சந்தையில் இல்லை. சுமார் இரண்டு வருடங்களுக்கு வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட மாட்டாது என்று அதிகாரிகள் அறிவித்தனர். அதனால் வாகனங்களின் விலைகள் அதிகரிக்கும், கொள்வனவு செய்வது கடினம் என்ற அனுமானத்தின் அடிப்படையில், சந்தையில் வாகனங்கள் விரைவாக விற்பனை செய் யப்பட்டுள்ளன என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (க-இ)

# பளை மருத்துவமனையில் இலவச உடற் பரிசோதனை

பளை செப் 19
பளைப் பிரதேச மருத்துவமனையில், பொதுமக்களுக்கான உடற் பரிசோதனைகளை நடத்த கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார். இதன் பிரகாரம் பிராந்திய மருத்துவக் குழுவினர் பிரதி வியாழக்கிழமைகளில் பளை மருத்துவமனைக்கு வருகை தரவுள்ளதால் பிரதேச மக்கள் குறித்த தினங்களில் இலவசமாக உடற் பரிசோதனைகளை மேற்கொள்ள முடியுமென அவர் அறிவித்துள்ளார். இதேவேளை பிரதேச செயலகத்தினர், பிரதேச சபையினர் உரிய விண்ணப்பங்களை அனுப்பி வைத்தால் அந்தந்த அலுவலகத்தில் பரிசோதனைகளை மேற்கொள்ள முடியுமெனவும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவித்துள்ளார். பளைப் பிரதேச மருத்துவமனைப் பொறுப்பதிகாரியின் ஏற்பாட்டில் விசேட மருத்துவ நிபுணர்கள் வருகை தந்து சிகிச்சை வழங்க முன் வந்துள்ளனர். பொதுமக்கள் மருத்துவமனைப் பொறுப்பதிகாரியுடன் தொடர்பு கொண்டு மருத்துவ நிபுணர்களின் சேவைகளைப் பெற்றுக் கொள்ள முடியுமெனவும்அறிவிக்கப்பட்டுள்ளது. (ப -9)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## திலீபனின் பெயரால்

'நீ பெரிது நான் பெரிது என்று வாழாமல்' இனமே பெரிதென்று தமிழ் அரசியல் கட்சிகள் ஒன்றுபட வேண்டுமென்று ஆசிரியர் தலையங்கத்தில் கூறியிருந்தோம். அதற்கான பதிலாக ஒரு மிகப்பெரிய சாதகப்புள்ளி நேற்றே வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. தியாகதீபம் திலீபனின் 33 ஆவது நினைவேந்தலுக்கு பொலிஸார் நீதிமன்றத்தின் ஊடாக தடை உத்தரவு வாங்கியிருந்தனர். இதனால் தமிழர் தேசத்தில் இம்முறை திலீபனை நினைவுகூர முடியாத நிலை உருவாகியிருந்தது. தடையை மீறி நினைவேந்த முயன்ற சிவாஜிலிங்கம் கைதுசெய்யப்பட்டு கடும் எச்சரிக்கையோடு விடுவிக்கப்பட்டிருந்தார். இந்த நிலையில் தான் எங்களுக்காக போராடி அகிம்சை வழியில் உயிர் நீத்த ஒருவரை அஞ்சலிப்பதற்கான உரிமையை மறுத்ததைக் கண்டித்தும் நினைவேந்தலுக்கான மாற்றுவழியைக் கண்டுபிடிப்பதற்குமாக சகல கட்சிகளையும் கூட்டமைப்புத் தலைவர் மாவை கடந்த 15ஆம் திகதி அழைத்திருந்தார். ஆனால் அன்றைக்கு வழக்கம் போல தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளே அதில் கலந்து கொண்டிருந்தன. எனவே திலீபனின் நினைவேந்தலை ஒரு ஆரம்பப் புள்ளியாகக் கொண்டு தமிழ்த் தேசியக் கட்சிகள் மீண்டும் ஓரணியில் திரளும் என்ற நம்பிக்கை அந்தக் கூட்டத்தோடு கருகத் தொடங்கியது.

குறித்த கூட்டத்தில் மீண்டும் செப்டெம்பர் 18 ஆம் திகதி கூடுவதென முடிவெடுக்கப்பட்டிருந்தது. ஆனாலும் இதன்போதும் அதே பழைய பல்லவியாக கூட்டமைப்பைத் தவிர ஏனைய கட்சிகள் பங்குபற்றாது என்றே எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் நேற்று அதிசயம் நிகழ்ந்தது. முன்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பெரு வீட்டிலிருந்து சிலபல காரணங்களால் பிரிந்து சென்ற அத்தனை கட்சிகளும் ஓரணியில் திரண்டன. சுரேஷ்பிறேமச்சந்திரன் தொடக்கம் அனந்தி வரை யாரெல்லாம் கூட்டமைப்பை விட்டு வெளியேறினார்களோ அவர்களையெல்லாம் மீண்டும் ஒரே அணியில் பார்ப்போம் என்று யாருமே எண்ணியிருக்கவில்லை. ஆனால் திலீபனின் பெயரால் அவர்கள் ஒன்றிணைந்துள்ளார்கள்.

தனியே திலீபனின் நினைவேந்தலுக்காக மட்டும் இந்தக் கூட்டு அமையக்கூடாது என்பதே ஒவ்வொரு தமிழ் மகனதும் வேண்டுதலாக இருக்கிறது. எப்படி புலிகளின் காலத்தில் தமிழ்த் தேசியத்தின் ஏக குரலாக கூட்டமைப்பு 'கெத்தோடு' வலம் வந்ததோ அதே போன்று மீண்டும் வலம் வருவதற்கான பிள்ளையார் சுழியாக நேற்றைய கூட்டம் அமைந்ததால் அதைவிடப் பேரானந்தம் வேறெதுவும் இல்லை. பிரிந்தவர் கூடினால் பலம் தானே வரும். பின்னர் ஒவ்வொரு விடயத்துக்கும் "இந்தப் படை போதுமா? இன்னும் கொஞ்சம் வேணுமா?" என்று பேரினவாதிகளைப் பார்த்து ஒரே குரலில் நாமும் திமிரோடு கேட்க முடியும். ஆனாலும் ஒரு சிறு உறுத்தல். தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி மட்டும் வழக்கம்போல தங்கள் வழி என்பதாக நினைத்து இந்தக் கூட்டத்தில் ஒன்றினணயவில்லை. அவர்களும் இந்தக்கூட்டத்தில் இணைந்துவிட்டால் திலீபனின் பெயரால் மீண்டும் தமிழ்த்சிதேசிய கனவு பேருருக் கொள்ளும். சிங்கள மேலாதிக்கவாதம் புத்தரின் பெயரால் எங்கள் தேசத்தையும் உரிமையையும் சூறையாடும்போது நாங்கள் திலீபத்தின் பெயரால் அதை எதிர்த்து ஒன்றினணவதே இப்போதைய வரலாற்றுத்தேவை.

வரலாற்றில் இந்த அழைப்பை ஏற்பவர்களே தமிழினத்தின் உரிமைக்காக உண்மையாகவே குரல் கொடுப்பவராகக் கொள்ளப்படுவார்கள். விலகி நின்று வேடிக்கை பார்ப்போரை தமிழ் மக்கள் தாமாகவே விலக்கி வைத்துவிடுவார்கள். திலீபன் கண்ட கனவு அவனது நினைவேந்தலை முதற்புள்ளியாகக்கொண்டு நிறைவேறினால் நிச்சயமாக தமிழர் தேசத்தில் உரிமைக்கான மக்கள் புரட்சி வெடித்தே தீரும்.

# இலங்கைக்கு சீனாவின் ஒத்துழைப்பு தொடரும்!

### சீனத் தூதரக பிரதிநிதி உறுதி

கொழும்பு,செப்.19

**இலங்கையின் நீதிமன்றக் கட்டமைப்பை அபிவிருத்தி செய்வதற்குத் தொடர்ந்தும் உதவி வழங்கப்படும் என்று சீனா உறுதியளித்துள்ளது.**



நீதி அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரிக்கும், இலங்கைக்கான சீன தூதரகத்தின் முதல் நிலை செயலாளருக்கும் இடையிலான சந்திப்பு நீதி அமைச்சில் நேற்று இடம்பெற்றது.

இலங்கையின் அபிவிருத்திக்காக சீன அரசால் வழங்கப்படும் ஒத்துழைப்புகள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டன.

இலங்கையின் நீதிமன்றக் கட்டமைப்பை அபிவிருத்தி செய்வதற்காக, சீனாவால் வழங்கப்படும் ஒத்துழைப்பு தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

அத்தகைய ஒத்துழைப்பு எதிர்காலத்திலும் தொடரும் என்று சீன தூதரகச் செயலாள்ரால் உறுதியளிக்கப்பட்டது.

நீதிமன்றக் கட்டமைப்பின் உட்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கு, சீனாவால் வழங்கப்படும் ஒத்துழைப்புகளுக்கு அமைச்சர் நன்றி தெரிவித்தார். (க-44)



## சிறப்புப் படையணிக்கு டிஜிற்றல் சீருடைகள்

கொழும்பு,செப்.19

இலங்கை இராணுவத்தில் உள்ள சிறப்புப் படையணிகளான கொமாண்டோ மற்றும் விசேட படையணியைச் சேர்ந்த படையினருக்கு டிஜிற்றல் மயமாக்கப்பட்ட புதிய சீருடைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

இராணுவ தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வாவால் புதிய சீருடை அறிமுகம் செய்யப்பட்டது.

இந்த புதிய சீருடை 55 வீதம் பருத்தியையும், 45 வீதம் பொலியஸ்டர் துணிகளில் சிறப்பு ரிப்ஸ்டாப் வலுவூட்டும் நுட்பத்துடன் தயாரிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் காலநிலைகளைக் கருத்தில் கொண்டு முதல் இராணுவச் சீருடை தயாரிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து போன்ற வளர்ந்த நாடுகளின் அதிநவீன இராணுவ நடவடிக்கைகளுக்கு இந்தச் சீருடை பயன்படுத்தப்பட்டுள்ளது.

சீருடைக்கான துணி வெளிநாடுகளில் உள்ள உலகத் துணி சோதனை ஆய்வகத்தில் சோதிக்கப்பட்டுள்ளது. (க-இ)

## 20ஆவது திருத்தம் 22இல் வருகின்றது

கொழும்பு, செப். 18

அரசமைப்பின் 20ஆவது திருத்தம் எதிர்வரும் 22ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது என்று நாடாளுமன்ற பிரதி பொதுச் செயலர் நீல் இத்தவெல தெரிவித்தார்.

நாடாளுமன்றம் 22ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு சபாநாயகர் தலைமையில் கூடவுள்ளது. இதன்போது முதலாம் வாசிப்புக்கென நீதி அமைச்சரால் குறித்த சட்டமூலம் முன்வைக்கப்படவுள்ளது. அதன் பின்னர் சட்டமூலத்தை சவாலுக்குட்படுத்துவதற்கு ஏழு நாள்கள் வழங்கப்படவுள்ளன.

ஏதேனும் தரப்பு உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தால் நீதிமன்ற நடவடிக்கைகள் நிறைவுபெறுவதற்கு மூன்று வாரங்கள் எடுக்கும் என குறிப்பிடப்படுகின்றது. இதே வேளை, 20ஆவது திருத்தச்சட்ட மூலம் குழுநிலை விவாதத்தின் போதே திருத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ம-இ)

## சுற்றுலாப் பயணிகளை கண்காணிக்கச் செயலி

கொழும்பு, செப். 19

இலங்கைக்கு வருகைதரும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளைக் கண்காணிப்பதற்காக புதிய செயலியொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் கிமர்லி பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் தங்கியிருக்கும் காலப்பகுதியில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பினைக் கருத்திற்கொண்டு அவர்களைக் கண்காணிப்பதற்காக இந்தச் செயலி உருவாக்கப்பட்டுள்ளது. இந்தச் செயலிக்கான விண்ணப்பம் குடிவரவுப் படிவத்தில் சேர்க்கப்படும். இது தொடர்பான திட்டம் அமைச்சரவையின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் உள்ள 25 மாவட்டங்களில் தங்கியுள்ள சுற்றுலாப் பயணிகள் குறித்த தரவுகளை சேகரித்துக் கொள்வதற்கு குறித்த செயலி பயனுள்ளதாக அமையும். அதேநேரம் இலங்கையில் சர்வதேச விமான நிலையங்கள் மீண்டும் திறக்கப்பட்டால் கொரோனா தொற்றுக் குறித்து எதிர்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை முன்னெடுக்கத் தயாராக உள்ளது.

சுகாதார அமைச்சின் வழிகாட்டுதலின்படி, வெளி நாட்டு சுற்றுலா பயணிகள், அவர்கள் வருவதற்கு 72 மணி நேரத்திற்கு முன்னர் நடத்தப்பட்ட பி.சி.ஆர் சோதனைகளின் முடிவுகளை தம்முடன் எடுத்துவரவேண்டும் என்பதுடன், விமான நிலையத்தில் மற்றொரு பி.சி.ஆர் சோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள் - என்றார். (ம-இ)

# உயிரோடு இருப்பவருக்கும் முல்லையில் மரணச் சான்றிதழ்

*கிராம அலுவலர், மரண விசாரணை அதிகாரி கைதாகிப் பிணையில்*

முல்லைத்தீவு, செப். 19

**உயிரோடு உள்ள ஒருவர், மற்றும் உயிரிழந்த ஒருவருக்கு போலியான முறையில் மரணச் சான்றிதழைத் தயாரித்தார் என்ற குற்றச்சாட்டில் கிராம அலுவலர், மரண விசாரணை அதிகாரி, மற்றும் அதற்கான ஏற்பாடுகளைச் செய்த ஒருவர் என மூவர் மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.**

இந்தச் சம்பவம் முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக் குட்பட்ட பகுதியில் இடம்பெற்றுள் ளது.

புதுக்குடியிருப்பு 9 ஆம் வட்டாரம் மல்லிகைத்தீவில் உள்ள குடும்பத் தில் ஒருவர் பிரான்ஸ் நாட்டில் வசித்து வருகின்றார். பிரான்ஸ் நாட்டு குடியுரிமை பெற்றுக்கொள் வதற்காக அவரது பெற்றோர்கள் போர்க் காலத்தில் உயிரிழந்து விட்டனர் என மரணச் சான்றிதழ் தயாரித்து அனுப்பியுள்ளார். அவ ரின் தந்தை 2014 ஆம் ஆண்டு நோய்வாய்ப்பட்டு உயிரிழந்த நிலையில் அவரது தாயார் தற்போ தும் வாழ்ந்து வருகின்றார். எனி னும் கடந்த 2018 ஆம் ஆண்டு போரின்போது அந்தப் பெண்ணின் பெற்றோர்கள் உயிரிழந்து விட்ட னர் என கிராம அலுவலகர் உறுதிப் படுத்தி கடிதம் கொடுத்துள்ளதுடன், புதுக்குடியிருப்பு பகுதியில் உள்ள மரணவிசாரணை அதிகாரியிடம் உறுதிப்படுத்தக் கோரியபோது அவர் போர்க் காலத்தில் இங்கு வாழாத காரணத்தினால் முள்ளிய வளை யில் உள்ள மரணவிசா ரணை அதிகாரியிடம் வாங்குமாறு பரிந்துரை செய்துள்ளார்.

இதன்படி தாயார் உயிருடன் உள்ள நிலையில் அவருக்கு மரணச் சான் றிதழும், ஏற்கனவே உயிரிழந்த தந்தைக்கு இரண்டாவது மரணச் சான்றிதழும் வழங்கப்பட்டுள் ளன. இதன் உண்மைப்பிரதிகள் பிரான்ஸ் நாட்டுக்கு அனுப்பிவைக் கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப் படுகிறது.

இது தொடர்பில் கொழும்பில் உள்ள பயங்கரவாத விசாரணைப் பிரிவுக்கு கிடைக்கப்பெற்ற தகவ லையடுத்து முல்லைத்தீவு மாவட்ட விசேட குற்ற விசாரணைப்பிரிவி னர், விசாரணையை மேற்கொண் டனர். விசாரணையின் போதே போலியாக மரணச் சான்றிதழ் தயாரித்துள்ளமை தெரியவந்துள் ளது. இதனை அடுத்தே கிராம அலுவலர், கரைதுறைப்பற்று பிர தேச சபை உறுப்பினரும், சமா தானநீதவானும், மரணவிசாரணை அதிகாரியுமான முள்ளியவளை யைச் சேர்ந்த ஒருவர், மரண சான் றிதழை கோரிய பிரான்ஸில் உள் ளவரின் சகோதரி என மூவர் கைது செய்யப்பட்டனர். இது தொடர்பான வழக்கு விசாரணைகள் எதிர்வரும் நவம்பர் மாதம் 30 ஆம் திகதி இடம் பெறவுள்ளது. (ப-19)

# 6 பரல் கோடா பளையில் மீட்பு

*சந்தேகநபர் தப்பினார்*

கிளிநொச்சி, செப். 19

பளைப் பொலிஸ் பிரிவின் புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் பளையில், 6 பரல் கோடாவும், உற்பத்தி உபகரணங்களும் மீட்கப்பட்டுள் ளன. கசிப்பு உற்பத்தில் ஈடுபட்டவர் பொலிஸாரின் சுற்றிவளைப்பிலும், தப்பித்துச் சென்றுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தின் பளைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உடுத்துறைக் காட்டுப் பகுதியில் கசிப்பு உற்பத்தி இடம்பெறுவதாகப் பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கு அமையவே அவை மீட்கப்பட்டுள்ளன. கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட நபர் தப்பிச் சென்றுள்ளார் என்றும் அவர் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் அவர் தொடர்பாக நீதிமன்றிலும் அறிக்கை சமர்பிக் கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

அதேவேளை சங்கத்தார் வயல் பகுதியில் 1500 மில்லி லீற்றர் கசிப்பை உடைமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவரும், இயக்கச்சிப் பகுதியில் 1000 மில்லி லீற்றர் கசிப்பை உடைமையில் வைத்திருந்தார் என்று மற்றுமொருவரும் பளைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். (ப-6)

## பொதுக் கூட்டம்

வடமராட்சி, செப்.19

பருத்தித்துறை பிரதேச பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் 10 ஆவது ஆண்டுப் பொதுக் கூட்டம் இன்று சனிக் கிழமை முற்பகல் 10 மணிக்கு பருத்தித்துறை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத் தில் நடைபெறவுள்ளது.

நிதியத்தின் தலைவர் க. கதிரமலை தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தி னராக பிரதேச செயலர் ஆழ்வாப்பிள்ளை சிறி கலந்துகொள்ளவுள்ளார்.

ஓய்வூதியர்களான புலோலி தெற்கைச் சேர்ந்த ஏ.சிவலோகநாதன், பொலிகண்டியைச் சேர்ந்த மு.சின்னத்துரை ஆகியோர் நிகழ்வில் கௌரவிக்கப்படவுள்ளனர். (ஐ-173)

## பல்வேறு குற்றச்சாட்டுகளில் 15பேர் கைது

கிளிநொச்சி, செப்.19

கிளிநொச்சி, இரணைமடு, பூந கரிப் பகுதிகளில், பல்வேறு குற் றச்சாட்டுக்களின் கீழ் 15 பேர் நேற்றுமுன்தினம் கைது செய் யப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் மதுஒழிப்புப் பிரிவின் பொறுப் பதிகாரி சதுரங்க தலைமையி லான பொலிஸாரே சந்தேக நபர்களைக் கைதுசெய்துள்ள னர். அரச சீல் பொறிக்கப்பட்ட மதுபானப் போத்தல்களை விற் பனை செய்ய குற்றச்சாட்டு, இரணைமடுப்பகுதியில் மணல் வெட்டி ஏற்றிய குற்றச்சாட்டு, பூநகரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அனுமதிப்பத்திரத் துக்கு முரணான வகையில் மணல் வெட்டி ஏற்றிய குற்றச் சாட்டுக்களின் கீழேயே அந்தப் 15 பேரும் கைது செய்யப்பட்டுள் ளனர். 12 டிப்பர் வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்டவர்கள் விசார ணைகளின் பின்னர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர். அவர்களை எதிர்வரும் 23 ஆம் திகதி அன்று நீதிமன்றில் முன்னிலையாகுமாறு பணிக் கப்பட்டுள்ளது என்று பொலி ஸார் தெரிவித்தனர். (ப)

# குருதிக்கொடையும் மருத்துவ முகாமும்

யாழ்ப்பாணம், செப்.19

நீராவியடி நண்பர்கள் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவன் அமரர் சின்னத்தம்பி திவாகரன் ஞாபகார்த்தமாக குருதிக்கொடை முகாமும், இலவச மருத்துவ முகாமும் நாளை ஞாயிற்றுக் கிழமை நடைபெறவுள்ளன.

குருதிக்கொடை முகாம் காலை 8 மணி தொடக் கம் பிற்பகல் 3 மணி வரையும் யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலையில் நடைபெறவுள் ளது.

இலவச மருத்துவ முகாம் காலை 8 மணி தொடக் கம் பிற்பகல் 3 மணி வரை அமரர் சின்னத்தம்பி திவாகரனின் இல்லத்தில்(55/604, கல்லூரி வீதி, நீராவியடி யாழ்ப்பாணம்) நடைபெறவுள் ளது.

முன்னணி மருத்துவர்களால் குருதிப் பரிசோத னைகள், கண் மற்றும் காது பரிசோதனைகள் உள்ளிட்ட பல்வேறு பரிசோதனைகள் இலவச மாக நடத்தப்படவுள்ளன என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ஐ)

## திறப்பு விழா

மன்னார், செப்.19

தாய்த்தமிழ் பேரவையின் தலைமைக் காரியா லயத் திறப்பு விழா இன்று சனிக் கிழமை காலை 9.30 மணிக்கு, பிரதான வீதி முள்ளி யவளை முல்லைத்தீவில் இடம்பெறும்.

தாய்த்தமிழ் பேரவையின் தலைவர் சி.நாகேந் திராசா தலைமையில் இடம்பெறும் நிகழ்வில், முல்லைத்தீவு மாவட்ட மேலதிக மாவட்டச் செய லாளர் க.கணேஸ் வரன் கலந்து கொள்வார். (க-213)



ஈழத்து சீரடி சாயி நாதனின்
14வது வருட உயர் திருவிழா

கொடியேற்றம்
இன்று (19.09.2020) மாலை 5.30 மணி
குங்கும அர்ச்சனை
27.09.2020 மாலை 6.30 மணி
வேட்டைத் திருவிழா
28.09.2020 மாலை 7.00 மணி
சப்பை ரதம்
29.09.2020 மாலை 7.00 மணி
தேர்த்திருவிழா
30.09.2020 காலை 7.00 மணி
தீர்த்தத் திருவிழா
01.10.2020 காலை 10.00 மணி

அடியவர்கள் கைகள் கழுவி முகக்கவசம் அணிந்து
சமூக இடைவெளியுடன் உற்சவத்தில் கலந்து கொள்ளவும்.

314, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். ஆலயத்தினர்.
0777 222 568

# திருக்குறளை வாழ்வியலோடு ஒன்றித்து நாம் கற்க வேண்டும்

## மன்னார் மாவட்டச் செயலர் அறிவுரை



மன்னார், செப்.19

**திருக்குறளை ஒரு பாடமாக எவரும் நினைக்கக் கூடாது. திருக்குறளை எமது வாழ்வியலுக்காக நாம் கற்கவேண்டும். திருக்குறளுக்கு உலகமே மதிப்பளிக்கின்றது ஆனால் நாம் அவ்வாறு இருக்கின்றோமா என்பதைச் சிந்திக்க வேண்டும் என மன்னார் மாவட்டச் செயலர் சி.ஏ.மோகன்ராஸ் தெரிவித்தார்.**

வடக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் மன்னார் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற திருவள்ளுவர் விழா நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

ஔவையார் தனது நிலையைப் பெறுவதற்கு மிகவும் கடினமாக உழைத்தவர். அவர் மறைந்த பின்பே ஔவையாரின் புகழ் ஓங்கியது. இவ்வாறுதான் திருவள்ளுவரும் மிகவும் கடினமாக உழைத்தவர். அதாவது அவர் உலகப் பொது மறையைக் கொண்டுவந்தார். திருவள்ளுவர் எழுதிய மறையை இன்று உலகமே மதிக்கின்றது. ஆனால் எமது நாட்டில் மக்கள் இதைப் பெரிதாக நினைப்பதில்லை. இவ் விழாவை வருடந்தோறும் கொண்டாட ஆரம்பித்து வைத்தமைக்கு நான் இந்த நேரத்தில் வடமாகாண முன்னாள் ஆளுநருக்கு நன்றி கூற வேண்டும். நாம் இதைத் தொடர்ந்து கொண்டாட வேண்டும். திருக்குறள் எமக்கு மட்டுமல்ல உலகத்துக்கே பொது மறையாக இருக்கின்றது. ஒரு மனிதன் எப்படி வாழ வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அறத்தைப் பற்றியும் கூறப்பட்டுள்ளது. இது எமது வாழ்க்கைக்கு ஒத்துப் போகின்றதா? ஒத்துப் போகாததன் காரணம் என்ன? என்பதை நாம் சிந்திக்க வேண்டும் - என்றார். (ப-60)



## தரம் 5 மாணவர்களுக்கு நான்காவது செயலமர்வு

கொடிகாமம், செப்.19

தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான நான்காவது செயலமர்வு பளை இந்து ஆரம்ப வித்தியாலயத்தில். பாடசாலை அதிபரின் ஏற்பாட்டில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது

அமரர். நா. பூபாலசிங்கம் ஞாபகார்த்தமாக கச்சார்வெளி பளையைச் சேர்ந்த ச.ஜெகதாஸ், இந்தப் பயிற்சி நெறிக்கான அனுசரணையை வழங்கினார்

பயிற்சி நெறியில் வளவாளராக பிரமந்தனாறு மகா வித்தியாலய பிரதி அதிபர் ப.சுதர்சன் கலந்துகொண்டார். செயலமர்வில் பளைக் கோட்டத்தின் ஆறு பாடசாலைகளைச் சேர்ந்த 118 மாணவர்கள் கலந்து கொண்டனர். (ப-159)

## பல திருட்டுக்கள்: ஐவர் கைது

சாவகச்சேரி,செப்.19

தென்மராட்சி தெற்குப் பகுதியில் அடிக்கடி இடம்பெறும் திருட்டுக்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் ஐவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

புது வீடுகளில் பொருத்தப்படும் கதவுகள், நிலைகள் மற்றும் கிணறுகளில் பொருத்தப்பட்டிருந்த நீர் இறைக்கும் மோட்டர்கள் அந்தப் பகுதியில் அடிக்கடி திருடப்பட்டுள்ளன.

இவை தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டன. மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார், நாவற்குழியைச் சேர்ந்த ஒருவரை சந்தேகத்தில் கைது செய்தனர். அவரிடம் மேற்கொண்ட விசாரணைகளில் மேலும் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (க-9)

## இலுப்பைகடவையில் 45 கியூப் மணல் மீட்பு

மன்னார் இலுப்பைக்கடவை பொலிஸாரால் திருட்டு மணல் களஞ்சியங்கள் கண்டுபிடிக்கப்பட்டு, 45 கியூப் மணல் கைப்பற்றப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பண்டுல்லள்ள வீரசிங்கவின் வழிகாட்டலின் கீழ் மன்னார் இலுப்பைக்கடவை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உள்ளிட்ட குழுவினர் நேற்றுமுன்தினம் மாலை இலுப்பைக்கடவை, பாலியாறு, காட்டுப்பகுதிக்குள் தேடுதல் நடவடிக்கை ஒன்றை முன்னெடுத்தனர். இதன்போது அனுமதிப்பத்திரமின்றி மணலை களஞ்சியப்படுத்தி வைத்திருந்த இரண்டு இடங்களை அவர்கள் கண்டுபிடித்தனர்.

அத்தோடு பாலியாறு கிராமப் பகுதியில், திருட்டு மணல் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்த ஓர் இடத்தையும் கண்டுபிடித்தனர். அதன்படி அவ்விடங்களில் சேமித்து வைக்கப்பட்டிருந்த உரிமை கோரப்படாத 45 கியூப் மணல் பொலிஸரால் கைப்பற்றப்பட்டது. மேலதிக விசாரணையின் பின் மன்னார் மாவட்ட நீதிமன்றில் அந்த மணல் கையளிக்கப்படவுள்ளது என்று பொலிஸ் நிலைய தகவல்கள் தெரிவிக்கின்றன. (ப-213)



வயாவிளான் மத்திய கல்லூரியின் பவளவிழாவை முன்னிட்டு, 75 தென்னங்கன்றுகள் நடுகை செய்யப்பட்டன. அதிபர் வே.த.ஜயந்தன் தலைமையில் இக்கன்றுகள் நடப்பட்டன. (க)

## விண்ணப்பங்களை விரைந்து ஒப்படையுங்கள்

### மஸ்தான் எம்.பி. கோரிக்கை

வவுனியா,செப்.19

நீண்ட காலமாக பயன்பாட்டில் உள்ள போதிலும் அக்காணிக்கான ஆவணம் இல்லாதவர்கள் விரைவாக விண்ணப்பங்களைப் பூர்த்திசெய்து தமது பிரதேச செயலாளரிடம் ஒப்படைக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினரும் மன்னார் முல்லைத்தீவுக்கான ஒருங்கிணைப்புக் குழு இணைத்தலைவருமான கே. கே. மஸ்தான் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

எமது பகுதிகளில் பெருமளவு காணிப்பிரச்சினைகள் இருக்கின்றன. வன திணைக்களம் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களத்தினரால் ஏற்படுத்தப்பட்டுள்ள காணிப் பிரச்சினைகளே அதிகமாகவுள்ளன.

பல வருடங்களாக இருக்கின்றவர்களுக்கு அந்தக் காணிக்கான ஆவணங்கள் இல்லாமல் இருக்கின்றன. இவ்வாறான பிரச்சினைகளை நிவர்த்தி செய்யும் விதமாகவே ஜனாதிபதி "செழிப்பின் பார்வை" என்ற செயற்றிட்டத்தின் ஊடாக மக்கள் வீடுகள் கட்டியிருந்தாலும் சரி விவசாயக் காணிகள் மற்றும் தோட்டக் காணிகளானாலும் சரி மக்களின் பாவனையில் நீண்டகாலமாக இருக்கும் பட்சத்தில் அதற்கான ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பங்களை இம் மாதம் 30 ஆம் திகதிக்குள் பிரதேச செயலகங்களின் ஊடாக விண்ணப்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார். இதற்கான விண்ணப்பப் படிவங்களை எனது அலுவலகத்திலும் பெற்றுக்கொள்வதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன - என்றார். (ப)

# இலங்கை பொலிஸ் அதிகாரியிடம் 5 நாள்கள் சி.பி.சி.ஐ.டி விசாரணை

## இராமநாமபுரம் நீதிமன்று உத்தரவு

மன்னார், செப்.19

இந்தியாவின் தனுஸ்கோடியில் கைதுசெய்யப்பட்ட இலங்கை பொலிஸ் அதிகாரி பிரதீப்குமார் பண்டாரவை ஐந்து நாள்கள் சி.பி.சி.ஐ.டி காவலில் வைத்து விசாரிக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இலங்கை பொலிஸ் அதிகாரி பிரதீப் குமார் பண்டார ராமநாதபுரம், கம்பிபாடு கடற்கரையில் கடந்த 5 ஆம் திகதி மெரைன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு புழல் சிறையில் விளக்க மறியலில் வைக்கப்பட்டார். போதைப்பொருள் விற்பனை செய்வதில் இவருக்கும், தமிழகத்தில் உயிரிழந்த அங்கொடலொக்காவுக்கும் இடையில் தொடர்பு உள்ளதாகக் கிடைத்த தகவலையடுத்தே 5 நாள்கள் சி.பி.சி.ஐ.டி காவலில் வைத்து விசாரிக்க ராமநாதபுரம் நீதிமன்று நேற்றுமுன்தினம் உத்தரவிட்டது.

கொழும்பு புறநகர் பகுதியான சபுகஸ்கந்த பகுதியிலுள்ள மரக்கடையிலிருந்து கடந்த ஒகஸ்ட் மாதம் இலங்கை பொலிஸாரால் கைப்பற்றப்பட்ட 23 கிலோ ஹெரோய்ன் போதைப்பொருளுடன் மரக் கடையின் உரிமையாளர் மற்றும் பொலிஸ் அதிகாரி பிரதீப் குமார் பண்டாரவின் சகோதரர் என இருவர் கைது செய்யப்பட்டனர். பிரதீப் குமார் பண்டார தனது சகோதரர் மூலம் மரக் கடையின் உரிமையாளருக்கு ஹெரோய்ன் போதைப்பொருளை விநியோகித்தமை பொலிஸார் நடத்திய விசாரணையில் தெரிய வந்தது.

கைப்பற்றப்பட்ட ஹெரோய்ன் மூடையில் அச்சிடப்பட்டிருந்த முத்திரையும், தமிழகத்தில் உயிரிழந்த இலங்கை நிழலுலக தாதா அங்கொட லொக்காவின் போதைப்பொருள் மூடைகளில் உள்ள முத்திரையும் ஒன்றாக இருந்ததால் பிரதீப் குமார் பண்டார இலங்கை பொலிஸாரிடம் இருந்து தன்னைக் காப்பற்றிக் கொள்ள மன்னாரில் இருந்து சட்ட விரோதமாகப் படகு ஒன்றில் தமிழகம் சென்றிருந்தார். இதன்போதே அவர் கைது செய்யப்பட்டிருந்தார். (ப-56)

## இன்றைய நாள்

**மேடம்:** உற்சாகமான நாள். உறவினர் வீட்டு சுப நிகழ்ச்சியை முன்னின்று நடத்துவீர்கள். பொது வெளியிலும், அலுவலகத்திலும் மரியாதை கூடும். மேலதிகாரியின் ஆதரவு கிட்டும்.

**இடபம்:** பணியாளர்களின் பொறுப்பு அதிகரிப்பதால் சவாலாக இருக்கும். முயற்சியால் வெற்றி பெறும் நாள். பெண்களின் எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் மனதை அறிவீர்கள்.

**மிதுனம்:** பணத் தேவைகள் நிறைவேறும் நாள். நண்பர்களுடன் இருந்த மனக்கசப்பு நீங்கும். உங்கள் துறையைச் சேர்ந்த நண்பர்கள் உங்களை மதிப்பார்கள். நிலுவைப் பணிகள் முடியும்.

**கடகம்:** வாய்ப்புகள் தேடி வரும் நாள். தாய் வழி உறவினர்களால் அனுகூலம் உண்டு. வியாபாரத்தில் விலகிய வாடிக்கையாளர்கள் தேடி வருவர். தன்னம்பிக்கை துளிர்விடும்.

**சிம்மம்:** சிறப்பான நாள். வியாபாரிகளுக்குப் பணப்புழக்கம் அதிகரிக்கும். நண்பர்கள் தேடி வந்து பேசுவார்கள். பல காலத்துக்குப் பிறகு வீடு வாங்குவது இப்போது அமையும்.

**கன்னி:** பெருமிதமான நாள். குடும்பத்தினரின் கேலி முடிவுக்கு வரும். உழைப்பால் மேலிடத்தை ஈர்ப்பீர்கள் ஆரோகிய உணவுகளை உட்கொள்ளுங்கள். திட்டங்கள் நிறைவேறும்.

**துலாம்:** புதிய வாய்ப்புகள் தெரியும் நாள். உடற்பயிற்சியில் ஆர்வம் கூடும். சுவாதி: வியாபாரத்தில் சில எதிர்ப்பு சக்திகளைப் புரிந்து கொண்டு சுதாரிப்பீர்கள்.

**விருச்சிகம்:** உற்சாகமாக செயல்படும் நாள். பணியாளர்களின் எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும். அலங்காரம் மற்றும் பொழுதுபோக்குக்கான செலவுகள் கூடும். வாகனத்தால் தொல்லை வரும்.

**தனுசு:** வீடு கட்ட எதிர்பார்த்த கடன் தொகை கிடைக்கும். எதிர்ப்புகள் அடங்கும். தந்தை வழி சொத்து சம்பந்தமான குழப்பங்கள் தீரும். உடல் நலனில் கவனம் தேவை.

**மகரம்:** உழைப்பால் உயரும் நாள். உடன்படித்த நண்பர்களைச் சந்திப்பீர்கள். கடனை நினைத்து பயம் வேண்டாம். தொழிலில் புது பங்குதாரரைச் சேர்க்க இது உகந்த சமயம்.

**கும்பம்** அமைதி குறைவான நாள். தவறுகளை யாரேனும் எடுத்துச் சொன்னால் கோபப்பட வேண்டாம். வியாபாரம் மந்தமாக இருக்கும்.

**மீனம்:** அமைதி காக்க வேண்டிய நாள் நல்லவர்களைப் பகைத்துக் கொள்ளாமல் இருப்பது. நல்லது. நல்ல பெயருக்கு பாதிப்பு ஏற்படாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

# துறைமுக நகரத் திட்டத்தால் 83ஆயிரம் வேலைவாய்ப்புகள்

### பிரதமர் தெரிவிப்பு

கொழும்பு, செப்.19
கொழும்பு துறைமுக நகரத் திட்டத்தின் மூலம் சுமார் 83 ஆயிரம் வேலைவாய்ப்புகள் உருவாகும் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார். துறைமுக நகரின் ஆறு ஆண்டுகள் பூர்த்தியை முன்னிட்டு அங்கு விஜயம் மேற்கொண்ட போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,



'சீன ஜனாதிபதியும் நானும் ஆரம்பித்த இந்தத் திட்டத்திற்கு இன்றுடன் ஆறு வருடங்கள் பூர்த்தியாகின்றன. கடந்த காலத்தில் இடம்பெற்ற சில விடயங்கள் காரணமாக இத்திட்டம் சுமார் 2 வருடங்கள் தாமதிக்கப்பட்டன. தற்போது மீண்டும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எதிர்கால இலங்கையின் பிரதான வருவாய் மார்க்கமாக கொழும்பு துறைமுக நகரத் திட்டம் விளங்கும். அதன்மூலம் சுமார் 83 ஆயிரம் வேலைவாய்ப்புகள் உருவாகும். இத்திட்டத்திற்கான மொத்த முதலீடு 15 பில்லியன் டொலராகும். இந்த நாடு கடலால் அரிக்கப்படும் என்றே நாம் சிறு வயதில் அறிந்திருந்தோம். ஆனால் முதன் முறையாக நாம் கடலை எமது நாட்டுடன் இணைத்துக் கொண்டுள்ளோம்.
கொழும்பு துறைமுக நகரத்தை நிர்மாணிப்பதற்கு ஆதரவு வழங்கும் சீன அரசாங்கத்திற்கு நாம் நன்றிகளை தெரிவித்து கொள்கிறோம். என பிரதமர் தெரிவித்தார். (வ-இ)



முதலாம் ஆண்டு அனுமதிக்காக யாழ்ப்பாணம். வண்ணை நாவலர் மகா வித்தியாலய அதிபர் மற்றும் பழைய மாணவர் சங்க பிரதிநிதிகள் முன்பள்ளி ஒன்றில் சந்திப்பை மேற்கொண்டனர். யாழ்ப்பாணம் பரிபேதுரு கில்னர் முன்பள்ளியிலேயே இந்த சந்திப்பு அண்மையில் இடம்பெற்றது. இதன்போது முன்பள்ளிக்கு தேவையான வெள்ளை நிறப் பலகை, மாக்கர் என்பன அன்பளிப்பாக வழங்கப்பட்டன. (ஐ)

# மின்தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக வடக்கின் பல பகுதிகளில் மின் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இதன்படி நாளை ஞாயிறு காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை **யாழ். மாவட்டத்தில்** யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடம், பலாலி வீதியில் திருநெல்வேலி சந்தியிலிருந்து பலாலி வீதி வேம்படி சந்தி வரை, பனிக்கர் லேன், திண்ணை விடுதி, தலங்காவில் பிள்ளையார் கோவிலடி, திரு நெல்வேலி கொமர்ஷல் வங்கி, தபால் பெட்டி சந்தி, கந்தர்மடம் சந்தி, இலுப்பையடி சந்தி, சிவன் அம்மன் வீதி, அன்னசத்திர வீதி, ஆரியகுளம் சந்தி, அம்மன் வீதி கந்தர்மடம், நாவலர் வீதியில் ரயில் கடவையிலிருந்து அம்பலவாணர் வீதி அத்தியடி வரை, பலாலி வீதி பருத்தித்துறை வீதியிலிருந்து வீரமாகாளி கோவில் வரை, ஆரியகுளம் சந்தியிலிருந்து இராசாவின் தோட்ட சந்தி வரை, கம்பஸ் லேன், தின்னவேலி புறப்பர்ட்டி டெவலப்பர்ஸ் பிறைவேற் லிமிற்ரெட், நொதேர்ண் சென்றல் கொஸ்பிற்றல் ஆகிய இடங்களிலும், **கிளிநொச்சி மாவட்டத்தில்** தருமபுரம், புளியம் பொக்கணை, கல்மடுநகர், விசுவமடு, கல்லாறு, கண்ணகிநகர், தொட்டியடி, தேராவில் ஒருபகுதி, விசுவமடு விவசாயிகள் பல நோக்கு கூட்டுறவு சங்கம் ஆகிய பிரதேசங்களிலும், மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் அனுசா செல்வராசா அறிவித்துள்ளார்.

# மஞ்சள் மீட்பு

சிலாபம், செப்.19
சட்டவிரோதமான முறையில் கடத்தப்பட்ட 1000 கிலோகிராம் மஞ்சள் சிலாபம் மோலயகட்ட பகுதியில் மீட்கப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். கடல் மார்க்கமாக சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குள் கொண்டு வரப்பட்ட நிலையிலேயே அவை மீட்கப்பட்டுள்ளன. (வ-இ)

# மஞ்சள் கடத்தல்; 10 பேர் கைது

கொழும்பு, செப்.19
சட்டவிரோதமான முறையில் கொள்கலன்களில் கடத்தப்பட்ட 33 ஆயிரம் கிலோகிராம் மஞ்சள் மற்றும் உழுந்துடன் 10 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். சுங்க அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போதே புளுமென்டால் பகுதியில் அவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
அவர்களுடன், 7 பாரவூர்திகளும் புளு மென்டால் பொலிஸாரினால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக் கது. (வ-இ)

# இணையம் ஊடாக கிளி,மைனாக்கள் விற்றவர் கைது !

கொழும்பு,செப்.19
இணையத்தளம் வழியாக பறவைகளை விற்பனை செய்தவர், வனஜீவராசிகள் திணைக்களத்தின் அவசர தேடுதல் பிரிவின் அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடம் இருந்து கிளிகள் மற்றும் மைனாக்கள் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன. விலங்கியல் ஆர்வலர்கள் வழங்கிய தகவலுக்கு அமைவாக, மாத்தளையில் இவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். (க-இ)





உலகில் மனித தர்மமே செத்துவிட்டதா? காந்தி இறந்ததற்காக கண்ணீர் வடிக்கும் உலகம் காந்தியத்தின் காலடியில் சிறிது சிறிதாக எரிந்து கொண்டிருக்கும் திலீபன் என்னும் மெழுகுவர்த்தியைக் காண வில்லையா? அல்லது கண்டும் காணாது போய் விட்டதா?

**தியாகதீபம் திலீபன் நல்லூர் வீதியில் நிகழ்த்திய அகிம்சை வேள்வி பற்றிய நேரடி அனுபவங்கள்**

மு.வே.யோ.வாஞ்சிநாதன்

வழக்கம்போல் காலையில் சகல பத்திரிகைகளையும் வாசிக்கும் திலீபனால் இன்று எதுவுமே செய்யமுடியவில்லை. யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதும் இருந்து தனியார் பஸ் வண்டிகளில் மக்கள் வெள்ளம் போல் வந்து நிறையத் தொடங்கிவிட்டனர்.

இன்னும் திலீபன் போர்வைக்குள்ளேயே புதைந்து கிடக்கிறான். அவனால் எழும்ப முடியவில்லை. உடல் பயங்கரமாக வியர்த்து கொட்டியது. மின்விசிறி அவர் பக்கத்தில் வேகமாக சுழன்று கொண்டிருந்தது. ஒரு மனித இயந்திரம் தன் முழுச்சக்தியையும் பிரயோகித்து இயங்கிக் கொண்டிருக்கிறது. அன்றைய பத்திரிகைகளில் முக்கிய செய்திகளாக வழக்கம்போல் திலீபனைப் பற்றிய செய்திகளே இடம்பெற்றிருந்தன. திலீபன் சோர்ந்து வருகிறார். மெழுவர்த்தியைப் போல அவர் சிறிது சிறிதாக உருகிக்கொண்டிருக்கிறார். அவரது சிறுநீரகம் பாதிப்படையத் தொடங்கிவிட்டது. இருதயம் பலமாக இயங்கிக்கொண்டிருக்கிறது. தொடர்ந்து அவர் நீராகாரம் எடுக்காவிட்டால் நிலைமை மேலும் மோசமாகி எந்த வேளையிலும் எதுவும் நடக்கலாம்.

பத்திரிகைகளைப் படிக்கும்போது என் கைகளுடன் உள்ளமும் சேர்ந்து நடுங்கியது. திலீபன் என்ற ஒரு இனிய காவியத்தின் கடைசி அத்தியாயத்துக்கு வந்து விட்டதுபோல் பிரமை எனக்கு ஏற்பட்டது. அதற்கிடையில் ஓர் செய்தி காற்றோடு காற்றாக கலந்து வந்து என் செவியில் விழுகிறது. தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் பிரிவைச்சேர்ந்த திலகர் அவர்கள் இந்தியாவுக்குச் சென்றிருக்கிறார் என்பதுதான் அது. புலிகளின் சார்பாக திம்பு பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டவர்களில் திலகரும் ஒருவர். அப்படியானால் பிரதமர் ராஜீவ்காந்தியிடமிருந்து ஏதாவது அழைப்பு வந்திருக்குமா என்ற நப்பாசை என் மனதில். விசாரத்த போது எந்தவிதமான அழைப்பும் வரவில்லை வழமை போல சாதாரண விடயங்களை கவனிப்பதற்காகத் தான் திலகர் போய் இருக்கிறார் என்று கேள்விப்பட்டதும் ஏன் கேட்டோம் என்றிருந்தது.

திலகரின் இந்தியப் பயணம் பற்றி கேட்டு அறியாமல் விட்டிருந்தால் ஓரளவு மன நிம்மதியாவது கிடைத்திருக்கும். ஆனால் விதியே உன் கரங்கள் இத்தனை கொடியதா ? பம்பரம்போல் கள்ளமில்லாத வெள்ளையுள்ளத்துடன் கலகலவென்று சிரித்துக்கொண்டு எம்மையே சுற்றி வரும் திலீபனை சித்திரவதைப் பள்ளத்தில் தள்ளுவதுதான் உன் கோர முடிவா ? அப்படி அவர் என்ன குற்றம் செய்து விட்டார். தமிழினத்துக்காக தனது தந்தை சகோதரங்களை பிரிந்து வந்தாரே அது குற்றமா? தமிழினத்துக்காக தன் வைத்திய படிப்பையே உதறி எறிந்தாரே அது குற்றமா? தமிழினத்துக்காக இரவும் பகலும் மாடாக உழைத்தாரே அது குற்றமா? தமிழினத்துக்காக தனது வயிற்றிலுள்ள குடலின் 14 அங்குலத்தை வெட்டி எறிந்தாரே அது குற்றமா? தமிழினத்திற்காக இன்று தன்னையே சிறிது சிறிதாக அழித்துக்கொண்டு உண்ணாவிரதம் இருக்கிறாரே அது குற்றமா? எது குற்றம்?

வானத்தைப்பார்த்து வாய்விட்டுக் கத்த வேண்டும் போல் இருக்கிறது. கதறித்தான் என்ன பயன் ஏற்படப் போகிறது. இலட்சக்கணக்கான மக்கள் கடந்த ஐந்து நாள்களாக கண்ணீர் சிந்திக்கொண்டு இருக்கிறார்களே. யாருக்காக? திலீபனுக்காக, தமிழினத்துக்காக அப்படி இருக்க அந்த கண்ணீரை ஏக்கத்தை இன்னும் யாருமே புரிந்து கொள்ளவில்லையே. ஏன்? உலகில் மனித தர்மமே செத்துவிட்டதா? காந்தி இறந்ததற்காக கண்ணீர் வடிக்கும் உலகம் காந்தியத்தின் காலடியில் சிறிது சிறிதாக எரிந்து கொண்டிருக்கும் திலீபன் என்னும் மெழுகுவர்த்தியைக் காணவில்லையா? அல்லது கண்டும் காணாது போய்விட்டதா? எத்தனையோ முறை திலீபன் சாவின் விளிம்பில் இருந்து தப்பியிருக்கிறார்.

## பார்த்தீபனுடன் 12 நாள்கள்



## ஐந்தாம் நாள்

1983 ஆம் ஆண்டு அவர் தமிழீழ விடுதலைப் புலிகளின் நவாலிப் பிரதேசப் பொறுப்பாளராக இருந்தபோது ஓர் நாள் நவாலி கத்தோலிக்க தேவாலயத்தின் அருகே நின்று பொது மக்களுடன் பேசிக்கொண்டிருந்தபோது திடீரென்று இரண்டு ஜீப் வண்டிகள் அவரருகே முன்னும் பின்னுமாக வந்து நின்றன. சிறிலங்கா இராணுவத்தினர் கண்சிமிட்டும் நேரத்தில் சுற்றி வளைத்துவிட்டமையை உணர்ந்த திலீபன் எதுவித பதற்றமும் அடையாமல் நிதானமாக நின்றார். அவரின் மதி நுட்பம் மிகவும் தீவிரமாக வேலைசெய்யத்தொடங்கியது. யாரோ ஒரு தமிழ்த் துரோகியால் வழங்கப்பட்ட தகவலை வைத்துக் கொண்டு திலீபனை அடையாளம் கண்டு கொண்ட இராணுவத்தினர் ஜீப் வண்டியில் ஏறுமாறு உத்தரவிட்டனர். அவரது கையிலே ஆயுதம் அடங்கிய சிறிய சூட்கேஸ் ஒன்று இருந்தது. அவரருகே இரு இராணுவத்தினர் சேர்ந்து வந்தனர்.

ஜீப் வண்டியில் ஏறும்போது எதிர்பாராத விதமாக பக்கத்தில் வந்து கொண்டிருந்தவர்கள் மீது பாய்ந்து சூட்கேஸினால் மின்னல் வேகத்தில் தாக்கிவிட்டு பக்கத்திலிருந்த பனந்தோப்பை நோக்கி ஓடத் தொடங்கினார் திலீபன். எதிர்பாராத தாக்குதலினால் நிலைகுலைந்துவிட்ட இராணுவத்தினர் என்ன செய்வது என்று திகைத்து நின்றனர். மறுகணம் அவர்களின் கைகளிலிருந்த துப்பாக்கிகள் பயங்கரமாக திலீபனை நோக்கி உறுமத் தொடங்கின.

அவரது கை ஒன்றை துளைத்துக்கொண்டு சென்றது துப்பாக்கிகுண்டு. இரத்தம் சிந்தச் சிந்த, மனதை திடமாக்கிக்கொண்டு வெகுநேரமாக ஓடிக்கொண்டிருந்தார் திலீபன். இராணுவத்தினரால் அவரைப் பிடிக்கமுடியவில்லை. 1986 ஆம் ஆண்டின் இறுதியில் வல்வெட்டித்துறையில் இடம்பெற்ற இராணுவத்தினருடனான மோதலின்போது திலீபன் தன் துப்பாக்கியால் படையினர் பலரை சுட்டுத்தள்ளினார்.

ஆனால் எதிரிகளின் ஒரு குண்டு அவர் குடலை சிதைத்துவிட்டிருந்தது. யாழ் பெரியாஸ்பத்திரியில் அவர் அனுமதிக்கப்பட்டபோது அவர் குடலின் 14 அங்குலத்துண்டை சத்திரசிகிச்சை நிபுணர்கள் அகற்றிவிட்டனர். சுமார் மூன்று மாதங்களாக வைத்தியசாலையிலேயே வாழ்ந்தபின்தான் அவர் பூரண குணமடைந்தார். இப்படி எத்தனையோ துன்பங்களை தமிழினத்துக்காக அனுபவித்தவர் தான் திலீபன். ஆயுதப்போராட்டத்தினால் மாத்திரமன்றி அகிம்சையாலும் தன்னால் சாதனை புரிய முடியும் என திலீபனுக்கு அசையாத நம்பிக்கை இருந்தது.

அதனால் இந்தப்போராட்டத்தில் அவர் தானாகவே முன்வந்து, எத்தனையோ பேர் தடுத்தும் கேளாமல் குதித்தார். இன்று மாலை இந்திய சமாதானப்படையினரின் யாழ். கோட்டை இராணுவ முகாம் பொறுப்பாளர் கேணல் தரார் அவர்கள் திலீபனைப் பார்க்க வந்தார். அவர் சனங்களிடையே நடந்து வரும்போது பலதாய்மார்கள் அவர் மீது கற்களை வீச தயாராகிக்கொண்டிருந்தனர். அவர்களைத் தடுத்து அவருக்கு தகுந்த பாதுகாப்புக்கொடுத்து மேடைக்கு அருகே அழைத்துச் சென்றனர் விடுதலைப் புலிகள். திலீபனின் உடல் மோசமாகி வருவதால் பொதுமக்களும், இயக்க உறுப்பினர்களும் மிகுந்த உணர்ச்சி வசப்பட்ட நிலையில் இருக்கிறார்கள் என்பதை யோகியும் வேறு சிலரும் எடுத்துக் கூறினர்.

தான் சென்று தகுந்த நடவடிக்கை எடுப்பதாக அவர் கூறிவிட்டுச் சென்றார். அவர் மூலமாவது திலீபனின் உயிர் காப்பாற்றப்படாதா என்று எங்களில் சிலர் நிம்மதியாக இருந்தோம். களைப்புடன் திலீபன் உறங்கி விட்டார்.

- தியாகம் தொடரும்....

# கேள்வி அறிவித்தல்

## சாவகச்சேரி பிரதேச சபை

## சபைநிதி வேலைத்திட்டத்திற்கான கேள்வி கோரல்

01. தலைவர், பெறுகைக்குழு, சாவகச்சேரி பிரதேச சபை, தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட கட்டுமான வேலைகளுக்காக கோருகின்றார்.
02. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் 30.06.2016 ஆந் திகதிய 04/2016 (i) ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் படி வடமாகாண நிர்வாக எல்லைக்குள் பதிவு செய்யப்பட்ட கேள்விதாரர்களுக்கு மட்டும் மட்டுப் படுத்தப்பட்டுள்ளது. தகுதியான கேள்விகள் கிடைக்காத பட்சத்தில் கீழ் குறித்த அட்டவணையில் உள்ள CIDA தரத்திற்கு மேற்பட்ட கேள்விதாரரின் கேள்விகள் கருத்தில் கொள்ளப்படலாம்.
03. கேள்வி பெற தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் நிர்மானத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப் பட்டிருத்தல் வேண்டும்.
04. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் செயலாளர், சாவகச்சேரி பிரதேச சபை, கொடிகாமம் (தொலைபேசி:021-2050348, 021-2050356, தொலைநகல்: 021-2050348, மின்னஞ்சல் - chavakachcherips1@yahoo.com மூலமாக மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் 05.10.2020 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் வேலை நாட்களில் காலை 09.00 மணி முதல் மாலை 14.00 மணி வரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் தவிசாளர்/செயலாளர், சாவகச்சேரி பிரதேச சபை கொடிகாமம் எனும் முகவரியில் 21.09.2020 ஆம் திகதியிலிருந்து 05.10.2020 வரை காலை 09.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா. 2000 (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
07. கேள்வி இரு பிரதிகளில் சமர்ப்பிக்கப்பட வேண்டும், அல்லது பதிவுத் தபால் மூலம் தவிசாளர்/செயலாளர் சாவகச்சேரி பிரதேச சபை கொடிகாமம் எனும் முகவரிக்கு 06.10.2020 திகதி மாலை 14.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரரின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
08. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித்திகதியில் இருந்து 49 (நாற்பத்தொன்பது நாட்கள்) (24.11.2020) நாட்கள் வரையும் செல்லுபடியாகும்.
09. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| கேள்வி எண் | வேலை விபரம் | மதிப்பீட்டு தொகை (மில்லியன்) (வரி நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப் படும் தரம். | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு (ரூபா) | செல்லுபடி யாகும் காலம் |
| NP/14/41(6)2/CF/ 2020/15 | 1) துவரங்கரை பிள்ளையார் கோயில் வீதி புனரமைத்தல் இடைக்குறிச்சி வரணி. | 0.372 | 01 மாதம் | C9/C8 | 3,800.00 | 22.12.2020 |
| NP/14/41(6)2/CF/ 2020/28 | 1) கெற்பேலி பாலாவி வடக்கு ஊரெல்லை வீதி புனரமைத்தல். | 0.280 | 01 மாதம் | C9/C8 | 2,900.00 | 22.12.2020 |
| NP/14/41(6)2/CF/ 2020/12 | 1) சேதுகாவலர் பாடசாலை வீதி புனரமைத்தல் கைதடி மத்தி. | 0.464 | 01 மாதம் | C9/C8 | 4,700.00 | 22.12.2020 |
| NP/14/41(6)2/CF/ 2020/47,49. | 1) சரசாலை நூலகம் புனரமைத்தல்.<br>2) மிருசுவில் நுலகம் புனரமைத்தல். | 0.608 | 01 மாதம் | C9/C8 | 6,100.00 | 22.12.2020 |
| NP/14/41(6)2/CF/ 2020/10,11. | 1) பரணி பாடசாலை வீதி புனரமைத்தல் இராமாவில். (கட்டம்-1)<br>2) பனிக்கையடி வீதி புனரமைத்தல் எழுதுமட்டுவாள். | 0.276 | 01 மாதம் | C9/C8 | 2,800.00 | 22.12.2020 |
| NP/14/41(6)/2/CF/ 2020/60. | 1) பரணி பாடசாலை வீதி புனரமைத்தல் இராமாவில். (கட்டம்-11) | 0.925 | 01 மாதம் | C9/C8 | 9,300.00 | 22.12.2020 |
| NP/14/41(6)/2/CF/ 2020/55. | 1) வீதி மின்விளக்கு கொள்வனவு. | 1.394 | 01 மாதம் | அங்கீகரிக்கப் பட்ட நிறுவனம். | 14,000.00 | 22.12.2020 |
| NP/14/41(6)/2/CF/ 2020/34,36,48. | 1) வரணி உபஅலுவலகம் மற்றும் ஆயுர்வேத அலுவலகங்கள் புனரமைத்தல்.<br>2) வரணி உபஅலுவலக மதில் மற்றும் கேற் புனரமைத்தல்.<br>3) வரணி நூலகம் புனரமைத்தல். (மதில் அமைத்தல்) | 0.875 | 01 மாதம் | C9/C8 | 8,800.00 | 22.12.2020 |
| NP/14/41(6)/2/CF/ 2020/31,39,40,41, 42,43. | 1) கொடிகாமம் சந்தைக்கு வாகனத்தரிப்பிடம் அமைத்தல்.<br>2) கொடிகாமம் மீன் சந்தைக்கு வர்ணம் பூசுதல்.<br>3) கொடிகாமம் சந்தை நீர்த்தாங்கிக்கு வர்ணம் பூசுதல்.<br>4) சாவகச்சேரி பிரதேசசபையின் பழைய தலைமைப்பணிமனை புனரமைத்தல்.<br>5) கொடிகாமம் சந்தை புனரமைத்தல்.<br>6) கொடிகாமம் சந்தை நீர்க்குழாய் பைப் திருத்தம் செய்தல். | 1.844 | 02 மாதம் | C9/C8 | 18,500.00 | 22.12.2020 |
| NP/14/41(6)/2/CF/ 2020/38,45,46. | 1) கச்சாய் ஆயுர்வேத வைத்தியசாலை மற்றும், மதில் புனரமைத்தல்.<br>2) கச்சாய் நூலகம் புனரமைத்தல்.<br>3) கச்சாய் பாலர் பாடசாலை. புனரமைத்தல் (ஐங்கரன் முன்பள்ளி) | 0.554 | 01 மாதம் | C9/C8 | 5,600.00 | 22.12.2020 |
| NP/14/41(6)/2/CF/ 2020/62. | 1) ஊரியான் வீதி புனரமைத்தல் கைதடி.. | 1.856 | 02 மாதம் | C9/C8 | 18,600.00 | 22.12.2020 |

10. கேள்விதாரர்களுக்கான முன்கலந்துரையாடல் 29.09.2020 ஆம் திகதி மாலை 14.30 மணிக்கு சாவகச்சேரி பிரதேச சபை அலுவலகத்தில் நடைபெறும். இக்கலந்துரையாடலில் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கலந்துகொள்ளலாம். இதற்கு எவ்வித கொடுப்பனவும் வழங்கப்பட மாட்டாது.

தலைவர்,
பெறுகைக்குழு,
சாவகச்சேரி பிரதேச சபை
கொடிகாமம்
19.09.2020

# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA VACANCIES

**Applications are invited by me up to 12th October, 2020 from suitably qualified persons for the following posts.**

**01. UNIVERSITY MEDICAL OFFICER**

The University is looking for a highly motivated individual who has the following qualifications.

**Qualifications:**

Medical Degree of a recognized University with at least 3years' experience as Medical Practitioner. Training in counseling will be an added qualification.

NOTE: One year period of service as Intern Medical Officer will be considered for the required period of experience.

Granting of study leave to the selected candidates to obtain postgraduate qualifications or experience according to the requirements of the University may be considered, subject to exigencies of service.

Salary Scale: U-MO1(II) -Rs.55,350 -10 x 1,335; 1 x 1,630 - 70,330/- p.m.

Selection : By Structured Interview

**02. AUDIT ASSISTANT, GRADE II**

**Qualifications:**

1. Should have passed the G.C.E. (O/L) Examination in six (06) subjects at one sitting with credit passes in:-
   - i. Sinhala Language/ Tamil Language
   - ii. English Language/ English Literature
   - iii. Mathematics

AND

2. Should have passed in all subject at G.C.E. (A/L) Examination (except the Common General Paper) at one sitting (Passing in 3 subjects under the old syllabus at one sitting would be sufficient for this purpose.)

AND

3. Post Specific qualifications:
   - a. Preliminary Level/ Licentiate I/ Foundation Level/ CAB I/ Executive Level of Institute of Chartered Accountants in Sri Lanka or equivalent.

     or
   - b. Foundation Level of Chartered Institute of Management Accountants (CIMA)

     or
   - c. Higher National Diploma in Accountancy (HNDA) of Sri Lanka Institute of Advanced Technological Education (SLIATE).

     or
   - d. Membership of Association of Accounting Technicians (AAT) of Association of Accounting Technicians of Sri Lanka.

AND

4. Minimum of two (02) year experience in Auditing in State or Recognized Private Organization.

Preference will be given to those who posses an acceptable qualification in computer applications of not less than six (06) months duration obtained from a recognized institute.

Salary Scale : U-MN2 (II) - Rs.37,275–18x495-46,185 p.m.
Selection : By Interview
Age : Not less than 18 years and not more than 45 years

03. TECHNICAL OFFICER (ICT), GRADE III

Qualifications:

(i) Should pass in three (3) subjects at the G.C.E (A/L) examination in one sitting in Science Subjects in the Science Stream; Subject combination /s to be decided by the Faculty concerned upon the recommendation of the Department.

AND

(ii) Having obtained a certificate of proficiency not below than the N.V.Q Level 5 issued by a Technical/Vocational Training Institute accepted by the Tertiary and Vocational Education Commission or recognized Institution in the field of information Communication and Multimedia Technology/ Information and Communication Technology / Information Technology or Equivalent.

* Preference will be given for who have work experience in ICT.

Salary Scale : U-MT1(IIIA) - Rs.31,625-7x300;10x355-37,275 p.m.
Selection : By Written and/or practical test and an interview
Age : Not less than 18 years and not more than 45 years

**04. NURSING OFFICER, GRADE II**

**Qualifications:**

(i) GCE (Ordinary Level) Examination in Six subjects at not more than two sitting with credit passes in three subjects.

AND

(ii) Certificate of competence as a Nurse recognized by the Sri Lanka Medical Council.

Salary Scale : U-MT1(IIIA) - Rs.31,625-7x300;10x355-37,275 p.m.
Selection : By Interview
Age : Not less than 18 years and not more than 40 years.

**05. PUBLIC HEALTH INSPECTOR, GRADE III**

Qualifications:

Should have passed the Public Health Inspectors examination conducted by the Department of Health.

Salary Scale : U-MT1(IIIA) - Rs.31,625 – 7x300; 10x355 -37,275 p.m.
Selection : By Interview
Age : Not less than 18 years and not more than 45 years.

**06. INSTRUMENT CARETAKER CUM REPAIRER, GRADE III (DANCING INSTRUMENTS)**

**Qualifications:**

- i. Should have sat for the G.C.E (A/L) Examination
- ii. Should have at least two (02) years' experience and ability in repairing and fixing Musical Instruments or Dancing Instruments or Arts & Sculpture Instruments in a Higher Educational Institute or reputed institute.
- iii. Experience in maintenance of issue registers and storage of instruments.

- Should be a citizen of Sri Lanka
- Should be of good character sound physical health.

**Salary Scale** : U-MN1 (IIIA) - Rs.30,725-17x300-35,825p.m.
**Selection** : By Practical test and interview
**Age** : Not less than 18 years and not more than 45 years

**07. CARPENTER, GRADE II**

**Qualifications:**

- i. Pass in the 8th standard.
- ii. Should be conversant with the
  - a. Various types of joints and preparation of such joints for work in carpentry used in building and furniture trade;
  - b. Use of various types of tools, various species of wood and reading of drawings;
  - c. Reading of scales up to 1/32" accurately.
- iii. Not less than 2 years' experience in carpentry.

**Salary Scale** : U-PL 3(III) -Rs.29,915-16x270-34,235 p.m.
**Selection** : By Trade Test and Interview
**Age** : Not less than 18 years and not more than 40 years.

***Note: Age limit is not applicable for applicants in the Government departments/ State Corporation and statuary bodies.***

**STATUTORY BENEFITS**

1. Allowances approved by the University Grants Commission.
2. Membership in Universities Provident fund and Pension Scheme in the University Scheme.
3. Gratuity payment.
4. Employment Trust Fund.
5. Free Medical Care.

Applications should be on specified forms issued by the University. Application form and particulars for the above posts can be downloaded only from the University website www.jfn.ac.lk Applicants should deposit Rs.100 (for each post) at any branch of the People's Bank in favour of "University of Jaffna" Account No. "162-1-001-6-0000880". Applications must accompany a bank deposit slip and copies of relevant documents.

The envelope containing the duly filled application form must bear Title of the Post on its top left hand corner and either hand delivered or sent under registered post to reach the Office of the Deputy Registrar/Non-Academic Establishments of this University on or before 12.10.2020.

Application forms and other details will also be available in the University website www.jfn.ac.lk.

Applicants from Government Departments, State Corporations and Statutory Bodies should apply through their Heads of respective Institutions. Advance copies of applications may be sent in the first instance. However, no such applicant will be considered for appointment if the application routed through the Head of Department is not received.

Incomplete and illegible applications and applications that are received after the closing date will be rejected without intimation.

REGISTRAR
17.09.2020

**வெள்ளவத்தையில் அறைகள்**

ஒருவருக்கு - 500, இருவருக்கு - 1950
மூவருக்கு 3900 AC

Hotel Villa Co -6
ராமகிஸ்ண செட் அருகில் 077 255 2224

**வீடு வாடகைக்குத் தேவை**

ஓய்வுபெற்ற வங்கி முகாமையாளர் குடும்பத்திற்கு (4 பேர்) சுன்னாகத்திற்கும் தட்டாதெரு சந்திக்கும் இடையில் காங்கேசன்துறை வீதிக்கு அண்மித்ததாக வீடு வாடகைக்குத் தேவை.

077 663 6596, 077 273 4012

**வீடு வாடகைக்கு**

மருதடி வீதி நல்லூர் முகவரியில் உள்ள மேல்மாடி வீடு வாடகைக்கு உண்டு நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

077 836 1488

**உதவியாளர் தேவை (Room Boy)**

யாழ் கச்சேரிக்கு அருகாமையில் இயங்கும் YMCA நிறுவனத்திற்கு Room Boy தேவை. மேலதிக விபரங்களுக்கு YMCA,109, கண்டி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் தொடர்புகொள்ளவும்.

பொதுச்செயலாளர்

**வீட்டுப் பணிப்பெண் தேவை**

யாழ். வடமராட்சி (நெல்லியடியில்) வயதான பெண்ணைப் பராமரிக்கவும், வீட்டு வேலைகளிற்கு உதவி செய்யவும் உடல் ஆரோக்கியமான பெண் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.

077 068 0777, 021 205 0368

**தவறவிடப்பட்டுள்ளது**

சிறுப்பிட்டி மத்தி, நீர்வேலி என்னும் முகவரியில் வசிக்கும் இலங்கைநாதன் சாந்தநாயகி (19547810053) ஆகிய எனது அடையாளஅட்டை தவறிவிட்டது. கண்டு எடுத்தவர்கள் 077 949 6928 எனும் தொலைபேசிஇலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

**வாடகைக்கு**

மானிப்பாய் வீதியில் பெரிய பள்ளிவாசல் முன்பாக நீளம் 32' அகலம் 20' கொண்ட கடைத்தொகுதி அனைத்து வசதிகளுடன்.

தொடர்பு:
077 617 6413


## கண்ணீர் அஞ்சலி

நல்லூர் பிரதேச செயலகத்தில் அலுவலகப் பணியாளராக கடமையாற்றும் **க. திலகேஸ்வரன்** அவர்களின் பாசமிகு தாயாரான

**கந்தசாமி செல்வராணி**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

உத்தியோகத்தர் நலன்புரிச்சங்கம்
பிரதேச செயலகம், நல்லூர்.

## 20 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
21 . 11 . 1937



மறைவு
30 . 09 . 2000

**அமரர் பொன்னையா குகதாசன்**
(பிரபல கட்டட கலைஞர்)

***திதி: வளர்பிறை திருதியை***

அயராது எமக்காக உழைத்த அன்புத் தந்தையே!
ஆண்டுகள் இருபது ஆனாலும் ஆறவில்லை எம் துயரம்
இங்கு உங்கள் அன்பை இழந்து நாம் தவிக்கின்றோம்
ஈரவிழிகளுடன் உங்கள் ஆத்மா சாந்தியடைய ஆலடியானை
- வேண்டுகின்றோம்

ஊரார் வியக்க வளர்ந்து வரும் பேரமக்களுடன்
எம் உறவில் புதிய தலைமுறை உங்கள் பேர் சொல்லும்
ஏற்றம் பெற உங்கள் ஆசி வேண்டுகின்றோம்
ஐயம் எதுவுமில்லை உங்கள் ஆசி எமக்கென்றும் உண்டு.

"கோமலயம்"
அல்வாய் தெற்கு, அல்வாய்.

மனைவி, மக்கள், மருக்கள்,
பேரப்பிள்ளைகள்,
உறவினர்கள்.

## அழியாத நினைவுகள்
## விண்ணுலகில் 20 வருடங்கள்

தோற்றம்
08 . 12 . 1948



மறைவு
19 . 09 . 2000

**அமரர் அந்தோனிப்பிள்ளை அல்பிரட் யோகராஜா**
(ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்)

அன்புடனும் பாசத்துடனும் எம்மை
பாதுகாத்து இப்பாரினில் தலைநிமிர்ந்து
வாழ வைத்து எம் நல்வாழ்வை கனவாகக்கொண்டு
இவ்வுலகில் எமக்கெனவே வாழ்ந்து
வானுலகில் எமக்காகப் பரிந்து பேசி
எம்மை இவ்வுலகில் இன்புற்று இருக்க
உதவிடும் அப்பாவே! ஆண்டுகள் இருபது
கடந்தாலும் எம் வாழ்நாள் எல்லாம்
உம் நினைவுகள் என்றும் எம்முடனே

02, இராசாவின் தோட்ட ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
அன்பு மனைவி, அருமைப் பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்
23 . 04 . 1950



மறைவு
30 . 09 . 2019

**அமரர் பரமேஸ்வரி நாகரத்தினம்**

*திதி: துதியை 19.09.2020*

அன்பிற்கு இலக்கணமாய் வந்துதித்த அன்னையே!
ஆண்டொன்று ஆனதோ உங்கள் ஆசை முகம் பார்த்து
வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்திருந்த அன்னையே!
வானுயர் தெய்வத்துள் நீயன்று ஒன்றானாய்
பார்க்கும் இடமெல்லாம் உங்கள் திருவுரும் தெரிய
பரிதவித்து ஏங்குகின்றோம் அம்மா இனி எங்கு காண்போம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்

கீரிமலை வீதி,
வித்தகபுரம்,
தெல்லிப்பிழை.

என்றும் உங்கள் நினைவுடன்
குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
14 . 03 . 1962



உதிர்வு
30 . 09 . 2019

**அமரர் பொன்னுத்துரை சித்திராதேவி**

ஆண்டுகள் ஒன்று ஆனதுவோ
உங்கள் முகம் கண்டு ஆறவில்லை நம் இதயம்
அன்பும் பாசமும் நிறைந்த பொக்கிஷம் நீங்கள்
நித்தம் புலம்புகின்றோம் உங்கள் திருமுகம் காணாமல்
ஆறவில்லை எங்கள் துயர்
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

இன்று(19.09.2020) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

லேடன் கம்பனி அருகில்
நாவற்குழி சந்தி,
நாவற்குழி.

குடும்பத்தினர்.

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## வாடகைக்கு வீடுகள், கட்டடங்கள் தேவை

எமது மாணவர்களுக்கு விடுதி வசதி வழங்குவதற்காக சகல வசதிகளுடனும் கூடிய பெரிய வீடுகள், கட்டடங்கள் தேவைப்படுகின்றன. திருநெல்வேலி மற்றும் மருதனார்மடத்திலுள்ள இராமநாதன் நுண்கலைக் கழகத்துக்கு அண்மித்த பகுதிகளில் இலகுவாகப் பயணம் செய்யக் கூடிய வகையில் உள்ளவாறு வீடுகள் கட்டடங்கள் தேவைப்படுகின்றன

| இல. | விபரம் | தேவைப்படும் தகைமைகள் |
|---|---|---|
| 01. | அறைகளின் இடவசதி | குறைந்தது 100 மாணவர்களாவது தங்கக்கூடியவாறு இருத்தல் வேண்டும் |
| 02. | குளியல் அறைகள் | குறைந்தது 10 |
| 03. | மலசலகூடங்கள் | குறைந்தது 10 |
| 04. | சைக்கிள், மோட்டார் சைக்கிள் தரிப்பிடவசதி | போதுமான அளவு |
| 05. | தண்ணீர் வசதி | போதுமான அளவு |
| 06. | மின்சாரம் | தடங்கலின்றி வழங்கக் கூடியதாக இருத்தல் |
| 07 | பொது இடம் | மாணவர்கள் கல்வி கற்பதற்கானது |

வீடுகளை, கட்டடங்களை வாடகைக்கு தர விரும்புவோர் கீழ்வரும் மாதிரிப்படிவத்தில் தயார் செய்யப்பட்டுப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை பிரதிப் பதிவாளர்/ பொது நிர்வாகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எனும் முகவரிக்கு 02.10.2020 ஆம் திகதி பி.ப 2.30 மணிக்கோ அல்லது அதற்கு முன்னதாகவோ கிடைக்கக் கூடியதாகப் பதிவுத் தபாலில் அனுப்பவேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"மாணவர்களின் உபயோகத்துக்கான வீடு, கட்டடம்"** எனக் குறிப்பிடுதல் வேண்டும். பல்கலைக்கழக கேள்விச் சபையின் முடிவே இறுதியானது.

- தொடர்புகளுக்கான தொலைபேசி இலக்கங்கள்: 021 222 6517, 0766059563

பதிவாளர்.

……………………………………
……………………………………
……………………………………

பிரதிப் பதிவாளர்/பொதுநிர்வாகம்
யாழ். பல்கலைக்கழகம்.

**யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் பயன்பாட்டிற்கானவீடு/கட்டடம்**

மேற்படி விடயம் தொடர்பாகதங்கள் ……… ஆம் திகதிய பத்திரிகை விளம்பரத்திற்கு அமைவாக எனது பின்வரும் வீட்டை/ கட்டடத்தை பல்கலைக்கழகத்திற்கு வாடகைக்குத்தர விரும்புகின்றேன்.

**வீடு/கட்டடம் பற்றிய விபரங்கள்**

1) வீடு/கட்டடம் அமைந்திருக்கும் இடம்
……………………………………………………………………………
……………………………………………………………………………
2) வீடு/கட்டடசொந்தக்காரரின் பெயரும் அவரதுநிரந்தரமுகவரியும்
……………………………………………………………………………
……………………………………………………………………………
3) தொடர்புகொள்ளவேண்டியவரின் பெயரும் முகவரியும் தொலைபேசி இலக்கமும்
பெயர்:……………………………………………………………………
முகவரி: ..…………………………………………………………………
……………………………………………………………………………
தொலைபேசி இல: ……………………………………………
4) வீட்டின்/கட்டடத்தின் பரப்பளவு
5) வீடு அமைந்துள்ள காணியின் பரப்பளவு: ……………………………………
6) அறைகளின் எண்ணிக்கை
7) குளியல் அறைகளின் எண்ணிக்கை: ………………………………………
8) மலசல கூடங்களின் எண்ணிக்கை: …………………………………………..
9) சைக்கிள்,மோட்டார் சைக்கிள் தரிப்பிடவசதி: போதுமானஅளவு (உண்டு/இல்லை)
10) மாணவர் கல்விகற்பதற்கான பொது இடம்: (உண்டு/இல்லை)
11) மின்சாரவசதி: உண்டு/ இல்லை……………………………………………
விபரம் ……………………………………………………………………
12) தண்ணீர் வசதி: கிணறு/குழாய் நீர்
விபரம் ……………………………………………………………………
13) எதிர்பார்க்கும் குத்தகை/மாதாந்த வாடகை…………………………………
14) குத்தகைக்குதரக் கூடிய காலஅளவு……………………………………
15) வேறுயாதாயினும் கட்டுப்பாடுகள்/நிபந்தனைகள் (இருப்பின்) ……………………..
……………………………………………………………………………
16) வீடு/கட்டடம் அமைந்துள்ள காணியின்
a) உறுதியின் நிழற்பிரதி
b) நிலஅளவைப் படத்தின் நிழற் பிரதி

எதிர்பார்க்கப்படும் மாதாந்த வாடகைத் தொகையானது அரச மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மதிப்பிடப்பட்ட வாடகைத் தொகை மற்றும் குறித்த வாடகை ஆகியவற்றின் அடிப்படையில் பேசித் தீர்மானிக்கலாம் என்று இணங்குகின்றேன்.

திகதி……………………

விண்ணப்பதாரரின் கையொப்பம்

**பெண் லிகிதர் (Bill Clerk) தேவை**

ஆஸ்பத்திரி வீதியில் இயங்கும் ஸ்தாபனத்திற்கு பெண் லிகிதர் (Bill Clerk) தேவை. யாழ் மாநகர சபை எல்லைக்கு உட்பட்டவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.

**தொடர்பு:**
**077 311 8354, 021 222 7893**

**JCB வாடகைக்குத் தேவை**

தனியார் நிறுவனத்திற்கு
இரண்டு மாத காலத்திற்கு வாடகைக்குத்தேவை.

**071 496 0241**

**நாகபூஷணி திருமண சேவை**

பதிவுக் கட்டணங்கள் யாவும் இலவசம்
**(மணமகள்களுக்கு மட்டும்)**
(19.09.2020 இலிருந்து 21.09.2020 வரை)
நீங்கள் விரும்பும் மணமக்கள் ஜாதகங்கள் மிகப்பொருத்தமாக உடன் தரப்படும்.

**021 222 9306, 077 138 7596**

**இல, 5, ஐந்தாம் ஒழுங்கை,**
**பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**
**(பேபி ஸ்ருடியோவுக்கு பக்கத்து லேன்)**

**7 நாட்களும் திறந்திருக்கும்.**

**பெறுகை அறிவித்தல் திருத்தம்**

சாவகச்சேரி பிரதேசசபை - கொடிகாமம் இப் பத்திரிகையில் 2020.09.16 ஆம் திகதி பக்கம் 16 இல் வந்த தனியார் சாரதிகளிற்கான பெறுகை அறிவித்தலில் பகுதி 4 இல் 01.10.2020 ஆம் திகதி என குறிப்பிடப்பட்டதற்கு பதிலாக 02.10.2020 ஆம் திகதி என மாற்றம் செய்யப்படுகின்றது என்பதனையும் அவற்றின் ஏனைய அறிவித்தல்கள் தொடர்ந்து வலுவிலிருக்கும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

கந்தையா வாமதேவன்
தலைவர் பெறுகைக்குழு.
சாவகச்சேரி பிரதேசசபை. 19.09.2020

**பணிநிலை வெற்றிடம்**


எமது நிறுவனத்திற்கு பின்வரும் பணியாளர்கள் தேவைப்படுகின்றார்கள். தகுதி உள்ளவர்கள் நேரடியாக கீழ் உள்ள முகவரிக்கு சமுகமளிக்கவும் (அலுவலக நேரத்தில்)
(யாழ். மாநகரசபைக்கு உட்பட்டவர்கள் விண்ணப்பிக்க முடியும்)

**1) கணக்காளர்**
**2) விற்பனையாளர்**
**ஆண், பெண் இருபாலாரும் சமுகமளிக்கலாம்.**

முகவரி: Pointpedro Road, Kalviyankadu, Jaffna.
தொடர்பு: 021 222 1158

ES Printers
**357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
021 492 7471, 021 492 7472
esprintersjaffna@gmail.com

**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**



மலர்வு 16 . 10 . 1972
உதிர்வு 30 . 09 . 2019

**அமரர் கந்தையா கேதீஸ்வரன்**
**(லக்சுமி இரும்பக உரிமையாளர்-கோண்டாவில் மேற்கு)**
**(திதி: வளர்பிறை திருதியை)**

அன்பே வடிவமாய்
நேர்மையின் திருவுருவாய்
பொறுமையின் சிகரமாய்
புன்னகைத்த முகத்துடன்
உலா வந்தீர்களே அப்பா!
திட்டமிட்டு சதிவலையில் சிக்கவைத்தனரே!
இதயமற்று நடமாடும் ஈனப்பிறவிகள்
கண்மூடி முழிக்குமுன் ஓராண்டானதே!
இத்துன்பத்தை ஏற்றுக்கொள்ள எம்மால் முடியவில்லை!
என்றும் எங்களின் இதயத்தில் சுடர்விட்டுக்கொண்டிருக்கும்
குலவிளக்கே- அப்பா!
உங்கள் நினைவுகள் எம்மைவிட்டு பிரியாது
உங்கள் ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்கும்.

**செட்டி வளவு ஒழுங்கை,**
**இணுவில் மேற்கு, இணுவில்.**
**குடும்பத்தினர்.**

## 4 சிங்கள...

தப்பட்டுள்ளனர். அவர்களுக்கு உதவிய முதலாம் ஆண்டு மாணவர்கள் இருவர் விடுதியிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர். பல்கலைக்கழக நிர்வாகம் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவபீட புதுமுக மாணவர்களுக்கு இரண்டாம் வருட மாணவர்களால் சமூக ஊடகங்கள் ஊடாக பாலியல் ரீதியான பகிடிவதை மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த விடயம் தொடர்பில் கொழும்பிலிருந்து வெளிவரும் சிங்கள மற்றும் ஆங்கில ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

இதனையடுத்து பல்கலைக்கழக நிர்வாகம் நேற்றுமுன்தினம் சுமார் 10 மணித்தியாலங்கள் நடத்திய விசாரணைக்கு அமைவாக, இந்தக் குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடையதாகக் கருதப்படும் 4 பேரை அடையாளம் கண்டது. அவர்கள் உடனடியாக விரிவுரைகளில் பங்கேற்பதற்கும், பல்கலைக்கழகத்தினுள் நுழைவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை முதலாம் வருட மாணவர்கள் மீது இரண்டாம் வருட மாணவர்களால் மேற்கொள்ளப்பட்ட பகிடிவதைக்கு துணைபுரிந்தனர் எனத் தெரிவித்து முதலாம் வருடத்தைச் சேர்ந்த இரண்டு சிங்கள மாணவர்கள் பல்கலைக்கழக விடுதிகளிலிருந்து நேற்றுக் காலை வெளியேற்றப்பட்டுள்ளனர்.

(ஒ.5)

## முறைப்பாட்டை...

பல்கலைக்கழக நிர்வாகத்தினர் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்வதற்கு சென்ற போது பொலிஸார் முறைப்பாடுகளை ஏற்க மறுத்துள்ளனர்.

பகிடிவதை புரிந்தனர் என்று அடையாளம் காணப்பட்டுள்ள இரண்டு மாணவர்கள் பொலிஸாரின் பிள்ளைகள் என்பதால் முறைப்பாட்டை ஏற்பதற்கு கோப்பாய் பொலிஸார் தயங்கினரா என்ற கோணத்தில் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற பகிடிவதைகள் தொடர்பில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் வழங்கப்பட்ட தகவல்களுக்கு அமைவாக யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தால் துரித விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன. அதற்கு அமைவாக முகாமைத்துவ பீடத்தில் கல்வி பயிலும் தென்னிலங்கையைச் சேர்ந்த இரண்டு ஆண் மாணவர்களும், இரண்டு பெண் மாணவிகளும் அடையாளம் காணப்பட்டனர்.

பகிடிவதை தொடர்பில் உடனடியாகவே கோப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்வதற்கு பல்கலைக்கழக நிர்வாகம் நடவடிக்கை எடுத்திருந்தது. ஆனாலும் கோப்பாய் பொலிஸார் முறைப்பாட்டை ஏற்பதற்கு மறுப்புத் தெரிவித்துள்ளனர். அதையடுத்து இந்த விடயம் வடக்கு மாகாண மூத்த பிரதிப் பொலிஸ்மாஅதிபரின்கவனத்துக்குகொண்டு செல்லப்பட்டது. அதன்பின்னர் கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்துக்கு நேற்றுக் காலை நேரடியாக வருகை தந்து முறைப்பாடுகள் தொடர்பான விவரங்களைப் பெற்றுள்ளார். இதேவேளை, அடையாளம் காணப்பட்ட 4 மாணவர்களில் இருவர் பொலிஸாரின் பிள்ளைகளாவர். ஒருவர் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் மகன். மற்றையவர் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரின் மகன். இந்தக் காரணத்துக்காகவா பொலி ஸார் முறைப்பாடுகளை ஏற்க மறுத்தனர் என்ற கோணத்தில் புலனாய்வுப் பிரிவு தனியான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் என்று தெரியவருகின்றது. (ஒ.5)

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்
01 • 01 • 1943

மறைவு
30 • 09 • 2019

**அமரர் தாமோதரம்பிள்ளை வர்ணகுலசிங்கம்**
**திரியாய், திருகோணமலை.**
**திதி: துதியை (19.09.2020)**

அன்பிற்கு இலக்கணமாய் வந்துதித்த அப்பிச்சியே
உங்கள் பாசமான முகம் பார்த்து ஓராண்டு ஆனதே
உங்கள் முகம் காண இன்றுவரை பரிதவித்து நிற்கின்றோம்
எங்கள் நிழல் எங்கள் கூடவே வருவது போல
உங்கள் புன்னகை பூத்த முகம் எங்கள் நினைவில்
என்றுமே மறையாது
எங்கள் இதயங்களில் நாம் வாழும் காலம் வரை
எங்களுடன் வாழ்ந்து கொண்டு இருப்பீர்கள் அப்பிச்சி
உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனை
பிரார்த்திக்கின்றோம்.

62 / 3 A, கனேஸ் காடன்
கண்டி வீதி,
திருகோணமலை.

மனைவி, பிள்ளைகள்
0091 8939 535905
(திருமால்)

## மரண அறிவித்தல்

**திருமதி அப்புத்துரை சின்னத்தங்கச்சி**
**(கௌரியம்மா)**

இணுவில் சிவகாமியம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் தாவடி பிள்ளையார் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட அப்புத்துரை சின்னதங்கச்சி (கௌரியம்மா) நேற்றுமுன்தினம் (17.09.2020) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அப்புத்துரையின் அன்பு மனைவியும், இணுவிலை சேர்ந்த ஐயாத்துரை - முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், தாவடியைச் சேர்ந்த குமாரு - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கமலேஸ்வரன் மற்றும் குமரேஸ்வரன் (ஜேர்மனி), குகனேஸ்வரன் (உரிமையாளர் - பிள்ளையார் எலக்ரிக்கல் கோண்டாவில்) ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற ஜெயமணி மற்றும் பராசக்தி, காலஞ்சென்ற அருளாநந்தம், மற்றும் அருள்நந்தி, காலஞ்சென்ற மகேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், லஜிபா (ஜேர்மனி), ஸர்மிளா ஆகியோரின் அன்பு மாமியும், ஜெசிந்தன், ஜெனிசா, கிரிஜா, திலக்ஷின், பிரவின், அபர்ணா, திலக்ஷன், விதூஷன், நிதுஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.09.2020) ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

மானிப்பாய் வீதி,
தாவடி வடக்கு.

தகவல்:
அ.குகனேஸ்வரன்
(குகா - மகன்)

## ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி

**அமரர் சின்னத்தம்பி ஆனந்தவேல் (வெள்ளை)**



தோற்றம் 20.08.1945
மறைவு 07.10.2013


திதி:- திருதியை

அன்பின் இருப்பிடமாய் பாசத்தின் பிறப்பிடமாய்
பண்பின் இலக்கணமாய் வாழ்ந்து காட்டிய
எம் அன்பின் அப்பாவே! அவனிதனில் எம்மை விட்டுப் பிரிந்து ஆண்டுகள் ஏழானதே ஆனால் உங்கள் நினைவுகள் எம்மோடு என்றும் வாழ்கின்றது அப்பா.

தொண்டைமானாறு,
7 ஆம் கட்டையடி.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



**பிரம்மஸ்ரீ. பாலசுப்ரமணியஐயர் குமாரசாமி சர்மா(பபி)**

யாழ்ப்பாணம் மானிப்பாயை பிறப்பிடமாகவும், மட்டக்களப்பு சின்ன ஊரணியை வசிப்பிடமாகவும் கொண்ட பிரம்மஸ்ரீ. பாலசுப்ரமணிய ஐயர் குமாரசாமி சர்மா(பபி) நேற்று (18.09.2020) வெள்ளிக்கிழமை அதிகாலை சிவப்பதப்பேறு பெற்றார்.

அன்னார் காலஞ்சென்ற நீராவியடி பாலசுப்ரமணியஐயர் காத்யாயணி தம்பதிகளின் மூத்த புத்திரனும், சரஸ்வதி அம்மாவின் கணவரும், திரியம்பகசர்மாவின் (ராசா) சகோதரரும், காலஞ்சென்ற கீரீசர மணியின் மைத்துனரும், காமேஸ்வரகுருக்கள், விசாகேசசர்மா ஆகியோரின் தந்தையும், விஷ்ணுபிரசாத், ஷ்யாம் சுந்தர், கோகுலவாசன் ஆகியோரின் பெரிய தந்தையும், நித்யாயணி, ஹம்ஸத்வனி, சர்மினி, பூரணி ஆகியோரின் மாமனாரும், அபிராம், ஆர்த்திகா, அனுஷாந், ஸ்ரீஸ்மிருத்திஹா ஆகியோரின் பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.09.2020) ஞாயிற்று கிழமை மு.ப 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கொழும்பு கல்கிசை பொதுமயானத்தில் தகனக்கிரியை செய்யப்படும் இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: விஷ்ணுபிரசாத் (0094-779357672)
ஷ்யாம்சுந்தர் (0094-778645656)
கோகுலவாசன், காமேஸ்வரகுருக்கள்,
விசாகேசசர்மா.

### மாவையின்...

மேற்கொள்ளும் நடவடிக்கைகளை நான் வரவேற்கின்றேன். இத்தகைய செயற்பாடுகள் இன்றைய காலத்துக்கு மிகவும் அவசியமானவை. இவ்வாறு தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இத்தகைய செயற்பாடுகள் அரசியல் கட்சிகளை மட்டுமன்றி ஏனைய பொது அமைப்புக்கள் ஆகியவற்றையும் உள்ளடக்கி அரசியல் சாராத வகையில் முன்னெடுக்கப்படுவதே பொருத்தமானதாகவும் நிலையானதாகவும் அமையும்.

இவ்வாறான போராட்டங்கள் மற்றும் முன்னெடுப்புக்களை மேற்கொள்வதற்காகவே தமிழ் மக்கள் பேரவை உருவாக்கப்பட்டது. கடந்த காலங்களில் இத்தகைய பல்வேறு செயற்பாடுகளை தமிழ் மக்கள் பேரவை வெற்றிகரமாக மேற்கொண்டுள்ளது. தமிழ் மக்கள் பேரவை ஒரு அரசியல் சார்ந்த அமைப்பு அல்ல. ஆகவே, மாவை சேனாதிராசா தற்போது மேற்கொண்டிருக்கும் முன்னெடுப்புக்களை தமிழ் மக்கள் பேரவையின் ஊடாக மேற்கொள்வது பற்றி சிந்திக்க வேண்டும் என்றும் தமிழ் மக்கள் பேரவையில் அவரும் இணைந்து அதன் செயற்பாடுகளை பலப்படுத்துவதற்கு முன்வரவேண்டும் என்றும் வேண்டுகோள் விடுக்கின்றேன்.

ஒரு அரசியல் கட்சியின் தலைவராக இருந்து கொண்டு தமிழ் மக்கள் பேரவையின் இணைத்தலைவர் பதவியை நான் வகிப்பது பொருத்தமானது அல்ல. ஏனைய அரசியல் கட்சிகள் இதில் இணைவதற்கும் பேரவையின் செயற்பாடுகளை பலப்படுத்துவதற்கும் இது தடையாக அமையும். இதனால், பேரவையின் இணைத்தலைவர் பதவியில் இருந்து ராஜினாமா செய்வதாக நான் பல தடவைகள் கோரிக்கை விடுத்திருந்தும் பேரவையின் உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்ளாததால் தொடர்ந்தும் அந்த பதவியை வகித்து வந்தேன். ஆனால், தற்போது ஏற்பட்டுள்ள சூழ்நிலை மாற்றங்களின் கீழ் தமிழ் அரசுக் கட்சி மற்றும் ஏனைய தமிழ் தேசிய அரசியல் கட்சிகளும் பேரவையில் இணைந்து மாபெரும் வெகுஜன கட்டமைப்பாக பேரவையை கட்டியெழுப்பி அதன் செயற்பாடுகளை முன்னெடுக்க வழி ஏற்படுத்தும் வகையில் பேரவையின் இணைத் தலைவர் பதவியில் இருந்து விலகுவது என்று தீர்க்கமான முடிவை எடுத்துள்ளேன். இதனை பேரவைக்கு இன்று அறிவித்துள்ளேன்.

தமிழ் மக்கள் கூட்டணி மற்றும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் பங்காளி கட்சிகள் பேரவையில் அங்கம் வகித்து அதன் செயற்பாடுகளுக்கு முழுமையான ஒத்துழைப்பையும் ஆதரவையும் வழங்கும். தனிப்பட்ட ரீதியில் நான் என்னாலான சகல ஒத்துழைப்பையும் பேரவைக்கு வழங்குவேன்.

இதேவேளை, ஏற்கனவே மாவை சேனாதிராசா மேற்கொண்டுள்ள வடக்கு கிழக்கு தழுவிய ரீதியில் அடுத்த வாரம் முன்னெடுக்கவிருக்கும் போராட்டத்துக்கு தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி தனது முழுமையான ஆதரவை வழங்கும். இந்த போராட்டத்தை நடத்துவதற்கு மிகவும் குறுகிய காலமே இருப்பதால் ஏற்கனவே திட்டமிடப்பட்டபடி இந்த போராட்ட ஏற்பாடுகள் நடைபெறுவதே பொருத்தமானது.

நடைபெறவிருக்கும் இந்தப் போராட்டம் எல்லா தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள், தமிழ் மக்கள் பேரவை மற்றும் பொதுஜன அமைப்புக்களும் உள்வாங்கப்பட்டு மேற்கொள்ளப்பட வேண்டும். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கும் இந்த போராட்டம் தொடர்பான ஆலோசனை கூட்டங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டு அவர்களையும் உள்வாங்கும் முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டும். ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு, என்றுள்ளது. (ஒ,5)

### ராஜபக்ச...

தியாகதீபம்திலீபனைநினைவுகூருவதற்கு இலங்கை அரசு தடை விதித்துள்ள நிலையில் இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கட்சிகளை ஓரணியில் கூட்டி, அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பில் ஆராயும் கூட்டம் நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் கடந்த 15ஆம் திகதி இடம்பெற்றிருந்தது. அதன் தொடர்ச்சியாக நேற்றைய தினம் அடுத்த கட்ட கலந்துரையாடல் நடைபெற்றது.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை.சோ.சேனாதிராசாவின் அழைப்பை ஏற்று, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலுள்ள பங்காளிக் கட்சிகள், விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் பங்காளிக் கட்சித் தலைவர்கள், ஜனநாயகப் போராளிகள் கட்சி, தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தினர், யாழ்ப்பாணம் வர்த்தக சங்கத்தினர், உள்ளூராட்சிமன்றங்களின் தலைவர்கள் என்று பலரும் கலந்து கொண்டனர்.

இரண்டு மணி நேரக் கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த, ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் தலைவரும், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் இணைப் பேச்சாளருமான சுரேஸ் பிரேமசந்திரன்,

தியாகி திலீபனின் நினைவேந்தலுக்கு இலங்கை அரசு தடைவிதித்துள்ளது. நீதிமன்றம் ஊடாக வடக்கு மற்றும் கிழக்கில் இந்தத் தடைகளை அரசு ஏற்படுத்தியிருக்கின்றது. அது தொடர்பான கலந்துரையாடல் நடைபெற்றது.

தமிழ் மக்களின் விடுதலைக்கான போராட்டத்தில் போராளிகள் மற்றும் பொதுமக்கள் என்று பல்லாயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களுக்கு அஞ்சலி செலுத்துவது என்பது ஒவ்வொரு தமிழ் மகனின் உரிமையாகும். அதனை தடை செய்வது என்பது, தமிழ் மக்களின் உரிமைகளை மறுதலிப்பதற்கு சமனாகும். இலங்கை அரசின் இந்தப் போக்கை நாம் யாரும் ஏற்றுக் கொள்ளவில்லை. இந்தக் கலந்துரையாடலில் எல்லோரும் இதனை முன்வைத்தார்கள். இந்தத் தடையை இலங்கை அரசு, ஜனாதிபதி, பிரதமர் மீளப் பெறவேண்டும்.

அஞ்சலிப்பதற்கான உரிமையை ஐ.நா. கூட வலியுறுத்தியுள்ளது. இதனை விடுதலைப் புலிகள் என்ற சாயம் பூசி பயங்கரவாதம் என்று கூறி தடுப்பதை நாங்கள் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளவில்லை. மக்களின் அடிப்படை உரிமைகள் மீது எவரும் கை வைக்க முடியாது. நாங்கள் அவர்களை நினைவுகூருவதற்கும், கண்ணீர் வடிப்பதற்குமான உரிமைகளை தடை செய்ய முடியாது. இந்தத் தடை உடனடியாக நீக்கப்பட வேண்டும்.

இந்த அரசு அதனைச் செய்யுமா இல்லையா என்பது தெரியாது. நாங்கள் இந்தக் கோரிக்கையை முன்வைக்கின்றோம். அரசு தனது பதிலை மூன்று நாள்களுக்குள் சொல்லவேண்டும். அவ்வாறு சொல்லாது விட்டால், நாங்கள் மீண்டும் கூடிப் பேசி, ஜனநாயக ரீதியிலான தொடர் நடவடிக்கைகளை எடுப்போம்.

இந்தக் கலந்துரையாடலில், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை. சோ.சேனாதிராசா, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஸ் பிரேமசந்திரன், ஈழத் தமிழர் சுயாட்சிக் கழகத்தின் செயலாளர் நாயகம் திருமதி அனந்தி சசிதரன், தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் ந.சிறீகாந்தா, எம்.கே.சிவாஜிலிங்கம், ரெலோவின் மூத்த உறுப்பினர் விந்தன் கனகரட்ணம் மற்றும் சுரேன், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மூத்த துணைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம், வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன் மற்றும் ப.சத்தியலிங்கம், வணிகர் கழகத் தலைவர் இ.ஜெயசேகரன், ஜனநாயகப் போராளிகள் கட்சி சார்பில் வேந்தன், தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன், தமிழ் மக்கள் கூட்டணியின் சார்பில் க.அருந்தவபாலன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி**

இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. அவர் கலந்து கொள்ளவில்லை. அவருக்கு இன்று மீண்டும் அழைப்பு விடுத்துக் கலந்துரையாடுவது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

**கடிதம்**

நினைவேந்தலுக்கான தடையை நீக்குமாறு ஜனாதிபதி மற்றும் பிரதமரைக் கோரும் கடிதத்தை, சட்டத்தரணி ந.சிறீகாந்தா மற்றும் சி.வீ.கே.சிவஞானம் ஆகியோர் தயாரித்து இன்று காலை 11 மணிக்கு ஏனைய கட்சித் தலைவர்களுக்கு அனுப்பி அவர்களது ஒப்புதலைப் பெற்ற பின்னர் உடனடியாக அனுப்பி வைக்கப்படவுள்ளது. (ஒ,5)

### அரசியல்...

பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்படி அதிர்ச்சித் தகவலை வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பலாலி இராணுவ முகாமில் பணியாற்றும் பெண் உளமருத்துவர் ஒருவரின் சகோதரரும், மூத்த மாணவர்களால் பாலியல் பகிடிவதைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார். அவர்கள், உனது அக்கா பலாலியில் இராணுவத்தில் இருக்கிறார்தானே என்று கேட்டு இந்தப் பகிடிவதையை மேற்கொண்டுள்ளனர்.

இது தனியே மன எழுச்சியால் நடப்பதல்ல. அதற்கு அப்பால் அரசியல் பின்னணியுண்டு. ஏற்கனவே பல்கலைக் கழகத்தில் விஞ்ஞானபீட மாணவர் வரவேற்பு நிகழ்வில் நடந்த மோதல் ஒன்றில், அரசியல் பின்னணியை நான் சுட்டிக்காட்டினேன். பல்கலைக்கழத்துக்கு வரும் கிராமப்புற மாணவர்கள் அரசியல் கட்சிகளின் செல்வாக்குகளுக்கு உட்படுகின்றனர். அரசியல் கட்சிகளுக்கு ஆள்களைச் சேர்க்கும், அரசியல் கட்சிகளுக்கு ஆள்களைச் சேர்ப்பதற்கு மூளைச் சலவை செய்கின்ற இடமாகவும் பல்கலைக்கழகம் காணப்படுகின்றது.

**நடவடிக்கை**

பகிடிவதையை தடுக்க துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறன. அதற்கான பொறிமுறை அமைக்கப்பட்டுள்ளது. ஏதாவது ஒரு கற்கை பீடத்தில் இந்தச் சம்பவம் நடந்தால், பீடாதிபதி எமக்கு அறிவிப்பார். மூத்த மாணவ ஆலோசகர், பிரதி சட்ட ஒழுக்காற்று அதிகாரி ஆகியோர் பீடாதிபதியுடன் இணைந்து அந்த விடயம் தொடர்பான ஆரம்ப அறிக்கையை 2 நாள்களுக்குள் வழங்க வேண்டும். அதனடிப்படையில் குற்றப்பத்திரிகை வழங்குவோம். அவர்கள் குற்றத்தின் அடிப்படையில் விடுதியிலிருந்து, வகுப்பிலிருந்து நீக்கப்படுவார்கள். 7 நாள்களுக்குள் மாணவர்கள் அதற்கு விளக்கமளிக்க வேண்டும். மாணவர் ஒழுக்காற்று சபை ஒன்றை உருவாக்கியுள்ளோம். அந்தக் குழு, மாணவனின் விளக்கத்தை ஆராய்ந்து, விசாரணை நடத்தி, உரிய தண்டனை வழங்குவார்கள். பகிடிவதையில் ஈடுபட்டவர்கள் சிறப்பு பட்டங்கள் பெற முடியாது, 4ஆம் வருட கற்கையில் ஈடுபட முடியாது, சிறப்பு தேர்ச்சிகள் வழங்கப்படாது. ஆகக்குறைந்தது ஒரு வருடம் அனைத்து கல்வி நடவடிக்கையில் இருந்தும் நிறுத்தப்படுவார்கள், என்றார்.

இந்தப் பத்திரிகையாளர் சந்திப்பில் கலந்து கொண்ட பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினர் கோ.ருஷாங்கன் தெரிவித்ததாவது, பகிடிவதை என்பது ஒரு சமூக நோய். பாடசாலைக் கல்வியை முடித்து பல்கலைக்கழகம் நுழைந்ததும் தாம் ஏதோ பெரிய சாதனை நிகழ்த்தியதைப் போல் நினைக்கின்றனர். பெற்றோரும், பிள்ளைகள் பல்கலைக்கழகம் சென்று விட்டார்கள் என்று அதன் பின்னர் அவர்களைக் கண்காணிப்பதில்லை. பெற்றோர் இளம் சமுதாயத்தைக் கண்காணிக்கவேண்டும். பகிடிவதையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் மாணவர்களை பல்கலைக் கழகத்தால் இடைநிறுத்தும்போது அவர்களின் பெற்றோர் வந்து அழுவார்கள். பிள்ளைகளைக் கண்காணித்தால் இந்த நிலைமை வராது. உயர் கல்விக்கு அரசு அதிக நிதி ஒதுக்குகின்றது. எனவே மாணவர்களும் பொறுப்புணர்ந்து செயற்படவேண்டும்என்றார். (ஒ,5)

### கட்டைப்பிராயில்...

மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

புதிய செம்மணி வீதி, ஆனந்தபுரம் இருபாலையைச் சேர்ந்த சுபேசன் பவானி (வயது-40) என்பவரே உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து பருத்தித்துறை நோக்கிப் பயணித்த தனியார் பஸ், மோட்டார் சைக்கிளில் ஒழுங்கையில் இருந்து பிரதான வீதியூடாக பருத்தித்துறை நோக்கி திரும்பிய பவானியுடன் மோதி விபத்துக்குள்ளானது என்று தெரிவிக்கப்படுகின்றது.

தனியார் பஸ் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். விபத்துத் தொடர்பான விசாரணைகளை கோப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-26)

### சொல்ல....

சொல்வதிலும் பார்க்க 'இம்சைகள்' என்று சொல்வதே பொருத்தமானதாக இருக்கும். இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் எஸ்.சிறிசற்குணராஜா தெரிவித்தார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இன்று காலை நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சமூக ஊடகங்கள் ஊடாக பாலியல் இம்சையில் ஈடுபட்ட மாணவர்கள் என்ன கேட்டார்கள் என்பதை நான் சொன்னால், நீங்கள் திணறிப் போய் விடுவீர்கள். பொது இடத்தில் சொல்ல முடியாதது. சட்டையைக் கழற்றி உடம்பை காட்டுவது மாத்திரமல்ல. அதற்கு மேலாகவும் கேட்கப்பட்டது. அது கிட்டத்தட்ட 'நீலவான நிகழ்வுகளை' எல்லாம் முழுக்க பார்ப்பதை போல.

அவர்கள் அவற்றை நேரலையாக காண்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. சிலருக்கு அவற்றைப் பதிவு செய்து அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளது. இவ்வாறு மிக மோசமாக செயற்பட்டுள்ளார்கள்என்றார். (ஒ,5)

# சென்னை - மும்பை மோதலுடன் இன்று ஆரம்பமாகிறது ஐ.பி.எல்!

சென்னை, செப்.19

ஐ.பி.எல். கிரிக்கெட் திருவிழா பல தடைகளைத் தாண்டி இன்று ஆரம்பமாகின்றது. முதல் ஆட்டமாக மும்பை இந்தியன்ஸ் அணியும் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியும் மோத உள்ளன. இந்த ஆட்டம் இன்று இரவு 7.30 ஆரம்பமாகின்றது.

ஒரு நிகழ்ச்சி தொடங்கும்போது ஆரம்பித்திலேயே பட்டையைக் கிளப்ப வேண்டும் என நிகழ்ச்சியாளர்கள் விரும்புவார்கள். அது போலதான் ஐ.பி.எல். நிர்வாகம் விரும்ப அதற்கு ஏற்ப அமைந்ததுதான் ஐ.பி.எல். 'எல் கிளாசிகோ'.

'எல் கிளாசிகோ' என்றால் என்ன எனப் பார்க்கிறீர்களா?. ஸ்பெயின் நாட்டில் நடக்கும் லாலிகா கால்பந்து தொடரில் பார்சிலோனா ரியல் மாட்ரிட் அணிகளுக்கு இடையில் நடைபெறும் போட்டிதான் எல் கிளாசிகோ. உலகம் முழுவதும் இந்த போட்டிக்கென தனி ரசிகர்கள் பாட்டாளமே உண்டு.

அது போலத்தான் ஐ.பி.எல். போட்டியில் சென்னை சூப்பர் கிங்ஸ் மும்பை இந்தியன்ஸ் அணிகளுக்கு இடையிலான போட்டி. ரசிகர்கள் போட்டி நடக்கும் நேரத்தில் வேலைகளை ஒத்தி வைத்துவிட்டு ஆட்டத்தை ரசிக்கத் தொடங்கி விடுவார்கள்.



மும்பை இந்தியன்ஸ் அணியும் சென்னை சூப்பர் கிங்ஸ் மோதவுள்ள ஆட்டம் பெரும் எதிர்பார்ப்பை உண்டாக்கியுள்ள நிலையில் இந்த இரு அணிகள் நேருக்கு நேர் முன்னர் சந்தித்த சந்தரப்பங்களைப் பார்ப்போம்.

இரண்டு அணிகளும் நேருக்கு நேர் மோதிய ஆட்டங்களில் மும்பை இந்தியன்ஸ் அணியின் கையே ஓங்கியுள்ளது. மற்ற அணிகளை வந்து பார் என்று மார்தட்டும் சென்னை அணி மும்பை அணிக்கெதிராக மட்டும் அடிபணிந்து விடுகிறது. இது வரை 28 முறை பலப்பரீட்சை நடத்தியுள்ளன. அதில் 17 முறை மும்பை இந்தியன்ஸ் அணியே வெற்றி பெற்றுள்ளது. 11 முறை தான் சென்னை அணி வெற்றி பெற்றுள்ளது. அதில் 2013, 2015, 2019 இறுதிப் போட்டிளும் அடங்கும்.

கடந்த தொடரில் நான்கு முறை மும்பை இந்தியன்ஸ் அணியுடன் மோதியுள்ளது. அவை நான்கிலும் சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்கு ஏமாற்றமே மிஞ்சியுள்ளது. இறுதிப் போட்டியில் ஒரு ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியைச் சந்தித்து 4ஆவது முறையாகக் கிண்ணத்தை வெல்லும் வாய்ப்பை இழந்தது.

ஒட்டுமொத்த தோல்விக்கும் இந்தத் தொடரில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி பழிதீர்க்கத் துடிக்கும். மொத்தத்தில் சென்னை சூப்பர் கிங்ஸ் மும்பை இந்தியன்ஸ் அணிகளுக்கு இடையிலான போட்டியில் விறுவிறுப்பு க்கு பஞ்சம் இருக்காது என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. (ற)

## ஆவரங்கால் வீதியில் சென்ற பெண்ணின் சங்கிலி அறுப்பு

யாழ்ப்பாணம், செப்.19

மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண்ணை, மோட்டார் சைக்கிளில் பின்தொடர்ந்து வந்த இளைஞர்கள்பெண்ணின் சங்கிலியை அறுத்துக்கொண்டு தப்பியோடியுள்ளனர்.

இந்தச் சம்பவம் வல்லை, ஆவரங்கால் பிரதான வீதியில் நேற்றுப் பிற்பகல் நடந்துள்ளது. ஆவரங்கால் பகுதியைச் சேர்ந்த பத்மநாதன் சித்திரா (வயது 59) என்பவரது ஒன்றரைப் பவுண் சங்கிலியே அறுக்கப்பட்டுள்ளது.

காட்டுமலைக் கந்தசாமி கோவிலுக்கும் உலவிக்குளப் பிள்ளையார் கோயிலுக்கும் இடையிலுள்ள பிரதான வீதியில் வைத்தே சங்கிலி அறுக்கப்பட்டுள்ளது. இலக்கத்தகடு இல்லாத மோட்டார் சைக்கிளில் வெள்ளை நிற சேர்ட்டுடன் வந்த இளைஞர்களே சங்கிலியை அறுத்துள்ளனர். இவர்கள் ஆவரங்கால் வீதியை நோக்கி சென்றதாகவும், சிறிது நேரத்தின் பின்னர் அதே மோட்டார் சைக்கிள் திரும்பி வல்லைப் பகுதியூடாக அச்சுவேலி வீதிக்கு சென்றது என்றும் அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக அச்சுவேலி பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (எ-422)

## வடக்கு, கிழக்கு பிரிந்தால் இந்தியாவுக்கு ஆபத்தாம்

கொழும்பு, செப்.19

வடக்கு மற்றும் கிழக்கை தனி இராஜ்ஜியமாக பிரித்தால், அதாவது இலங்கையில் தமிழீழம் என்ற தனிநாடு உருவானால் அது இந்தியாவின் பாதுகாப்புக்கே மிகப் பெரிய அச்சுறுத்தலாக அமையும். வட, கிழக்கு தனி இராஜ்ஜியமாக உருவெடுத்தால் தமிழ் நாடு பார்த்துக் கொண்டிருக்காது. இந்தியாவிலிருந்து தமிழ் நாடும் தனியாக்கப்படும். இலங்கை ஒற்றையாட்சியாக இருப்பது இந்தியாவுக்கும் நல்லது. இவ்வாறு உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் இராஜாங்க அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

13 ஆவது திருத்தச் சட்டத்தை இந்தியா எமக்கு பலவந்தமாகத் திணித்தது. இலங்கை போன்ற சுயாதீன நாட்டுக்கு எவ்வாறு இந்தியா அழுத்தம் கொடுக்க முடியும். 13 ஆவது திருத்தமே எங்களுடைய நாட்டை ஒன்பது மாகாணங்களாக பிரிப்பதற்கு காரணமாக இருக்கின்றது. சிறிய நாட்டை பிரிப்பதற்கு அவசியமல்ல. அதனை மீறியும் பிரிக்கப்பட்டுள்ளதென்றால் அது இந்த நாட்டை சமஷ்டி ஆட்சிக்கு கொண்டு செல்வதற்கான முயற்சி. அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளுக்கு இந்த சமஷ்டி பொருத்தமானது. இலங்கையில் வடக்கு மற்றும் கிழக்கு ஒன்றிணைக்கப்பட்டால் இலங்கை சீர்குலையும். வடக்குக்கு சிங்கள மக்கள் செல்ல முடியாது போனால் தெற்கிலுள்ள தமிழ் மக்களுக்கு என்னவாகும். அது இந்தியாவுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும்என்றார். (ஒ.இ)

### இந்திய...

உதவியுடன் தெய்வாதீனமாகத் தப்பினர். பருத்தித்துறை கடற்தொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த மரியதாஸ் றெஜினோல்ட் (வயது-37) என்பவரின் படகே மூழ்கடிக்கப்பட்டுள்ளது. 'இந்திய இழுவைப் படகு நாம் மீன்பிடி யில் ஈடுபட்ட இடத்துக்கு அத்துமீறி நுழைந்தது. இந்தப் பகுதியில் எமது வலை உள்ளது. எனவே விலகிப் போங்கள் என்று அவர்களிடம் தெரிவித்தோம். ஆனால் அவர்கள் எமது படகை மோதி மூழ்கடித்தனர். தெய்வாதீனமாக அந்தப் பகுதியால் வந்த பிறிதொரு படகின் உதவியுடன் உயிர் தப்பினோம்' என்று மீனவர்கள் தெரிவித்தனர்.

படகு, இயந்திரம், வலைகள் என்று மூழ்கடிக்கப்பட்டவற்றின் பெறுமதி சுமார் 12 லட்சம் ரூபா என்று கணக்கிடப்பட்டுள்ளது.

குலசிங்கம் அஜித்குமார் (வயது-25), அருள்சீலன் ஜோர்ஜ் வாசிங்ரன் (வயது -36) ஆகியோரே குறித்த படகில் சென்ற ஏனைய மீனவர்கள் ஆவர். இந்தச் சம்பவம் தொடர்பாகப் பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடும் செய்யப்பட்டுள்ளது. (ம-26)

### ஆளும் கட்சி...

ராஜபக்ச தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறவுள்ளது என தெரிய வருகின்றது.

இந்தக் கூட்டம் எதிர்வரும் 22 ஆம் திகதி முற்பகல் 9.30 மணிக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ச தலைமையில் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடைபெறும் என முன்னதாகஅறிவிக்கப்ப ட்டிருந்தது.

எனினும் ஆளுங்கட்சி நாடாளுமன்றக் குழுக்கூட்டத்தை 21ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்தில் நடத்தும் முடிவை ஜனாதிபதி எடுத்துள்ளார் எனவும், '20' ஆவது திருத்தச்சட்டமூலம் தொடர்பிலேயே இதன்போது முழுமையாககவனம்செலுத்தப்படவுள்ளது எனவும் அரசியல் வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ச தலைமையில் கடந்தமுறை நடைபெற்ற ஆளுங்கட்சி குழுக்கூட்டத்தில் '20' தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் அதிருப்தி வெளியிட்டனர். அதையடுத்து 20 ஐ மீளாய்வு செய்வதற்கு பிரதமர் குழுவொன்றை அமைத்தார். '20' திருத்த ப்பட்டு புதிய வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படும் எனவும் அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும், '20' தொடர்பில் புதிய வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுவதில்லை எனவும், நாடாளுமன்றத்தில் குழுநிலை விவாதத்தின்போது அதில் மாற்றங்களை ஏற்படுத்தவதெனவும் ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

அத்துடன் 20 இற்கான பொறுப்பை தான் ஏற்பதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். இவ்வாறானதொரு பின்புலத்தில் ஜனாதிபதி ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களை அழைத்துள்ளமை தொடர்பில் அரசியல் வட்டாரங்களில் பரபரப்பாக பேசப்படுகின்றது. (எ-44)

**பணிப்பெண் தேவை**

நெல்லியடியில் வீட்டில் பணி புரிவதற்கு பணிப் பெண் தேவை.

**077 968 8618**

Registered as a Newspaper

பக்கங்கள்: 24

# சஞ்சீவி

மலை :33 வள்ளுவர் ஆண்டு : 2051 புரட்டாதி 03 சனிக்கிழமை (19.09.2020) சிகரம் : 14

பச்சைத் தண்ணீரும் அருந்தாமல் பன்னிரு நாட்கள் போராடி
மிச்சமிருந்த உயிரும் தந்தோனை அஞ்சலிக்க முடியாமல் – இச்சையோடு
பேயரசு போட்ட தடையெல்லாம் ஒருநாள் பற்றியெரிய அகிலத்து
வாயெல்லாம் இது பார்த்தீபத் தேசமெனச் சொல்லுமென அறி!

–ஒட்டுக்குழுச் சுவாமிகள்

# பதறவைத்த பரந்தன்

கடந்த 10 ஆம் திகதி பரந்தனில் காதலர்கள் இருவர் ஒன்றாகத் தூக்கிட்டு உயிரிழந்த நிலையில் சடலங்களாக மீட்கப்பட்டிருந்தனர். அதன் பின்னணி குறித்து பல தரப்புகளுடனும் எமது புலனாய்வுக்குழு, நேரடியாகச் சந்தித்து பெற்றுக்கொண்ட தகவல்களை இங்கே தருகின்றோம்.

○ உளவாளி

தடயத்தை தேடி...

## ஒன்றாக மாண்ட காதலர்கள்
## சாவுக்கு தூண்டியது யார்?
## கடைசி நாளில் நடந்தது என்ன?

10.09.2020

பரந்தன் பக்கமாகச் சென்று கொண்டிருந்த அந்தப் படைவீரரின் முகத்தில் 'குப்' பென்று வந்து மோதியது அந்தத் துர்நெடி. அதை நுகர்ந்த மறுநொடியே அவருக்கு வயிறு குமட்டி, வாந்தி வருவது போல உணர்வு. நிச்சயமாக, ஏதோ இறந்த உடலொன்றின் மணமே அது வென்று அவருக்குப் புரிந்தது. அந்தப்பகுதியில் மேய்ச்சலுக்காக வந்த ஏதோவொரு கால்நடை சிலநாள்களுக்கு முன்னர் இறந்து போயிருக்கலாம் என்ற எண்ணத்தோடு, துர்நெடி வந்த பக்கமாக பின் தொடர்ந்தார். வர வர அந்த நெடியின் வீச்சு இன்னும் கூடியது. தாங்க முடியாத மணம். கைக்குட்டையால் மூக்கைப் பொத்தியும், அதையும் மீறி அவர் நாசியை அந்த மணம் தாக்கிக் கொண்டே இருந்தது. இன்னும் முன்னேறினார். மரங்கள் அடர்ந்த பகுதிக்குள் கருமையாக ஏதோ ஒன்று புலப்பட்டது. உற்றுப்பார்த்தார்.

அடுத்த நொடியே, அவரது காலகள் பதறத் தொடங்கின. அங்கே சிதைந்து போன சடலமொன்று தூக்கில் தொங்கிக் கொண்டிருந்தது. பயம் மனதைக் கவ்வ, அங்கிருந்து ஓட்டமும் நடையுமாக வீதிக்கு வந்தவர் பொலிஸுக்கு தகவல் கொடுத்தார்.

" இங்கே ஒரு சடலம் தூக்கில் தொங்கிக் கொண்டிருக்கிறது"

தகவல் பொலிசாருக்கு கிடைக்க முன்னரேயே, விடயத்தை அறிந்து பெரும் சனக்கூட்டம் திரளத் தொடங்கிவிட்டது. ஆனால் எவரும் உள்ளே போகவில்லை. பொலிஸார் வந்து, சடலம் இருக்குமிடம் நோக்கி நகர்ந்தனர். அவர்களாலேயே துர்நாற்றத்தைத் தாங்கமுடியவில்லை. கொஞ்சம் கிட்டவாகச் சென்ற பொலிஸாருக்கு தூக்கி வாரிப் போட்டது.

அங்கே, கயிற்றில் தொங்கிக் கொண்டிருந்தது ஒரு சடலமல்ல, ஆணும் பெண்ணுமாக இரு சடலங்கள். கூட்டத்தில் இருந்த இளைஞர்களில் சிலர் சடலங்களை நன்றாக உற்றுப்பார்த்துவிட்டு அதிர்ந்தனர். அந்த ஆணின் சடலம் அவர்களின் நெருங்கிய நண்பனுடையது. ஒரு வாரமாக அவனைத் தான் காணாமல் அவர்கள் காடுமேடெல்லாம் தேடி அலைந்து கொண்டிருந்தார்கள்.

காதலியோடு எங்கோ தலைமறைவாகி விட்டான் என்று நினைத்துக் கொண்டிருந்த நண்பர்களுக்கு, அவர்கள் இருவரும் சடலமாகத் தொங்கிக் கொண்டிருந்த காட்சி உயிரை உலுக்க, அங்கேயே கதறத் தொடங்கிவிட்டார்கள். தூக்கில் தொங்கிக் கொண்டிருந்த சடலங்களை அப்புறப்படுத்துவதென்பது அவ்வளவு சுலபமாக இருக்கவில்லை.

அவர்கள் இருவரும் இறந்து ஒருவாரமாகி விட்டதால், உடல் வீங்கி, புழுக்களும், இலையான்களும் மொய்த்து, அவற்றைத் தொட்டாலே பிய்ந்துவிடும் நிலையிலேயே சடலங்கள் இருந்தன. பெரும்பாடுபட்டே அங்கிருந்து அகற்றி, மருத்துவமனைக்கு கொண்டு சென்று, பின்னர் சீல் வைத்து, இறுதிக்கிரியைகளுக்காக குடும்பத்தவர்களிடம் அந்த இரு சடலங்களும் ஒப்படைக்கப்பட்டன. ஒன்றாக வாழத் துணிவில்லாமல், சாவில் ஒன்றாக இணைந்த அந்தக் காதலர்களின் சடலங்கள் பிரிக்கப்பட்டு, தனித்தனியே வேறு வேறு திசைகளில் உள்ள அவர்களின் மயானங்களை நோக்கிப் பயணிக்கத் தொடங்கின. யாரிவர்கள்? ஏன் இந்த முடிவுக்கு வந்தார்கள்?



### அவள்

எப்போதுமே அமைதியான சுபாவம். தந்தையின் விவசாய வருமானத்தில் வளர்ந்தவள். குடும்பத்தில் எல்லோரது பாசத்துக்கும் சொந்தக்காரி. பாடசாலையில் நல்ல கெட்டிக்காரி. தந்தை விவசாயம் செய்து வந்தாலும் பிள்ளைகளைக் கஷ்டம் தெரியாமல் அன்போடும் அக்கறையோடும் பார்த்துக்கொண்டார். பள்ளிப்படிப்பை வெற்றிகரமாக நிறைவுசெய்து பல்கலைக்கழகம் தெரிவானாள். தென்பகுதியில் தனது பல்கலைக்கழகக் கல்வியை நிறைவுசெய்து, அதன் பின்னரான பயிற்சி காலத்தில் யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் நிறுவனம் ஒன்றில் பணியில் இணைந்துகொண்டாள்.

கிளிநொச்சியில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு ஒவ்வொரு நாளும் அவள் பஸ்ஸிலேயேசென்றுவர வேண்டும். இதனால் குறித்த பஸ் உரிமையாளரிடம் " என்ர பிள்ளையைப் பத்திரமாக் கூட்டிக் கொண்டு போய், திரும்பக் கொண்டந்து விடுகிறது உங்கட பொறுப்பு" என்று கேட்டுக்கொண்டார் தந்தை. உரிமையாளரும் அதற்கு சம்மதித்திருந்தார். அவள் தனியார் நிறுவனத்தில் வேலை செய்தாலும் 'அரசாங்க வேலையே ' கனவாக இருந்தது. பல பணிகளுக்கு விண்ணப்பித்துவிட்டு காத்திருந்தாள். "இந்தமுறை எப்பிடியும் வேலை கிடைக்கும்.. கஷ்டப்பட்டு வளர்த்த அப்பாவ இனி வேலை செய்ய விடாம சந்தோஷமா வைச்சுப் பாக்க வேணும் " என்பது அவள் அடிக்கடி சொல்லும் வார்த்தைகள். அவளின் ஆசை நிறைவேறுவது போல் கிளிநொச்சி பிரதேச செயலகத்தில் பட்டதாரி பயிலுநராக 02.09.2020 அன்று பணியில் இணைந்துகொண்டாள்.

### அவன்

சிறுவயதிலேயே வாழ்வின் பெரும்பகுதி அவனுக்கு துயர் நிறைந்ததாகவே இருந்தது. தந்தை இல்லை. தாயும், சகோதரனும், சகோதரியும் மட்டுமே. தாயின் உடல்நலமும், மன நலமும் சீரானதாக இல்லை. சகோதரி திருமணம் முடித்துவிட்டார். குடும்பச் சுமையை இவனே சுமக்க வேண்டியிருந்ததால், தொழில்நுட்பக் கல்லூரிக் கற்கையோடு, மின்சார சபையில் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிகின்றான்.

எதற்கும் யோசிக்காமல் முடிவெடுக்கக் கூடியவன். எப்போதும், எதையோ தொலைத்து விட்டவன் போல இருப்பான்.

வசதியாக வாழ வேண்டுமென்ற கனவோடு ஓயாமல் உழைப்பை பற்றியே அதிகம் சிந்திப்பான். மற்ற நண்பர்கள் , சுற்றுலா அது, இதென்று செல்கையில் இவன் அப்போதும் வேலைக்குப் போய்விடுவான்.

### காதல் வானிலே........

யாழ்ப்பாணத்தின் சாவகச்சேரியில் இயங்கும் தனியார் நிறுவனம் ஒன்றில் 2008ஆம் ஆண்டு இறுதியில், அவள் பணிபுரிவதற்காக பஸ்ஸில் சென்றுவரும் போதுதான் அவளுக்குள் காதல் முளைத்தது. அவள் செல்லும் அதே பஸ்ஸில் தான் அவனும் பணிக்காக யாழ்ப்பாணம் சென்று வந்துகொண்டிருந்தான். இருவரும் ஒரே நிறுவனத்திலேயே பணி. இதனால் கிடைத்த அறிமுகம், நட்பாகி, காதலாகி, பிரிக்கமுடியாத உறவானது. அதன் பின்னர் பஸ்ஸில் அவள் ஏறியவுடன் செய்யும் முதற்காரியம் தனக்குப்

20

சஞ்சீவி
19 செப்ரெம்பர் 2020



# திலீபன் சொல்லி சென்ற செய்தி

○ நிலாந்தன்

அமரர் அரசையா ஒரு நாடகக் கலைஞர். மீசையை முறுக்கிக்கொண்டு நிமிர்ந்து நடப்பார். தமிழரசுக்கட்சியின் சத்தியாக்கிரக போராட்டங்களில் ஈடுபட்டவர். சத்தியாக்கிரகப் போராட்டம் தொடர்பில் அதிகம் கவனிப்பைப் பெற்ற ஒளிப்படம் ஒன்று உண்டு. அதில் அரைக்கால்சட்டை அணிந்த ஒரு பொலிஸ்காரர் வீதியில் விழுந்து கிடக்கும் ஒரு சத்தியாக்கிரகியின் நெஞ்சில் துப்பாக்கியை வைத்துக்கொண்டிருக்கிறார். அந்தப் படத்தில் காணப்படும் சத்தியாக்கிரகி அரசையாதான்.

அவரை 1990க்களின் தொடக்கத்தில் ஒரு தேவைக்காக நான் சந்தித்தேன். அப்போது கேட்டேன், “தமிழரசுக்கட்சி உண்மையாகவே சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டதா? காந்தி கூறிய சத்யாக்கிரகி ஒருவருக்கு இருக்கக்கூடிய எல்லா அம்சங்களும் தமிழரசுக்கட்சியின் சத்தியாக்கிரகிகள் என்று அழைக்கப்பட்டவர்களிடம் இருந்தனவா?” என்று.

அதற்கு அரசையா பின்வரும் தொனிப்பட பதில் சொன்னார்... “போராட்டத்தில் ஈடுபட்ட நாங்கள் எல்லாரும் உண்மையாகத்தான் அதில் இறங்கினோம். ஆனால் எங்களில் எத்தனை பேர் அதில் தொடர்ச்சியாகப் போராடி உயிரைத் துறக்க தயாராக இருந்தார்கள் என்ற கேள்வி இங்கு முக்கியமானது. நாங்கள் சத்தியர்க்கிரகத்தை உயிரைத் துறக்கும் ஓர் உச்சம் வரை முன்னெடுக்கவில்லை. முன்னெடுக்கத் தயாராக இருக்கவில்லை. அது சாகத் தயாரானவர்களின் போராட்ட வழிமுறையாக இருக்கவில்லை. மாறாக அது சாகப் பயந்தவர்களின் புகலிடமாகவே இருந்தது. திலீபனைப் போலவும் இப்போதுள்ள ஆயுதப் போராளிகளைப் போலவும் ஒரு 500 பேர் அன்றைக்கு எங்களோடு நின்றிருந்தால் நிலைமை வேறாக இருந்திருக்கும். இப்படி ஒரு ஆயுதப் போராட்டத்துக்கு தேவையே இருந்திருக்காது. எங்களுடைய தலைமுறையே போராடி முடித்திருக்கும்” என்று.

தமிழரசுக்கட்சியின் சத்தியாகிரகிகளுக்கும் திலீபனுக்கும் அன்னை பூபதி க்கும் இடையில் உள்ள வேறுபாடு அதுதான். தமிழ் மிதவாதி களுக்கும் காந்திக்கும் இடையில் இருந்த வேறுபாடும் அதுதான்.

காந்தியைப் பொறுத்தவரை அகிம்சை ஒரு வாழ்க்கை முறை. அது சாகத் துணிந்தவனின் போராட்ட வழிமுறை. அதற்காக உயிரைத் துறக்க காந்தி தயாராக இருந்தார். ஆனால் தமிழரசுக் கட்சியின் அகிம்சைப் போராட்டம் அப்படி அல்ல. அது சாகத் துணிந்தவர்களின் ஆயுதமாக அல்ல. சாகப் பயந்தவர்களின் உத்தியாகவே கையில் எடுக்கப்பட்டது. அதனால் அந்தப் போராட்டத்தை ஒரு கட்டத்துக்கு மேல் அவர்களால் முன்னெடுக்க முடியவில்லை. அரசாங்கம் குண்டர்களின் மூலமும் காவல்துறையின் மூலமும் தமிழரசுக் கட்சியின் அகிம்சைப் போராட்டங்களை ஒடுக்கிய பொழுது அதற்கு அடுத்த கட்டம் என்ன என்பதைக் குறித்து ஒரு தெளிவான திட்ட வரைபடம் கட்சியிடம் இருக்கவில்லை. ஏனெனில் அந்தக்கட்சி அந்தப் போராட்டத்தை விசுவாசமாக முழு அர்ப்பணிப்போடு முன்னெடுக்கத் தயாராக இருக்கவில்லை. அதாவது சாகத் தயாராக இருக்கவில்லை. இதுதான் பிரச்சினை. இப்படிப்பட்ட ஒரு பின்னணியில் திலீபன் சாகத் தயாராக இருந்தார். அன்னை பூபதி சாகத் தயாராக இருந்தார். திலீபன் ஒரு காந்தியவாதி அல்ல. பலர் அவரையும் காந்தியையும் ஒப்பிட்டுக் குழப்புவது உண்டு. அது தவறு.

காந்தி வேறு. திலீபன் வேறு. அன்னை பூபதி வேறு. காந்தியைப் பொறுத்தவரை அகிம்சை ஒரு வாழ்க்கை முறை. அது ஒரு ஆன்மீகப்பயிற்சி மட்டும் அல்ல. ஒரு மக்கள் கூட்டம் தங்கள் விடுதலையை வென்றெடுப்பதற்கான அரசியல் செயல் வழியும் கூட. புத்த பகவானிடமிருந்த ஆன்மீக செயல் வழியை காந்தி அரசியல் செயல் வழியாக மாற்றினார். புத்தரிடம் அகிம்சை ஒரு ஆன்மீக செயல் வழியாக இருந்தது. காந்தி அதனை ஒரு போராட்ட ஒழுக்கமாக மாற்றினார். காந்தியைப் பொறுத்தவரை அகிம்சை தான் எல்லாம். அவர் அதற்காக சாவின் உச்சம் வரை போகத் தயாராக இருந்தார். தானே முதலில் சாகவும் தயாராக இருந்தார் என்பதனால் தான் அவரால் “என்னுடைய வாழ்க்கையே என்னுடைய செய்தி” என்று கூற முடிந்தது.

திலீபன் ஆயுதப்போராட்டத்தில் ஈடுபட்டவர். அந்தப் போராட்டத்தில் தன் உயிரைத் துறக்கத் தயாராக இணைந்தவர். அவருடைய ஒழுக்கம் அகிம்சை அல்ல. ஆயுதப் போராட்டம் தான். ஆனால் அவர் உயிரிழந்தது அகிம்சை வழியில் போராடி. எனவே அவரைப் பொறுத்த வரையிலும் அகிம்சை ஒரு வாழ்க்கை முறை அல்ல. ஆயுதப் போராட்டம் தான் வாழ்க்கை முறை. எனவே அகிம்சையின் வார்த்தைகளில் சொன்னால் திலீபனின் மரணம் தான் அவருடைய செய்தி. அதாவது அகிம்சையோ ஆயுதப் போராட்டமோ எதுவானாலும் அதில் உயிரைத் துறக்கும் உச்சம் வரை போகத் தயாராக இருக்க வேண்டும் என்பதே திலீபனின் செய்தி.

அன்னை பூபதி இந்த இருவரில் இருந்து வித்தியாசமானவர். ஒருவிதத்தில் அவர் திலீபனின் அடிச்சுவடுகளை பின்பற்றினார். எனினும் அவருக்கென்று ஒரு தனித்துவம் உண்டு, அவர் ஒரு போராளியாக இருக்கவில்லை. தன் பிள்ளைகளைப் போருக்கு கொடுத்தார். அதன் விளைவாக ஓர் அரசியல் செயற்பாட்டாளராக மாறினார். அவருக்கு முன் போராடிய அன்னையர் முன்னணியைச் சேர்ந்த அன்னம்மா என்று அழைக்கப்பட்ட ஒரு பெண் போராட்டத்தை இடையில் கைவிட்டார். அதனால் போராட்டம் இடையில் தடுமாறத் தொடங்கியது. சர்ச்சைகளுக்கும் அபகீர்த்திக்கும் உள்ளாகியது. அந்த அபகீர்த்தியிலிருந்து பூபதி போராட்டத்தை மீட்டெடுத்தார். அவர் ஒரு குடும்பப் பெண். சாகத் தயாராக எந்த ஓர் இயக்கத்திலும் இணைந்தவர் அல்ல. எனினும் அவர் சாகத் துணிந்து உண்ணாவிரதம் இருந்தார். திலீபனை விடவும் கிட்டத்தட்ட மூன்று மடங்கு அதிகமான நாட்கள் அவர் பசியோடு இருந்தார்.

ஒரு சாதாரண குடும்பப் பெண் எவ்வளவு உன்னதமான தியாகங்களைச் செய்ய முடியும் என்பதற்கு பூபதி ஒரு முன்னுதாரணம். அதைவிட முக்கியமாக வடக்கையும் கிழக்கையும் அவர் தனது பசியினால் இணைத்தார். வடக்கையும் கிழக்கையும் இணைத்த அகிம்சா முன்னுதாரணம் அவர்.

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலின் பின்னணியில் பிள்ளையானின் வெற்றியை முன்வைத்து பிரதேச உணர்வுகளை தூண்டும் விதத்தில் உரையாடல்கள் நிகழ்ந்து கொண்டிருக்கும் ஒரு பின்னணியில் பூபதியின் முக்கியத்துவம் இன்னும் அதிகமாக உணரப்படுகிறது. பூபதி உண்ணா நோன்பிருந்து வடக்கையும் கிழக்கையும் இணைத்தவர் என்ற அடிப்படையில் அவர் வித்தியாசமான ஒரு முன்னுதாரணம். அவருக்கு வேறு நிகரில்லை.

திலீபனும் பூபதியும் மிக எளிமையான கோரிக்கைகளை முன் வைத்து உண்ணாவிரதமிருந்தார்கள். குறிப்பாக திலீபன் முன்வைத்த அற்ப கோரிக்கைகளைக்கூட நிறைவேற்ற முடியாத சமாதானத்துக்கு எதிராக, தமிழ் மக்களின் உணர்வுகள் திரளத் தொடங்கின. அதன் மூலம் அப்போது நிலவிய சமாதானச் சூழலின் இயலாமைகளை அவர் அம்பலப்படுத்தினார். புலிகள் இயக்கத்துக்கும் இந்திய அமைதி காக்கும் படைக்கும் இடையிலான மோதலை நோக்கி தமிழ் கூட்டு உளவியலைத் தயாரித்ததில் திலீபனுடைய உண்ணாவிரதத்துக்குப் பங்குண்டு. இந்திய அமைதி காக்கும் படை தமிழ் பகுதிகளுக்குள் வந்த போது ஆரத்தி காட்டி மாலை போட்டு வரவேற்ற ஒரு மக்கள் கூட்டத்துக்குள் இருந்து அதே படையை நோக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

திலீபன் மற்றும் அன்னை பூபதி இருவருக்கும் உள்ள ஒரே ஒற்றுமை தங்களுடைய இலட்சியங்களுக்காக அவர்கள் உயிரைத் துறப்பதற்குத் தயாராக இருந்தார்கள் என்பதுதான். அரசியல் செயற்பாடு எனப்படுவது அர்ப்பணிப்பும் தியாகமும் சுய சித்திரவதையும் சுயசோதனைகளும் நிறைந்ததுதான் என்பதனை இரண்டு பேரும் நிரூபித்தார்கள்.

ஆனால் கடந்த 11 ஆண்டுகளாக தமிழ் அரசியல் அப்படிப்பட்டது அல்ல. நேர்மை, துணிச்சல், அர்ப்பணிப்பு மிக்க அரசியல்வாதிகளை மிக அரிதாகவே காண முடிகிறது. மிகச் சிலரைத் தவிர பெரும்பாலானவர்கள் பிழைப்புவாதிகள் ; சுயநலமிகள்; நயஞ்சகர்கள். அரசியலை ஒரு பிழைப்பாக பார்க்கிறவர்கள். தேசியத்தை ஒரு முகமூடியாக எடுத்து அணிந்து கொள்பவர்கள். நடிப்புச் சுதேசிகள். அவர்கள் அடிக்கடி போராட்டம் வெடிக்கும் என்று அறிக்கைகள் விடுவார்கள். ஆனால் நாட்டில் அப்படி எந்தப் போராட்டமும் கிடையாது. பாதிக்கப்பட்ட மக்கள் தான் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காகவும் காணிக்காகவும் போராடினார்கள். போராடிக் கொண்டிருக்கிறார்கள். திலீபனைப் போல அன்னை பூபதியைப் போல அர்ப்பணிப்போடு போராட எத்தனை அரசியல்வாதிகள் தயார்? அவர்கள் சாகும்வரையெல்லாம் உண்ணாவிரதம் இருக்க வேண்டாம். சின்னச் சின்னத் தியாகங்களையாவது செய்யலாம். தமக்குக் கிடைக்கும் சலுகைகளையும் சுகபோகங்களையும் துறக்கலாம். குறைந்தபட்சம் தமது வாக்குறுதிகளைக் காப்பாற்றும் விதத்தில் நேர்மையாக வாழ்ந்து காட்டலாம்.

**திலீபனைப்போல, அன்னை பூபதியைப்போல அர்ப்பணிப்போடு போராட எத்தனை அரசியல்வாதிகள் தயார்? அவர்கள் சாகும்வரையெல்லாம் உண்ணாவிரதம் இருக்க வேண்டாம். சின்னச் சின்னத் தியாகங்களையாவது செய்யலாம். தமக்குக் கிடைக்கும் சலுகைகளையும், சுகபோகங்களையும் துறக்கலாம். குறைந்தபட்சம், தமது வாக்குறுதிகளுக்கு நேர்மையாக வாழ்ந்து காட்டலாம்.**



# 13க்குத்தான் ஆசைப்பட்டாயா தமிழா?


பரமேஸ்வரன்

**கோ**த்தபாய ராஜபக்ச ஜனாதிபதியாகப் பதவியேற்ற நாள் முதல், 13 பற்றிய பேச்சே எங்கும் அடிபடுகிறது. கோத்தபாய ராஜபக்ச ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தின் போதே, தான் பதவிக்கு வந்தால் மாகாண சபை முறைமையை ஒழிப்பேன் என்று கூறி வந்தார். இப்போது ஊடகங்களிலும் அரசியல்வாதிகள் மத்தியிலும் பிரதான பேசுபொருளாக காணப்படுகிற இரண்டு விடயங்கள் ஒன்று 20, மற்றையது 13. இந்த 13,20 இரண்டும் இலங்கை அரசியல் யாப்பில் அரசியல்வாதிகள் தத்தமது நலன்களைப்பேணும் நோக்குடன் கொண்டு வரப்பட்ட சீர்திருத்தங்கள். இதில் பதின்மூன்றாவது திருத்தச்சட்டம் மூலம் தான் இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு மாகாணசபை முறை இலங்கையில் அறிமுகம் செய்யப்பட்டது.

**ஆயுதப்போராட்டம் உருவானது**

இலங்கை சுதந்திரமடைந்த பின் தமிழர்கள் சமஷ்டி கேட்டு அகிம்சை வழியில் போராடினார்கள். தமிழர்களின் அகிம்சைப் போராட்டத்தை ஆயுத முனையில் எதிர்கொண்ட சிங்கள அரசு, அவ்வப்போது தமிழர்கள் மீது வன்முறைகளையும் கட்டவிழ்த்து விட்டது. அத்துடன் தமிழர்களின் பூர்வீக நிலங்களில் சிங்கள குடியேற்றங்களை மேற்கொண்டதுடன் தமிழர்களின் பூர்வீக நிலங்களில்இருந்து தமிழர்கள் விரட்டியடிக்கப்பட்டனர். இதனால் இனிமேல் சாத்வீக வழியில் போராடிப் பிரயோசனமில்லை என்று உணர்ந்த இளைஞர்கள் ஆயுதத்தை கையில் எடுத்தனர்.

இயக்கங்கள் தோற்றம் பெற்றதுடன் இலங்கை இராணுவத்துக்கு எதிரான ஆயுதப்போராட்டமும் உருவானது. இலங்கை இராணுவம், போராளிகள், அப்பாவிப் பொதுமக்கள் என பல்வேறு தரப்பிலும் ஆயிரக்கணக்கானோரின் உயிர்கள் காவு கொள்ளப்பட்டன. போரை முடிவுக்கு கொண்டு வரும் நோக்குடன் ஒப்பரேஷன் லிபரேஷன் என பெயர் சூட்டப்பட்ட இராணுவ நடவடிக்கை இலங்கை இராணுவத்தால் முன்னெடுக்கப்பட்டது. பலாலி இராணுவ முகாமிலிருந்து மூன்று முனைகளிலும் இராணுவம் மும்முனைத்தாக்குதலுடன் பெரும் எடுப்பில் முன்னேறியது. வல்வெட்டித்துறையில் முன்னூறுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டனர். அப்பாவிப் பொதுமக்களை பட்டினியிலிருந்து காப்பாற்றப்போவதாக கூறி இந்திய விமானங்கள் யாழ்ப்பாணத்தில் உணவுப்பொட்டலங்களை வீசின. 1987ம் ஆண்டு ஜூலை 29 ஆம் திகதி இந்தியப்பிரதமர் ராஜிவ் காந்தி இலங்கைக்கு வந்து அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவுடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டார்.



இந்த ஒப்பந்தத்தின் கீழ் மாகாணசபைகள் உருவாக்கப்பட்டு மாகாணசபைகளுக்கு அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன. புலிகள் இலங்கை இந்திய ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. யுத்தம் தொடர்ந்தது. இது அனைவருக்கும் தெரிந்த வரலாறு.

**பின்னணியில் சீனா?**

2009 மே 19 இல் யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது; அதனைத் தொடர்ந்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தாம் 13+ ஐ நடைமுறைப்படுத்தப்போவதாக அறிவித்தார்; ஆனால் அறிவித்த மாதிரி எதுவும் நடைபெறவில்லை. கோத்தபாய ராஜபக்ச தான் பதவிக்கு வந்தால் மாகாண சபை முறைமையை ஒழிப்பேன் எனக் கூறியே பரப்புரைகளில் ஈடுபட்டார்.

ஜனாதிபதி தேர்தல் முடிந்த கையுடன் 13ஐ ஒழிக்க வேண்டும் ,மாகாணசபை முறைமை ஒழிக்கப்பட வேண்டும் என்ற கோஷம் தென்னிலங்கையில் வலுப்பெற்று வருகிறது. இந்தக் கருத்தை முதன் முதலில் முன்மொழிந்தவர் புலிகள் -ரணில் சமாதானப்பேச்சு வார்த்தையின் போது புலிகளுக்கும் இலங்கை அரசங்கத்திற்குமிடையே ஒரு தூதுவர் போன்று செயற்பட்ட மிலிந்த மொறகொடதான். அப்போது அமெரிக்காவின் செல்லப்பிள்ளை என வர்ணிக்கப்பட்ட மிலிந்த மொறகொட இப்போது சீனாவின் பக்கம் சாய்ந்து விட்டார் .எனவே 13 ஐ ஒழிக்க வேண்டும் என்ற கோஷத்தின் பின்னணியில் சீனா இருப்பதாகச் சிலர் கருதுகின்றனர். 13 ஐ ஒழிப்பதன் மூலம் இலங்கையில் இந்தியாவின் ஆதிக்கத்தை தடுத்து நிறுத்த சீனா முயற்சிப்பதாகச் சிலர் கூறுகின்றனர். இலங்கை-இந்திய ஒப்பந்தத்திலும் தமிழர்களின் நலன்களை விட இந்தியாவின் பிராந்திய நலன்களுக்கே முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. இந்தியா தமிழர்களைக் கை விட்டு விடுமா, இந்தியா பேசாமலிருக்குமா என்றெல்லாம் கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. தமிழ் அரசியல்வாதிகளும் இந்தியாவிடம் முறையிடப்போவதாகக் கூறி வருகின்றனர்.

**எல்லாமே நாடகம்**

அதேவேளை சரத் வீரசேகர போன்றவர்கள் இந்தியாவைப்பற்றி எமக்கு அக்கறையில்லை, 13 ஐ ஒழித்தே தீருவோம் என கங்கணம் கட்டிக்கொண்டு நிற்கின்றனர். இலங்கை அரசாங்கம் 13ஐ ஒழித்து மாகாணசபைகளை இல்லாமல் செய்யுமா என்று கேட்டால் இல்லை என்றே சொல்லலாம். ராஜபக்ச சகோதரர்கள் சிறந்த ராஜதந்திரிகள். ஜே. ஆருக்கு நிகரான ராஜதந்திரிகள்.13ஐ இல்லாமல் செய்வதற்கு அவர்கள் ஒன்றும் அடிமுட்டாள்களல்லர். யுத்தம் முடிவடைந்து பத்து வருடங்கள் கழிந்து விட்ட நிலையிலும் தமிழர்களுக்கு அதிகாரப்பகிர்வு வழங்கப்படவில்லை. இந்தியாவும் சர்வதேசமும் ஐ.நாவும் 13 ஐ முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு இலங்கை அரசைக் கோரி வரும் நிலையில், ராஜபக்ச சகோதரர்கள் 13ஐ இல்லாமல் செய்ய மாட்டார்கள் என்றே சொல்லலாம். 13 ஐ இல்லாமல் செய்தால், இந்தியாவினதும் சர்வதேசத்தினதும் எதிர்ப்பை சம்பாதிக்க வேண்டிவரும் என்பது ராஜபக்ச சகோதரர்களுக்கு நன்கு தெரியும்.

அப்படியானால் எதற்காக 13ஐ ஒழிக்கப்போவதாகக் கூறுகின்றனர் என்று கேட்டால் இது ஒரு நாடகம் . அவ்வளவுதான். சர்வதேசத்தினதும் இந்தியாவினதும் வற்புறுத்தல்களுக்கு இணங்கி பெரும்பான்மை மக்களின் எதிர்ப்புக்கு மத்தியில் நாங்கள் 13ஐ நடைமுறைப்படுத்துகிறோம் என சர்வதேசத்துக்கு காட்டுவதே ராஜபக்ச சகோதரர்களின் நோக்கம். இலங்கை அரசாங்கம் 13 ஐ அமுல்படுத்துவதாக வாக்குறுதி அளித்ததும், சர்வதேசமும் 13 ஐ ஏற்றுக்கொள்ளும்படி தமிழ்த் தலைமைகளை வலியுறுத்தும். ஆக மொத்தத்தில் ஒன்றரை இலட்சம் பொதுமக்கள் மற்றும் இருபதினாயிரத்துக்கும் மேற்பட்ட போராளிகளின் உயிரிழப்பு, அளவிட முடியாத உடமை இழப்பு இவை யாவற்றுக்கும் கிடைக்கபோகிற பலன் இப்போதுள்ள எதுவித அதிகாரங்களுமற்ற மாகாணசபை மட்டுமே. தமிழர்களுக்குரிய அதிகாரப்பகிர்வை தற்போதுள்ள மாகாணசபைகளுடன் மட்டுப்படுத்துவதே ராஜபக்ச சகோதரர்களின் திட்டம். ■



## அதிரடி அரங்கு

### இன்னும் சில கேள்விகள்

கடந்த வாரம் அதிரடி அரங்கில் ' எரியிற வீட்டில் ..என்ற தலைப்பில் அதிபர் சேவைப் பரீட்சையில் பாதிக்கப்பட்டவர்களின் ஒருங்கிணைப்பாளர் என்ற கோதாவில் செயற்படும் நபரைப் பற்றி வெளிப்படுத்தி இருந்தோம்.

அதுவெளிவந்து சில நாள்களில் எமது அலுவலகத்துக்கே வந்த குறித்த நபர், "என்னைக் கேட்காமல் எப்படி அதைப் போடுவீர்கள்? நான் வழக்குப் போடபோகிறேன் என்று துள்ளிக் குதித்தார். "உங்கள் பக்க நியாயங்கள் இருப்பின் எழுத்து மூலம் தாருங் கள். சரியானவையாக இருப்பின் பிரசுரிப்[போம் என அவ ருக்குச் சொல்லிய னுப்பினோம். நேற்று நண்பகல் மூன்று பக்க விளக்கத் தோடு வந்த அந்த நபர், " இதில ஒரு.சொல்லும் வெட்டாமல் போடவேணும், இல்லாட்டி வழக்குத்தான் என்று வழக்கிலேயே பிடிவாதமாக இருந்தார்.

ஆனால் பரிதாபம் என்னவெனில் அவர் தந்த அந்த விளக்கத்தில்" நாய்கள், நாதாரிகள், முட்டாள்கள், புறம்போக்குகள்.. என்று தன் குட்டை வெளிப்படுத்திய சக ஆசிரியர்களை ஏசும் வசவுச் சொற்களை வடிகட்டினால் வெறும் 50 சொற்கள் கூட தேறாது. ( இப்படி வசைமாரி பொழிபவர் தான் , அதிபராகி மாணாக்கர்களை மண்ணாக்க... மன்னிக்கவும் நல்வழிப்படுத்தப்போகிறாராம்.)

அந்த 50 சொற்களில் சொல்லப்பட்ட சாராம்சம் இதுதான். " இது பொது நலனுக்கான அமைப்பு. கூட்டம் கூடி 21 பேர் வரவு டன் நிர்வாகமும் எமக்குண்டு. நாங்கள் அமைச்சடக்ளஸ், வியாழேந்திரன் உள்ளிட்ட பல அமைச்சர்களைச் சந்தித்து பேசி யுள்ளோம். நடவடிக்கை தொடர்கிறது. இதற்கு யாரும் சேறுபூச வேண்டாம் அவ்வளவுதான் அதிலுள்ள விடயங்கள். அதில் குறிப்பிட்ட அமைச்சர்களைச் சந்தித்து என்ன ஆணியைப் பிடுங்கினார்கள் எனபதுன் கூட அதில் இல்லை. அத்தோடு தனிப்பட்ட ஒருவரின், அதாவது ஒருங்கிணைப்பாளர் என்று சொல்லிக்கொள்ளும் நபரின், வங்கிக் கணக்குக்குக் காசு போடச் சொல்லி கேட்டமைக்கான நியாயத்தை அதில் சொல்லவே இல்லை.

நிற்க, கடந்த வாரம் அதிரடி அரங்கில் இந்த விடயம் வெளிவந்த பின்னரே அவசரமாக கூட்டம் கூடி 21 பேர் கொண்ட ஒரு நிர்வாகத்தை 21 பேர் தெரிவு செய்துள்ளனர். இதற்கான அழைப்பு கடந்த 4 ஆம் திகதி விடுக்கப்பட்டபோதிலும், அதிரடி அரங்கில் இந்த விடயம் வெளிப்படுத்தப்படும்வரை அவர்களுக்கென ஒரு நிர்வாக அமைப்பு தெரிவு செய்யப்பட விலை என்பதே உண்மை.

அப்படித் தெரிவு செய்யப்பட்ட நிர்வாகத்தில் நிதி விடயங்களைக் கையாள, பொருளாளர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். ஆனால் அதன் பின்னரும்கூட பொருளாளரின் வங்கிக் கணக்குக்குக் காசை அனுப்பச் சொல்லாமல், ஒருங்கிணைப்பாளரின் வங்கிக்கணக்குக்கு பணத்தை அனுப்பச் சொல்வதன் மர்மம் என்ன?

இதுவரை அவர்களின் வைபர் குழு மூலம் சேர்க்கப்பட்ட பணம் எவ்வளவு, செலவு எவ்வளவு என்ற விபரத்தை ஏன் இதுவரை பொத்தி வைத்திருக்கிறார்கள்?

இந்தக் கேள்விகளுக்கு அந்தக் குழுவில் உள்ள எவருக்குமே பதில் தெரியவில்லையாம்.

### மாணவர்களுக்கு இந்த வேலையா?

**வ**லிகாமம் வலயத்தில், சங்கானைக் கோட்டத்துக்கு உட்பட்ட, அராலிப் பகுதியில் உள்ள அரச பாடசாலை ஒன்றில் நடக்கும் சம்பவம் இது.

அந்தப் பாடசாலையின் மாணவர்களை மலசலகூடம் சுத்தம் செய்யுமாறு அதிபர் பணிப்பதால் பல மாணவர்கள் பாடசாலைக்கு செல்வதற்கு மறுப்பதாக பெற்றோர் குற்றம் சுமத்துகின்றனர்.


" எமது பிள்ளைகள் காலையில் குளித்து சுத்தமாக பாடசாலைக்கு செல்லும்போது அவர்களை பாடசாலையின் வெளிப்புறச் சுற்றுச் சூழல், மலசல கூடம் மற்றும் வீதியோரங்களை சுத்தம் செய்யுமாறு பணிப்பதால் அவர்களது வெண்ணிற ஆடைகள் அழுக்காவதுடன் கிருமித் தொற்று ஏற்படும் வாய்ப்புக்களும் உள்ளன.

இந்த வேலைகளைச் செய்துவிட்டு பிள்ளைகளால் எப்படிக் கற்றல் செயற்பாடுகளில் முழு மனதோடு ஈடுபட முடியும்? இப்படியான வேலைகளை செய்வதற்கு மாணவர்களை அனுமதிக்க வேண்டாம் என்று நாங்கள் (பெற்றோர் )பல தடவைகள் அதிபருக்குக் கூறியுள்ளோம். ஆனாலும் அதிபர் எமது கருத்தை ஏற்றுக்கொள்ளவில்லை.

அதிபரின் இப்படியான செயற்பாடுகளால் மாணவர்கள் பாடசாலைக்கு செல்வதற்கு மறுக்கின்றனர். இதனால் அவர்களது கல்வி நடவடிக்கைகளில் பின்னடைவு ஏற்படுமோ என்று அச்சமாகவுள்ளது என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்த விடயத்தில் உரிய நடவடிக்கை எடுப்பார்களா?

காவலூர் அகிலன்

# கானல் நீர்



முருகண்டிப் பிள்ளையார் கோவில் மணி "டாங்... டாங் ... "என ஒலிக்க ஆரம்பித்தது. அதன் சத்தம் கேட்டு எழுந்து கொண்ட சுந்தரி அடுப்பில் இருந்த சாம்பலை அள்ளிக் கொட்டி விட்டு பாத்திரங்களை எடுத்துச் சென்று கழுவ ஆரம்பித்தாள். முன் பெல்லாம் மணி அடித்து ஓய்ந்த கையோடு பிள்ளையார் பாடல்கள் ஒலிக்க ஆரம்பித்து விடும் அந்தப்பா டல்களை கேட்டபடியே சுந்தரி பாத்திரங்களைக் கழுவி முடித்துவிடுவாள். ஆனால் இப்போ கோவில் ஒலிபெருக்கி பழுதடைந்த தன் காரணமாக பாடல்கள் ஒலிப்ப தில்லை. அதனால் அவளின் பாத்திரம் கழுவும் வேகம் சற்றுக் குறைந்திருந்தது .ஐந்து மணிக்கு ஆரம்பித்தால் ஆறும ணிக்குத்தான் பாத்திரங்களைக் கழுவி முடிப்பாள். அதன் பிறகு அடுப்பை மூட்டி தேநீரைக் கொதிக்க வைத்து விட்டு மகன் மதுரந்த கனை எழுப்பி விடுவாள் .

அவளது கனவெல்லாம் மதுரந்தகனைப் படிக்க வைத்து அவனை நல்ல உத்தியோகத்தில் இருக்கச் செய்துவிட வேண்டுமென்பதுதான். இருந்தாலும் அவளது மனதில் பயம் குடிகொண்டிருந்தது. சமாதான காலம் நிறைவடைந்து போர் மீண்டும் தொடங்கியிருந்தது. இதுவே அவளது பயத்துக் கான காரணம். நாளடைவில் போர் உக்கிரமடைந் தது. மக்கள் இடம்பெயர்ந்து விசுவமடு, வள்ளிபு னம், கைவேலி போன்ற பகுதிகளில் குடில்களை அமைத்துத் தங்கினர். அவர்களோடு சேர்ந்து சுந்தரி குடும்பமும் ஓரிடத்தைப்பிடித்து கொட் டில் போட்டது.

அங்கிருந்த ஓரிரு நாளில் மதுரந்தகன் போராட் டத்தில் இணைந்துகொண்டான். வீட்டில் ஒரு பிள்ளை என்றால் போராட்டத்தில் இணைத்துக் கொள்வதில்லை என்ற நிபந்தனை இருந்திருந்தா லும் விரும்பிச் செல்பவர்களை, அவர்கள் துரத்தியும் விடுவதில்லை. சுந்தரி அலைந்து திரிந்தும் மதுரந்தகனைப் பார்க்க முடியாத வளாகத் துடித்தாள். மாதங்கள் உருண்டோடின போர் உக்கிரமடைந்தது. மக்கள் இராணுவக்கட் டுப்பாட்டுப் பகுதிக்குள் வந்து கொண்டிருந்தனர். சுந்தரி குடும்பமும் அவர்களோடு சேர்ந்து வந்து கொண்டிருக்கையில் எதிரி ஏவிய குண்டொன்று அவர்கள் அருகில் வீழ்ந்து வெடித்தது .அதன் சன்னங்கள் சுந்தரியின் கணவர் கந்தப்புவின் நெஞ்சைக் கிழித்துச் சென்றிட, கந்தப்பு மண்ணில் சரிந்து விழுந்தார்.இரத்தம் கொப்பளித்துக்கொண் டிருக்க கந்தப்புவைத் தூக்கி மடியில்கிடத்தி அழுதாள் சுந்தரி. அங்குமிங்குமாகச் சிதறிக்கிடந்த பிணங்களைப்போல கந்தப்புவின் உடலையும் விட்டுவிட்டு சுந்தரியை இழுத்துச் சென்றார்கள் சேர்ந்து வந்தவர்கள். மகனையும் தொலைத்து விட்டு கணவனைக் கண்முன்னே பறிகொடுத்து விட்டு ஏதிலியாக முட்கம்பிகளால் அடைக்கப் பட்ட வேலிக்குள் சிறு தறப்பாள் குடிலொன்றில் தங்கவைக்கப்பட்டாள் சுந்தரி.

நாள்கள் உருண்டோடின.

முகாம்களுக்குள் தங்க வைக்கப்பட்டவர்கள் விடுவிக்கப்பட்டு அவர்களின் சொந்த இடங்க ளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். சுந்தரியும் தன் சொந்த ஊரான முறிகண்டியில் வந்து குடியமர்ந்து கொண்டாள். ஒரு நாள் தபால் விநியோகம் செய்பவர் தன் ஈருருளியில் இருந்த மணியை ஒலித்துக்கொண்டிருந்தார். சுந்தரி மெதுவாக எழுந்தபடி "எனக்கு யார் கடிதம் போட இருக்கு ?"என சிந்தித்துக்கொண்டே வெளியில் வந்து, கடிதத்தை வாங்கிப் பிரித்துப் படிக்க ஆரம்பித் தாள் .

"அன்பின் அம்மா நான் நலம், நீங்கள் நலமோடு வாழ மாவீரர்கள் துணை.

மேலும் அம்மா நான் எதுவித பிரச்சனைகளு மின்றி இராணுவக்கட்டுப்பாட்டுக்குள் வந்து சேர்ந்து தற்போது புனர்வாழ்வு அளிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறேன். இங்கு எதுவித பிரச்சனை களும் இல்லை .இம்முறை உயர்தரப் பரீட்சை எழுத இருக்கிறேன். மிக விரைவில் என்னை விட்டு விடுவார்கள் .அப்போது உங்களோடு சேர்ந்து கொள்வேன். என்னைப் பார்க்க வர விரும்பினால் விசாளினி யின் அம்மாவோடு சேர்ந்து வாருங்கள்.

இப்படிக்கு ,
மதுரந்தகன்

என எழுதி முடிக்கப்பட்டிருந்தது. அதை வாசித்து முடித்த சுந்தரியின் கண்களில் ஆனந்தக்கண்ணீர் பெருக்கெ டுத்து ஓடியது . பதினேழு வருடங்கள் தவமிருந்து பெற்றபிள்ளை இன்னும் உயிரோட இருக்கிறான் என்ற செய்தி அறிந்தவுடன் வீட்டின் உள்ளே ஓடிச் சென்று கள்ளிக்காட்டு அம்மனை வணங்கி விட்டு கண்ணீரைத் தன் சேலை நுனியால் துடைத்துக்கொண்டு விசாளினி வீட்டுக்குப் புறப்பட்டாள்.

விசாளினி சிறுவயதிலிருந்து மதுரந்தகனோடு கல்விகற்றவள். அவளின் வீடு சுந்தரியின் வீட்டுக்கு நேரெதிரே மூன்றாவது காணியில்தான் இருக்கி றது. ஐந்து நிமிடங்கள் நடந்தால் விசாளினி வீட்டை அடைந்துவிடலாம். சுந்தரி அவசர அவசரமாக விசாளினியின் வீட்டை நோக்கி நடந்தாள். விசாளினியின் தாயார் வள்ளியம்மா கோழிக்கூடொன்றை பனைமட்டைகளால் வரிந்துகொண்டிருக்க, விசாளினி வளவைச் சுத்தம் செய்து குப்பைக்கு நெருப்பு வைத்துக் கொண்டி ருந்தாள். சுந்தரி விசாளினியைக் கண்டவுடன் "புள்ள நெருப்பு வைச்சுட்டு தூரமா வந்து நில்லு. குண்டு கிண்டு கிடந்து வெடிச்சிடப்போகுது "என எச்சரித்தபடி காணிக்குள் வந்தாள். மட்டை வரிந்துகொண்டிருந்த வள்ளியம்மா சுந்தரியைக் கண்டவுடன், மட்டை வரிவதை நிறுத்திவிட்டு "என்னக்கா உப்புடிக் களைச்சு விழுந்து வாறி யள்?தண்ணி தரட்டோ?" எனக் கேட்டுக் கொண்டே அருகில் சென்றாள்.

"இல்ல வள்ளி என்ர மகன் உசிரோடதான் இருக்கிறானாம் .கடிதம்போட்டிருக்கிறான். நீ வரும்போது சேர்ந்து வரச்சொல்லி கடிதத்தில எழுதியிருக்கிறான். அதுதான் உன்னப் பாத்து எப்ப போறதெண்டு கேக்க வந்தன்.."

"ஓ...அப்ப உங்கட மகனும் மடுக்கந்தையிலயே இருக்கிறான்? சரி .சரி. நான் புதன்கிழமை போறன் .நீங்களும் வாங்கோ. சேர்ந்தே போய்ற்று வருவம் "என்றாள் வள்ளியம்மா.

✦✦✦

இரண்டரை வருடங்களின் பின் மகனைக்காணப் போகும் ஆனந்தம் சுந்தரிக்கு. அவனைக் குழந்தை யாகப் பெற்றெடுத்தபோது கிடைத்த சந்தோசத் தைப்போல் இரண்டு மடங்கு சந்தோசத்தோடு இருந்தாள். மகனுக்குப் பிடித்தமான முட்டைமாவையும் முறுக்கையும் தயார் செய் தாள். மறுநாள் காலையில் எழுந்து கடைகடையாக ஏறி இறங்கி அவனுக்கான சேட், ஜீன்ஸ், சறம் போன்ற உடுபுடவைகளையும் வாங்கி பொதியாக் கினாள்.

இரவானது. நிலவின் ஒளியில் வெளவால்கள் பறந்துவந்து வேலியின் அருகிலிருந்த வேம்பில் அமர்வது அவளின் கண்ணுக்குத் தெளிவாகத் தெரிந்தது .அவை ஒவ்வொரு கிளைகளிலும் இருந்த பழங்களைச் சப்பித் துப்பிக்கொண்டிருந்தன. அவற்றின் சுதந்திரத்தை பார்த்து மனம் மகிழ்ந்தாள். பறவைகளைப்போலே மனிதனுக்கும் சுதந்திரம் கிடைத்து விட்டால் எவ்வளவு மகிழ்ச்சியாக அவர்கள் வாழ்வார்கள் என தன் மனதுக்குள் எண்ணியபடியே முற்றத்திலேயே தூங்கிப்போனாள்.

அவள் முற்றத்தில் கிடப்பதைப் பார்த்த மணி யக்கா சுந்தரியைத் தட்டி எழுப்பி உள்ளே சென்று படுக்கச் செய்தாள். மணியக்கா சுந்தரியின் வீட் டுக்கு அருகில் வசிப்பவள் .அவளது கணவரும் யுத்தத்தின் போது இறந்துபோயிருந்தார். அவ ளுக்கு மூன்று பிள்ளைகள். ஒருவன் வீரச்சாவு. இரண்டாவ மகன் வெளிநாட்டில். மூன்றாவது பெண்பிள்ளை .அவள் பெயர் விதுரா. களச்சம ரின்போது ஒற்றைக் கண்ணில் சன்னம் பட்டு கண்ணொன்றை இழந்திருந்தாள். அவள்தான் தாயாருக்கும் சுந்த ரிக்கும் உதவியாக இருப்பவள்.

✦✦✦

மறுநாள் காலை விடிந்து நீண்ட நேரமாகியும் சுந்தரியின் வீடு வெறிச்சோடிப்போயிருந்தது. காலையில் நேரத்தோடு எழுந்து முற்றம் கூட்டும் சுந்தரியை நேரமாகியும் வெளியில் காணவில்லை யென்பதால் மணியக்கா வேலிக் கத்வைத் திறந்து கொண்டு உள்ளே வந்து பார்த்தாள் .முற்றத்தில் பழுத்த வேப்பிலைகளும் பழங்களுமாகக்கொட் டிக்கிடந்தன .வழமையில் சுந்தரியின் வீட்டு முற்றம் இருக்கும் நிலைக்கும் இன்று இருக்கும் நிலைக்கும் சற்றுவித்தியாசமாக இருக்கவே மணியக்கா சுந்தரியை அழைத்தபடி வீட்டுக்குள் நுழைந்தாள். சுந்தரி விரிக்கப்பட்டி ருந்த பாயில் கண்களைத் திறந்தபடி விறைத்துப் போயிருந்தாள். மகனைப் பார்க்கப் போகும் ஆனந்தத்தோடே அவள் உயிரை விட்டிருந்தாள்.

✦ ✦ ✦

சுந்தரி இறந்து ஒரு வருடத்தின் பின்னரே மதுரந்த கனின் புனர்வாழ்வு முடிந்து அவனால் வெளியே வரமுடிந்தது. அவன் தடுப்பில் இருக்கும்போது, வள்ளியும், விசாளினியும் அவனைப் பார்க்கச் சென்று வந்தனர். அந்தப் பார்வையிடல் மெல்ல மெல்ல மதுரந்தகன் மீது, விசாளினிக்குள் காதலை உற்பத்தி செய்தது. ஆனால் மதுரந்தகனோ அதற் குப் பச்சைக்கொடி காட்டவேயில்லை.

இப்போது மதுரந்தகன், புனர்வாழ்வு முடிந்து, பரீட்சையில் சித்தி பெற்று, பல்கலைக்கழகக் கல்வியும் முடித்து பட்டதாரியாகிவிட்டான். அரச பணியும் கிடைத்து உயர்நிலையை நோக்கி அவன் சென்றுகொண்டிருந்தான்.தன் மகளுக்கு மதுரந்தகன் மீது காதல் இருப்பது வள்ளிக்கும் தெரியும்.அவளும் அதற்கு மறுப்புச் சொல்ல வில்லை. மதுரந்தகன் தன் மருமகனாக வந்தால் நல்லது தான் என எண்ணிக்கொண்டாள். அவன் வேலை முடித்து, வள்ளியம்மை வீட்டுக்கு வரும் போது விழுந்து விழுந்து உபசரிப்பாள். ஒருநாள், மது மோட்டார் சைக்கிளில் வந்தபோது எதிரே வந்த டிப்பர் அவனை மோதித் தள்ளியது. குற்றுயிரோடு மது மருத்துவமனையில் அனுமதிக் கப்பட்டான்.

" ஆள் தப்பினாலும் , கால் சரிவர காலம் எடுக்கும், சிலவேளை காலை எடுக்க வேண்டியும் வரலாம்" என்று டொக்டர் சொல்லிவிட்டார். அதைக் கேட்ட வள்ளிக்கு தலை சுற்றியது.

(19ஆம் பக்கம் பார்க்க)

# சொற்சிலம்பம் போட்டி 13

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | ■ | 4 | 5 | 6 |
| 7 | | | ■ | 8 | | | |
| 9 | | | 10 | | ■ | 11 | |
| | ■ | 12 | | ■ | 13 | | ■ |
| ■ | 14 | | ■ | 15 | 16 | | |
| 17 | | ■ | 18 | | | | ■ |
| 19 | | 20 | | ■ | | ■ | 21 |
| 22 | | | ■ | 23 | | | |

அனுப்புபவர் பெயர்:...............................................

முழுமையான தபால் விலாசம்: ...................................

...............................................................

கையொப்பம்:.....................................................

ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருகின்றமையால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

## இடமிருந்து வலம்

1. சமுதாயம் 4. காலம் பிந்தச் செய் 7. இடி. 8. உலர்தல் 9. ஆண்கள் காதில் அணியும் ஆபரணம். 11. பர்வதம் 12. வெறுமையாக்கப்பட்ட நிலை. 13.ரக. 14.நன்றியுள்ள மிருகம். 15. பிரியம். 17. நீரில்/ நீராவியில் வேகவை. 18. மறு. 19. விநாயகருக்குப் பிடித்த உணவுப் பண்டம். 22. திருமணமாகாத பெண். 23. இள எருது.

## மேலிருந்து கீழ்

1. பிரசன்னம் 2. ஒன்றுடன் மற்றொன்றை இணை 3. ஆயுர்வேத வைத்தியத்தில் பயன்படுத்தப்படும் ஒரு மூலப்பொருள். 4. அன்னை. 5. செழுமையைக் குறிக்கும் சொல். 6. சிதம்பரத்துக்கு இப்படியும் ஒரு பெயர். 8. கால்வாய். 10. இதுவும் ஒரு யுகம். 13. ஆசைப்படும். 14. சவரம் செய்பவன். 15. வீழும்படி ஆணையிடல் 17. அளவுக்கு மிஞ்சிய 18. தங்களின். 20. பழம். 21. சிரசில் தொற்றிக் கொண்டு தொல்லை தருவது.

### சொற்சிலம்பம் போட்டி 11 க்கான விடைகள்

**இடமிருந்து வலம்**

1.சபரிமலை, 5.புகை, 6.கரி, 7.கலாநிதி, 9.வாசகன், 11.தானம், 12.சல்லி, 13.ஏனம், 14.யாசகம் 17.பணயம், 18.கண், 19.சதம், 20.பதனிடு, 22.மார், 23.அன்னியம்

**மேலிருந்து கீழ்**

1.சகவாசம், 2.பரிசல், 3.மகன், 4.லைலா, 5.புதினம், 8.நிதானம், 10.கலியாணம், 13.ஏகம்பன், 15.சய, 16.தாண்டும், 17.பதர், 18.கனிய, 19.சமா, 21.தனி

**சொற்சிலம்பம் போட்டி இல.13**

பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்

**உதயன் சஞ்சீவி**

**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

என்னும் முகவரிக்கு

25.09.2020 இற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

## போட்டி விதிகள்

- வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
- சஞ்சீவியில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
- போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
- வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே

ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/=

பரிசாக வழங்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

**போட்டி இலக்கம் 11இல் வெற்றி பெற்றோர் விபரம்**

**1 ஆம் பரிசு**
குணராசா விஜிதன்
6ஆம் வட்டாரம்
குழுமுனை, முல்லைத்தீவு.

**2 ஆம் பரிசு**
என். பாலகுமார்
சிவன் வீதி,காரைநகர்.


**3 ஆம் பரிசு**
ச.கணபதிப்பிள்ளை
கிந்துசிட்டி, புலோலி.

**4 ஆம் பரிசு**
பா பிரியரூபினி
226/73, அம்மன் நகர்,
தோணிக்கல், வவுனியா

**5 ஆம் பரிசு**
சி.பரராஜசிங்கம்
கார்த்திகேசர் வீதி, புலோலி
தென்மேற்கு, புலோலி

# புதிர் 13

○ மாயன்



எங்கிருந்தோ ஓடி வந்த ஒருவன், அபாய அறிவிப்புக் கொடுத்ததால், உணவை உண்பதா வேண்டாமா என நால்வரும் ஒருகணம் யோசித்தனர். பின்னர் , 'வருவது வரட்டும்.இதுவரை பார்க்காத ஆபத்தா இனி வரப்போகின்றது? முதலில் வயிற்றைக் கவனிப்போம்.' என்று முடிவெடுத்து எவ்வித சலனமுமில்லாமல் எல்லாப் பதார்த்தங்களையும் ஒரு பிடி பிடிக்கத் தொடங்கினர்.

ஆபத்து என்று அலறிக் கொண்டு வந்த வழிப்போக்கனுக்கு ஒரே ஆச்சரியம். ஆபத்து என்று சொல்லியும், அதைப் பற்றி அக்கறையே இல்லாமல் சாப்பிடுபவர்களைப் பார்த்துவிட்டு 'ஒருவேளை இவர்களுக்கு காது கேட்காதோ?' என்பது போல கடைக்காரப் பெண்ணிடம் சைகையில் கேட்டான். அதற்கு "செல்வா! இவர்கள் நீ நினைப்பது போல இவர்கள் சாதாரணமானவர்கள் அல்லர். இளவரசர்கள். அதிலும் விவேகமான இளவரசர்கள்" என்று பதில் சொன்னாள் அவள்.

" தமிழினி, தாமதிக்க நேரமில்லை. சவேந்திராசுரன் துயிலில் இருந்து எழுந்துவிட்டான். இப்போது நரமாமிசம் உண்பதற்காக கொலைப்பசியோடு எமது பரந்தாபுரி நகரை நோக்கி வந்து கொண்டிருக்கிறான்" என்று செல்வன் சொல்லி முடிப்பதற்கிடையில் எங்கிருந்தோ ஒரு அபாயப்பேரிகை முழங்கியது. அதைக் கேட்டதும் கடைக்காரப் பெண்ணான தமிழினியின் முகம் மாறியது.

" இளவரசர்களே, விரைவாக உணவை அருந்துங்கள், நாம் இந்த இடத்தை விட்டு விரைவாக அகல வேண்டும். இல்லாவிட்டால் சவேந்திராசுரனின் பசிக்கு இரையாக வேண்டியதுதான்" என்று கலவரக் குரலில் சொன்னாள். அவள் சொல்வதற்கிடையில் நால்வரும் உணவை உண்டு முடித்திருந்தார்கள். பசி மயக்கம் நீங்கியதால் அவர்கள் முகத்தில் மீண்டும் உற்சாகக்களை துளிர் விட்டது.

" பயப்படாதே பெண்ணே, எந்த அசுரன் வந்தாலும் அவனைக் கொல்லும் வீரம் எம்மிடமுண்டு" என்று சொல்லிக் கொண்டே பளபளக்கும் தன் வாளை வெளியே எடுத்துக் காட்டினான் துவாரகன். ஆனால் தமிழினியின் கண்களில் இன்னும் கலவரம் கூடிக் கொண்டே போனது.

"இளவரசர்களே, நீங்கள் நினைப்பது போல சவேந்திராசுரன் சாதாரண அரக்கன் அல்ல. அவன் கொத்துக் கொத்தாக மனித உடல்களை உண்ணும் வெறி கொண்டவன். அதைவிட அவனிடம் ஒரு அதிசய சக்தியும் உண்டு. அவன் உருவத்தை யார் பார்த்தாலும் அவர்களின் பார்வை பறிபோய்விடும். அதனால் அவனை எவரும் எதிர்த்து நிற்க முடியாது" என்று விளக்கினாள்.

" ஐயகோ, பார்த்தாலே பார்வை போய்விடுமா? அப்படியானால் நம்கதி அதோகதிதான்" என்று எந்தப் பக்கத்தால் தப்பித்தோடலாம் என வழி தேடலானான் காக்கைகுப்தன். " எந்தச் சக்திக்கும் ஒரு பலவீனம் நிச்சயம் இருக்கும். அதைக் கண்டுபிடித்தால் எவரையும் அழிக்கமுடியும்" என்று திடமான குரலில் சொன்னான் இளஞ்சந்திரன்.

" அதற்கெல்லாம் இப்போது நேரமில்லை. பாருங்கள். நிலம் மெல்ல அதிரத் தொடங்குகிறது. அப்படியானால் அவன் நம்மை அண்மித்துக் கொண்டிருக்கிறான்.இப்போது இங்கிருந்து போகாவிட்டால் அவன் நம்மைக் கொன்று புசிப்பது உறுதி" என்று அவசரப்படுத்தினான் செல்வன்.

"பின்வாங்குவது வீரர்களுக்கு அதுவும், அரசவம்சத்தவர்களுக்கு அழகல்லவே" என்று தன் வாளை இன்னும் உறுதியாகப் பற்றினான் துவாரகன்.




" தம்பி, சிலவேளைகளில் வீரத்தை மட்டும் நம்பாமல் விவேகத்தையும் துணைக்கொள்ள வேண்டும், வருபவன் வெறுமனே புஜபலம் கொண்ட அரக்கன் என்றால் நேரடியாக எதிர்க்கலாம். ஆனால் அவ்வனோ கண்ணைக் குருடாக்கும் வல்லமை கொண்டவன். அவனை வீழ்த்த வேறு உபாயத்தைத் தான் நாட வேண்டும்" என்றான் பரிவழுதி.

" ஆம் துவாரகா, தந்திரோபயமாக இப்போது பின்வாங்கிவிட்டு, சமயம் வரும்போது பாய்ந்து தாக்குவோம்" என்று தன் திட்டத்தைச் சொன்னான் இளஞ்சந்திரன். அதன்படி எல்லோரும் அந்த இடத்தை விட்டு வேகமாக நகரத் தொடங்கினர். இளவரசர்களோடு, இப்போது செல்வனும், தமிழினியும் சேர்ந்துவிட்டார்கள். அவர்களையும் காப்பாற்றும் பொறுப்பு இவர்கள் தலையில் விழுந்துவிட்டது.

இவர்களின் வேகத்தை விடவும் அசுரனின் வேகம் அதிகமாக இருந்திருக்க வேண்டும்,. சில அடி தூரம் தான் நகர்ந்திருப்பார்கள். ஆனால் அதற்கப்பால் நகரமுடியாதபடி, நிலம் பூகம்பம் வந்தது போல குலுங்கியது. மரங்கள் பேயாட்டம் ஆடின.

அசுரன் நெருங்கிவிட்டான் .

" எல்லோரும் கண்களை இறுக மூடிக்கொண்டு நடவுங்கள்"என தமிழினி கூச்சலிட்டாள். ஆனால் அதற்கிடையில் காலம் கடந்திருந்தது.

( புதிர்கள் தொடரும்)



# ஒரு கணம் மனம்!

○ டிலோஜினி மோசஸ்

பிறந்து , இறந்து போகிற இந்த வாழ்க்கையில் எவ்வளவு பட்டங்கள் பெற்றாலும் ,எத்தனை புத்தகங்களை வாசித்தாலும் கிடைக்காத பட்டறிவையும் வாழ்வியல் பாடங்களையும் நாம் எதேச்சையாக சந்திக்கும் மனிதர்கள் கற்றுக்கொடுத்து விடுவார்கள்.எம்மைப் பெரிய அறிவாளிகளாகவோ செயல்வீரர்களாகவோ நாம் எண்ணிக்கொண்டிருக்கும்போது எதிர்பாராது சம்பவிக்கும் ஒரு நிகழ்வு நாங்கள் இந்த பூமியில் எவ்வளவு அற்பமான ஜீவராசிகள் என்று உணர்த்தி விடும். இப்படி என் அன்றாடங்களில் என்னைக் கடந்து போகும் மனிதர்களும் நிகழ்வுகளும் ஏற்படுத்திய சின்னச் சின்ன அதிர்வுகளை கொஞ்சம் நேரமொதுக்கி அசைபோட்டு ஒரு வாழ்வியல் பாடமாக எடுத்துகொள்ள தொடங்கியபோது, சின்ன சின்ன மாற்றங்களால் கொஞ்சம் கொஞ்சமாக அழகாக தொடங்கியது என் வாழ்வு.என்னை மாற்றும் இந்த மனிதர்களையும் நிகழ்வுகளையும் நீங்களும் கூட கடந்து போகலாம். ஆயினும், நின்று நிதானித்து சிந்தனை செய்து உள்வாங்கி கொள்வதில் சிக்கல்கள் இருக்கலாம்.அதனால்தான் அவர்களை நீங்கள் மீளவும் சந்திக்கவும் உரையாடவும் உங்களைக் கொஞ்சம் சரிபார்க்கவும் உதவியாக இருக்கும் என்ற எண்ணத்தில் இந்தத் தொடரைப் பதிவு செய்கிறேன்.

**திடீர் தீர்ப்புகள்**

தீர்ப்பிடுதல் என்பது எங்களில் பலருக்கு இருக்கக் கூடிய இயல்புதான். ஒருவர் கொஞ்சம் கலைந்த தலை,கழுவப்படாத கிழிந்த ஆடை, சீராக்கப்படாத நகங்கள் என்று தனியாக அமர்ந்திருந்தால் அவரைப் பைத்தியம் என்று நினைத்துக் கொள்வோம். பிற்பகல் எட்டு ஒன்பது மணியளவில் இருளடர்ந்த வீதியில் பயணம் செய்யும் போது ஏதாவது ஒரு சந்தியிலோ, வீதி ஓரத்திலோ ,அழகாக ஒப்பனை செய்த ஒரு பெண் தனியாக நின்று கொண்டிருந்தால் அவளைப் பற்றிய விம்பங்களை எப்படி வரைந்து கொள்வோம்???

இதுவே நேர்த்தியாக கட்டப்பட்ட சேலை, அழகாக தலைசீவி கொண்டையிடப்பட்ட கேசம், தோளில் கைப்பையோடு குடை பிடித்து கொஞ்சம் புத்தகங்களோடு நடந்து கொண்டிருந்தால் ஆசிரியை என்று நினைத்து விடுவோம், இப்படி சமுதாயம் உருவாக்கி வைத்திருக்கும் சில அளவீடுகளை வைத்துகொண்டு இவர் இப்படியாகத்தான் இருப்பார் என்று நினைத்து கொள்வோம்.ஆனால் சந்தர்ப்ப சூழ்நிலைகளும் நேரகாலமும் மனிதர்களின் வெளி அடையாளத்தை சிதைத்து அல்லது உருமாற்றி நிற்க வைக்கும்போது நாங்கள் மேலோட்டமான ஒரு பார்வையை கொண்டு அவர்களை மதிப்பிட்டு தீர்ப்பளித்து விடுவோம். எவ்வளவு மோசமான செயல்!!!!!

விரிவுரை மண்டபத்தில் இருந்து வெளியேறி சிற்றுண்டிச்சாலையை நோக்கி நடந்து கொண்டிருந்த எனது தொலைபேசி மணியின் சத்தத்தில் இருந்து அழைப்பது யார் என்பதைத் தெரிந்து கொண்டு "சொல்லுங்கோ அக்கா " என்றதும் மறுமுனையில் அழைப்பில் இருந்த பெரியக்காவின் குரல் கொஞ்சம் பிசிறடித்தது. நிதானமாகச் செவி சாய்த்தேன். சமையலறையில் நடந்த சிறிய விபத்தினால் அம்மாவின் ஒரு விரல் கொஞ்சம் ஆழமாக வெட்டுண்டிருந்தது தெரிய வர, அவசரமாக வகுப்பறைக்குத் திரும்பி பையை எடுத்து கொண்டு கிளம்பினேன் மருத்துவமனைக்கு. மருத்துவமனை வாசலில் நின்ற பாதுகாப்பு உத்தியோகத்தர் ". என்ன தங்கச்சி" என்றார்.

விடயத்தைச் சொல்லி குறித்த விடுதியில் இருக்கும் அம்மாவைப் பார்க்க வேண்டும் என்று சொல்வதற்குள்" பாஸ் எங்க?" என்று கொஞ்சம் கறாராகவே கேட்டார். நான் நடந்த சம்பவத்தை பொறுமையாக விளக்கி இப்பொழுதுதான் அம்மா அனுமதிக்கப்பட்டதாக சொல்லி ஒருவாறு உள்ளே சென்று விட்டேன். அம்மாவை பார்ப்பதற்கான அனுமதி உடனே கிடைக்காத நிலையில் பல்கலையில் உட்கொள்ள மறந்த காலை உணவும் நண்பகல் வெயிலும் பொறுமையை சோதித்துக் கொண்டிருக்க அருகிலிருந்த பெஞ்சில் அமர்ந்து மருத்துவமனை நடப்புகளை நோட்டமிடத் தொடங்கி விட்டேன். அங்குமிங்கும் வெள்ளை கோட்டுகளோடு அலைந்து கொண்டிருந்த மருத்துவ மாணவர்கள்,என்னைப்போலவே பதற்றத்தோடு உட்கார்ந்திருந்த உறவுகள் , அந்த சூழலிலும் கொஞ்சமாவது பணம் சம்பாதித்து விடவேண்டும் என்ற நோக்கில் ஓடிக்கொண்டிருந்த இடைத்தரகர்களின் "ஆட்டோ தேவையோ?" என்ற கேள்விகள் என்று பரபரத்துக்கொண்டிருந்த வைத்தியசாலை எனக்கு வினோதமாகவே தான் இருந்தது."முன்னப் பின்ன செத்தாத்தானே சுடுகாடு தெரியும்" என்று அம்மம்மா அடிக்கடி சொல்லுவதை நினைத்துகொண்டு நான் எவ்வளவு சுகதேகியாக இருக்கிறேன் என்று கர்வத்தில் மிதந்து கொண்டிருந்தேன்.

"ஆ ,ஐயோ அம்ம்மா"

வாய்விட்டு அலறிக்கொண்டு நான் நிமிர்ந்து பார்ப்பதற்கிடையில் , என் சின்னவிரலை ஏறி மிதித்த சப்பாத்து கால்கள் என்னை கடந்து போயிருந்தன.காலில் எழுந்த வலியை விடவும் "மிதிச்சிட்டு ஒரு சொறி கூட சொல்லேல. என்ன மனுசனப்பா!!! சரியான காட்டு மிராண்டி போல" என்று நினைத்துக் கொண்டு சிவந்து போயிருந்த சின்ன விரலை நீவி விட்டுக் கொண்டிருந்தேன்.

"சொறி தங்கச்சி ,அவசரத்தில கவனிக்காமல் ஏறி உழக்கீற்றன்" என்ற பரிச்சயமான குரலை கேட்டு நிமிர்ந்து பார்த்த நான் அதிர்ச்சி தாளாமல் எழுந்தேன். எதிரில் நின்று கொண்டிருந்தது என்னுடைய பாடசாலையில் வேலை செய்த அலுவலக பணியாளர் அண்ணா.அவரும் என்னை எதிர்பார்த்திருக்கவில்லை போலும்.. சாலை விபத்தொன்றில் சிக்கிக்கொண்ட மனைவியை அனுமதித்திருந்த அறைக்கு சென்று கொண்டிருந்திருக்கிறார்.அவரது அப்போதைய மனநிலையில் என் காலை மிதித்ததை அவரது மூளை கவனத்தில் எடுக்கவில்லையோ என்னவோ.அவருக்கு தைரியம் சொல்லி அனுப்பி விட்டு உட்கார்ந்த எனக்கு வெட்கமாக இருந்தது. கலங்கியபடி கடந்த அவருடைய கண்கள் ஏதோ செய்தன.

நிறையத் தடவைகள் நான் மாணவ முதல்வர் கடமையை செய்வதற்காக அதிபர் அலுவலகத்துக்குள் நுழையும் போதெல்லாம் அவருடைய பண்பையும் நடத்தையையும் பார்த்திருக்கிறேன். நண்பர்களாக அவரைப்பற்றி சிலாகித்திருக்கிறோம். நாங்களே நல்லவராக பேசிக் கொண்டிருந்த ஒரு மனிதனை ஒரு சில நிமிடத்தில் எவ்வளவு மோசமாக எடை போட்டு விட்டேன். என்னுடைய தீர்ப்பிடல் எவ்வளவு மோசமாக இருந்தது. சூழ்நிலைக்கைதிகளாக எப்போதாவதொரு தடவை சந்திக்கக்கூடிய மனிதர்களை ஒரேயொரு நிகழ்வை மாத்திரம் வைத்து தீர்ப்பிடுவதென்பது எவ்வளவு மோசமான செயல்?? நினைத்துகொண்டே உட்கார்ந்திருக்கும் போது அம்மாவைப் பார்ப்பதற்காக எனது பெயர் அழைக்கப்பட எழுந்து நடந்து கொண்டிருந்த நான் அருகில் நின்று கொண்டிருந்த பையனை மோதி விட்டு "சொறி ப்ரோ" என்றதும், அவன் கொஞ்சம் வித்தியாசமாக மேலிருந்து கீழாக என்னைப் பார்க்கத் தொடங்கினான். அவன் என்னை எப்படித் திட்டக்கூடும் என்ற கற்பனையூடே சிரித்தபடியே நடக்க தொடங்கினேன். ■

சஞ்சீவி

**மாணவர் கழகம்**


1. முழுப்பெயர்: ..........................................
2. முகவரி: ..........................................
..........................................
3. பிறந்த திகதி: ..........................................
4. கல்வி கற்கும் பாடசாலை: ..........................................
5. கற்கும் தரம்: ..........................................
6. தொலைபேசி இலக்கம்: ..........................................

.................... ....................
மாணவர் ஒப்பம் பெற்றோர் ஒப்பம்

*அனுப்ப வேண்டிய முகவரி:*

**உதயன் சஞ்சீவி**
**இல.361, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

- சஞ்சீவியில் பிரசுரமாகும் படைப்புகளில், மாணவர் கழகத்தில் அங்கத்துவம் வகிக்கும் மாணவர்களின் ஆக்கங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- மாணவர்கள் தமது படைப்புக்களை அனுப்பும்போது தமது அங்கத்துவ இலக்கத்தை தவறாது குறிப்பிட்டு அனுப்பவும்.
- மாணவர் கழக அங்கத்தவர்களுக்கு எதிர்பாராத பரிசுகளும் சிறப்புச் சலுகைகளும் வழங்கப்படவுள்ளன. (இது தொடர்பான விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்)



## கஞ்சிரா

தோற்கருவிகளில் கஞ்சிரா மிகவும் பழமையான வாத்தியமாகும். இவ்வாத்தியம் இந்தியா எங்கும் நாடோடிப் பாடல்கள் மற்றும் பஜனை பக்திப் பாடல்கள் என்பனவற்றுக்கும் தென் இந்திய சங்கீதத்தில் சாஸ்திரிய சங்கீதத்திற்கும் பக்கவாத்தியமாக வாசிக்கப்பட்டு வருகின்றது.


இவ்வாத்தியம் நான்கு விரல் அகமும் சுமார் 6 அங்குல வாயளவும் உடையதாக பித்தளைத் தகட்டினால் வளையம் அமைந்தும் சுற்றுவட்டத்தில் உண்டாக்கிய துவாரத்தில் உள்ள இரும்புக் கம்பியில் இரண்டு காலணாச் செப்புக்காசுகள் துளையிட்டுக் கோர்க்கப்பட்டும் இருக்கும். வாசிக்கும் போது இந்தச் செப்புக்காசுகளினின்றும் ஒலி உண்டாகும்.

இவ்வாத்தியத்தின் ஒரு புறம் உடும்புத் தோலினால் மூடி மரத்தில் பலமாகப் பொருத்தப்பட்டிருக்கும் இவ்வாத்தியத்தை இடது கையில் பிடித்துக்கொண்டு வலது கைவிரல்களினால் வாசிப்பர். ஒரு கையால் வாசிப்பது சற்றுச் சிரமமாயினும் மிருதங்கத்தில் இரண்டு கைகளின் உதவியினால் வாசிக்கப்படும் சொற்களைத் தவிர மற்றெல்லாச் சொற்களையும் பயிற்சியினால் வாசிக்கலாம்.

**தர்சினி ஞானேந்திரன்,**
*கம்சபிரியா இசைக்கல்லூரி*
*இல.30 கிருஷ்ண பிள்ளை வீதி,*
*ஈச்சமோட்டை யாழ்ப்பாணம்.*

இராகன்

கிராமத்து மனிதர்கள் என்ற இந்தத் தொடர் தனித்துவமான கிராமத்து மனிதர்களை மீள நினைவுபடுத்துவதன் மூலமாக அருகிப்போன கிராமத்து வாழ்வின் செழுமைகளையும் சிறப்புக்களையும் வெளிக்கொண்டு வருகின்றது.



# கள்ள உறுதி கனகு வாத்தி

வாத்தியார் என்றால் ஊரில் எல்லோரதும் மதிப்புக்குரியவர். வெள்ளை வெளேரென்று வேட்டிகட்டி, முழங்காலை முட்டும்படி நீளமான நஷனல் போட்டு, கரை தெரியுமாறு மடித்து தோளில் உத்தரியம் போட்டு, கையில் பிரம்பாயுதம் தாங்கி வலம்வரும் ஆசிரியர்களை இப்போது பார்ப்பது அரிது. ஆசிரியர்களைச் 'சட்டம்பியார்" என்று அழைத்த காலம் அது. சட்டம்பியார் சொன்னதே சட்டம் என்றிருந்த காலம் ஒன்றிருந்தது. பள்ளிக்கூடத்துச் சட்டம்பியார்களே ஊருக்கும் சட்டம்பியார்களாக இருந்தார்கள். இப்போதுள்ள எம்.பி.மாருக்கில்லாத செல்வாக்கும் அதிகாரமும் அந்த நேரத்துச் சட்டம்பிமாருக்கு இருந்தது. தேர்தலில் ஒருவரை எம்.பி.யாக வரவைக்கும் வல்லமை கூட சட்டம்பியார் ஒருவரின் சொல்லுக்கிருந்தது.

ஊரிலுள்ள வீடுகளுக்குச் சென்று கணிசமான பிள்ளைகளைச் 'சாய்ச்சுக்கொண்டு" பாடசாலையில் சேர்த்துவிட்டு நஷனல் போட்டுக்கொண்டு வாத்தியாரான பலபேர் இருந்தார்கள். அப்படியான வாத்தியார்கள் ஊருக்கே 'தலைச்சனாக" இருந்தார்கள். தலைச்சனின் சொல் கேட்டுப் பின்தொடர ஊரே தயாராக இருந்தது. எந்தக் காரியத்தைச் செய்வதானாலும் "எதுக்கும் ஒருக்கால் வாத்தியாரிட்டை கேட்டுப் பார்ப்பம்" என்பது சர்வ சாதாரணமாக வழக்கத்திலிருந்தது. வாத்தியாரென்றால் அவ்வளவு மரியாதை. பின்னாளில் ஒரு சந்ததியில் வாத்தியார் "வாத்தி"யாகிப்போன அவலம் நேர்ந்துவிடுவதற்கு கனகலிங்கமும் ஒரு காரணமானார். கனகலிங்கம் என்பதில் 'லிங்கம்" என்ற பின்னொட்டு உதிர்ந்து போகவும், வாத்தியார் என்பதில் 'ஆர்" விகுதி தொலைந்து போகவும் அவரே காரணரானார்! அவ்வளவு மரியாதை அவருக்கு!

கனகு வாத்திக்கு "உருளிக் கனகு" என்றொரு பட்டப் பெயர் வழக்கிலிருந்தது. உருட்டுக்களும் பிரட்டுக்களும் செய்வதில் மன்னன் என்பதால் அந்தக் கௌரவப் பட்டம் அவருக்கு! வாத்தியாருக்குக் குடும்பமோ ,குழந்தை குட்டியோ இல்லை. அவரது சகோதரிகளின் பிள்ளைகள் தான் எல்லாம். மருமக்களுக்கு மாமனாக வாழ்ந்தே காலத்தைக் கடத்திவிட்டார். அவரது பிரயாசை எல்லாம் சகோதரிகளுக்கும் மருமக்களுக்கும் சொத்துச் சேர்த்து வைப்பதாகவே அமைந்தது. வாத்தியார் வீட்டுக்குப் பின் எல்லையில் யாரோ ஒருவரின் காணியில் மூன்றில் ஒரு பங்கு காணாமல் போனமைக்கு, வீட்டு எல்லைக்கு வாத்தியார் கதிகால் போடும் நுட்பமே காரணம் என்று ஊரில் எல்லோரும் அவரது பெருமையை 'மெச்சிப்" பேசிக்கொண்டனர்! ஒதி, முள்முருக்கு கதிகால்களைப் போட்டுப் போட்டு எல்லைப் போரின்றி எல்லையை விரிவாக்கம் செய்யும் வித்தை வாத்தியாருக்குக் கைவந்த கலை!

## கிராமத்து மனிதர்கள்... 14

ஊரிலுள்ள காணிகளை எல்லாம் வளைத்துப் போட்டுத் தனதாக்கி மகிழவேண்டும் என்ற நெப்போலியப் பசி அவருக்கு. எங்கெல்லாம் வெறுங்காணிகள் இருக்குமோ, அங்கெல்லாம் கனகு வாத்தியின் ஒரு கண் இருக்கும். 'மலட்டுச் சொத்துகளுக்கு" உரிமை கோரத்தக்க ஆற்றல் ஊரில் கனகு வாத்தி ஒருவருக்கே உண்டு. மரணப் படுக்கையில் கிடந்து அழுந்திக்கொண்டிருந்த சிறிய தந்தையார் ஒருவரின் பெருவிரல் அடையாளத்தை குத்தி எடுத்து தன்னுடைய பேரில் அவர் உறுதி எடுத்துக் கொண்டதை ஊரே விதந்து பேசியது!

'உருளிக் கனகு" ஊரில் ஒரு காணிக்கு கதிகால் போடப்போய் கோட்டுக்குப் போய்வந்த சம்பவம் வரலாறாக நிலைத்துப்போனது. கவனிப்பாரற்றுக் கிடந்த காணி ஒன்றை தங்கள் குடும்பத்து 'முதுசொம்" என்று சொல்லிக்கொண்டு, மருமக்கள், சகோதரிகள் சகிதம் கதிகால் போட்டு வேலியடைக்கப்போய் மாட்டிக்கொண்ட கதை ஊர் வாயில் அவலாக அரைபட்டது. கோயில் உரிமைக்காரருக்குச் சொந்தமான 'கோயில் காணியை" அபகரிக்க முற்பட்ட வழக்குக்கு அலைந்தும் சளைக்காத வீரப்பிரதாபம்! அவருடையது. வழக்கு முடியும்வரை கோயில் கூட்டங்களின் அறிக்கைகளில் வாத்தியாரின் பிரதாபம் தொடர்ந்து பதிவு செய்யப்பட்டதால் கோயில் வரலாற்றோடு அவரது வரலாறும் இரண்டறக் கலந்துபோயிற்று. தஞ்சைப் பெருங்கோயிலோடு இராசராச சோழன் புகழும், ஊர்க்கோயிலோடு கனகு வாத்தியின் 'கீர்த்தியும்"! நின்று நிலைத்துப்போயின.

கனகு வாத்தியாருக்குப் 'புட்டிசக் கனகு" என்று ஒரு பெயர் வழங்கி வருவதை அறியாதார் யாருமில்லை. ஊரில் 'புட்டிசக் கனகுவுக்கும்" 'புட்டிசத் துரை யருக்கும்" நெருக்கமான நட்பிருந்தது. துரையர் 'புட்டிசக் கிளாக்கர்" என்றும் அறியப்பட்டு வந்தார். 'பெற்றிசம்" எழுதுவது அவர்களின் பெருங்கடமைகளில் ஒன்று. ஒருவருக்கு அரசாங்கத்தினாலோ அல்லது வேறெந்த அமைப்புக்களாலோ நன்மை கிடைப்பதை அறிந்துவிட்டால் போதும், கனகரும் துரையரும் குசுகுசுக்கத் தொடங்கிவிடுவர். அவர்களின் குசுகுசுப்பு வரவுள்ள ஆபத்தொன்றின் சமிக்ஞையாகத் தெரியும்.

**ஊரிலுள்ள காணிகளை எல்லாம் வளைத்துப் போட்டுத் தனதாக்கி மகிழவேண்டும் என்ற நெப்போலியப் பசி அவருக்கு. எங்கெல்லாம் வெறுங்காணிகள் இருக்குமோ அங்கெல்லாம் கனகு வாத்தியின் ஒரு கண் இருக்கும். மலட்டுச் சொத்துகளுக்கு உரிமை கோரத்தக்க ஆற்றல் ஊரில் கனகு வாத்தி ஒருவருக்கே உண்டு.**


வாத்தியாரின் வீட்டுக்கருகில் நீண்டகாலமாக உரிமையாளர்களால் கவனிக்கப்படாமல் கிடந்த பனைகளால் நிறைந்த காணி ஒன்றை ,தான் பணம் கொடுத்து வாங்கிவிட்டதாக கதையைப் பரவவிட்டு தனது காணியோடு சேர்த்துக்கொண்டது தான் கனகரின் ஆக்கிரமிப்பிலேயே உச்சந்தொட்ட ஆக்கிரமிப்பு. நுங்கு, பனம்பழம், பனம்மட்டை என்று கனகரின் பனங்காட்டில் ஒரே மழை. காணி உரிமையாளர்கள் கனடாவில் இருப்பதாகவும் ஒரு பேச்சிருந்தது. 'அப்புக்காத்து" இராமசாமிக்கு காசை விட்டெறிந்து, காணியின் தோம்புறுதியைத் தேடிக் கண்டுபிடித்து, தனக்கு 'சீவிய உருத்துக்" காட்டி மருமகள் ஒருத்தியின் பேரில் அவர் எழுதிவிட்டதாகவும் கதையிருந்தது. அப்புக்காத்து இராமசாமிக்கு வருடாவருடம் ஒடியல், புழுக்கொடியல் மட்டுமன்றி புகையிலைக்குப் புகைப்போட 'ஊமலை"க்கூட மூடைகட்டி அவர் அனுப்பிவைப்பதும் எல்லோருக்கும் தெரிந்த கதை.

கனகு வாத்தியார் ஊர்ப் பள்ளிக்கூடத்தில் தான் காலாகாலமாக 'சேவையாற்றி" வந்தார். பள்ளிக்கூடத்தில் எல்லாருக்கும் கொஞ்சம் பயம் தான். தன்னோடு முரண்பட்டதற்காக வாத்தியார் அடித்த 'புட்டிசத்தால்" மாற்றலாகிப்போன அதிபரின் கதை எல்லாருக்கும் தெரிந்திருந்தது.

அது பள்ளிக்கூடங்களில் மாணவர்களுக்கு சத்துணவாக 'விசுக்கோத்து" கொடுத்த காலம். சிமெந்துப் பை போன்ற 'பிஸ்கட்" பைகள் அதிபரின் பொறுப்பில் இருக்கும். கடைகளில் சீமெந்து ஒன்றுக்குமேல் ஒன்றாக உயரமாக அடுக்கி வைப்பதைப் போலவே அவை அடுக்கி வைக்கப்பட்டிருக்கும். அதிபரின் மேற்பார்வையில் பிஸ்கட் பைகள் உடைக்கப்பட்டு வகுப்பறைகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படும். சிறிய சிறிய பிஸ்கட்டுக்களை அளந்து பிள்ளைகளுக்கு கொடுப்பதற்கு கொத்துப்பேணி போல அளவு 'கப்" ஒன்று இருக்கும். கனகு வாத்தியாரின் வகுப்பறையில் பிள்ளைகளுக்கு பிஸ்கட் கொடுக்கும் 'வேலைத்திட்டம்" அவரின் மேற்பார்வையில் நடக்கும். பிள்ளைகள் பிஸ்கட் கொடுக்கத் தொடங்கும்போது கனகர் ஏற்கனவே வீட்டிலிருந்து கொண்டுவந்த பெரிய 'மாட்டுத்தாள் பை" ஒன்றை எடுத்து அதை மாணவர்களைக்கொண்டு நிரப்பு விப்பார். எவரது கண்ணிலும் படாதவாறு, பாடசாலை வேலியில் உருவாக்கப்பட்டிருந்த ,ஒருவர் நுழைந்து போகக்கூடிய 'பொட்டு" வழியாக ஒரு மாணவனை அனுப்பி, தன்னுடைய வீட்டில்கொண்டு போய் அந்தப் பையைக் கொடுத்துவிட்டு வருமாறு சொல்வார். கொடுத்துவிட்டு வெற்றிகரமாகத் திரும்பி வரும் மாணவனுக்கு ஏனைய மாணவர்களுக்கு கொடுக்கும் பிஸ்கட்டைவிட ஒரு 'கப்' அளவு பிஸ்கட்டை அதிகமாக கொடுப்பார்.

அந்தச் சலுகைக்கான போட்டியால் மாணவர்கள் கனகர் வீட்டுக்கு வேலிப் பொட்டு வழியாக பிஸ்கட் கொடுக்கும் வேலைத்திட்டத்துக்கு முண்டியடிப்பார்கள். கனகர் மாணவர்களுக்கான சந்தர்ப்பத்தை அவர்களின் பொட்டுவழி நுழைந்து செல்லும் திறமைக்கும், இரகசியம் காக்கும் பக்குவத்துக்கும் ஏற்ற வகையில் சுழற்சிமுறை யில் வழங்கிவந்தார். ஒரு முறை பிஸ்கட் பையைக் எடுத்துக் கொண்டு வேலிப்பொட்டு வழி நுழைந்த மாணவன் ஒருவன் கை தவறி பிஸ்கட்டை மண்ணில் கொட்டிவிட்டதற்காக அவனை நையப் புடைத்தார் கனகர். நையப்புடைக்கப்பட்ட மாணவனின் பெற்றார் அதிபருக்கு முறைப்பாடு செய்ததால் கனகரின் பிஸ்கட் கடத்தல் அம்பலமானது. அதிபர் அதற்கான விசாரணையை ஆரம்பிக்க முயன்று கொண்டிருக்கும்போதே, அதிபருக்கு எதிரான கனகரின் 'புட்டிசம்" கல்விக் கந்தோருக்குப் போய்ச் சேர்ந்தது. பிஸ்கட் கடத்தலில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் அதிபர் கட்டாயமாக இடமாற்றலாக்கப்பட்டார் என்ற செய்தி பரவியது. கனகர் தொடர்ந்தும் 'மாட்டுத்தாள் பை" கொண்டுதான் பள்ளிக்கூடம் வந்து கொண்டிருந்தார். ஊசி நுழையாத இடத்தில் உலக்கையையே நுழைக்கும் தந்திரம் கனகு வாத்தியாருக்கு தெரிந்திருந்ததால் தான் அவரை ஊரவர்கள் 'நரிக் கனகன்" என்று அழைத்துவந்தனர் போலும்!

# 13 இற்கான கவிதைகள்



**பரிசு பெறும் கவிதை**

பூந்தடாகமதில் பூக்களுள் பூவாய்
விழிமூடி நீவடிக்கும்
இரத்தக்கண்ணீரது
நீருடன் கலந்தே பறைசாற்றிடும்
உன் துயரமதைத் துடைத்திட
யாரெவரும் வரார் என்பதறிந்து
பூவையே விழித்தெழுந்து போரிடு
விடிவுன் பூவிழியில்...

*செ.முத்துக்குமாரசாமி*
*பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணம்.*

---

கண்களில் உதிரம் ஏனடி பெண்ணே
காற்றாய்ப் போகும் உன் சுவாசம் எல்லாம்
பூக்களாய் மாறிவிடுவது ஏனடி
பூக்கள் எல்லாம் மலரத் துடிக்கின்றன
உன் கண்கள் மடிந்துவிட்டன என்று
விழித்துப் பார் உலகம் உனக்காய் காத்திருக்கிறது
எழுந்து வா பெண்ணே...

*கூ.சக்தி*
*பூதவராயர் வீதி, பருத்தித்துறை.*

---

புலரும் பொழுதிலே
மலரும் பூக்களின் முகத்தில்
படரும் பனித்துளிகள் தான்
கண்ணீரால் கவிதை புனைந்து
காலமெல்லாம் காத்திருக்கின்றதே
காணாமல் போன
கணவருக்காக...

*க.மலர், இடைக்காடு.*

---

முள்ளிவாய்க்கால் ரணகளத்தால்
முடங்கிப் போன தமிழனுக்காய்
செந்நீர் வடித்த இளநகையே
காயப்பட்ட மண்டையிலே
சோகப்பட்டு சிக்கி நிற்கும் சிந்தனைகள்
சிதறிப்போன உறவுகள் தானா?
உறவுகள் மீட்பது எம் கடமை– இனி
உரிமை கொண்டெழுவோம்
போராடுவோம்

*பக்ஸ்ரன் டயஸ்,*
உப்புக்குளம் வீதி, மன்னார்.

---

சப்தங்களை தொலைத்து
வார்த்தைகளை மறந்து
பார்வைகளை கொண்டு
அவள் பேசுகின்ற
நிசப்தமான மொழி
மௌனமொழி

*இசைவிழி சந்திரன்*

---

மண் மீட்கப் பிறந்த எந்தன்
மண்டையைப் பிளந்து
மண் தோண்டிப் புதைத்து
மலர் தூவி விட்டாலும்
விழிநீர் செந்நீரானாலும்
மண்ணைப் பிளந்து நான் வருவேன்
தமிழ் மண்மேல் தமிழச்சி எனக்கு
தனியாத தாகம்
ஒரு ஒருபோதும் ஆறாது

*எம்.மானசிகா,*
அடம்பன் வீதி, யாழ்ப்பாணம்.

---

பொன்னான பெண் மலரின்
கண்களிலேன் செவ்வருவி
கருவிலே திருவாகவில்லை யிவள்
மலையெனத் துன்பம் வந்து
தலைவெடித்துச் சிதற
சிலையாகிப் போய்க் கிடந்தாள் – யார்தான்
வருவாரோ மலரை மீட்க
தருவாரோ வையகத்திலோர் நல்வாழ்க்கை

*வி.வசந்தா, மட்டுவில்.*

---

கண்களை மூடவில்லை
கனவுகளும் வரவில்லை
கண்ணீர் துளிகளிலேயே
கரைகிறது என் இரவு
என் வாழ்வில் கண்ணீரே
நிரந்தரம் என்று உணர்த்தி
கலைந்து சென்றாய்
மழைமேகமாய்..

**ந.வனிதா,**
வடலியடைப்பு, பண்டத்தரிப்பு.

---

அம்மணி காலத்து
செம்மணி 'கிருஷாந்தி' தொடக்கம்
புங்குடுதீவு 'வித்தியா'
நெடுந்தீவு 'நிலா' வரைக்கும்
நீளும் அவலமாய்– அதில்
நீயும் ஒருத்தியாய்– நீ
வடிக்கும் குருதிக் கண்ணீரில்
புடைத்து எழுந்த உணர்ச்சிப் பூக்கள்.

*சி.விஜயராணி,*
அராலி மத்தி, வட்டுக்கோட்டை.

---

பெண்ணையும் மண்ணையும்
மென்மைக்கும் பொறுமைக்கும்
அடையாளம் இட்ட மனித கூட்டம்
கண்ணையும்
காதையும் மூடிக் கொண்டு
அன்றில் இருந்து இன்றுவரை
செய்த அடாவடித்தனங்களின்
அடையாளமாய் வனப்பிழந்த
மண்மகள் பெண்மகள்

**பொ.யோகேஸ்வரன்,**
ஆலடி, காரைநகர்.

---



# மௌனமொழி 14

**உங்கள் கவிதைகள் எங்கள் கதவைத் தட்ட வேண்டிய கடைசி நாள்: 25.09.2020**

**கவிதைக்கு பரிசு 1000/=**

*அனுப்ப வேண்டிய முகவரி:*
**உதயன் சஞ்சீவி**
**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
மின்னஞ்சல் முகவரி: *uthayansanjeevi@gmail.com*
0773165555

இந்த ஒளிப்படத்தைப் பார்த்ததும் உங்கள் சிந்தனை யில் உதிக்கும் கவிதைகளை 8 வரிகளுக்கு மேற்படாமல் உடனே எழுதி அனுப்புங்கள். மிகச் சிறப்பான ஒரு கவிதைக்கு ரூபா. 1000/பரிசாகக் காத்திருக்கிறது. பாராட்டுப் பெறும் ஏனையவை மௌனமொழி பகுதியில் பிரசுரமாகும்.

இதுவரை பரிசுக்குரிய கவிதைகளை எழுதியோருக்கு பரிசில்கள் விரைவில்... உங்கள் பரிசை உறுதிப்படுத்த எமது தொலைபேசி எண்ணோடு தொடர்பு கொள்ளவும்.

---

விடுதலை வேட்கை கொண்ட
வீர வேங்கை நான்
என் விழி சிந்தும் செந்நீருக்கு
வெகுளி நீ என்ன சொல்வாய்?
அன்று உலக நீதி மௌனித்ததால்
அண்ணன் திலீபன் மாண்டானே
அடங்கமாட்டாள் பார்த்திபன் தங்கையிவள்
மறுபடி பிறப்பாள் பொறுத்துத்தான் பாரேன்

*யே.மயூரேஸ், யாழ்ப்பாணம்.*

---

பூவரையே உன்
பூப்போன்ற வதனத்தில்
ஆயிரம் கனவுகள் போலும்
சொல்லத் துடிக்கின்றாய்
மௌனித்துத் தவிக்கின்றாய்
உன் எண்ணங்களை
சுமந்து பூத்துக் கொண்டிருப்போம்
உன்னருகில் நினைவுகளுடன்

*த.ஐங்கரதீபன்,*
பூநகரி ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தி.

---

உயரமதைத் தொட்டாள் அன்று
துயரமதைப் பெற்றாள் இன்று
உதிர்கின்ற பூவைப்போல – ஒதுங்கி ஏன்
வாழ்கிறாய் – உன் முகத்திரையைக் கிழித்து
அழுவதைவிட்டு எழுந்திடு நீயொரு
உண்மைப் பெண்ணாக...

*எஸ்.சாருபன்*, சங்கரத்தை.

---

உதிரிப் பூக்களாய்– உயிர்
ஊசலாடும் தருணத்திலும்
உள்ளத்தோரம் துடிக்கிறது
நான் கண்ட கனா...

த.வர்ஷா

---

நாளுக்கு நானூறுமுறை
நொருங்கும் இப்பேதை நெஞ்சில்
விடிவில்லா ஓராயிரம் வலிகளும்
கலைந்த கனவுகளும்
உதிர்ந்து நசுங்கிடும் பூப்போல ஆகி
இவள் உடல் உணர்வு சிதைந்து
அவள் நேத்திரத்தில் மௌனமாய்
உதிர்கின்றன உதிரத்துளிகள்..

**மதுமதி**, வவுனியா.

---

கனவோடு களமாடியவன்
கலங்குகின்றான் கல்லறையிலும்
கருக்கொண்டு உருக்கொண்ட – தேசம்
காட்டிக் கொடுப்பால் கைநழுவியதையோ

உயிர் உருக்கி உருவாக்கிய தேசம்
உருக்குலைந்து உடைந்து கிடக்க
கந்தக வீரனுக்காய் மலரும் மலருது
காய்ந்த விழிகளில் செந்நீர் வழியுது

*அ.இலக்கியா*, மன்னார்.

சிக்மலிங்கம் றெஜினோல்ட்






# மாறும் தாளங்கள்



யாழ்ப்பாணத்திலும் வவுனியாவிலுமாக இரண்டு திருமண மண்டபங்களைக் கட்டப்போவதாக ஆறு மாதங்களுக்கு முன்பு சொன்ன நண்பர், அந்தத் திட்டத்தை மாற்றி விட்டதாகத் திடீரென்று கூறினார்.

"கொரோனாவினால்தான் இந்த மாற்றமா?" என்று கேட்டேன்.

"இல்லை" என்றார்.

"அப்படியென்றால்....? இனிமேல் திருமணங்களே நடக்காதா? இனிமேல் வேறு கொண்டாட்டங்களுக்கு இடமில்லையா?" என்று கேட்டேன்.

"அப்படியல்ல. நிலைமை வேறுமாதிரியிருக்கு.

தொலைக்காட்சி வந்ததோட தியேட்டர்களின் காலம் முடிஞ்சதைப்போல, திருமண மண்டபங்களின் காலமும் முடிஞ்சு கொண்டு வாற மாதிரித் தெரியுது. இப்ப மண்டபங்களுக்குப் பதிலாக வெளியே மரங்களுக்குக் கீழேயும், திறந்த வெளிகளிலும்தான் நிகழ்ச்சிகளை நடத்திறதுக்குச் சனங்கள் விரும்புதுகள். அதுக்குத் தோதான மாதிரி டெக்ரேஷனையும் செய்யக் கூடியதாயிருக்கு. இந்த நிலைமையில பெரியளவு முதலீட்டைக் கொண்டுபோய் மண்டபங்களுக்குள்ள முடக்கத்தான் வேணுமா? என்றொரு எண்ணம்....!" என்றார் அவர். இதைப்பற்றி அவரும் நானும் தொடர்ந்து பேசினோம்.

இந்த யுகத்தில் மாற்றங்கள் சடுதியாக நிகழ்கின்றன. இதற்குப் பல காரணங்கள். பிரமாண்டத்தை நோக்கிய ஈர்ப்பு, கவர்ச்சி, தினமும் புதிது புதிதாகவும் வித்தியாசம், வித்தியாசமாகவும் (அரசியலைத் தவிர) எதையாவது காண வேண்டும், செய்து பார்க்க வேண்டும் என்ற முனைப்பு. அதற்கான ஆவல்.



மேலும் ஓரளவுக்குக் கையில் புரளக் கூடியதாக உள்ள பணம் அல்லது செல்வச் செழிப்பு, தொழில்நுட்பமும் தொடர்பாடலும் எனப் பல காரணங்கள் இந்த விரைந்த மாற்றங்களை உருவாக்கிக் கொண்டேயிருக்கின்றன. இதனால் "புதிசு, புதிசு" என்று சதா மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டேயிருக்கின்றன. நேற்றிருந்தது இன்றில்லை. இன்றிருப்பது நாளை இல்லை என்ற மாதிரிச் சடுதியான மாற்றங்கள். அதற்கேற்ற மாதிரி இலகுவாகவும், குறைந்த செலவிலும் எதையும் பெறக்கூடியதான ஏற்பாடுகள். இப்படி உண்டாகியிருக்கும் இந்த மாற்றங்களே எம்முடைய விருப்பங்களைத் தீர்மானிக்கின்றன. அந்த விருப்பங்கள் புதிய தெரிவுகளைக் கோருகின்றன. இதற்கேற்ப வடிவங்கள் மாறுகின்றன. வண்ணமயமாகின்றன. இதற்கமைய முறைமைகள் மாறுகின்றன. இந்த விரைவான மாற்றங்களினால், ரசனை வேறுபாட்டினால் சில முதலீடுகள் பெரிய முடக்கம் காணவும் நேரிடுகிறது. அதாவது இந்தக் கலாசார விடயங்களில் நம்பிப் பெரிய முதலீடுகளைச்செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

உண்மைதான்.

ஒரு காலம் "தியேட்டர்களின் யுகம்" என்று புகழ்பெற்றிருந்த படமாளிகைகள் எல்லாம் இன்று இருந்த இடமே தெரியாமல் காணாமல் போய் விட்டன. 1980 களுக்கு முன்பான காட்சிகளைத் தெரிந்தவர்கள் ஒரு கணம் நினைத்துப்பாருங்கள், யாழ்ப்பாண நகரத்தில் மட்டும் பதினொரு படமாளிகைகளிருந்தன. றியோ, றீகல், சாந்தி, ஹரன், மனோகரா, வெலிங்டன், வின்ஸர், ராணி, ஸ்ரீதர், லிடோ என. இதைவிட சங்கானை, இணுவில், காங்கேசன்துறை, சுன்னாகம், சாவகச்சேரி, பருத்தித்துறை, நெல்லியடி என்று ஒவ்வொரு இடங்களிலும் பல தியேட்டர்கள் இயங்கின. இதைவிட கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா என ஒவ்வொரு நகரத்திலும் அந்தந்த நகரங்களுக்கான அடையாளங்களாக தியேட்டர்களும் இருந்தன. பிறகு இவற்றில் பலவும் பொருள்களுக்கான களஞ்சியங்களாகின. அல்லது வேறு தொழில்மையங்களாகி விட்டன. சில தியேட்டர்கள் கராஜ்களாக மாறியதையும் கண்டிருக்கிறேன். இதற்கு முக்கியமான காரணம் தொலைக்காட்சியே.

தொலைக்காட்சி வந்ததோடு அநேகமான தியேட்டர்கள் மூடப்பட்டன. தியேட்டருக்குச் சென்று படம் பார்க்கின்ற அந்தக் கலாசாரமே காணாமல் போய்விட்டது. ஆனால், 1960, 70, 80 களில் தியேட்டர்கள் தமிழ்ச்சனங்களின் வாழ்க்கையோடும் பண்பாட்டோடும் ஒன்றாகக் கலந்திருந்தன. உதாரணமாக, திருமணம் செய்து கொண்ட புதுமணத்தம்பதிகள் குடும்பத்தினரோடும் தாங்கள் தனியாகவும் தியேட்டருக்குச் செல்வது ஒரு சம்பிரதாயமாகவே அந்தக் காலத்திலிருந்தது.

இப்போது தியேட்டர்கள் மட்டுமல்ல, தொலைக்காட்சியும் கவனிப்பாரற்ற நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டது. என்னதான் விதவிதமான உத்திகள், உபாயங்களோடு நிகழ்ச்சிகளைத் தயாரித்து தொலைக்காட்சிச் 'சனல்' களை இயக்கினாலும், பார்வையாளர் பரப்பு வரவரச் சுருங்கியே வருகிறது. மிஞ்சிப்போயிருக்கும் பார்வையாளர்கள் யாரென்றால் முதியோரும் குடும்பப் பெண்களுமே. அவர்களை இலக்கு வைத்தே தொலைக்காட்சித் தொடர்கள் தயாரிக்கப்படுகின்றன. மற்றவர்கள் 'யூரியூப்' க்கும், சமூக வலைத்தளங்களுக்கும் நகர்ந்து விட்டனர்.

**புதிசு, புதிசு என்று சதா மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டேயிருக்கின்றன. நேற்றிருந்தது இன்றில்லை. இன்றிருப்பது நாளை இல்லை என்ற மாதிரிச் சடுதியான மாற்றங்கள். அதற்கேற்ற மாதிரி இலகுவாகவும், குறைந்த செலவிலும் எதையும் பெறக்கூடியதான ஏற்பாடுகள். இப்படி உண்டாகியிருக்கும் இந்த மாற்றங்களே எம்முடைய விருப்பங்களைத் தீர்மானிக்கின்றன. அந்த விருப்பங்கள் புதிய தெரிவுகளைக் கோருகின்றன. இதற்கேற்ப வடிவங்கள் மாறுகின்றன. வண்ணமயமாகின்றன.**

நிரேஸ‌ுக்கு வயது 23. பல்கலைக்கழக மாணவர். கொரோனாவினால் விரிவுரைகள் இல்லை என்பதால் வீட்டில் நிற்கிறார். ஹோலில் அவருக்கு முன்னே தொலைக்காட்சி கவனிப்பாரின்றி இயங்கிக் கொண்டிருக்கிறது. அவரோ செல்போனை விரல்களால் உருட்டிக் கொண்டிருக்கிறார். இதுதான் எங்கும் நடக்கிறது. ஆகவே தொலைக்காட்சிகளின் கதையும் ஏறக்குறைய முடிவுக்கு வந்த மாதிரித்தான்.

இப்படித்தான் இருபது ஆண்டுகளுக்கு முன்பு கொண்டாட்டங்கள், வைபவங்களுக்கெல்லாம் தகரப்பந்தல்கள் இடம்பிடித்தன. விதவிதமான பந்தல்கள். விதமான சோடனைகள், அலங்காரங்கள். போடப்படுகின்ற கதிரைகள்கூட பந்தலோடு வரும். அந்தத் தகரக் கதிரைகளை இன்னும் பலர் மறந்திருக்க மாட்டார்கள்.

2000 இல் இது சடுதியாக மாறியது. அந்த இடத்தைப் பிளாஸ்டிக் யுகம் கிசுகிசென வளர்ந்து மூடியது. தகரப்பந்தல்களும் தகரக்கதிரைகளும் காணாமல் போகும் நிலை உருவானது. பந்தல்கள்தான் மரணச் சடங்கு, சிறிய நிகழ்வுகள் என்ற அளவில் தப்பிப் பிழைத்தாலும், தகரக் கதிரைகள் காலாவதியாகி விட்டன.

இப்போது தகரப்பந்தல்களின் இடத்தையும் திருமண மண்டபங்கள் ஆக்கிரமித்து விட்டன. ஊருக்கு ஊர், விதவிதமான முறையில் வசதிப் பெருக்கங்களோடு அமைக்கப்பட்டிருக்கும் திருமண மண்டபங்கள். இதற்கேற்ற மாதிரிச் சடங்குகளின், வைபவங்களின் முறைமைகளும் திருமண மண்டபங்களுக்கு ஏற்ற மாதிரிப் பிரமாண்டத்தன்மை யைப் பெற்றன. 2010 க்குப் பிறகு தமிழ்ப்பகுதிகளில் பெருமளவுக்கு முதலீடு செய்யப்பட்டது திருமண மண்டபங்களில்தான் என்று சொல்லுமளவுக்கு அவற்றின் எண்ணிக்கை உண்டு. இதில் கூடுதலான ஆர்வம் காட்டியவர்கள் புலம்பெயர் தமிழர்களே. ஆனால், இது தவறான ஒரு முதலீடாகும் என்று சமூகப் பொருளாதார அறிஞர்களில் சிலர் ஏற்கனவே எச்சரித்திருந்தனர். அந்த எச்சரிக்கை பலராலும் கவனித்திற் கொள்ளப்படவில்லை.

இன்று அது தவிர்க்க முடியாமல் பரிசீலிக்கப்பட வேண்டிய ஒன்றாகி விட்டது. மண்டபங்களுக்குப் பதிலாக மரங்கள், பூங்காக்கள், வெளியரங்குகளில் நிகழ்வுகளை நடத்தும் புதிய மோஸ்தர் உருவாகியதால் மண்டபங்களின் நிலை கேள்விக்குள்ளாகியிருக்கிறது. வண்ண வண்ண மின்விளக்குளின் விதவிதமான அலங்காரங்களுக்கு பொது வெளி அரங்கு நெகிழ்ந்து கொடுக்கும் என்பதால், மண்டபங்களைத் தவிர்த்துப் பொதுவெளி அரங்கை நோக்குகின்றது மக்களின் விருப்ப உளவியல்.

இது தனியே இந்த மாதிரியான முதலீடுகளுக்கு மட்டும் நேர்ந்திருக்கும் நெருக்கடியோ சவாலோ மட்டுமென்பதல்ல.

(10ஆம் பக்கம் பார்க்க)

# நூலகம் செல்வோம் பரீட்சைகளில் வெல்வோம்



○ ம.பா.மகாலிங்கசிவம்



பாவேந்தர் பாரதிதாசன்

பாவேந்தர் என்று சிறப்பித்து அழைக்கப்படுபவர் பாவேந்தர் பாரதிதாசன். கனக. சுப்புரத்தினம் என்ற இயற்பெயர்கொண்ட அவர் பாரதியார் மீது கொண்ட பற்றினால், பாரதிதாசன் என்ற புனை பெயர் தரித்துக்கொண்டு எழுதியவர். பாரதியார் இந்திய தேசிய விடுதலைக்கு ஆதரவாகப் பாடல்கள் இயற்றிக்கொண்டிருக்கப் பாரதிதாசனோ திராவிட நாட்டு விடுதலைக்காகக் குரல்கொடுத்தார். அழகின் சிரிப்பு,இருண்ட வீடு, எதிர்பாராத முத்தம் பாண்டியன் பரிசு, குடும்ப விளக்கு,பாரதிதாசன் கவிதைகள் முதலிய பலநூல்களின் சொந்தக்காரர். அவரது 'புத்தகசாலை' என்னும் தலைப்பிலான கவிதை இங்கே தரப்படுகின்றது

தனித்தமைந்த வீட்டிற் புத்தகமும் நானும்
சையோகம் புரிந்ததொரு வேளைதன்னில்,
இனித்தபுவி இயற்கையெழில் எல்லாம் கண்டேன்;
இசை கேட்டேன்! மணம் மோந்தேன்! சுவைகள் உண்டேன்!

மனித்தரிலே மிக்குயர்ந்த கவிஞர் நெஞ்சின்
மகாசோதியிற் கலந்த தெனது நெஞ்சும்!
சனித்ததங்கே புத்துணர்வு! புத்தகங்கள்
தருமுதவி பெரிது! மிகப்பெரிது கண்டீர்!

மனிதரெலாம் அன்புநெறி காண்பதற்கும்
மனோபாவம் வானைப்போல் விரிவடைந்து
தனிமனித தத்வமாம் இருளைப் போக்கிச்
சகமக்கள் ஒன்றென்ப துணர்வதற்கும்,
இனிதினிதாய் எழுந்தஉயர் எண்ண மெல்லாம்
இலகுவது புலவர்தரு சுவடிச்சாலை;
புனிதமுற்று மக்கள்புது வாழ்வுவேண்டில்
புத்தக சாலைவேண்டும் நாட்டில்யாண்டும்.

தமிழர்க்குத் தமிழ்மொழியிற் சுவடிச்சாலை
சர்வகலா சாலையைப்போல் எங்கும் வேண்டும்.
த்மிழிலிலாப் பிறமொழிநூல் அனைத்தும் நல்ல
தமிழாக்கி வாசிக்கத் தருதல்வேண்டும்,
அமுதம்போல் செந்தமிழிற் கவிதைநூற்கள்,
அழகியவாம் உரைநடையில் அமைந்த நூற்கள்,
சுமைசுமையாய்ச் சேகரித்துப் பல்கலைசேர்
துறைதுறையாய்ப் பிரித்தடுக்கி வைத்தல் வேண்டும்.

நாலைந்து வீதிகளுக் கொன்று வீதம்
நல்லதுவாய் வசதியதாய் இல்லம் வேண்டும்,
நூலெல்லாம் முறையாக ஆங்கமைத்து
நொடிக்குநொடி ஆசிரியர் உதவுகின்ற
கோலமுறும் செய்தித்தாள் அனைத்தும் ஆங்கே
குவிந்திருக்க வகைசெய்து தருதல் வேண்டும்.
மூலையிலோர் சிறுநூலும் புதுநூலாயின்
முடிதனிலே சுமந்துவந்து தருதல் வேண்டும்

வாசிக்க வருபவரின் வருகை ஏற்றும்
மரியாதை காட்டி அவர்க் கிருக்கை தந்தும்,
ஆசித்த நூல்தந்தும் புதிய நூல்கள்
அழைத்திருந்தால் அதையுரைத்தும், நாளும் நூலை
நேசித்து வருவோர்கள் பெருகும் வண்ணம்
நினைப்பாலும் வாக்காலும் தேகத்தாலும்
மாசற்றதொண் டிழைப்பீர்! சமுதாயச்சீர்
மறுமலர்ச்சி கண்டதென முழக்கஞ் செய்வீர்!

நூல்களை வாசித்ததால் தான் அடைந்த பயன்களைக் கவிதையின் ஆரம்பம் கூறத்தொடங்குகிறது.

"மனிதரிலே மிக்குயர்ந்த கவிஞர் நெஞ்சில்
மகாசோதியிற் கலந்த தெனது நெஞ்சம்
சனிந்ததங்கே புத்துணர்வு புத்தகங்கள்
தருமுதவி பெரிதுமிகப் பெரிது கண்டீர்"

என்னும் பாடற்பகுதி கவிஞர்கள், மனிதர்களிடையே மிகவும் உயர்வானவர்கள் என்பதையும் அவர்களது கவிதையை வாசிப்பதன் மூலம் அவர்களின் உணர்வோடு கலந்து விட முடியும் என்பதையும் வலியுறுத்துகின்றது. நூல்களை வாசிப்பதன் மூலம் புத்துணர்ச்சி பெறமுடியும் என்பதும் சுட்டிக்காட்டப்படுகிறது. இரண்டாவது பாடல் நூலகத்தின் பயன்களைச் சுட்டிக்காட்டுகிறது. மனிதர்கள் அன்பு நெறி அறிதல், தனி மனிதர் என்ற நிலையைத்தாண்டிச் சக மனிதர்கள் அனைவரும் ஒன்றென்பதை உணர்தல், இனிய எண்ணங்கள் மனதில் தோன்றுதல் மக்கள் புதுவாழ்வு காணுதல் என்பவை நூலகத்தின் பயன்களாகப் பாரதிதாசனால் கூறப்பட்டுள்ளன. அடுத்து, நூலகம் எவ்வாறு இயங்க வேண்டும் என்பதைப் பாவேந்தர் கூறுகின்றார். பல்கலைக்கழகம் போலப் பல்துறை அறிவு தரக்கூடியதாக நூலகங்கள் எங்கும் அமைக்கப்படுதல் வேண்டும். தமிழில் இல்லாத பிறமொழி நூல்களை மொழிபெயர்த்துத் தருதல், கவிதை நூல்கள்,உரை நடை நூல்கள் என்பவற்றைச் சேகரித்து துறைதுறையாகப் பிரிந்து அடுக்கி வைத்திருத்தல் என்பவை நூலகர்களின் பணிகளாகக் இருந்தல் வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது. கவிதையின் நிறைவில் கவிஞர் பாரதிதாசன் நூலகரின் கடமைகள் பற்றிக் கூறும் விடயங்கள், இக்காலத்தின் நூலகர்களாக இருப்பவர்களும் கவனத்தில் கொள்ள வேண்டியவை ஆகும்.

மூலையிலே சிறுநூலாம் புதுநூலாயின்
முடிதனிலே சுமந்து வந்து தருதல் வேண்டும்

வாசிக்க வருபவரின் வருகை ஏற்றும்
மரியாதை காட்டி அவர்க்கு இருக்கை தந்தும்
ஆசித்த நூல் தந்தும் புதிய நூல்கள்
அழைத்திருந்தால் அதை உணர்த்தும் நாளும் நூலை
நேசித்து வருவோர்கள் பெருகும்வண்ணம்
நினைப்பாலும் வாக்காலும் தேகத்தாலும்
மாசற்ற தொண் டிழைப்பீர் சமுதாயச் சீர்
மறுமலர்ச்சி கண்டதென முழக்கம் செய்வீர்"

நூலகத்தைத் தேடி வருகின்றவர்கள் எண்ணிக்கை மிகவும் குறைந்து வரும் இக்காலத்தில், நூலகங்கள் வருபவரை மரியாதையுடன் வரவேற்று, இருக்க இடம் தந்து, புதிய நூல்கள் வந்திருந்தால் வாசிப்பதற்காகக் கொண்டுவந்து கொடுக்க வேண்டும். வருபவரின் எண்ணிக்கை பெருகும் படியான முழு மனதுடன் பணியாற்ற வேண்டும் எனப் பாரதிதாசன் குறிப்பிடுகின்றார்.

இவை நூலகம் நூலகர் ஆகியோரின் பணிகள் ஆகும். வாசகர்க்கு எதுவுமில்லை என்ற வினா எழுவாம். இன்றைய சூழலிலே பட்டதாரி நியமனத்தைக் கூட போட்டியிட்டே பெறவேண்டிய தேவை இருக்கிறது. பட்டம் பெற்றுவிட்டால் போதும், நியமனம் நிச்சயம் என்ற காலம் மலையேறிவிட்டது. சிற்றூழியர் நியமனத்தில் இருந்து அனைத்து வகையான நியமனங்களும் பதவி உயர்வுகளும் போட்டிப் பரீட்சைகளிற் பெற்ற புள்ளிகளின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்படுகின்றன. போட்டிப் பரீட்சைகளில் பொது அறிவும் பரிசோதிக்கப்படுகிறது. தொடர்ச்சியான வாசிப்பும் நூலகப் பயன்பாடுமே பொது அறிவை வளர்க்கும் உபாயங்களாகும். எனவே வாழ்க்கையில் வெற்றிகளைப் பெற விரும்புவோர் நூலகங்களை நோக்கிப் புறப்பட வேண்டியது அவசியமானதாகும்.

# மாற்றங்களும்

(தொடர்ச்சி)

உணவுக்கடைகள், புடவையகங்கள், அழகுசாதன விற்பனையகங்கள் போன்றவற்றுக்கும் ஏற்பட்டிருக்கும் ஒரு நெருக்கடிதான். ஆனால், அவை எந்தச் சந்தர்ப்பத்திலும் தம்மை அதற்கேற்ற மாதிரி மாற்றிக் கொள்ளலாம். அதற்கான வசதி அந்தத் தொழில்களில் உண்டு. பொருட்களை அல்லது உணவு வகைகளை மாற்றி விட்டால் போதும். கடைகளின் அமைப்பிலும் சிறிய அளவில் மாற்றங்களைச் செய்து சமாளித்துக் கொள்ளலாம்.

பெரிய முதலீடுகளில் உடனடியாக அப்படிச் செய்ய முடியாது. அது இழப்புத்தான்.

எனவேதான் இந்த மாதிரிக் கலாசார ரீதியான விடயங்களுக்கான முதலீடுகளுக்குப் பதிலாக உற்பத்திசார்ந்த முதலீடுகளைச் செய்வதைப் பற்றிச் சிந்திக்க வேண்டும் என்று கூறப்படுகிறது. உற்பத்தி சார்ந்த முதலீடுகள் எப்போதும் நட்டத்தை ஏற்படுத்துவது குறைவு. அவற்றின் தன்மைகள் மாறினாலும் அதற்கேற்றமாதிரி மாற்றங்களையும் செய்து கொள்ளலாம்.

எனவேதான் புதிய முதலீட்டாளர்கள் எம்முடைய சூழலுக்கும் வாழ்வுக்கும் ஏற்றமாதிரி உற்பத்தி சார்ந்த முதலீடுகள்

தமிழ்ச்சமூகம் அரசியலில் மட்டுமல்ல, உற்பத்திப் பொருளாதாரத்திலும் உற்பத்தி முறையிலும் இன்று பின்ன டைந்தே உள்ளது. பலவீனப்பட்டே இருக்கிறது. இதை மாற்ற வேண்டிய கட்டாயமும் கடமையும் எமக்கு முன்னே உள்ளது. இது இன்றைய வரலாற்றுக் கடமை.

பற்றிச் சிந்திக்க வேண்டும். அவற்றில் முதலிடவும் வேண்டும். அது அவர்களையும் அவர்களுடைய முதலீடுகளையும் பாதுகாக்கும். சமூகத்தையும் வளர்க்கும். தமிழ்ச்சமூகம் அரசியலில் மட்டுமல்ல, உற்பத்திப் பொருளாதாரத்திலும் உற்பத்தி முறையிலும் இன்று பின்னடைந்தே உள்ளது. பலவீனப்பட்டே இருக்கிறது. இதை மாற்ற வேண்டிய கட்டாயமும் கடமையும் எமக்கு முன்னே உள்ளது. இது இன்றைய வரலாற்றுக் கடமை.

அப்படியென்றால் எந்த மாதிரியான முதலீடுகளைச் செய்யலாம்? என்ற கேள்வி எழும். சமூகப் பொருளாதார அறிஞர்கள் இதற்கான வழியைக் காட்டியிருக்கின்றனர். குறிப்பாக பாலுணவு உற்பத்தி, விவசாய உற்பத்திகளை முடிவுப் பொருட்களாக மாற்றுதல், இறைச்சி, மீன் போன்ற பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்களின் உற்பத்தி, கைவினைப்பொருட்களின் உற்பத்தி, ஆடை உற்பத்தி, விவசாயப் பண்ணைகள், நகரத்துக்கு வெளியேயான சுற்றுலா விடுதிகள்... எனப் பலவுண்டு.

இவற்றில் நாம் தனி முத்திரை பதிக்க முடியும். நமக்கான பிரத்தியேகச் சந்தை வாய்ப்பாக புலம்பெயர் சமூகத்தினரும் உள்ளனர். ஆகவே இதில் நாம் மாற்றிச் சிந்தித்தால் வெற்றிகளைப் பெறக் கூடியதாக இருக்கும். நண்பர் சரியாகத்தான் நாடி பிடித்திருக்கிறார். அவர் நிச்சயமாக வெற்றி பெறவே போகிறார். நிலைமைகளைக் கவனித்து, யதார்த்தத்தை உணர்ந்த எவருடைய பயணமும் வெற்றியின் படிக்கட்டுகளில் பயணிக்க வழிவகுக்கும்.

# காத்தானும் சிதம்பரப்பிள்ளையும்

○ பொக்கிசன்

சிவபெருமான் 14 நாட்கள் (காயேழு, பூவேழு) தனிமையிலிருந்து , பின்னர் பார்வதிதேவி மாரியம்மனுக்கு பொங்கிப் படைத்து வழிபட்டதாக காத்தவராயன் கதை கூறுகிறது. அம்மாள் வருத்தம் (சின்னமுத்து கொப்புளிப்பான், பெரியம்மை போன்றவை) வந்தால் 14 நாட்கள் தனிமைப்படுத்தும் வழக்கம் இன்றும் கிராமப்புறங்களில் காணப் படுகிறது. தனிமைப்படுத்தல் என்பது ஆயிரம் வருடங்களுக்கு முன்னரே தமிழனால் அறிமுகம் செய்யப்பட்ட கண்டுபிடிப்பு என்று ஏன் சொல் லக்கூடாது? மாரியம்மன் வழிபாடு தமிழர்களுக்கு மட்டுமே சொந்தமான ஒன்று. பிரித்தானியர் ஆட்சியில் மலேசியத்தமிழர்கள் பலர் தாங்கள் மாரியம்மனை வழிபடுபவர்கள் எனப் பதிவு செய்துள்ளனர். (சைவ சம யத்தவர்கள் என்றோ இந்துக்கள் என்றோ, பதியவில்லை) சரி, இந்த அறி முகத்தோடு இம்முறை பொக்கிசன் சொல்வதைப் படியுங்கள்.

இண்டைக்கு தவத்திருவிழா. அம்மன் தபஸ் எண்டும் சொல்லுறவை; இண்டைக்கு கீரிமலை தீர்த்த மண்டபத்திலை சுவாமியைக் கொண்டு போய் வைச்சிட்டு, அம்பனை சிதம்பரம்பிள்ளை வந்து காத்தவராயன் கூத்தை உடுக்கடிச்சுப் பாடுறவர் . காத்தவராயன் கூத்து பாடி முடிஞ்சதுக் குப் பிறகு காத்தவராயன் போய் அம்மனை கூட்டிக்கொண்டு வருவார். ராசாத்தம்பி அம்மனின் முகத்துக்கு Brasso போட்டு துணியால் உரஞ்சி தேய்த்துக்கொண்டிருந்தார்.



Brasso போட்டுத் தேய்த்தால் முகம் அப்பிடியே பளிச்சென்று பவுண் மாதிரி ஜொலிக்கும்; ஆனா குருக் கள் மாமா போட வேண்டாமென்று பேசுறவர். போட்டா சுவாமி (விக் கிரகம்) கறுத்துப்போயிடும் எண்டு பேசுறவர்.

ராசாத்தம்பி சாத்துப்படி சாத்தி முடிச்சிட்டார். இனி சுவாமி தூக்கி றதுக்கு ஆக்கள் வேணும்; பின்னே ரம் எண்டா சுவாமி தூக்க கனபேர் வருவினம். இப்ப மத்தியானம் எண்ட படியா நிக்கிற ஆக்கள் தான் தூக்கவேணும். சுவாமியைக்கொண்டு போய் வைச்சாச்சு சிதம்பரம் பிள்ளை வந்து நிலத்தில் இருந்து உடுக்கையும் எடுத்து அடிச்சுக் கொண்டு பாடத்தொடங்கினார். பக்கத்தில அவற்றை உதவியாள் தாளத்தோடை இருந்து தாளம் போடத்தொடங்கினார். வில்லுப் பாட்டு மாதிரி கொஞ்சநேரம் பாட்டு படிப்பார். தாளக்காரனும் இருந்து தாளம் போடுவார் . பிறகு இடையில நிப்பாட்டிப்போட்டு வசனநடையில் கதையைச் சொல்வார். பின்னர் பாடல் தொடரும். நெஞ்சு முழுக்க சந்தனம்.கழுத்தில் உருத்திராட்ச மாலை .பாகவதர் கிறில். இது தான் சிதம்பரம்பிள்ளை ( பாகவதர் கிறில் என்பது தியாகராஜ பாகவதரின் ஸ்டைலில் சிகையலங்காரம் செய்வது; இன்றும் பாகவதர் கிறில் ஸ்டைலில் சில வயோதிபர்களை யாழ்ப்பா ணத்தில் காணலாம்). "ஓட்டம் பெரு நடையாக நாரத முனிவர்; ஓடி யோடி வாறாரெல்லோ நாரத முனிவர்"

சிதம்பரப்பிள்ளை தலையை ஆட்டி ஆட்டி உடுக்கை அடிச்சுக்கொண்டு பாடுறார்; பாடேக்கை அவற்றை தலைமயிரும் சேர்ந்து ஆடுது; மாரியம் மன் தவம் இருக்கிற விசயத்தை சிவபெருமானுக்கு சொல்லுறதுக்கு நாரத முனிவர் ஓடிப்போறார். அது தான் விஷயம்.பாவம் மேளக்கச்சேரி,வில் லுப்பாட்டு இதுகளுக்கு இருக்கிற மதிப்பு சிதம்பரப்பிள்ளைக்கு இல்லை. சிவபெருமான் வழங்கிய கண்டசரமாலையை மாரியம்மன் சிவபெருமான் மீதே பரீட்சித்துப்பார்க்க எண்ணி சிவபெருமானின் கழுத் தில் எறிந்து விட்டார்.


"அங்கே சுற்றுகிறார் சிவனார் சுழலுகிறார்" சிதம்பரப்பிள்ளை பாடுறார்.

"அம்மா நான் காதல் கொண்டேன் ,அம்மா நான் காதல் கொண்டேன்" காத்தவராயன் பாடுகிறார் .

"வேண்டாம் மகனே வேண்டாம் "


அம்மனாகவும் காத்தவராயனாகவும் பாவனை செய்து சிதம்பரப்பிள்ளை பாடுறார்; மாரியம்மன் காத்தவராயனின் காதலி ஆரியப்பூமாலையை திருமணம் செய்ய வேண்டாமென்று கோருகிறார். நேரம் அஞ்சரை ஆகுது. ஆரியப்பூமாலைக்கும் காத்தவராயனுக்கும் இனிதே திருமணம் நடைபெறுகிறது. விழிசிட்டி கனகண்ணை வீட்டிலையும் அம்மன் பொங் கல் பொங்குறவை. கோதுமை மாவில் அம்மன் விக்கிரகம் செய்து வேப் பிலையால் அலங்கரித்து சோறு சமைத்துப் படைத்து பூசை செய்வார்கள். அங்கையும் சிதம்பரப்பிள்ளை வந்து விடிய விடிய காத்தவராயன் கதை படிப்பார். நான் ஒரு காத்தவராயன் கூத்து பைத்தியம். எங்கையெல்லாம் காத்தவராயன் கூத்து ஆடப்படுகிறதோ, அங்கையெல்லாம் தவறாமல் முன்வரிசையில் பிரசன்னமாகி விடுவேன்.

காத்தவராயன் கூத்து இன்றும் கிராமங்களில் ஆடப்பட்டு வருகிறது. பெரும்பாலும் மேடை நாடகமாகவே காத்தவராயன் கூத்து இப்போது ஆடப்பட்டு வருகிறது. மல்லாகம் நீதவான் முகாமில் வசிப்பவர்கள் இன் றும் காத்தவராயன் கூத்தை சிதம்பரப்பிள்ளையின் பாணியில் ஆடி வரு கின்றனர். சிதம்பரப்பிள்ளை பேராசிரியர் வித்தியானந்தனால் கௌர விக்கப்பட்ட ஒருவர். வீரசைவ மரபில் வந்தவர். சிவனின் கையில் உடுக்கு எங்கடை கையிலையும் உடுக்கு என்று சொல்வார். யாழ்ப்பாண பல்க லைக்கழக நுண்கலைத்துறையினர் உடுக்கையும் தமது கற்கைநெறியில் இணைத்துக்கொள்ள முன்வர வேண்டும்.



பாகம் 14

○ ந.பரமேஸ்வரன்



# யாழ். மாநகர சபையின் வரலாறு

## (1906 - 1949)

1939ம் ஆண்டுக்குத் தெரிவு செய்யப் பட்ட செயலணிக்குழுக்களும் உறுப்பி னர்களின் விபரமும் வருமாறு.

நிதிக்குழுத் தலைவர், உபதலைவர், S.பதஞ் சலி,C.பொன்னம்பலம், C.R.தம்பையா

கரையூர் வீடமைப்புத்திட்டக்குழு: தலைவர், பொறியியலாளர் வடமாகா ணம், பொதுசுகாதாரப்பரிசோதகர், அருட்தந்தை P.M. பிரான்சிஸ், M.ஜேக் கப், R.R.நல்லையா

சட்டக்குழு: தலைவர், S.பதஞ்சலி, S.M.அபூபக்கர், C.பொன்னம்பலம், K.Vசின்னத்துரை

மின்சாரக்குழு: தலைவர்,உபதலைவர், S.பதஞ்சலி,K.V.சின்னத்துரை,M.ஜேக் கப்,V.A.துரையப்பா

சுகாதாரக்குழு: தலைவர், உபதலைவர், பொதுச்சுகாதாரப்பரிசோதகர்,M.ஜேக் கப்,V.Aதுரையப்பா, R.R.நல்லையா

வேலைத்திட்டக்குழு: தலைவர், பொறி யியலாளர், M.ஜேக்கப்,V.Aதுரையப்பா, S.M.அபூபக்கர், S.பதஞ்சலி

சந்தை மேற்பார்வைக்குழு: உபதலை வர், M.ஜேக்கப், K.V.சின்னத்துரை

கேள்விப்பத்திரக்குழு: தலைவர், R.R.நல்லையா, C.பொன்னம்பலம்

வருடாந்த இருப்பு கணக்கெடுப்புக் குழு: V.A. துரையப்பா,N. மயில்வாகனம்

13.03.1939 அன்று பொது சுகாதாரப்பரி சோதகரின் ஆலோசனையின் பிரகாரம் ரணவீர நை கிச்செல், அனீஸ் அன்ரனி ஆகிய இரு மருத்துவமாதுகள் நியமிக் கப்பட்டனர்.இவர்களுக்கு வருடாந்த சம்பளமாக 420.00 ரூபாவும் வருடாந்த சம்பள அதிகரிப்பாக பன்னிரண்டு ரூபா வும் வழங்குவதென தீர்மானிக்கப்பட் டது.

யாழ்ப்பாணத்துக்கு ஒரு மாநகரசபை தேவையென பண்டாரநாயகா தெரி வித்தார்.

யாழ்ப்பாணத்தக்கு ஒரு மாநகர சபை தேவையெனத் தாம் தெரிவித்த கருத்துத் குறித்து பின்னரொரு சந்தர்ப்பத்தில் அவர் தெரிவித்ததாவது:

"யாழ்ப்பாணத்திற்கு ஒரு மாநகரசபை தேவையென நான் கூறிய போது அதற்கு எதிர்ப்புக் கிளம்பியது. காரணம் நான் ஒரு சிங்கள அமைச்சராக இருந்த படி யால். இப்போது யாழ்ப்பாணத்திற்கு ஒரு மாநகரசபை தேவையென தீர்மா னம் நிறைவேற்றப்பட்டிருப்பதாக என் னால் அறிய முடிகிறது. சட்டசபையில் உள்ள தமிழ் உறுப்பினர்களும் அதையே விரும்புகின்றனர்; ஆனால் அவர்கள் அதை வெளிப்படையாகக் கூறத்தயங்கு கின்றனர். எவ்வாறாயினும் யாழ்ப்பா ணத்திற்கு ஒரு மாநகரசபை தேவை. தரைம்ஸ் (The Times பத்திரிகையில் வெளி வந்த இந்தச் செய்தியை இந்துசாதனம் பத்திரிகை 08.05.1939 அன்று மறுபிரசு ரம் செய்தது) 05.11.1939 அன்று யாழ்ப் பாணச்சங்கம் யாழ்ப்பாணத்திற்கு மாந கரசபை தேவையென அமைச்சரவைக்கு கடிதமொன்றை அனுப்பியது.

தலைவர் S.கனகசபை தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் வணக்கத்திற் குரிய ஜேம்ஸ் மேதர், C.பொன்னம்பலம், A.E.தம்பர், N.செல்வதுரை ஆகியோர் கலந்து கொண்டனர்.

கடிதத்தின் சாராம்சம் வருமாறு:

"கண்டி,காலி, ஆகிய நகரங்களை விட யாழ்ப்பாணம் பெரிய நகரம். அத்துடன் ஒரு காலத்தில் மன்னர்களின் ஆட்சிக் குட்பட்டிருந்த பிரதேசம். சுமார் 50,000 சனத்தொகையைக்கொண்டுள்ள பிரதே சம். யாழ்ப்பாண கற்றோர் சமூகம் விடுக்கும் வேண்டுகோளை அமைச்சர் ஏற்றுக்கொள்ள வேண்டும். அத்துடன் அண்மையில் ஏற்பட்ட வெள்ளப்பாதிப் புக்கு நிவாரணம் வழங்க வேண்டும் "

இதேவேளை வட இலங்கை தேசிய கழ கமும் (North Ceylon National League) யாழ்ப்பாணத்திற்கு மாநகரசபை தேவையென உள்ளூராட்சி அமைச்ச ருக்கு தந்தி ஒன்றை அனுப்பியது. T.R.நல்லையா, W,C,ஸ்பென்சர், W.M.குமா ர சாமி,M.K.சங்கரப்பிள்ளை, W.M.Sதம்பு, G.R.தம்பையா ஆகியோர் இந்த தந்தி யில் கையொப்பமிட்டிருந்தனர். யாழ்ப் பாண மாவட்ட உள்ளூராட்சி சபையை மாநகரசபையாக தரமுயர்த்த வேண்டு மென்ற கோரிக்கையை உறுப்பினர் சோமசுந்தரம் முன்வைத்த போது தலை வர் சாம் சபாபதி அதற்கு எதிர்ப்புத்தெ ரிவித்தார். யாழ்ப்பாண மாவட்ட உள் ளூராட்சி சபையை மாநகரசபையாக தரமுயர்த்தும் பட்சத்தில் வரிகள் அதிக ரிக்குமென்ற கருத்தை தலைவர் சாம் சபா பதி முன் வைத்தார். தலைவரின் கருத்துக்கு வட இலங்கை தேசிய கழகம் கடும் எதிர்ப்பு தெரி வித்தது. யாழ்ப்பாணம் போன்ற பெரிய நகரத்தை மாவட்ட நகரசபையால் நிர்வகிக்க முடியா தென வும் இப்படிப்பட்ட பெரிய நகரத்தை நிர்வகிப்பதற்கு பெருந்தொகைப்பணம் தேவையெனவும் இலங்கை நிர்வாக சேவையின் இரண்டாம் வகுப்பு அதி காரி ஆணையாளராக நியமிக்கப்பட வேண்டுமெனவும் சோமசுந்தரம் கோரிக்கை விடுத்தார்; சோமசுந்தரத் தின் கோரிக்கையை வட இலங்கை தேசிய கழகம் ஏற்றுக்கொண்டது. வரி கள் ஏழைகளை பாதிக்க மாட்டாதென வும் வாகனங்கள் சொத்துக்களை வைத் திருப்பவர்களிடமே வரி அறவிடப்படு மெனவும் வட இலங்கை தேசிய கழகம் தெரிவித்தது. மின்சாரத்திற்கும் சுத்த மான குடிதண்ணீருக்கும் மட்டுமே கட் டணம் அறவிடப்படுமெனவும் வட இலங்கை தேசிய கழகம் தெரிவித்தது. சுண்டிக்குளி மகாஜனசபையிலேயே மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட் டது. திரு. J.T. சொலமன்ஸ் கருத்துத் தெரிவிக்கையில் யாழ்ப்பாணச்சங்கம், சைவபரிபாலன சபை, கத்தோலிக்க திருச்சபை ஆகியவை யாழ்ப்பாண மாவட்ட நகரசபையை மாநகரசபை, யாக மாற்றுவதற்கு விருப்பம் தெரிவித் ததையிட்டு தான் பெருமைப்படுவ தாகக் கூறினார்.

(தொடரும்)

சிங்கள மொழிமூலம்: ஸ்ரீநாத் பிரசன்ன ஜயசூரிய

தமிழில்: வீ.எஸ்.ரீ.







# புலிகளுக்கு விமானம் கிடைத்த... எப்ப...

**தலைவர் எடுப்பதே இறுதிமுடிவு**

தலைவருக்கு குறிப்பிட்டுச் சொல்லும்படியாக எந்தவொரு நோயும் இருந்ததில்லை. கற்பனா சக்தி அவருக்கு அபாரமாகவிருந்தது. புலிகளின் உயர்மட்டத் தலைவர்கள் வெவ்வேறு விடயங்கள் தொடர்பாகத் தம்முள் சில தீர்மானங்களை எடுத்துவிட்டு, அவற்றைத் தலைவருக்குத் தெரியப் படுத்துவார்கள். ஆனால் இறுதியில் தலைவர் சொல்வதே இறுதி முடிவாக இருக்கும். எனக்குத் தெரிந்த காலம் முதல் அதுவே நடைமுறையாக இருந்தது. தலைவரது சொந்தப் பாதுகாப்புத் தொடர்பாக ஆலோசனை வழங்கவென அவருக்கு ஆலோசகர்கள் எவரும் இருந்ததில்லை.

ஆரம்ப காலத்தில் தலைவரது பாதுகாப்புக் கடமையில் போராளி ஒருவர் தொடர்ச்சியாக ஒருநாள் முழுதும்( 24 மணி நேரமும்) கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தார். இது தலைவர் பிரபாகரனுக்குத் தெரியவந்தபோது, " எந்தவொரு பாதுகாப்புப் போராளியும் தொடர்ச்சியாக 12 மணித்தியாலயங்களுக்கு மேல் கடமையில் ஈடுபடுத்தப்படக் கூடாது" என உத்தரவிட்டார். 1994 ஆம் ஆண்டு முதல், இறுதி வரை அந்த உத்தரவே தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டு வந்தது.

**பிரபாகரனுக்குப் பிரியமான ஆமை இறைச்சி**

தினமும் தவறாது காலையில் அரைமணிநேரமும் மாலையில் அரை மணி நேரமும், தலைவர் பிரபாகரன் உடற்பயிற்சி செய்வது வழக்கம். அதன் பின்னர் ஒரு பெரிய கிண்ணத்தில் மரக்கறி சூப் அருந்துவார். மதியம் மீன் அல்லது இறைச்சியுடன் இடியப்பம் உண்பார். சிலவேளை 'பரோட்டா' ஒன்றுடன் மதிய உணவை முடித்துக்கொள்வார். மீன் அல்லது இறைச்சியுடன் இடியப்பம்தான் தலைவரின் இரவுணவு. வாரத்தில் மூன்று நான்கு தடவைகளே அவர் சோறு உண்பது வழக்கம். கிளிநொச்சி புலிகளது கையைவிட்டு நழுவியதன் பின்னர், அவர் உடற்பயிற்சி செய்வதை நிறுத்தி விட்டு காலையிலும் மாலையிலும் தலா ஐந்து கிலோமீற்றர் தூரம் நடைப் பயிற்சி மேற்கொள்ள ஆரம்பித்தார்.

விடுதலைப் புலிகள் அமைப்பின் உயர்மட்டத் தலைவர்களுடனான சந்திப்புக்களின்போது பிரபாகரன் புரியாணி, கோழி இறைச்சி, நூடில்ஸ் மற்றும் பிறைட் றைஸ் என்பவற்றை உண்பார். உடும்பு மற்றும் ஆமை இறைச்சி என்பவை தலைவர் பிரபாகரனுக்குப் பிரியமானவை. வாரத்தில் ஒரு தடவையோ, இரு வாரங்களுக்கு ஒரு தடவையோ கட்டாயமாக ஆமை இறைச்சி உண்பார்.



> நான் கொடுத்த தகவலின் அடிப்படையிலேயே கே.பி மறைந்திருந்த இடத்தை அரசபடைகள் கண்டுபிடித்து, அங்கு சென்று அவரைக் கைது செய்தன.
>
> தினமும் தவறாது காலையில் அரைமணிநேரமும் மாலையில் அரை மணி நேரமும் தலைவர் பிரபாகரன் உடற்பயிற்சி செய்வது வழக்கம்.
>
> தலைவரது சொந்தப் பாதுகாப்புத் தொடர்பாக ஆலோசனை வழங்கவென அவருக்கு ஆலோசகர்கள் எவரும் இருந்ததில்லை.
>
> இலகுரக விமானங்களது பாகங்களை சமாதான உடன்படிக்கை நடைமுறையிலிருந்த கால இடைவெளியைப் பயன்படுத்தி நாங்கள் வெளிநாடுகளிலிருந்து கொண்டு வந்திருந்தோம்.

போராளிகள் மிருகங்களை வேட்டையாடிவிட்டு, அவற்றை இறைச்சியாக்கிக் கொண்டு வந்தால் அது ஏற்கப்படமாட்டாது. அவர்கள் வேட்டையாடிய விலங்கின் உடலை முழுமையாகக் கொண்டு வந்து காட்டினால் மட்டுமே அது தலைவரது உணவுக்காக ஏற்கப்படும்.

**ஒவ்வொரு சனியும் வீட்டுக்கு..**

எங்கிருந்தாலும் தவறாது ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் தலைவர் தமது மனைவி மற்றும் பிள்ளைகளைச் சந்திக்க அவர்கள் தங்கியிருந்த இடத்துக்குச் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார். இரு நாள்கள் அவர்களுடன் தங்கியிருந்து திங்கட்கிழமை காலையிலேயே திரும்பிச் செல்வது அவரது வழக்கம். புலிகள் தமது கட்டுப்பாட்டிலிருந்த பகுதிகளை ஒவ்வொன்றாக இராணுவத் தரப்பிடம் இழக்கத் தொடங்கியபோது, தமது சுய பாதுகாப்பைக் கருத்திற் கொண்டு பிரபாகரன் தமது குடும்பத்தினரைக் காணச் செல்வதை மட்டுப்படுத்திக் கொண்டார்.

**பால்ராஜைக் கட்டியணைத்து பாராட்டு**

1991 ஆம் ஆண்டில் ஆனையிறவு இராணுவமுகாம் மீது விடுதலைப் புலிகள் பெரியதொரு தாக்குதலை மேற்கொண்டு அது தோல்வியில் முடிவடைந்திருந்தது. ஆனாலும் புலிகள் ஓயவில்லை. மீண்டும் 2000 ஆம் ஆண்டு புலிகள் , அதே ஆனையிறவு முகாமைத் தம் வசமாக்கினர்.

விடுதலைப் புலிகள் குறித்த அந்த ஆனையிறவு இராணுவ முகாமைக் கைப்பற்ற மேற்கொண்ட தாக்குதலை வழிநடத்தியவர் விடுதலைப் புலிகளது உயர்மட்டத் தளபதிகளில் ஒருவரான பால்ராஜ். பிரபாகரன் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஏனைய உயர்மட்ட விடுதலைப் புலிகள் தலைவர்களைக் கைகுலுக்கிப் பாராட்டியதில்லை. ஆனால் ஆனையிறவு இராணுவ முகாமைக் கைப்பற்றும் தாக்குதலுக்கு தலைமை தாங்கி வழிநடத்திய பால்ராஜை அந்த வெற்றிக்காகப் பாராட்டும் விதத்தில் பிரபாகரன் அவருடன் கைகுலுக்கிப் பாராட்டியதோடு, கட்டி அணைத்துக் கொண்டார். அந்த வெற்றி குறித்து பிரபாகரன் பல தடவைகள் குறிப்பிட்டு நினைவு கூர்ந்த துண்டு.

**சங்கருக்காக அழுதார்**

விடுதலைப் புலிகள் அமைப்பின் சிரேஷ்ட போராளிகளில் ஒருவரான கேணல் சங்கர், ஆழ ஊடுருவும் படையணியின் கிளைமோர் தாக்குதலில் கொல்லப்பட்டார். அவரது மரணச் செய்தி கேட்டு பிரபாகரன் கண்களிலிருந்து கண்ணீர் பெருகியது. "எனது வாழ்க்கையில் நான் முதன்முதலில் அழுதது சங்கரின் இழப்பால்தான். நாமிருவரும் அன்னியோன்ய நண்பர்கள். சங்கரின் இழப்பு எனது இடது கரத்தை இழந்தது போன்ற வேதனையைத் தந்தது" என பிரபாகரன் பிற்காலத்தில் கூறியிருந்தார்.

**தமிழ்ச்செல்வனுக்கு மரியாதை**

ஆளில்லா விமானத்தின் மூலம், விடுதலைப் புலிகளது கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் வேவு பார்த்த இலங்கைப் படையினர் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் தங்கியிருந்த இடத்தைத் துல்லியமாக அடையாளம் கண்டுகொண்டனர். தமிழ்ச்செல்வன் தங்கியிருக்கும் அரசியல்துறை அலுவலகத்தில் 'சட்டலைட்'(செய்...

பொருத்தப்பட்டிருந்தது. தமிழ்ச்செல்வன் த...

இடத்தை அடையாளம் காண இது படை...

யாகப் போய்விட்டது. வேவுத்தகவலில் பெ...

ளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட...

லில் சிக்கி தமிழ்ச்செல்வன் உயிரிழக்க நேரி...

தமிழ்ச்செல்வனது மரணம் குறித்த தகவல் கி...

ழுத்துக்கான போரில் போராளியொருவர் உ...

சாதாரணமானதொரு விடயம். அதற்காக ந...

வேண்டியதில்லை. நாம் எமது போராட்ட...

முன்னெடுத்துச் சென்றாக வேண்டும்" எனப்...

கமான குரலில் கூறினார். ஆனாலும் மனதளவி...

போனார். மிக இக்கட்டான அந்த நேரத்திலு...

புக்கு மத்தியில் தமிழ்ச்செல்வனுக்கு இறுதி...

பிரபாகரன் நேரடியாகச் சென்று செலுத்தியி...

**"கருணாவைக் கொல்லுங்கள்!"**

கருணா அம்மானுக்கும் பிரபாகரனுக்கும் ...

காலமாக கருத்து முரண்பாடுகள் நிலவிவந்...

ணத்தைச் சேர்ந்த விடுதலைப் புலி உறுப்பின...

யில் கவனிக்கப்படுவதில்லை என்ற கருணாவி...

அந்தக் கருத்து முரண்பாட்டுக்கான காரணம் ...

விட்டு வெளியேறியதைக் கேள்வியுற்ற பிரப...

வசப்பட்டார்.

கருணா தனக்கு ஆதரவான சில விடுதலைப்பு...

டன் வெளியேறிச் சென்றமையால் எமக்கு...

பாதிப்பு ஏதுமில்லை எனத் தெரிவித்த பிரபா...

யும், அவரது கூட்டாளிகளையும் கொன்றுவி...

டார். அப்படி உத்தரவிடும் போது நானும் ...

இருந்தேன். அந்தத் தாக்குதலுக்குப் பொ...


கேணல் சொர்ணத்தையும் பிரபாகரன் நியமி...

இதற்காக சொர்ணத்துடன் போராளிகள் அ...


பிரபாகரன் கிழக்கு மாகாணத்துக்கு அனுப்...

அணியினர் கருணா அணியினரைத் தேடி...

த...
அ...
னி...
வல...
திரி...
ளில்...
சஞ்...
தது...







தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனின் முன்னாள் மெய்ப்பாதுகாவலர் ரகு என்பவர் லங்காதீப பத்திரிகைக்கு வழங்கிய தகவல்களின் முதற்பகுதி கடந்தவாரம் சஞ்சீவியில் வெளியாகியிருந்தது. அதன் இறுதிப்பகுதி இது.

# நது
# படி?

லட்'(செய்மதி) தொலைபேசி
செல்வன் தங்கியிருந்த சரியான
இது படையினருக்கு மிகவசதி
வலில் பெறப்பட்ட விவரங்க
ளப்பட்ட விமானத் தாக்குத
ழக்க நேரிட்டது.
தகவல் கிடைத்ததும் "தமிழீ
யாருவர் உயிரிழப்பதென்பது
அதற்காக நாம் குழப்பமடைய
பாராட்டத்தைத் தொடர்ந்து
டும்" எனப் பிரபாகரன் இறுக்
ம் மனதளவில் அவர் உடைந்து
நேரத்திலும், கடும் பாதுகாப்
க்கு இறுதி மரியாதையைப்
செலுத்தியிருந்தார்.

ரனுக்கும் இடையே நீண்ட
நிலவிவந்தன. கிழக்கு மாகா
உறுப்பினர்கள் உரிய முறை
கருணாவின் மனத்தாங்கலே
காரணம். கருணா இயக்கத்தை
யுற்ற பிரபாகரன் கோபத்தின்

டுதலைப்புலி உறுப்பினர்களு
ல் எமக்கு பெரிய அளவில்
த்த பிரபாகரன், கருணாவை
கொன்றுவிடும்படி உத்தரவிட்
து நானும் தலைவருடன் கூட
குப் பொறுப்பாக தளபதி
கரன் நியமித்தார்.
ராளிகள் அணியொன்றையும்
கு அனுப்பி வைத்தார். அந்த
ரத் தேடித் தேடி வேட்டை

யாட ஆரம்பித்தனர். ஆனால் அவர்களால் கருணாவைக் கொல்லமுடியாமல் போயிற்று. கருணா வெளிநாட்டுக்குத் தப்பி சென்று விட்டமையே அதற்குக் காரணம்.

## பிள்ளைகள் மீது பேரன்பு

தலைவர் பிரபாகரனுக்கு, சார்ள்ஸ் அன்ரனி, துவாரகா மற்றும் பாலச்சந்திரன் என்ற பெயர்களில் இரு ஆண்களும் ஒரு பெண்ணுமாக மூன்று பிள்ளைகள். பிரபாகரன் தமது மூத்த இரு பிள்ளைகளுக்கும் தனியான ஆசிரியரொருவரை நியமித்தே கற்பித்தார். கற்பித்தலுக்கான கட்டணத்தை பிரபாகரன் செலுத்த முயன்றபோதிலும் குறிப்பிட்ட ஆசிரியர் அதனை வாங்க மறுத்துவிட்டார். சார்ள்ஸ் அன்ரனி போரில் நேரடியாக ஈடுபடுத்தப்படாவிட்டாலும் புலிகள் அமைப்புக்கான வெடிகுண்டு தயாரித்தல் மற்றும் கணினிக் கையாள்கை ஆகிய செயற்பாடுகளில் பங்குபற்றினார். பிரபாகரன் தமது மூன்று பிள்ளைகள் மீது கடும் அன்பும் அக்கறையும் கொண்டிருந்தார்.

## ஒப்பந்தத்தால் பலமான புலிகள்

2002 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதியன்று அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்குமிடையே போர் நிறுத்த ஒப்பந்தமொன்று கைச்சாத்தாகியது. நோர்வே நாட்டின் விசேட மத்தியஸ்தத்தின் மூலம் இந்த சமாதான உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இந்தச் சமாதான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட முன்னர் , புலிகள் அமைப்பின் சிரேஷ்ட தலைவர்களான தமிழ்ச்செல்வன், புலிகளின் காவல்துறைப் பொறுப்பாளர் நடேசன், புலனாய்வுத் துறை பொறுப்பாளர் பொட்டு அம்மான் போன்றோருடன் பல சுற்றுக் கலந்துரையாடல்களைப் பிரபாகரன் மேற்கொண்டார். குறித்த சமாதான ஒப்பந்தம் மூலம் புலிகள் அமைப்பைப் பலப்படுத்த முடியும் என்பதாலேயே தாம் அதற்கு உடன்பட்டதாக பிரபாகரன் ஏனையவர்களுக்கு விளக்கிக் கூறினார். அவரது அந்த முடிவுக்கு ஏனைய சிரேஷ்ட தலைவர்களும் ஒப்புதல் தெரிவித்தனர். அந்தச் சமாதான ஒப்பந்தம் நடைமுறையிலிருந்த கால இடைவெளியில் புலிகள் அமைப்பு சகல வழிகளிலும் தனது பலத்தை அதிகரித்துக் கொண்டது.

மோட்டார் சைக்கிள்கள் நவீனரக வாகனங்கள் என்பவற்றை அமைப்பின் தேவைக்காக புலிகள் வெளிநாடுகளிலிருந்து தருவித்துக் கொண்டனர். ஆயுதங்கள் மற்றும் தாக்குதல்களுக்குத் தேவையான உபகரணங்களையும் வெளிநாடுகளிலிருந்து கப்பல்கள் மூலம் தருவித்து அவற்றை எவ்வித சிரமமுன்றி தமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கு விடுதலைப் புலிகளால் எடுத்துச் செல்ல முடிந்தது. அந்தச் சமாதான காலத்தில் தாம் எதிர்பார்த்த ,புலிகளுக்குத் தேவையான சகலவற்றையும் பூர்த்தி செய்து கொள்வதில் பிரபாகரன் வெற்றி கண்டார்.

## வான்புலிகளுக்கு விமானங்கள் வந்தது எப்படி?

விடுதலைப் புலிகள் தமது வான்புலிகளின் இலகு ரக விமானத்தைப் பயன்படுத்தி கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் மீதான தாக்குதலை 2007 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 27ஆம் திகதியன்று வெற்றிகரமாக மேற்கொண்டனர். இந்தத் தாக்குதலில் இலங்கை விமானப்படை வீரர்கள் மூவர் உயிரிழந்ததோடு 16 வீரர்கள் காயமடைந்தனர். விமானங்கள், உலங்குவானூர்திகள் சிலவும் இந்தத் தாக்குதலில் நிர்மூல மாக்கப்பட்டன. அதேபோன்று தமது இலகுரக விமானங்கள் இரண்டைப் பயன்படுத்தி மன்னார் கல்லடி இராணுவ முகாம் ,களனிதிஸ்ஸ மின் நிலையம் என்பவற்றின் மீதும் வான் புலிகள் தாக்குதல் நடத்தியிருந்தனர்.

இலகுரக விமானங்களது பாகங்களை சமாதான உடன்படிக்கை நடைமுறையிலிருந்த கால இடைவெளியைப் பயன்படுத்தி நாங்கள் வெளிநாடுகளிலிருந்து கொண்டு வந்திருந்தோம்.

கொழும்புத் துறைமுகத்தினூடாக எமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கு இவை எடுத்து வரப்பட்டன. அவற்றை எமது அமைப்பின் தொழில்நுட்பத் துறை நிபுணர்களாக போராளிகள் மூலம் பொருத்தி விமானங்களை உருவாக்கினோம். முதலில் பரீட்சார்த்தமாக இயக்கிப் பார்த்த இலகுரக விமானத்தைப் பயன்படுத்தி வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோவில் மீது வானிலிருந்து மலர் தூவினோம். கட்டுநாயக்க தாக்குதலுக்கான குண்டுகளும் அந்த இலகு ரக விமானங்கள் மூலமே எடுத்துச் செல்லப்பட்டன.

## மஹிந்தவுக்காக பரப்புரை செய்தேன்

இறுதிக் கட்டப் போரின் போது தலைவர் பிரபாகரன் எடுத்த பல முடிவுகளை ஏனைய உயர் மட்டப் புலித் தலைவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. இந்தநிலையில் நான் ஒருவாறு புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து தப்பித்து அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் நுழைந்துவிட்டேன். பெரும் சிரமப்பட்டே அவ்விதம் என்னால் தப்பிச் செல்லமுடிந்தது.

நான் பிரபாகரனது முக்கிய பாதுகாவலனாகச் செயற்பட்ட ஒருவன்.

பொலிஸாருக்கு அது தெரியவந்தால் என்னைக் கொன்றுவிடுவார்கள் என நினைத்தேன். ஆனால் பொலிஸார் எனக்கு அப்படி எவ்விதத் தொல்லையும் தரவில்லை. நிமல் ஹேவகே மற்றும் சுல்பிகார் ஆகியோர் மனிதாபிமான அடிப்படையில் என்னை நடத்தினர்.

அதன்பின்னர் நான் யாழ்ப்பாணத்தில் இருந்து கொண்டு மொட்டுக் கட்சித் தரப்புக்கு ஆதரவு தேடும் செயற்பாட்டை மேற்கொண்டேன். அதற்கு முன்னர் மஹிந்த ராஜபக்ச ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டபோது நான் யாழ்ப்பாணத்தில் இருந்து கொண்டு அவருக்காகப் பரப்புரை செய்தேன். தற்போது சிறு கடையொன்றை நடத்திக் கொண்டு மனைவி மற்றும் இரு பிள்ளைகளுடன் மிகுந்த சிரமத்தின் மத்தியில் வாழ்க்கையை ஓட்டி வருகிறேன்.




## கே.பியை காட்டி கொடுத்தது நானே!

விடுதலைப் புலிகளினது சர்வதேச ஆயுதக் கொள்வனவுப் பிரிவின் தலைவராக இருந்தவர் கே.பி. , அவர் வெளிநாட்டில் இருந்ததால் அவரை இலங்கைப்படையினரால் கண்டுபிடிக்க முடியவில்லை.

ஆனால் அவர் எங்கிருக்கிறார் என்பது எனக்குத் தெரியும். நான் கொடுத்த தகவலின் அடிப்படையிலேயே கே.பி மறைந்திருந்த இடத்தை அரசபடைகள் கண்டுபிடித்து, அங்கு சென்று அவரைக் கைது செய்தன.

## படையினருக்கு உதவியவர் ரகு

"ரகு எமக்கு (படையினருக்கு) பெரிய அளவில் உதவி புரிந்த ஒரு நபர். அவரது மனைவி கற்றறிந்த பெண். எனவே மனிதாபிமான அடிப்படையில் அவருக்கு ஆசிரியத் தொழிலொன்றைப் பெற்றுக் கொடுக்க நான் பெரிதும் முயற்சித்தேன். நல்லாட்சி அரசின் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசத்திடமும் இது குறித்து அடிக்கடி நான் நினைவுபடுத்தினேன். ஆனால் எனது அந்த முயற்சிக்குப் பயனேதும் கிட்டவில்லை. தற்போதைய அரசின் கல்வி அமைச்சர் ஜி.எல்.பீரிஸிடம் இது விடயம் குறித்து தெரியப்படுத்துவது நன்றென எண்ணுகிறேன்"

– ஓய்வுபெற்ற சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர்
நிமல் ஹேவகே




○ தில்லைநாதன் கோபிநாத்

**ஏதோ ஒரு வகையில் அரச கையேடுகளாகவே பிரதிபலித்து வெளிவந்த கொழும்புப் பத்திரிகைகள் புறக்கணிக்கப்பட வேண்டியவை என்ற கருத்து மக்களிடையே அன்று வளர்ச்சி பெற்றுக் கொண்டிருந்த மனோநிலை மூன்று புதிய நாளிதழ்கள் யாழ்ப்பாணத்தில் உருவாகக் காரணமானது எனலாம்.**

# யாழ்ப்பாணப் பதிப்புத்துறை




## 1970

களிலேயே இலங்கை இனப் பிரச்சினையை ஆயுதம் தாங்கி எதிர்கொள்ளும் செயற்பாடுகள் தொடங்கினாலும், 1980 களிலேயே முழு அளவிலான ஆயுதப் போராட்டம் வெடித்தது. 1981இல் யாழ்ப்பாண நூலகமும், ஈழநாடு பத்திரிகையும் எரிக்கப்பட்டமை இனப்பிரச்சினையின் போக்கில் குறிப்பிடத்தக்க திருப்பு முனையாக அமைந்தது.

இந்த நூலக, ஈழநாடு எரிப்புச் சம்பவங்கள் யாழ்ப்பாணப் பதிப்புத்துறை வரலாற்றின் பேரிழப்புக்களாக அமைந்தன. ஏனெனில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலிருந்து பதிப்புத்துறை வளர்ந்த அளவுக்குப் பதிப்பிக்கப்பட்ட வெளியீடுகளை ஆவணப்படுத்தி வைக்கும் மரபு யாழ்ப்பாணத்தில் உருவாகியிருக்கவில்லை. ஒன்றரை நூற்றாண்டுகாலப் பத்திரிகைகள் பெரும்பாலானவற்றின் எஞ்சிய கடைசிப் பிரதிகள் யாழ்ப்பாண நூலகத்திலேயே சேகரித்து வைக்கப்பட்டிருந்தன. எடுத்துக்காட்டாக உதயதாரகை, இந்து சாதனம், ஈழகேசரி போன்றவற்றின் ஏறத்தாழ மொத்தப் பிரதிகளும் அங்கு இருந்தன. நூலகம் எரிக்கப்படுவதற்கு முன்னர் அமெரிக்க முயற்சியில் நுண்படச் சுருள்களாக அவற்றில் ஒருபகுதி பதிவு செய்யப்பட்டிருந்தது.

இவ்வாறு பதிவாகாத பெருமளவு பத்திரிகைகளும் அங்கு இருந்தமையை அறிய முடிகிறது. பாதுகாவலன், இலங்காபிமானி, ஈழநாடு பத்திரிகைகளும் ஆரம்பகாலத்திலிருந்து வெளிவந்த நூல்களும் பெரும்பாலும் அந்த நூலகத்தில் இருந்தன. இப்போது இலங்கையில் ஒருபிரதிதானும் எஞ்சாத 'யப்னா பிறிமன்' இதழ்களும் யாழ்ப்பாணப் பொதுசன நூலகத்தில் இருந்தமையை அவை ஆய்வுகளில் பயன்படுத்தப்பட்டதிலிருந்து ஊகிக்க முடிகிறது. இவை அனைத்தும் ஒரே இரவில் எரித்துச் சாம்பலாக்கப்பட்டன. அத்துடன் ஈழநாடு பத்திரிகை அலுவலகத்தில் இருந்த பத்திரிகைச் சேகரமும் எரியுண்டது. எவ்வகையிலும் மீட்கவே முடியாத பேரிழப்புக்களாக இந்தச் சம்பவங்கள் அமைந்தன.

1983 ஜூலையில் விடுதலைப்புலிகள் திருநெல்வேலியில் இராணுவத்தினர் மீது மேற்கொண்ட தாக்குதலில் 13 படையினர் கொல்லப்பட்டதும், அதனைத் தொடர்ந்து வெடித்த ஜூலைக் கலவரங்களால் நேரடியாகவும் மனதளவிலும் பாதிக்கப்பட்ட தமிழர்களில் பலரும், போராளிக் குழுக்களில் இணைந்தமையும் ஆயுதப் போராட்டத்தைத் தீவிரமாக்கியது. அந்த இயக்கங்கள் சார்ந்த கொள்கை பரப்பும் பத்திரிகைகளும் பிரசுரங்களும் வெளிவரத் தொடங்கின. போராளிக் குழுக்கள் அரசபடைகளுடன் மோதத் தொடங்கினர். யாழ்ப்பாணம் போர்க்களமானது. தம்மைச் சுற்றி என்ன நடக்கிறது என்பதனை அறியப் பொதுமக்களுக்கும் செய்திப் பத்திரிகைகள் அவசியமாகின.

இத்தகைய ஒரு சூழ்நிலையில் செய்தித் துறையும் தணிக்கை, ஊரடங்கு போன்ற அரச விலங்குகளால் எத்தனையோ இன்னல்களை எதிர்நோக்கி முடங்கிக் கிடந்தது. ஆனால் தமிழ் மக்கள் கவனம் செலுத்த வேண்டிய செய்திகள் தமிழ் நிலத்தில் ஊரடங்கு வேளையிலேயே நிகழ்ந்து கொண்டிருந்தன. ஆகவே அவர்களின் செய்திகளை அறியும் வேட்கைக்கு ஒரு பத்திரிகை மட்டும் போதாது; இன்னொரு பத்திரிகையும் ஆரம்

## 1990 -1995

பிக்கப்பட வேண்டும் என்ற விருப்பத்தின் அடிப்படையில் ஈழமுரசு பத்திரிகை தொடங்கப்பட்டது என்ற பதிவு அக்கால நிலைமையை விளக்குவதாக அமைகிறது. அவ்வகையில், 1984இல் ஈழமுரசும் 1985இல் உதயனும் 1987இல் முரசொலியும் வெளியாகத் தொடங்கின.

ஈழமுரசின் தோற்றமும் வளர்ச்சியும் முடிவும் 1980களின் ஒரு வகைமாதிரியாக அமைவதால், அதன் வரலாற்றைச் சற்று விரிவாகவே நோக்கலாம்.

1984 பெப்ரவரி 5ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமையன்று முதன்முதலில் வார இதழாக ஈழமுரசு தொடங்கப்பட்டது. அதன் உரிமையாளர் மயில். அமிர்தலிங்கம் ஆவார். கே. எஸ். அருமைரத்தினம் என்பவர் பொது முகாமையாளராக இருந்தார். "ஏதோ ஒரு வகையில் அரச கையேடுகளாகவே பிரதிபலித்து வெளிவந்த கொழும்புப் பத்திரிகைகள் புறக்கணிக்கப்பட வேண்டியவை என்ற கருத்து மக்களிடையே அன்று வளர்ச்சி பெற்றுக் கொண்டிருந்த மனோநிலை ஈழமுரசு தொடங்கக் காரணமாக அமைந்ததாக கொள்ளப்பட்டது.

ஈழமுரசு வார இதழாகத் தொடங்கப்பட்டபோதும் அதன் விற்பனை சரிவர அமைந்தால் நாளிதழாக்குவதாகத் திட்டமிடப் பட்டிருந்தது. 1984 ஏப்ரல் 18 புதன்கிழமை வாரமிருமுறை இதழாக மாறியது; 1984 செப்ரெம்பர் 10 ஆம் திகதியில் தினசரி வெளிவரத் தொடங்கியது. அவ்வகையில் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரத் தொடங்கிய மூன்றாவது தினசரி ஈழமுரசு ஆகும். 1984 டிசம்பரில் ஈழமுரசு விற்பனை 10,000 பிரதிகளைக் கடந்தது என்றும் 1986 அளவில் 16,000 பிரதிகள் விற்பனையானதாகவும் ஈழமுரசின் இரண்டாவது ஆண்டு மலரில்குறிப்பிட்டுள்ளனர்.

1984 ஒக்ரோபரிலேயே ஈழமுரசு தனக்கான அச்சுக் கருவிகளை வாங்கிக் கொண்டது. அதுவரை காலமும் சண்முகா பதிப்பகத்தில் அச்சுக் கோர்த்து வேறு அச்சகங்களில் கொடுத்து அச்சிட்டே பெற்றிருந்தனர். அவ்வகையில் கலைவாணி அச்சகம், பஸ்தியன் அச்சகம், சாந்தி அச்சகம், சண்முகநாதன் அச்சகம் போன்றவை ஈழமுரசின் வருகைக்கு உதவியுள்ளன.

ஈழமுரசு ஆரம்பிக்கப்பட்டபோது செய்திகள் சார்ந்த ஆலோசனைகளை வழங்கிவந்த எஸ். திருச்செல்வம், பின்னர் பிரதம ஆசிரியராகப் பொறுப்பேற்றார். திருச்செல்வம் ஏற்கனவே தினகரன், ஈழநாடு பத்திரிகைகளில் பணியாற்றியிருந்தார். (பிற்காலத்தில் முரசொலி நாளிதழ் வெளியாகத் தொடங்கியபோது அதன் ஆசிரியராகவும் இவரே இருந்தார்.) திருச்செல்வம் ஈழமுரசு தொடங்கப்பட்ட காலத்திலிருந்தே ஆசிரியராக இருந்தார் எனவும், தனிப்பட்ட தேவைகருதி ஆலோசகர் என அடையாளப்படுத்தப்பட்டார் என்ற கருத்தும் உள்ளது. ஈழமுரசின் இலக்கியப் பக்கங்களுக்கு எழுத்தாளர் சொக்கன் க. சொக்கலிங்கம் ஆலோசனைகள் வழங்கியிருக்கிறார்.

1986 இன் இறுதியில் ஈழமுரசு விடுதலைப் புலிகளின் செல்வாக்குக்கு உட்பட்டிருந்தது. 1987 ஒக்ரோபரில் இந்திய இராணுவம் யாழ்ப்பாணத்தில் தாக்குதல் நடவடிக்கைகளைத் தொடங்கியபோது, ஈழமுரசு, முரசொலி பத்திரிகை அலுவலகங்களை முற்றுகையிட்டு ஊழி

5

யர்கள், பத்திரிகையாளர்களைத் கைது செய்தபின் அலுவலகங்களைக் குண்டுவைத்துத் தகர்த்தது.

1989 இல் இந்திய இராணுவத்தின் அழுத்தம் காரணமாக மீண்டும் ஈழமுரசை ஆரம்பிக்கும் முயற்சிகள் தொடங்கப்பட்டதாகத் தெரிகிறது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர்களின் மனித உரிமைகள் அமைப்பின் அறிக்கையின்படி முதற்பக்கம் தவிர ஏனைய பக்கங்கள் பல்வேறு அச்சகங்களில் அச்சடிக்கப்பட்டு ஈழமுரசினை மீளத் தொடங்கும் நிலையில், 1989 ஆம் ஆண்டு பெப்ரவரி முதலாம் திகதி அமிர்தலிங்கம் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார். அத்துடன் ஈழமுரசின் பயணம் முடிவுக்கு வந்தது.

இத்தனை வன்முறைகள், மோதல்களுக்கு மத்தியில் நாளிதழ்களுக்கு அப்பாலும் யாழ்ப்பாணப் பதிப்புத்துறை தொடர்ந்து இயங்கிக் கொண்டிருந்தது என்பதனையும் குறிப்பிட்டாக வேண்டும். நூற்றாண்டு கண்ட சமய இதழ்களான இந்து சாதனம், உதயதாரகை, பாதுகாவலன் போன்றவை தொடர்ந்தும் வெளியாகின. 1982 ஜனவரியில் ஆரம்பமான 'சற்றடே றிவியூ' (Saturday Review) 1987இல் இந்திய அமைதிப்படையுடனான போர் தொடங்கும் காலம்வரை வெளிவந்து கொண்டிருந்தது. 1947இல் கொழும்பில் தொடங்கி 1977இல் யாழ்ப்பாணத்திலிருந்து பிரசுரிக்கப்பட்ட சுதந்திரன் பத்திரிகை, 1983 ஆம் ஆண்டின் இறுதிவரை வெளியானது. தமிழர் விடுதலைக் கூட்டணியின் உதயசூரியன் வார இதழ், மாக்சிய ஏடான செம்பதாகை, சமயப் பத்திரிகையான சந்திரதீபம் போன்றனவும் வெளியாகி வந்தன.

கொழும்பில் தொடங்கப்பட்ட சிரித்திரன் இதழ், 1980களில் யாழ்ப்பாணத்திலிருந்தே வெளியானது. மல்லிகை, அலை போன்ற இலக்கிய இதழ்கள் தொடர்ந்தும் வெளிவந்தன. 1980இல் இளைஞர்களால் தொடங்கப்பட்ட 'புதுசு' இலக்கியச் சஞ்சிகையின் 11 இதழ்கள் வெளியாகின. நாடக இதழாக 'அரங்கம்' வெளியாகியது. பெண்கள் இதழ்களான 'தோழி', 'நங்கை', 'சுதந்திரப் பறவைகள்' போன்றவை தொடங்கப்பட்டன. 1970களில் தொடங்கிய உளவியல் இதழான 'நான்' தொடர்ந்து வெளியானது. உதயன் பத்திரிகையினரால் சிறுவர் இதழாக 'அருச்சுனா' வெளியிடப்பட்டது. 'ஆய்வு' போன்ற துறைசார் இதழ்கள், 'அமிர்தகங்கை' போன்ற இலக்கிய இதழ்கள் அவ்வப்போது தோன்றி மறைந்தன. மில்க்வைற் செய்தி போன்ற செய்தி மடல்கள், நூல்கள், பிரசுரங்கள் என போருக்குள் வாழ்வாகப் பதிப்புத்துறை தொடர்ந்தும் இயங்கி வந்தது.

# கடவுளும், சாத்தானும்!

அறிவியல் தொடர் 6

○ ராஜ்சிவா

டார்க்' ('Dark') என்னும் நெட்பிளிக்ஸ் தொடரின் மூன்றாவது பகுதி வெளிவந்த நிலையில், பலர் அதுபற்றிப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அது பலருக்குப் பிடித்தும், சிலருக்கும் பிடிக்காமலும் இருக்கிறது. நான் இப்போது அதற்குள் போகவிரும்பவில்லை. ஆனால் டார்க் தொடர், காலப்பயணம் சார்ந்த அறிவியலைச் சொல்வதால் அதை இந்த இடத்தில் பேசுபொருளாக்குகிறேன். டார்க் தொடரின் ஆரம்பத்தில் இளம் காதலர்கள் இருவர் இப்படிப் பேசிக்கொள்கிறார்கள்.

அவள்: "இந்த இடமும், இப்போதிருக்கும் சூழ்நிலையும் ஏற்கனவே எனக்கு அறிமுகமானதாகத் தோன்றுகிறது. 'டேஜா வூ' (Deja vu) போல உணர்கிறேன்.

அவன்: "இந்த உலகமே ஒரு சிமுலேசன்தான். அதில் ஏற்படும் சிறிய தடுமாற்றமே டேஜா வூ".

அவள்: இல்லை, அடுத்த பக்கத்திலிருந்து தற்செயலாகக் கசிந்துவந்த தகவலாக அது ஏன் இருக்கக்கூடாது?"

இவர்களின் உரையாடல் உங்களுக்குப் புரிகிறதா? 'டேஜா வூ' (Deja vu) என்றால் என்னவென்று தெரியாத பலர் இருப்பீர்கள். இந்த 'டேஜா வூ' உங்களுக்கும் பல சமயங்களில் நடந்திருக்கும். நீங்கள் முன்னர் எப்போதும் சென்றிருக்காத ஒரு இடத்துக்குப் போகும்போது, 'அட! இந்த இடத்தை நான் எப்போதே, எங்கேயோ பார்த்திருக்கிறேனே!" என்று உங்களுக்குத் தோன்றும். ஆனால், நிச்சயமாக அந்த இடத்துக்கு நீங்கள் வந்தேயிருக்க மாட்டீர்கள். உங்கள் மனமோ அதை அடித்துச் சொல்லும், 'இல்லை, இந்த இடம் எனக்கு ஏதோவொரு வகையில் பழக்கமானது' என்று. இடம் மாத்திரமில்லை. முன்பின் அறிமுகமில்லாத சில நபர்களைப் பார்க்கும்போதோ, ஏதோவொரு காலச் சூழ்நிலையின் போதோ, 'இவரை எங்கோ கண்டதுபோல இருக்கே!' என்றோ, 'இதேபோன்ற மழைக்காலத்தில் இருந்திருக்கிறேன்' என்றோ தோன்றும். இப்படித் தோன்றுவதையே, 'டேஜா வூ' என்கிறார்கள்.





சிலருக்கு தொடர்ச்சியான சம்பவங்கள் சற்று அதிக நேரத்துக்கும் நடைபெறலாம். இப்படியான 'டேஜா வூ' எப்படி வருகின்றன என்பதற்கு மனவியலாளர்கள் பலவிதமான காரணங்களைக் கூறுகிறார்கள். இந்தக் காதலன் சொல்கிறான், நாம் வாழும் வாழ்க்கை ஒரு எழுதப்பட்ட கணினி நிரல் போன்றது. அதில் ஏற்படும் சிறிய குழப்பம்தான் இந்த 'டேஜா வூ' என்கிறான். ஆனால், அந்தப் பெண் சொல்வதுதான் இங்கு முக்கியமானது. எமது அண்டத்தின் எதிர்ப் பரிமாணத்திலிருந்து தற்செயலாக கசிந்துவந்த தகவலாக அது ஏன் இருக்கக்கூடாது என்கிறாள். இங்கு அவள் சொன்ன எதிர்ப் பக்கம் எது? அந்த எதிர்ப் பரிமாணம் எங்கிருக்கிறது? இவற்றுக்கான விடையை நாம் அறிந்துகொண்டால், 'கடவுளும், சாத்தானும்' என்னும் இந்தத் தொடரின் மூன்றாவது முடிச்சு அவிழ்ந்துவிடும்.

பேரண்டம் (Universe) ஒரு வெளியாக விரிந்திருக்கிறது. கிட்டத்தட்ட மிகமிக மெல்லிய இறப்பராக இழுத்து விரிக்கக்கூடிய மிகப்பெரிய பாய் போன்று அது விரிந்திருக்கிறது. தட்டையாக இருக்கும் பாய் ஒன்றுக்கு உயரம் கிடையாது. பேரண்டமும் எல்லையில்லாப் பெருவெளியாகத் தட்டையாக விரிந்திருக்கிறது. இந்தப் பேரண்டப் பாயின் மேலே, பூமி போன்ற கோள்களும், சூரியன் போன்ற உடுக்களும், பால்வெளி போன்ற உடுத்திரள்களும் உட்கார்ந்துகொண்டிருக்கின்றன. நீங்கள் ஒரு சோபாவில் உட்காரும்போது, உங்கள் எடையின் காரணமாக அந்த சோபா சற்றுக் கீழ்நோக்கி அமிழும் அல்லவா? அதுபோல, பேரண்டப் பாயில் இவைகள் உட்காரும்போது, அந்தப் பாயும் அவற்றின் எடைகளுக்கேற்பக் கீழ்நோக்கி அமிழ்கின்றது. ஒரு உடுவின் (நட்சத்திரத்தின்) எடை அதிகமானதால் அது அதிகமான ஆழத்துக்கும், கோள்களின் ஆழம் சற்றுக் குறைந்தும் காணப்படும்.

கருந்துளையொன்று ஏற்படுத்தும் ஆழமோ மிகமிக அதிகமாக இருக்கும். இவை அனைத்தையும் உள்ளடக்கிய உடுத்திரள்கள் (கலக்ஸி) மிக அதிகமான ஆழத்தை உருவாக்கியிருக்கும். இந்தப் பொருள்களின் எடைகளுக்கேற்ப அவை இந்த அண்டவெளிப் பாயில் மேலே, கீழே என்று காணப்படுகின்றன. அதனாலேயே, பால்வெளி உடுத்திரள் தட்டையாக இருந்தாலும், அதற்கென ஒரு உயரம் கிடைத்து, முப்பரிமாணமாகக் காணப்படுகிறது. பேரண்டப் பாயானது, கண்களுக்கே தெரியாத நுண்தன்மை கொண்டதால், எம்மால் அதைக் காணமுடிவதில்லை. அதனால், அதில் உட்கார்ந்திருக்கும் பொருட்களெல்லாம் அந்தரத்தில் தொங்குவதுபோலக் காட்சி தருகின்றன. ஒன்றை ஞாபகத்தில் கொள்ளுங்கள். கதைகளில் வருவதுபோல கோள்களோ, உடுக்களோ அந்தரத்தில் தொங்குவதில்லை. அவை அனைத்தும் தமக்கென ஒரு இடத்தில், ஒரு பாயில் உட்கார்ந்தபடியே இருக்கின்றன.

இப்போது உங்கள் மனதில் தோன்ற வேண்டிய கேள்வி, "இவ்வளவு பிரமாண்டமான எடைகளைத் தாங்கக்கூடிய அண்டவெளி எவ்வளவு பலம் கொண்டதாக இருக்க வேண்டும்? அப்படியெனில், அதன் தடிப்பு மிகவும் பெரிதானதாக இருக்கவேண்டும்?" என்பதுதான். உங்கள் கேள்வி சரியானதுதான். அண்டவெளி, நம்பவே முடியாதளவு திடமானதுதான். எந்த எடையானாலும் தாங்கக்கூடியதுதான்.

ஆனால், நீங்கள் நினைப்பதுபோல, அது அதிகளவு தடிப்புக் கொண்டதல்ல. மிகமிக மெல்லியது. சொல்லப்போனால், ஒரு மென்சவ்வுபோன்றது. இவ்வளவு மெல்லிய வெளியால், அதிக எடைகளைக் கிழியாமல் எப்படித் தாங்கிக்கொள்ள முடிகிறது? இதற்குப் பதில், 'தெரியாது'. சத்தியமாக எவருக்கும் தெரியாது. அறிவியலால் கண்டுபிடிக்க முடியாத பலவிடயங்களில் இதுவும் ஒன்று. ஆனால், ஐன்ஸ்டைன் சொன்ன கருத்து ஆச்சரியமானது. வெளியைத் துளைபோல் பிரிக்க முடியும் என்றார். அதிக ஆற்றலைக் கொடுத்து, அண்டவெளியில் ஒரு சிறுதுளையை உருவாக்க முடியும் என்றார். அந்தத் துளையினூடாக, அண்டவெளியின் வேறொரு காலம்/இடத்துக்குச் செல்லலாம் என்றார். அந்த துளையையே 'புழுத்துளை' (Wormhole) என்றார். இந்த வோர்ம்ஹோலைப் பற்றி இப்போது பேசிக்கொண்டிருக்க முடியாது. அதை வேறொரு சமயத்தில் பார்க்கலாம். அண்டவெளி, மெல்லிய பாய் போன்று விரிந்திருக்கிறது. அதன் மேல்பக்கத்தில் கோள்கள், உடுக்கள் இருக்கின்றன என்பதெல்லாம் சரிதான். அந்த அண்டவெளியின் மறுபக்கம், அதாவது கீழ்ப்பக்கம் என்ன இருக்கிறது? இந்தக் கேள்வி எப்போதாவது உங்களுக்குத் தோன்றியிருக்கிறதா? அண்டவெளியின் ஒரு பக்கம் நாமிருந்தால், அதன் எதிர்ப்பக்கம் இதேபோன்ற இன்னுமொரு அண்டம் ஏன் இருக்கக்கூடாது? இங்கிருப்பது போலவே அந்தப்பக்கமும் ஏன் கோள்களும், உடுக்களும் இருக்கக்கூடாது? இங்கு பூமியில் மனிதர்கள் வாழ்வதுபோல, அங்கும் ஒரு பூமியும், மனிதர்களும் ஏன் வாழக்கூடாது? இங்கு இதை எழுதிக்கொண்டிருக்கும் ராஜ்சிவாவும், படிக்கும் நீங்களும் இருந்தால், அங்கும் இதேபோல எழுதிக்கொண்டிருக்கும் ராஜ்சிவாவும், படிக்கும் நீங்களும் ஏன் இருக்கக்கூடாது? எல்லாமே எதிர்ப்பிம்பமாக. கண்ணாடியில் நாம் பார்க்கும் பிம்பம் நிஜமானதல்ல என்று நமக்குத் தெரியும்.




ஆனால், அப்படியொரு கண்ணாடி விம்பம் நிஜமான உருக்கொண்டு அங்கு ஏன் இருக்கக்கூடாது? நிச்சயம் இருக்கும் என்கிறார்கள் இயற்பியல் அறிஞர்களில் சிலர். போல் டிராக்கின் சமன்பாடு கொடுத்த மூன்றாவது விள்க்கம் இங்குதான் வருகிறது.

போல் டிராக்கின் சமன்பாட்டின் மூலமாக அறியப்பட்ட எதிர்த்துகள்கள், பேரண்டத்தைவிட்டு எப்படி மறைந்து போயின என்பதற்காகக் கொடுக்கப்படும் மூன்றாவது விளக்கம் இதுதான். பிக்பாங் சமயத்தில் உருவான நேர்த்துகள்களும், எதிர்த்துகளும் தங்களைத் தாங்களே அழித்துக் கொண்டிருந்தபோது ஏற்பட்ட பெருவெடிப்பினால், அழியாமல் எஞ்சிய நேர்த்த்துகள்கள் இந்தப்பக்கமும், எதிர்த்துகள்கள் எதிர்த்திசை நோக்கியும் வீசப்பட்டன. இந்தப்பக்கம் இருந்த நேர்த்துகள்களினால் படிப்படியாக ஒரு அண்டம் உருவாக்கப்பட்டது போல, எதிர்ப்பக்கமும் ஒரு எதிர் அண்டம் (anti universe) படிப்படியாக உருவானது. நேர்த்துகள்களால் எவற்றையெல்லாம் உருவாக்க முடிந்ததோ, அவையெல்லாம் எதிர்த்துகள்களாலும் உருவாக்கப்பட்டன. இர்ண்டு பக்கத் துகள்களுக்குமான வித்தியாசம், ஏற்றம் (charge) மட்டுமே! ஏற்றம் ஒரு பொருளின் தன்மையையோ, இருப்பையோ மாற்றுவதில்லை. அதனால், நாம் வாழும் பேரண்டத்தின் அச்சு அசலான எதிர் அண்டத்தையும் உருவாக்கியிருந்தன எதிர்த்துகள்கள். கடவுளும், சாத்தானும் போல.

இங்கு இருக்கும் அனைத்தும் அங்கும் இருக்கும். ஆனால் எதிரெதுவாக. எதிர் ராஜ்சிவாவும், எதிர் திரிஷாவும், எதிர் பேஸ்புக்கும், எதிர் நீங்களும் அங்குமிருப்பீர்கள். அங்கிருப்பது சரிதான், ஆனால், அங்கு எங்கு இருப்பார்கள்? இங்கிருந்து எவ்வளவு தூரத்தில் இருப்பார்கள்?அண்டத்தையும் எதிர் அண்டத்தையும் பிரிப்பது ஒரு மிகமெல்லிய வெளியென்று சொன்னேனல்லவா? அப்படியென்றால், இந்தப்பக்கம் இருப்பவர்களுக்கு மிகமிக அருகிலேயே, எதிர் அண்டத்தினரும் இருப்பார்கள். உங்கள் வீட்டுக்கும், பக்கத்து வீட்டுக்கும் கூட, ஒரு தடித்த மதில்சுவர் இருக்கும். ஆனால், இங்கு அதுகூட இல்லை. மெல்லிய காகிதம் போன்ற இடைவெளிதான் உண்டு. என்ன, அவர்கள் அருகே இருப்பதை எம்மால் காண முடிவதில்லை, அவ்வளவுதான்.

இதைப் படித்துக்கொண்டிருக்கும்போது, உங்களின் காலருகே பயங்கரமான எதிர் முதலையொன்று வாயைத் திறந்தபடி ஓடிக்கொண்டிருக்கலாம். ஒரு மிகப்பெரிய உலகமே உங்களுக்கு அருகாமையில் இயங்கிக் கொண்டிருக்கலாம். இங்கு நடப்பது போலவே அனைத்தும் நடக்கும் எதிர்ப்பக்கத்தில் இருந்து நழுவிவரும் தகவல்கள்தான், டேஜா வூக்கள் என்கிறாள் டார்க் தொடரின் அந்தக் காதலி. "என்ன இது, அறிவியல் சொல்லவந்து, ஒரு கப்ஸாக் கதையை அளந்துகொண்டிருக்கிறார் இவர்" என்று நிச்சயம் நீங்கள் எண்ணுவீர்கள். ஆனால், இந்தக் கதைகளுக்கெல்லாம், கோட்பாட்டு ரீதியான ஆதாரங்கள் உள்ளன. அவற்றுக்கான விளக்கங்களையும் கொடுக்கிறார்கள் இயற்பியல் அறிஞர்கள். எதிர்த்திசை நோக்கி எதிர்த்துகள்கள் எப்படிச் சென்றன? ஏன் சென்றன? என்னும் விளக்கம் தெரிந்தால், நீங்களும் சமாதானமடைவீர்கள். துகள்கள் எதிரெதிராகப் பிரிந்து சென்றதன் விளக்கமே, ஸ்டீபன் ஹக்கிங்கின் கருந்துளைக் கதிர்வீச்சுடனும் ஒத்துப் போகிறது.

*(தொடரும்)*



சந்திப்பு: ஏ.ஏ.

**விவசாய அமைச்சராகப் பதவியேற்ற பின்னர் தனது முதலாவது களப்பயணமாக யாழ்ப்பாணத்துக்கு இந்த வாரம் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே வருகை தந்திருந்தார். அவர் காங்கேசன்துறை 'தல்செவன' விடுதியில் வைத்து, உதயன்– சஞ்சீவிக்கு தமிழில் வழங்கிய பிரத்தியேக நேர்காணல் இது.**

# தமிழ்மக்கள் இப்போது கோத்தாபயவையே ஆதரிக்கின்றனர்!

## - மஹிந்தானந்த அளுத்கமகே

**கே**ள்வி: **சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் எவரும் தமிழ் பேசமாட்டார்கள். ஆனால் நீங்கள் எப்படி சரளமாகத் தமிழ் பேசுகின்றீர்கள்?**

**ப:** எனது தேர்தல் மாவட்டம் கண்டி. நாவலப்பிட்டி தேர்தல் தொகுதி என்னுடையது. அந்தத் தொகுதியில் 40 சதவீதமான தமிழ் மக்கள் இருக்கின்றார்கள்.

முன்னைய காலங்களில் தேர்தலில் தமிழ் மக்கள் எனக்கு வாக்களிக்கமாட்டார்கள். அவர்களின் வாக்கு இல்லாமல் வெற்றியைப் பெறவும் முடியாது. எப்படியாவது தமிழ் படிக்கவேண்டும் என்று நினைத்தேன். கஷ்டப்பட்டு தமிழ் படித்தேன்.

தமிழ் அமைச்சர்கள் தமிழ் மக்களுக்கு வேலை செய்வதில்லை. நாங்கள் சிங்கள அமைச்சர்கள், தமிழ் மக்களுக்கு வேலை செய்வோம். ஆனால் அவர்கள் (தமிழ் அமைச்சர்கள்) வாக்குகளைப் பெற்றுக் கொள்வார்கள். வேலை செய்வதில்லை. தமிழ் மக்களுக்குச் சேவை செய்யவேண்டும். அதற்காக தமிழ் படித்தேன். இங்கு மட்டுமல்ல கண்டியிலும் தமிழ் மக்களுக்கே எனது அபிவிருத்தி வேலைகளில் முன்னுரிமை கொடுக்கின்றேன்.

### சொன்னதைச் செய்பவன்

**கே: வடக்குக்கான உங்கள் பயணத்தின்போது விவசாயத்துறையின் முக்கிய பிரச்சினையாக நீங்கள் இனம் கண்டு கொண்டது என்ன?**

**ப:** பல பிரச்சினைகள் எனது கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டன. கொழும்பிலுள்ள எனது அமைச்சின் சகல அதிகாரிகளையும் அழைத்துக் கொண்டுதான் நான் இங்கு வந்தேன். விவசாயிகளின் பிரச்சினைகளை நான் நேரடியாகக் கேட்டறிந்து கொண்டேன்.

கடந்த காலங்களில் விவசாய உற்பத்திப் பொருள்கள் அனைத்தும் இங்கேயே, இந்த மண்ணிலேயே உற்பத்தி செய்யப்பட்டன. இப்போது வேறிடங்களிலிருந்து விவசாய உற்பத்திப் பொருள்கள் இங்கு இறக்குமதி செய்யப்படுகின்றன. கடந்த காலத்தைப் போன்று விவசாய உற்பத்திப் பொருள்களை மீண்டும் இங்கேயே விளைவிக்க நடவடிக்கை எடுக்கவுள்ளோம்.

வடக்கில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் விவசாயத்துக்குத், தேவையான எந்த வசதிகளும் இல்லை. நெற்களஞ்சியம், உரக் களஞ்சியம், விவசாய மத்திய நிலையம் என்பவை இங்கு இல்லை. இவற்றை உடனடியாக ஆரம்பிக்குமாறு அதிகாரிகளுக்கு பணித்துள்ளேன். அதற்குரிய பணம் வழங்கப்படும். எனவே தாமதம் இல்லாமல் பணிகளைத் தொடங்கவேண்டியது அதிகாரிகளின் கடமை.

உருளைக்கிழங்கு, மிளகாய், வெங்காயம் என்பவை இங்கேயே உற்பத்தி செய்யப்படவேண்டும். எதிர்வரும் மூன்று ஆண்டுகளில் வெளிநாடுகளிலிருந்து இவற்றை இறக்குமதி செய்வதற்குத் தடை விதிக்கப்படும். இங்கு உற்பத்தி செய்யப்படும் விவசாய உற்பத்திப் பொருள்களுக்கு நாங்கள் நியாய விலை கொடுப்போம். நியாய விலையில் நாங்களே கொள்வனவு செய்வோம்.

நான் சொல்வதைச் செய்பவன். இந்த மக்களுக்கு உறுதியளிக்கப்பட்ட வேலைகள் அனைத்தும் செய்யப்பட்டதா என்பதை, அதன் முன்னேற்றத்தை மூன்று மாதங்களின் பின்னர் வந்து நேரடியாகப் பார்வையிடுவேன். எனது கண்காணிப்புத் தொடர்ச்சியாக இருக்கும்.

### முன்னாள் போராளிகளுக்கு தொழில் வாய்ப்பு

**கே: வடக்கிலுள்ள விதவைகள் மற்றும் முன்னாள் போராளிகளுக்கான தொழில் வாய்ப்புக்கள் வழங்கப்படவுள்ளனவா?**

**ப:** எனது அமைச்சு ஊடாகவும் இதனை முன்னெடுக்கவுள்ளேன். போரால் விதவைகள் ஆக்கப்பட்டவர்கள் பலர் இங்குள்ளனர். போரால் தங்கள் அவயவங்களை இழந்த விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர்கள் இருக்கின்றனர். அவர்களுக்காக பல்வேறு திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

சிங்கள, தமிழ், முஸ்லிம் அடையாளத்தைக் குறிக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள 'சித்தமு மகளிர் குழு' ஊடாக இலகு கடன்கள் வழங்கப்படும். வாழ்வாதார உதவிகள் வழங்கப்படும். அவர்களையும் வாழ்க்கையில் நல்ல நிலைக்கு கொண்டு வருவதற்குரிய நடவடிக்கைகளை நிச்சயம் மேற்கொள்வேன்.

### தமிழ் மக்களைப் புறக்கணிக்கவில்லை

**கே: அரச வேலை வாய்ப்புக்களில் தமிழ் மக்கள் புறக்கணிக்கப்படுகின்றார்களே?**

**ப:** இல்லை. அவ்வாறில்லை. இங்கு ஆயிரத்து 200 அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன. அந்த வெற்றிடங்களை உடனடியாக நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கச் சொல்லியுள்ளேன். அந்த வெற்றிடங்களுக்கு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள்தான் நியமிக்கப்படுவார்கள். வெளியிடங்களிலிருந்து நாங்கள் எவரையும் அழைத்து வரமாட்டோம்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவால் அண்மையில் வழங்கப்பட்ட பட்டதாரிகள் நியமனத்தில் வடக்கு கிழக்கைச் சேர்ந்த 15 ஆயிரம் பேர் உள்வாங்கப்பட்டுள்ளனர். குறைந்த கல்வித்தகைமை கொண்டிருக்கும் ஒரு லட்சம் பேருக்கு வேலை வழங்கும் திட்டத்தில் வடக்கு கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த 7 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்புக்கள் வழங்கப்படவுள்ளன.

**கே: ஒரு லட்சம் வேலை வாய்ப்புத் திட்டத்தில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளனவே?**

**ப:** இல்லை. நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஊடாக அவை வழங்கப்படும். ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினரும் 600 பேருக்கு நியமனங்களை வழங்க முடியும். வடக்கு கிழக்கில் எங்களுக்கு 11 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் ஒவ்வொருவர் ஊடாகவும் 600 பேருக்குரிய நியமனங்கள் வழங்கப்படும்.

**கே: ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் கோத்தாபய ராஜபக்சவை ஆதரிக்கவில்லை. தமிழ் மக்களின் மனங்களை அவரால் வெல்ல முடியவில்லை என்பதை ஏற்றுக் கொள்கின்றீர்களா?**

**ப:** தமிழ் மக்கள் ஜனாதிபதித் தேர்தலில் கோத்தாபயவுக்கு வாக்களிக்கவில்லைத்தான். ஆனாலும் இப்போது நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் கோத்தாபயவை ஆதரித்துள்ளார்கள். நாடாளுமன்றத் தேர்தலில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வடக்கு கிழக்கில் 10 ஆசனங்கள்தான் கிடைத்தன. எங்களுக்கு 11 ஆசனங்கள் கிடைத்தன. கூட்டமைப்புக்கு பலத்த சரிவு ஏற்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மீது, எங்கள் அரசு மீது வடக்கு கிழக்கு மக்கள் நம்பிக்கை வைத்து வாக்களித்துள்ளார்கள் . அவர்களது அந்த நம்பிக்கை வீண் போகக் கூடாது. அந்த நம்பிக்கையைக் காப்பாற்றுவதற்காகத்தான் நாங்கள் இங்கு வந்து வேலை செய்கின்றோம்.

ஜனாதிபதித் தேர்தலின் பின்னரான 8 மாதங்களில் ஜனாதிபதி கோத்தாபயவை தமிழ் மக்கள் நம்பியிருக்கின்றார்கள். அதனால்தான் வாக்களித்திருக்கின்றார்கள். புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள், கூட்டமைப்பு என்பனவற்றால் தமிழ் மக்களுக்கு இனியும் பொய் சொல்ல முடியாது.

### சிவாஜியை நிறுத்தச் சொல்லுங்கள்!

**கே: தியாக தீபம் திலீபனின் நினைவேந்தலுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. திலீபனை நினைவுகூர்ந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் கைதுசெய்யப்பட்டுள்ளார். இவ்வாறான தடைகள் ஏன்?**

**ப:** இவ்வாறான நினைவேந்தல் கடைப்பிடிப்பதை சிவாஜிலிங்கத்தை நிறுத்தச் சொல்லுங்கள். வடக்கு கிழக்கு மக்களுக்கு உணவுக்குப் பணம் இல்லை. அந்த மக்களுக்கு எவ்வளவோ பிரச்சினைகள் இருக்கின்றன. இந்த நிலைமையில் திலீபனின் நினைவேந்தலை கடைப்பிடித்து என்ன செய்ய முடியும்?

இவை எல்லாவற்றையும் மறந்து நாங்கள் ஒன்றாக வேலை செய்வோம்.

போரால் இரண்டு பக்கங்களிலும் கடுமையான பாதிப்புக்கள் உண்டு. இரு தரப்பிலும் இழப்புக்கள். நாங்கள் இந்தக் கசப்புக்களை எல்லாம் மறந்து விட்டு அபிவிருத்தியைச் செய்வோம். யாழ்ப்பாண மக்களுக்குத் தேவையான அபிவிருத்தியை மேற்கொள்வதற்கு நாங்கள் தயார்.

# வித்துவான் பதில்கள்!

**ஐம்பதிலும் ஆசை வரும் என்கிறார்கள். உண்மையா?**

**சு.சுதாகரன், இணுவில்**

எழுபத்தைந்து வயதிலும் கூட ஜெமினி புது 'செட் அப்' செய்தவர். நீங்கள் என்னடாவென்றால் ஐம்பது பற்றி அலட்டுகிறீர்கள்.




**அடிமை என்றால் என்ன?**

**செ.மதுமிரா, கொடிகாமம்.**

ஈழத் தமிழனாகப் பிறந்துமா அது புரியவில்லை.

**வித்துவானே!**
**தாங்கள் மட்டுமே நேர்மையானவர்கள் என்று ஒருவரை ஒருவர் குற்றம் சொல் லும் தமிழ் அரசியல்வாதிகளைப் பற்றிக் கூறுங்களேன்....**

**எஸ்.ரி.சிவனேத், மறவன்புலோ.**

ஒன்று, தாங்கள் நேர்மையானவர்கள் என்று அவர்கள் தங்களுக்குத் தாங்களே கூற வேண்டிய நெருக்கடியில் இருக்கிறார்கள். ஏனெனில் அவர்களே கூறாவிட்டால் எவரும் அதை நினைத்தே பார்க்கமாட்டார்கள். மற்றையது, எதிரியை நோக்கி சுட்டுவிரலை நீட்டும்போது ஏனைய விரல்கள் எல்லாம் தங்களையே சுட்டுகின்றன என்பதையும் அவர்கள் அறியவில்லை.

**காதலில் தோல்வியுற்ற இளைஞர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள் வித்து...?**

**வே.தினேஷ், நவிண்டில்**

பிழைத்துப் போக வாய்ப்புக் கிடைத்தவர்கள். (காதல்) பிழைத்ததால் (சீதனம் வாங்கி) பிழைக்க வாய்ப்புக் கிட்டியவர்கள்.

**கட்சி விட்டு கட்சி தாவும் அரசியல்வாதிகள் பற்றி உங்கள் கருத்து என்னவோ?**

**வே.சிவகுகன், சண்டிலிப்பாய்**

கொப்பு விட்டு கொப்பு பாயும் மந்திகள்....



**எனது குண்டு இடை மெலிந்து மெல்லிடையாக ஒரு வழி சொல்லுங்கள்.**

**எஸ்.சுபா, மல்லாகம்.**

பூசணிக்காய் இளைத்தாலும் சுரைக்காய் ஆகலாமே தவிர முருங்கைக்காய் ஆக முடியாது.



நீங்களும் கேள்விகள் கேட்கலாம்...
எழுதி அனுப்புங்கள்

**வித்துவான் பதில்கள்**
உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555



# தக்காளி முட்டை சாதம்

**தேவையான பொருட்கள்**

உதிரியாக வடித்த பாசுமதி அரிசி- 1 கப்
தக்காளி - 1
தக்காளி சோஸ் - 2 கரண்டி
வெங்காயத்தாள் - சிறிதளவு
முட்டை - 3
பூண்டு - 10 பல்
மிளகு தூள் - 1/2 கரண்டி
சோயா சோஸ் - 2 கரண்டி
வினிகர்- 2 கரண்டி
கொத்தமல்லி இலை - சிறிதளவு
உப்பு -தேவையான அளவு
எண்ணெய் - தேவையான அளவு

**செய்முறை**

முட்டையை வேக வைத்து துண்டுகளாக வெட்டிக்கொள்ளவும். தக்காளி, வெங்காயத்தாள், பூண்டு, கொத்தமல்லியை பொடியாக நறுக்கிக் கொள்ளவும். ஒரு சட்டியில் எண்ணெய் ஊற்றிச் சுடவைத்து சூடானதும் பூண்டு சேர்த்து பொன்னிறமாக வதக்க வேண்டும். பின்னர் வெங்காயத்தாள் மற்றும் தக்காளி சேர்த்து நன்கு வதக்க வேண்டும். பின் வேக வைத்த சாதம், உப்பு மற்றும் மிளகு தூள் சேர்த்து நன்கு கிளற வேண்டும். அதில் தக்காளி சோஸ், உப்பு, சோயா சோஸ், வினிகர் மற்றும் மிளகு தூள் போட்டு கிளறி விட வேண்டும். பின் முட்டைத் துண்டுகளைச் சேர்த்து பிரட்டி எடுக்க வேண்டும். பின் அந்த சாதத்தை நன்றாகக் கிளறி கொத்தமல்லி இலை தூவி இறக்க வேண்டும். இப்போது சுவையான தக்காளி முட்டை சாதம் தயார்.

**மகளிர் பகுதி**
உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
0773165555

மகளிருக்கான உங்கள் குறிப்புக்கள் வரவேற்கப்படுகின்றன.
எழுதி அனுப்புங்கள்.

# சருமப் பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு தரும் எலுமிச்சை



**தேவையான பொருள்கள்:**

எலுமிச்சை சாறு - 1 டேபிள் ஸ்பூன்
தேன் - 1 டேபிள் ஸ்பூன்
ஒரு முட்டையின் வெள்ளைக்கரு

**செய்முறை :**

ஒரு பௌலில் முட்டையின் வெள்ளைக் கருவை தனியாக எடுத்து, அதில் எலுமிச்சைச் சாறு மற்றும் தேன் சேர்த்து நன்கு கலந்துகொள்ள வேண்டும். பின்னர் அந்தக் கலவையை முகம் மற்றும் கழுத்துப் பகுதியில் தடவி, 20 நிமிடங்கள் நன்கு ஊற வைக்க வேண்டும். பின்பு நீரால் முகத்தைக் கழுவ வேண்டும். இப்படி வாரத்திற்கு மூன்று அல்லது நான்கு தடவைகள் செய்து வந்தால், சருமத்தில் உள்ள கருமை நீங்கி, சருமம் பிரகாசமாக இருக்கும். எலுமிச்சையை பாதியாக வெட்டி, அதன் சாறு எடுத்து, அதில் சிறிது தண்ணீர் சேர்த்துக் கலந்து, பின் அதனை முகம் மற்றும் கழுத்தில் தடவி 10 நிமிடம் ஊற வைத்து, பின் குளிர்ந்த நீரில் கழுவ வேண்டும். இப்படி தினமும் செய்து வந்தால், சருமத்தில் உள்ள கருமை நீங்கிவிடும்.


எலுமிச்சைச் சாற்றில் தயிர் சிறிது சேர்த்து கலந்து, முகத்தில் தடவி உலர வைத்து கழுவ வேண்டும். இப்படி வாரம் ஒருமுறை செய்து வந்தால் நல்ல மாற்றத்தைக் காணலாம். ஒரு டீஸ்பூன் எலுமிச்சை சாற்றுடன், 1 ஸ்பூன் தேன் சேர்த்து கலந்து, முகத்தில் தடவி உலர வைத்து கழுவ வேண்டும். இப்படித் தினமும் செய்து வந்தால் நல்ல மாற்றத்தைக் காண முடியும்.

ஒலிவ் ஒயிலுடன் எலுமிச்சம் சாற்றைச் சேர்த்து கலந்து, முகத்திற்கு மாஸ்க் போட்டால், சருமத்தின் நிறம் அதிகரிப்பதோடு, சருமத்தில் உள்ள தேவையற்ற தழும்புகளும் மறைந்துவிடும்.

# அறிந்தும் அறியாமலும்

O சுழியன்





## முடியாத யானைச்சண்டை!

இலங்கையில் பழமையான அரசியல் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப்பதவியை தனது மருமகனான ருவான் விஜேவர்தனவுக்கு வழங்குவதற்கான காய்நகர்த்தல்களை மேற்கொண்டுள்ள ரணில் விக்கிரமசிங்க, பிரதித் தலைவர் பதவியைக் கையளித்து அதற்கான பிள்ளையார் சுழியையும் போட்டுள்ளார்.

2023 ஆம் ஆண்டு வரை தலைமைப்பதவியை தக்கவைத்துக்கொள்வதற்கு திட்டமிட்டிருந்த ரணில் விக்கிரமசிங்க, அதற்கேற்றவகையில் செயற்குழுவுக்கு தனது விசுவாசிகளையே பெரும்பாலும் உள்வாங்கியிருந்தார். அவர்களும் 'ரணில்' புராணம் பாடினர். ஆலவட்டம் ஏந்தினர். எனினும், பொதுத்தேர்தலில் ஏற்பட்ட வரலாற்றுத் தோல்வியானது ரணிலுக்கு பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியது. அவர் விரும்பாவிட்டால்கூட தலைமைப்பதவியை விட்டுக் கொடுத்தாக வேண்டும் என்ற இக்கட்டான சூழ்நிலையும் உருவானது.

இந்த நிலையில் ஐக்கிய தேசியக்கட்சியின் தலைமைப்பதவியைப் பலர் குறிவைத்தனர்.போட்டியும் உச்சம் தொட்டது. இந்நிலைமை நீடித்தால், அது மேலும் பல பிரச்சினைகளுக்கு வழிவகுக்கும், கட்சியின் அதிகாரம் மூன்றாம் தரப்பின் கைகளுக்கு சென்றுவிடும் என்பதால் தனது குள்ளநரி தந்திரத்தைப் பயன்படுத்தி 'தந்திரோபாயப் பின்வாங்கல்' மூலம் நெருக்கடிக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளார்.

அதாவது தனது ஏவல்படி நடக்கும் மருமகனான ருவான் விஜேவர்தனவுக்கு பிரதித் தலைவர் பதவியை வழங்கி, எதிர்வரும் ஜனவரியில் அவரைத் தலைவராக்குவதே ரணிலின் 'மெகா' திட்டம்.செயற்குழுவில் எவ்வித வாக்கெடுப்பும்இன்றி அவரை பிரதித் தலைவராக்க வேண்டும் என்பதும் ரணிலின் எதிர்ப்பார்ப்பாக இருந்தது. ஆனாலும் ரவி கருணாநாயக்கவும் 'உபதலைவர்' என்ற அடிப்படையில் பிரதித் தலைவர் பதவியைக்கோரியதால் இரகசிய வாக்கெடுப்பு நடத்தவேண்டிய நிலை ஏற்பட்டது. ரணிலின் திட்டம்படியே ருவான் வெற்றிபெற்றார்.

புதிய பிரதித் தலைவர் நியமனத்தோடு ஐ.தே.கவை ஆட்டிப்படைக்கும் பிரச்சினைகள் முடிவுக்குவரும் என்றே எதிர்ப்பார்க்கப்பட்டது. ஆனாலும் நெருக்கடியான கட்டத்திலும் ரணிலுக்கு ஆதரவாக இருந்த பலர் அவரை கைவிடுவதற்கு முடிவெடுத்துள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக வேண்டும் என்ற ஆசையை கருஜயசூரியவும் வெளியிட்டிருந்தார். ரணிலுக்கு கடிதம் மூலமும் தனது நிலைப்பாட்டை அறிவித்திருந்தார். ஆனாலும் இதற்கு ரணில் உடன்படுவதாகத் தெரியவில்லை. தனது மாமாவான கருவுக்கு தலைமைப்பதவி கிடைத்தால் தானும் கரைசேர்ந்துவிடலாம் என்ற எதிர்ப்பார்ப்பில் இருந்த நவீனுக்கு, ரணிலின் நகர்வுகள் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளன.

இதனால் சிறிகொத்தவில் 'தேசிய அமைப்பாளர்' அலுவலகத்தில் இருந்த தனது ஆவணங்களை எல்லாம் எடுத்துக்கொண்டு நவீன் வெளியேறிவிட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. தனது தம்பியான மயந்த திஸாநாயக்க ஐக்கிய மக்கள் சக்தியுடன் இருப்பதால், நவீனும் சஜித்துடன் சங்கமிக்கக்கூடும் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது. நவீன் போனால் பின்னாலேயே கருஜெயசூரியவும் ஐக்கிய மக்கள் சக்தியோடு சேர்ந்துவிடுவார் என்றே தெரிகின்றது.


## கறுப்பாடுகள் 10

மொட்டுக் கட்சியின் தேசியப்பட்டியல் ஊடாக நாடாளுமன்றம் வந்த சிலரும், 'வியத்மக' ஊடாக வந்த சிலரும் அரசாங்கத்துக்கு நெருக்கடி கொடுத்து வருகின்றனர். அத்தோடு மொட்டுக் கட்சியின் முக்கிய உறுப்பினர்களைக் கூட கணக்கெடுக்காமல் தம்மிஷ்டப்படி நடக்கின்றனராம்.

எல்லாம் கோத்தாபயவின் ஆதரவு தங்களுக்கு இருக்கும் ஆணவத்திலேயே அவர்கள் இப்படி ஆடுவதாகவும், அவர்களுக்கு வாய்ப்பு வழங்கியது தவறானது என்றும் சில ஆளுங்கட்சி உறுப்பினர்கள் தமக்கு நெருக்கமானவர்களிடம் தமது உள்ளக்குமுறல்களை வெளிப்படுத்தியுள்ளனராம்.

இது இவ்வாறிருக்க, திருத்தப்பட்ட 20 க்கு ஆதரவு வழங்கி 10 க்கும் மேற்பட்ட எதிரணி எம்.பிக்கள் தயார் நிலையில் இருப்பதாகவும், இதில் ஐவர் தமிழ் உறுப்பினர்கள் என்பதும் 'லேட்டஸ்ட்' தகவல்கள்.

## '20' இன் சூத்திரதாரி




நாட்டில் தற்போது திரும்பும் திசையெல்லாம் '20' பற்றியே பேச்சு. ஊடகங்களிலும் பிரதான இடத்தை அது ஆக்கிரமித்துக்கொண்டுள்ளது. 'மரணப்பொறி', 'சாவுமணி' என எதிரணிகள் '20' இற்கு பெயர்சூட்டும் விழாவும் நடத்திவருகின்றன.

அரசியலமைப்பின் '19' ஆவது திருத்தச்சட்டம் மூலம் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியிடமிருந்து பறிக்கப்பட்ட அதிகாரங்களை மீண்டும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியிடம் ஒப்படைப்பதே '20' இன் முதன்மை நோக்கம்.அது மட்டுமல்ல 'சர்வம் ஜனாதிபதி மயம்' என்ற நிலைமையும் இதன்மூலம் தோற்றுவிக்கப்படும்.

1978 ஆம் ஆண்டு ஜே.ஆர். ஆட்சியின்போது அறிமுகப்படுத்தப்பட்ட இலங்கையின் அரசமைப்பு இற்றைவரை 19 தடவைகள் திருத்தப் பட்டுள்ளன. தற்போது மற்றுமொரு தடவை திருத்தப்படவுள்ளதாலேயே அந்த யோசனை '20' என விளிக்கப்பட்டுள்ளது.

ஆளும் அரசாங்கத்திடம் மூன்றிலிரண்டு பெரும்பான்மைப்பலம் கைவசம் இருப்பதால் எவ்வித சிக்கலும் இன்றி '20' நிறைவேறும் என்றே பலரும் எதிர்பார்த்தனர். ஆனால் அதற்கு அரசாங்கத்துக்குள்ளேயே எதிர்ப்புகள் கிளம்பின. நேசக்கரம் நீட்டிய அமைப்புகள்கூட போர்க்கொடி தூக்கின. இதனால் 20 ஐ மீண்டும் திருத்தவேண்டிய நிலை அரசாங்கத்துக்கு ஏற்பட்டது.

அதேபோல் '20' ஆவது திருத்தச்சட்டமூலத்தை உருவாக்கியது யார்? அணி எது? என்ற வினாவுக்கு ஆளுங்கட்சியால் உரிய பதிலை வழங்கமுடியவில்லை. நீதி அமைச்சர் கூட தனக்குத் தெரியாது என கூறிவிட்டார். ஆனாலும் இது ஒரு கூட்டுப் பொறுப்பு, அரசாங்கத்தின் தயாரிப்பு எனக்கூறி சமாளிக்கப்பட்டது.ஆனாலும் எதிர்க்கட்சிகள் விட்டுவைக்கவில்லை.

'20' என்பது தந்தை இல்லாத பிள்ளையாகி விட்டது, '20' ஐ உருவாக்கியது யார், '20' என்ற குழந்தையின் தந்தை யார் என எதிர்க்கட்சிகள் சரமாரியாக கேள்விக்கணைகளைத் தொடுத்தன. இறுதியில் தற்போது ஜனாதிபதி 'நானே அதற்கு சூத்திரதாரி' எனப் பொறுப்பேற்றுள்ளார். ஆனால் உண்மையான பொறுப்பாளி யார் என்பது இன்னும் மர்மமாகவே இருக்கின்றது.

## தேர்தல் கனவு

மலையகத்திலுள்ள முக்கிய தொழிற்சங்கம் அது. தொலைபேசிக் கூட்டணியில் ஒட்டியிருந்தாலும் தனித்துவத்தை இழக்க மறுத்துவரும் கட்சியென்றுகூடக் கூறலாம்.

விரைவில் மாகாணசபைத் தேர்தல் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுவதால், தலைவரின் கையைக் காலைப்பிடித்தேனும் 'அட்மிஷன்' வாங்கிவிடவேண்டும் என்பதில் முக்கிய சில வர்த்தகர்கள் கங்கணம்கட்டி செயற்பட்டுவருகின்றனர். இதனால், தலைவரின் அல்லக்கைகளுக்குகூட அதிஉச்ச கவனிப்பு வழங்கப்படுவதாகத் தகவல்.

முன்கூட்டியே முகநூல்களில்கூட பிரசாரங்கள் ஆரம்பித்துவிட்டன. ஆனால் தலைவரின் ஆசி, அருள் கிடைக்குமா



என்பதே மில்லியன் டொலர் பெறுமதியான கேள்வியாகும். வாய்ப்பு மறுக்கப்படும்பட்சத்தில் அவர்கள் சுயேச்சையாக களமிறங்குவது பற்றியும் ஆராயப்பட்டுவருவதாக அரசல் புரசலாக கதை அடிபடுகின்றது.




# பார்வையாளரை ஏமாற்றாதீர்!



○ ஆரதி

நடிகர்கள் நல்ல சினிமாக்களைத் தரவேண்டும். பார்வையாளர்களை ஏமாற்றக்கூடாது. படத் தயாரிப்பாளர்களையும் விநியோகஸ்தர்களையும் நட்டமடைய வைக்காமல், இலாபந்தரக்கூடிய படங்களில் நடிக்க வேண்டும். இதைச் செய்தாலே போதும். இதற்கிடையில் எதற்காக அரசியலில் இறங்க வேண்டும்? அங்கேயும் வெற்றிக் கொடியைப் பறக்க விடுவதற்காக ஏன் ஆசைப்பட வேண்டும். சினிமா வில்தானே வேண்டிய அளவுக்குச் சம்பாதித்துக் கொள்ளலாம். புகழ் வேறு கிடைக்கிறது. வேண்டுமென்றால், விதவிதமான பாத்திரங்களை ஏற்று நடிக்கலாம். அல்லது அந்தப் பாத்திரங்களாக வாழ்ந்து பார்க்கலாம். இப்போது கூட பாதிக்கு மேற்பட்ட படங்களில் இந்த நடிகர்களில் பலரும் அரசியல் தலைவர்களாகத்தானே நடிக்கிறார்கள். மக்களுக்கு நல்லவற்றைச் செய்யும் நாயகர்களாகத் தங்களைக் காண்பித்துக் கொள்கிறார்கள். அல்லது கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற மாதிரி நடக்கும் நம்பர். 1 , பொலிஸ் அதிகாரிகளாக நடிக்கிறார்கள். இதற்கு மேல் என்ன வேண்டியிருக்கு?" என்று கேட்டிருக்கிறார் பிரபலமான நகைச்சுவை நடிகர் சார்ளி. சார்ளி திரைத்துறை யில் பட்டம் பெற்ற நடிகர். இந்தச் செய்தி சினிமா வட்டாரங்களில் சற்றுச் சர்ச்சையை உருவாக்கியுள்ளது. அதிலும் கொரோனாவினால் சினிமாத்துறை முடங்கிப்போயிருக்கும் இந்த நாட்களில் இந்தச் செய்தி இன்னொரு வைரஸாக சினிமா வட்டாரங்களைத் தாக்கியுள்ளது.

ஏற்கனவே "வைகைப்புயல்" வடிவேலு அரசியல் மேடைகளில் ஏறிச் சர்ச்சையைக் கிளப்பி தன்னுடைய சினிமா வாய்ப்புகளை இழந்ததைப்போல இந்தச் சர்ச்சை சார்ளியின் வாய்ப்புகளை எப்படி ஆக்கப்போகிறது என்பது கேள்வி.

ஆனால், சார்ளியின் இந்த வாதம் உண்மையானதே. நடிகர்களுடைய முதல் வேலை அவர்கள், தங்களுடய பார்வையாளர்களுக்கு நல்ல படங்களைக் கொடுப்பதாக இருக்க வேண்டும். அதன் மூலம் தரமான சினிமா ரசனையை உருவாக்குவதற்கு முயற்சிக்க வேண்டும். தமிழ்ச் சினிமாவை உலக சினிமாவின் தரத்துக்கு உயர்த்த வேண்டும். தமிழ் ஒரு மூத்தமொழி. செம்மொழி. தமிழ்ப்பண்பாடு சிறந்தது என்றெல்லாம் சொல்லிக் கொண்டிருப்பதில் பயனில்லை. அந்தப் பண்பாட்டின் செழுமைக்குப் புதிய கலைவடிங்களாக இருக்கும் சினிமா உள்ளிட்ட நவீன கலைகளைத் தரமாக வெளிப்படுத்த வேண்டும். அதற்காக உருவாக்கப்படுகின்ற அத்தனை படங்களும் படு சீரியஸான படங்களாக இருக்க வேண்டும் என்றில்லை.

சினிமா ஒரு பொழுதுபோக்குச் சாதனம். பல்வேறு தரப்பினருடைய ரசனைக்குமான மையக் கலை வடிவம் என்பதையும் நாம் கவனத்திற் கொள்ள வேண்டும். அது நகைச்சுவை, பக்திக்ரைம், இசை அல்லது பாடல்கள், வரலாறு மற்றும் புனைவுவரலாறு, விஞ்ஞானம், உளவியல் எனப் பலவகையான கலவை அல்லது அடிப்படைகளில் உருவாக்கப்பட வேண்டும் என்பதையும் நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். அதாவது பல்வேறு ரசனையாளர்களை திருப்திப்படுத்துவதாக அல்லது கவனத்திற் கொள்வதாக இருக்கவேண்டும். அண்மையில் வெளிவந்து மிகப் பெரிய வரவேற்பைப் பெற்ற பாகுபலி, புலிகேசி, தெய்வத்திருமகள், எந்திரன் போன்றவை இதற்கு உதாரணம். இதேவேளை தமிழில் வணிகச் சினிமா என்ற வாய்ப்பாட்டுச் சினிமா செல்வாக்குச் செலுத்திக் கொண்டிருந்தாலும், நல்ல சினிமாக்களும் தொடர்ந்து வந்து கொண்டேயிருந்தன. இதற்குப் பார்வையாளர்கள் மத்தியிலும் வரவேற்பிருந்தது.

முன்பு ஸ்ரீதர், பீம்சிங், ஜெயகாந்தன், மகேந்திரன், பாலுமகேந்திரா, கே. பாலசந்தர், பாரதிராஜா, துரை, பாஸில், பாக்யராஜ் என்ற வரிசையிலான இயக்குநர்கள் நல்ல படங்களைத் தந்தனர். பிறகு மணிரத்தினம் போன்றோர் வந்தார்கள். இது நடிகர்களையும் விட இயக்குநர்களின் படங்கள் என்று அவர்களுடைய அடையாளத்துக்காகப் படங்களைப் பார்க்கின்ற நிலையை உருவாக்கியது.

நடிகர்களுக்காகவும் படங்கள் உருவாக்கப்படுவது, பார்க்கப்படுவது என்பதைக் கடந்து இயக்குநர்களுக்காகவும் படங்களைப் பார்க்கும் நிலை இவர்களால் உருவாகியது. இதைப்போல வேறு இயக்குநர்களும் இருந்திருக்கின்றனர். அது வெவ்வேறு வகையைப் பொறுத்தது. உதாரணமாக பக்திப்படங்கள் என்றால் தேவர் பிலிம்ஸ், கோபாலகிருஸ்ணன் அல்லது இராம நாராயணன் போன்றவர்கள் இதற்கு அடையாளமாக இருந்தனர். கதைப்படங்கள், கலைப்படங்கள் என்ற வகையில் மகேந்திரன், பாலுமகேந்திரா, அருண்மொழி, ருத்ரய்யா, கோமல் சுவாமிநாதன் போன்றவர்கள் சற்று மாறுதலான அடையாளங்களாக இருந்தனர். வணிகத்துக்கும் வெகுஜன ரசனைக்கும் இடமளித்து மணிரத்தினம் தொடக்கம் பா. ரஞ்சித், சேரன், தங்கர் பச்சான் வரையில் வெற்றிபெற்ற இயக்குநர்கள் இருக்கிறார்கள்.

இந்த வரிசையில் வசந்தபாலன், கௌதம் மேனன், பிரகாஷ்ராஜ், கமல்ஹாசன், வெற்றிமாறன், ராம், மிஷ்கின், அமீர் சுல்தான், சசிகுமார், ராதா மோகன், சீனு ராமசாமி, பா.ரஞ்சித், லெனின் பாரதி, ரோஸன் ஆன்ரூஸ், கவுரி ஷிண்டே, சைலேந்திர சிங் எனப் புதியவர்கள் பலர் இப்பொழுது தொடர்ந்து இயங்கிக் கொண்டிருக்கின்றனர். இதில் சிலர் தமிழரல்லாத பிற மொழி இயக்குநர்களும் சேர்த்தி.






சினிமா ஒரு காட்சி ஊடகம், காண்பியக் கலை என்பதோடு பல ஆளுமைகளின் கூட்டுழைப்புக் கலைவடிவம் என்பதால் மொழி எல்லைகள் எதுவும் அதற்குக் கிடையாது. ஆற்றலுள்ள எவரையும் அது எங்கிருந்தும் உள்வாங்கக் கூடியது. தொழில்நுட்பக் கலைஞர்கள் தொடக்கம், இசை, மேக்கப், அரங்கமைப்பு, இயக்கம், நடிகர்கள் என எவரும் எங்கிருந்தும் வரலாம். அப்படி வரும்போது அது வெற்றிக்கான சாத்தியங்களை அதிகமாக்குகிறது. சினிமாவின் தொடக்க காலத்திலிருந்தே அதற்குள் இத்தகைய ஒரு விரிந்த பரப்பு காணப்படுகிறது. நடிகர்கள், நடிகைகள், பாடகர்கள், இசையமைப்பாளர்கள் என எல்லோரையும் வெவ்வேறு தளங்களிலிருந்தும் திசைகளிலிருந்தும் உட்கொண்டு வந்திருக்கிறது.

இன்றைய உலகில் இது இன்னும் நெகிழ்ந்து கொடுக்கிறது.

இப்பொழுது இந்தக் கொரோனா நாட்களில் ஒரு விசேட அம்சமாக ஐந்து முன்னணி இயக்குநர்கள் ஒரு திரைப்படத்தில் பங்கேற்கிறார்கள். முன்பு இந்த மாதிரி கண்ணில் தெரியும் கதைகள் என்ற படத்திற்கு ஐந்து பிரபலமான இசையமைப்பாளர்கள் இசை அமைத்திருந்தனர். அது மாதிரி ஒரு இயக்குநர்களின் கூட்டணி இந்தப் புதிய படத்தில் பங்கேற்கின்றனர். கௌதம் மேனன், வெங்கட் பிரபு, சிம்பு தேவன், பா. ரஞ்சித், ராஜேஸ் ஆகியோரே இந்த ஐந்து இயக்குநர்களும். இந்தப்படத்தின் படப்பிடிப்புகள் தற்போது நடந்துகொண்டிருக்கின்றன.

சினிமா பார்வையாளர்களுக்கு இப்படி ஒவ்வொரு காலகட்டத்திலும் ஒவ்வொரு புதிய படைப்புகள் கிடைத்துக்கொண்டே இருக்கின்றன. இதற்குள் தமிழ்ச்சினிமாவின் பயணம் நிகழ்ந்து கொண்டுமிருக்கிறது. இதற்குள் ஒரு நல்ல சினிமாவுக்கான ஆவலும் தீராத தாகமாகத் தொடர்கிறது. அது சர்வதேச சினிமாவை நோக்கியதாக. ஆனாலும் 100 ஆண்டுகளைத் தொடப்போகிற தமிழ் சினிமா இன்னும் சர்வதேச சினிமா என்ற அடையாளத்தைப் பெறவில்லை என்ற கவலையும் தொடர்ந்து கொண்டுதானிருக்கிறது.

---

(தொடர்ச்சி)

# கானல்...

" கால் இல்லாதவனுக்கு என்ர மகளைக் கட்டிக் குடுக்க வேண்டி வரப்போகுதே? சரி, இனி அந்த எண்ணத்தை விட்டிட்டு பிள்ளைக்கு நல்ல இடத்தில மாப்பிள்ளை பாப்பம்" என்று முடிவெடுத்தாள். விசாளினி முதலில் மறுத்த போதும், பின்னர் தாய் சொல்வதே நல்ல முடிவென்று கருதி தாயின் முடிவுக்குக் கட்டுப்பட்டாள். மது உயிருக்குப் போராடிக்கொண்டிருந்த போதோ அதற்குப் பின்னரோ கூட விசாளினி அவனைப் போய்ப் பார்க்கவேயில்லை.

மருத்துவமனையில் மதுவை மணியக்கா தான் ஒரு தாய் போல கவனித்தாள். மதுவும் சில மாதங்களில் பழைய நிலைக்கு மீண்டுவிட்டான். அவன் காலும் சரியாகி விட்டது.

✦ ✦ ✦

வீட்டுக்கு வந்த மது, முதல் வேலையாக அம்மாவின் படத்துக்கு முன்னால் நின்று கும்பிட்டான். "அம்மா, எனக்கு ஏலாம இருக்கேக்க நீங்கள் இல்லையே எண்டு எவ்வளவு ஏங்கினன். ஏனம்மா இப்பிடி தவிக்க விட்டுப் போட்டீங்கள்" என்று குலுங்கி அழுதான். அப்போது யதேச்சையாக அவன் தந்தையின் புகைப்படம் தூசு பிடித்து இருப்பதை அவதானித்தான். அதனைச் சுத்தம் செய்யவென எண்ணி கழற்றியபோது, படத்துக்குப் பின்னே ஒரு கடித உறை. அவசரமாக அதை எடுத்துப் பிரித்து உள்ளிருந்த கடிதத்தைப் படித்தான்.

" மதுரா, நீயும் உன் அப்பாவும் இல்லாத காலத்தில் என்னோடு அன்பாக, ஆறுதலாக இருந்தது மணியக்கா குடும்பமும் அவாவின்ர மகளும் தான். அவளுக்கு ஒரு கண் இல்லாட்டிலும் அவளின் மனசு தங்கம். உனக்கு அவளைப் பிடிச்சிருந்தால் சொல்லு. நான் மணியக்காட்ட கதைக்கிறன்" என எழுதப்பட்டிருந்தது. அந்தக் கடிதத்தையும் படத்தையும் எடுத்துச் சென்று மணியக்காவிடம் கொடுத்துவிட்டுப் பேசத் தொடங்கினான் .

"அன்ரி, உங்கடை மகள் விதுராவ எனக்கும் பிடிச்சிருக்கு. எங்கட அம்மாவுக்கும் பிடிச்சிருக்கு. நீங்கள் ஓமெண்டால் கள்ளிக்காட்டு அம்மன் கோவிலில போய் முறைப்படி தாலிகட்டி விதுராவை என் மனைவியாக்கிக் கொள்றன்" எனக் கூறிவிட்டு வீட்டை நோக்கி நடக்கத் தொடங்கினான் மது.

உள்ளே நின்ற விதுரா "அம்மா கூப்பிட்டுக் கதையுங்கோ .அவர் உண்மையான அன்போடதானே கேக்கிறார் .எனக்கு கண் இல்லையெண்டு தெரிஞ்சு கொண்டும் வந்து கேட்கிறார் என்றால் அவரின்ர அன்பில பொய்யிருக்காது .கூப்பிட்டுப் பேசுங்கோ "என்றாள். ஆறு மாதங்களின் பின் கள்ளிக்காட்டு அம்மன் கோவிலில் மதுரந்தகன்- விதுராவின் திருமணம் இனிதாகநடந்துமுடிந்தது. வள்ளியம்மா தனது மகளின் சாதகக் குறிப்போடும் படத்தோடும் ஒவ்வொரு கல்யாணப் புறோக்கர்களிடமும் தன் மகளுக்கான மணமகனைத் தேடி இன்னமும் அலைந்துகொண்டிருக்கிறாள்.

பக்கத்து ஆசனத்தை அவனுக்காக பிடித்து வைப்பது தான். தன் தோழிகளைக் கூட அருகில் இருக்க அனுமதிக்க மாட்டாள். அவன் பரந்தன் சந்தியில் இருந்து ஏறியதும், இருவரினதும் காதல் மொழிகள் களைகட்டும். பஸ்ஸில் தங்களைத் தவிர வேறுபலரும் இருக்கிறார்கள் என்பதை மறந்து இருவரும் உரையாடத் தொடங்கிவிடுவார்கள். அந்தக் காதல் உரையாடலுக்கு பஸ்ஸில் இருந்து இறங்கும்வரை ஓய்வென்பதே இருக்காது.

அவனின் காதல் விவகாரம் சில உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் தெரியும். "எப்படா எங்களுக்கு கலியாணச் சாப்பாடு போடப்போறாய்" என்று அவர்கள் கேட்கும் போதெல்லாம் "கொஞ்சம் பொறுங்கோ.. தை மாசம் போடலாம்" என வெட்கத்தோடு சொல்லிக் கொள்வான் அவன். ஆனால் அவனது காதல் சந்தோஷம் நீண்ட நாட்கள் நீடிக்கவில்லை. பிரச்சினைகள் பல ரூபங்களில் குறுக்கிட்டன.

ஒருநாள் முழங்காவிலில் வசிக்கும் மாமி முறையானவரை அவன் தொலைபேசியூடாகத் தொடர்புகொண்டவன் "மாமி நாங்கள் என்ன சாதி? அந்தப் பிள்ளை வீட்ட கேக்கினமாம்." என்று கேட்டுள்ளான்.

இன்னொரு உறவினர் ஒருவருடன் உரையாடும் போது "நான் விரும்புற பிள்ளையின்ர வீட்ட கடும் பிரச்சினை. மச்சான் முறையான பெடியன் ஒருத்தனைக் கட்டச்சொல்லி கரைச்சல். அவனைக் கட்டாமல் என்னோட அவள் வந்தால், குடும்பத்தோட செத்துவிடுவோம் எண்டு அவளின்ர அப்பா, அம்மா வெருட்டுகினமாம். அதையும் மீறி ஓடினால் ரண்டு பேரையும் வாழ விடமாட்டம் எண்டும் சொன்னவையாம்" என்று கவலையோடு சொல்லியுள்ளான்.

சிலநாட்களாக அவளிடமிருந்தும் மெசேஜ் வருவது குறைந்து போகத் தொடங்கியது. இது அவனை இன்னும் கலவரப்படுத்தியது. அதற்குப் பின்னர் அடிக்கடி ஏதோ யோசனையில் வெறித்த பார்வையோடுதான் அவனை எல்லோருமே கண்டார்கள். அதைவிட நஞ்சுப் போத்தல் ஒன்றின் படத்தை தன்னுடைய வட்ஸப், வைபர் என்பற்றின் முகப்பு படமாகவும் அவன் பதிவிட்டிருந்தான். அதன் மூலம் ஏதோ ஒன்றை யாருக்கோ அவன் சொல்ல முனைந்தான்.

**இறுதி அழைப்பு**

அவன் அவளுக்கு பலமுறை தொலைபேசியில் அழைப்பெடுத்த போதும் அவள் பதிலளிக்கவில்லை. அதனால் வட்ஸப்பில்

" நீ என்னை ஏமாற்றினால் நான் தற்கொலை செய்துவிடுவேன். நீ இரண்டு நாளாகக் கதைக்கவில்லை" என அழுத வண்ணம் குரல் பதிவு மெசெஜ் அனுப்பினான். அதற்கு அவளிடமிருந்து இப்படிப் பதில் (எழுத்து வடிவில்) வந்தது.

" நீ உன் வீட்டாரை யோசித்துப் பார்... நான் வீட்டை விட்டு ஓடி வந்து திருமணம் செய்ய மாட்டேன். வீட்டாரின் கௌரவத்தை பாதிக்கும்படி நடக்க மாட்டேன் "

அவன் விடவில்லை. அடுத்த குரல் பதிவை அனுப்பினான். " நீ என்னை ஏமாற்றினால் நான் தற்கொலை தான் செய்துகொள்வேன் . என்னால் உன்னை மறக்க முடியாது"

அவனுடைய இந்தச் செய்தி அவளை நிலைகுலையச் செய்திருக்க வேண்டும்.

" நானும் தானே காதலித்தேன். அப்படியானால் நானும் வருகிறேன், தற்கொலை செய்ய "

என அவள் பதிலளித்தாள். அன்று இரவு முழுவதும் அவர்களுக்கிடையில் மிக நீண்ட தகவல் பரிமாற்றம். ஆனால் அதன் பின்னர் அவளுடைய பதில்கள் ஒற்றைச் சொல்லில் வந்தன. அதுவும் அவனது தொடர்பைத் தவிர்க்க விரும்பியது போல அந்தத் தகவல்கள் இருந்தன. ( ஆனால் இந்த உரையாடல் நடப்பதற்கு இரு நாட்களுக்கு முன்பு அவளின் தொலைபேசியை வீட்டார் பறித்துவிட்டனர் எனவும், அவன் போட்ட குரல் பதிவுக்கு அவள் போடுவது போல அவளின் வீட்டாரே பதிலை ரைப் செய்து அனுப்பியிருக்கலாம் எனவும் அவனின் உறவினர்கள் சந்தேகம் தெரிவிக்கின்றனர்)


**சாவை நோக்கி..**

04.09.2020

வழக்கம் போல காலையில் எழுந்ததும் சிறிதுநேரம் தங்கையின் மகனோடு அவன் விளையாடிவிட்டே வேலைக்குச் செல்வான். ஆனால் அன்று காலை "மாமா.. மாமா" என தங்கையின் மகன் அழைத்தபோதும், ஏதோ ஒப்புக்கு தலையசைத்துவிட்டு நீண்ட நேரம் யோசனையோடு இருந்தான். யாழ்ப்பாணத்திலே வேலை என்பதால் காலை 6.30 க்கெல்லாம் வீட்டைவிட்டு புறப்படுபவன், அன்று நீண்ட நேரத்தின் பின்னரே வேலைக்குச் செல்வதாக கூறிவிட்டு வெளியேறினான். தாயார் அவனுக்கு காலையில் கொடுத்த தேனீர் அப்படியே இருந்தது. பரந்தன் சந்தியில் இருந்து யாழ் நோக்கிச் செல்லும் பஸ்ஸில் ஏறாமல் ஏதோ நினைத்துக் கொண்டவனாக, கிளிநொச்சி நகரை நோக்கி நடக்கத் தொடங்கினான்.

வழியில், கிருமிநாசினி விற்பனை செய்யும் கடையொன்றில் புகுந்தான். அங்கே கிருமிநாசினிப் போத்தல் ஒன்றை வாங்கிக்கொண்டு அவன் வெளியே வந்த போது, அவனின் நண்பனொருவன் எதிர்ப்பட்டான். "என்ன மச்சான் இண்டைக்கு வேலைக்கு போகேலயா... இஞ்ச நிக்கிறாய்?" என அவன் வினவினான்.

" இல்லையடா, அவள் வரச்சொன்னவள். அவளைச்



சந்திக்கத்தான் போய்க் கொண்டிருக்கிறன்" என்று இவன் பதில் சொல்லி இருக்கிறான். உடனே நண்பன் தன்னுடைய மோட்டார் சைக்கிளில் அவனை ஏற்றிக் கொண்டு சென்று அவனைக் கிளிநொச்சி பிரதேச செயலகமருகே இறக்கியுள்ளான். சிறிது நேரத்தில், உள்ளே பணியிலிருந்த அவள், லீவு விண்ணப்பம் கொடுத்து விட்டு அவன் இருக்குமிடம் வந்தாள். அங்கிருந்து ஓட்டோ ஒன்றில் ஏறி அவர்களின் இறுதிப்பயணம் தொடங்கியது.

**"சாகப்போறம். வாறீங்களா?"**

ஓட்டோ கரடிப்போக்கு சந்தியில் நிற்க, இருவரும் இறங்கினர். ஓவசியர் சந்தி நோக்கி செல்லும் வீதியால் கதைத்தபடி சென்றவர்கள், அவ்வீதியில் உள்ள ஆலயம் ஒன்றில் இருந்து கதைத்தபடி, தாங்கள் கொண்டுவந்த உணவை உட்கொண்டனர். பின்னர் நான்கு மணியளவில் திரும்பி வந்து அருகிலிருந்த கடை ஒன்றில் நைலோன் கயிறு வாங்கிக்கொண்டனர். தீவிரமாக ஏதையோ உரையாடியபடி, ஓவசியர் சந்தியை நோக்கி நடக்கத் தொடங்கினர்.

நீண்ட நேரமாக இவர்கள் இருவரும் அந்த வீதியில் அங்குமிங்கும் திரிவதைக் கண்டு, ஊரவர் ஒருவர் "எங்க போகோணும்?" என்று கேட்டுள்ளார். அதற்கு " பஸ் வரும். பார்த்துக் கொண்டு நிக்கிறம்" என்று சொல்லிச் சமாளித்தனர். அதே கேள்வியை இன்னொரு வயதான பெண்ணும் அவர்களைப் பார்த்துக் கேட்க, " அம்மா, நாங்கள் சாகப் போறம், வாறீங்களா?" என்று கேட்க, அவர்கள் தன்னை நக்கலடிப்பதாக் நினைத்து அந்தப் பெண்மணி அங்கிருந்து அகன்றார். அதன் பின்னர் அவர்கள் இருவரும் அந்த வீதியில் தென்படவேயில்லை.

**தேடல் தொடங்கியது**

மதியம் ஒரு மணி.

யாழ்ப்பாணத்தில் அவன் வேலை செய்யும் நிறுவன மேலதிகாரி ஒருவர் அவனுக்கு அழைப்பெடுத்தார். "இன்று வேலைக்கு வரவில்லையா ?" என அவர் வினாவிய போது, "நான் இனி வரமாட்டேன்". என முகத்திலடிப்பது போல சொல்லிவிட்டு, தொலைபேசியை அவன் வைத்துவிட்டான். பின்னர் அவனோடு கூட வேலை செய்யும் சக நண்பன் ஒருவன் போனில் தொடர்பெடுத்தான்.

" மச்சான், நாங்கள் தற்கொலை செய்யப் போறமடா, எங்கட சடலங்களை ஒரே இடத்தில் புதையுங்கோடா" என்று நண்பனுக்குச் சொல்லிவிட்டு, தொலைபேசியை நிறுத்திவிட்டான். அந்த நண்பன் பதறிகொண்டு அவனுக்கு தொடர்பெடுத்த போதும் , பயனில்லை. இதனால் நண்பன் கிளிநொச்சி செல்லும் பஸ் ஒன்றின் சாரதிக்கு போன் பண்ணி, " அவன் தற்கொலை செய்யப்போவதாகச் சொல்லிவிட்டு போனை ஓஃப் பண்ணிவிட்டான். கிளிநொச்சியில நிக்கிற ஆரும் ஓட்டோக்காரருக்கு இதைச் சொன்னால் அவை அவன்ர ப்ரெண்ட்ஸுக்கு சொல்லி அவனைத் தேடிப் பிடிக்க முடியும்" என்று சொன்னான். அவரும் நண்பன் சொன்னபடி, ஓட்டோக்காரர் ஒருவருக்கு அதனைச் சொல்ல, ஓட்டோக்காரர் நண்பர்களுக்கு விடயத்தை தெரியப்படுத்த, நண்பர்கள் பதற்றத்தோடு அவனைத் தேடத் தொடங்கினர்.

நள்ளிரவு இரண்டு மணிவரை தேடல் தொடர்ந்தபோதும், எந்தவொரு தகவலும் இல்லை.

கடைசியில் அவனின் உறவினர் சிலர் அவளின் வீட்டுக்குச் சென்று விபரத்தைக் கூறினர். அதற்கிடையில் அவர்களும் அவளைக் காணாமல் அலைந்து திரிந்து கொண்டிருந்தார்கள். தற்கொலை செய்யப்போவதாக அவன் சொன்ன தகவல் கிடைத்ததும், அவளின் வீட்டுக்காரர்கள் வானமே இடிந்து விழுந்ததைப் போல நொருங்கிப் போனார்கள். " எங்க கண்டாலும் ரண்டு பேரையும் கூட்டிக்கொண்டு வாங்கோ, பதிவுத் திருமணம் செய்துவிடுவோம்" என அவர்கள் கூறியுள்ளனர். பின்னர் இரண்டு வீட்டாரும் வேறு, வேறு நேரங்களில் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் அவனையும், அவளையும் காணவில்லை என்று முறைப்பாட்டைப் பதிவு செய்தனர். ஆனால் கடைசியாக ஒருவாரத்தின் பின்னரே, அவர்களை உயிரற்ற உடல்களாக கண்டுபிடிக்க முடிந்தது.

**ஏன் ஒன்றாகப் புதைக்கவில்லை?**

"நாங்கள் தற்கொலை செய்யப் போறமடா, எங்கட சடலங்களை ஒரே இடத்தில் புதையுங்கோடா" என அவன் சாவதற்கு முன்னர் கோரியிருந்தான். இதனை அவனின் உறவினர்களும், நண்பர்களும் அவளின் வீட்டாரிடம் தெரியப்படுத்தினர்.

" வாழேக்க தான் அதுகள் ரண்டும் ஒண்டா வாழக் குடுத்து வைக்கேலை. ஒண்டா ரண்டு பேரையும் புதைக்க வேணும் எண்டுறது அவன்ர ஆசை" ஆனால் அதற்கு அவளின் வீட்டுக்காரர்கள் மறுத்து விட்டார்கள் என்பது அவனது உறவினர்களின் குற்றச்சாட்டு.

"வைத்தியசாலையில் இருந்து சடலத்தை வழங்கும் போது திருநகர் பொது மயானத்தில் அடக்கம் செய்யுமாறு கூறினர். நாங்கள் சைவ சமயத்தை சேர்ந்தவர்கள். எங்கள் சமய முறைப்படி தகனம் செய்ய அனுமதி கேட்டோம். அனுமதி தந்ததால் நாங்கள் எங்கள் சமயமுறைப்படி அடக்கம் செய்தோம் " என்கிறார்கள் அவளின் வீட்டுக்காரர்கள்.

**தற்கொலை செய்ததை முதலே சொன்ன கட்டுக்காரர்**

அவனும் , அவளும் காணாமல் போனதால் இருதரப்பினரும் பதறிக்கொண்டு தேடியபோது, அவனின் நண்பர்கள் சாத்திரம் சொல்பவர்கள் பலரிடம் போய் அவனைக் கண்டுபிடிக்கும் நோக்கில் சாத்திரம் கேட்டுள்ளார்கள். எல்லோருமே அவன் திரும்பி விரைவில் வருவான் என்று சாத்திரம் சொல்லி இருக்கிறார்கள். ஆனால் பரந்தனில் இருக்கும் கட்டுச் சொல்பவர் ஒருவர் மட்டும் " எல்லாம் கை மீறிப் போட்டுது. ரண்டு உயிரும் இப்ப வடக்குத் திசையில் , ஒரு ஆக்களில்லாத காணிக்குள்ள கயித்தில தொங்குது" என்று அந்த இடத்தின் அடையாளக் குறிப்பையும் சொல்லியிருக்கிறார். அவரை நாமும் சந்தித்தோம். " நான் சரியான இடக்குறிப்பைச் சொன்னேன் .அவர்களால் அந்த இடத்தை கண்டுபிடிக்க முடியவில்லை... நான் சொன்ன நேரத்துக்கு சரியாகச் சென்றிருந்தால் முதலே கண்டு பிடித்திருக்கலாம். பின்னர் இரவு 11 மணிக்கு பின்னர் தொடர்புகொண்டனர். அப்போது "இறந்துவிட்டனர்... தொங்கிக்கொண்டு இருக்கின்றனர் " என்று சரியாகச் சொன்னேன்" என்றவர், ஒரு கணம் தாமதித்தார். பின்னர் " இதுகளைப் பற்றி எழுத வேண்டாம். எழுதினால் உங்களுக்கு தான் சிக்கல் எண்டு எனக்கு காட்டுது" என்று போட்டாரே ஒரு போடு. இப்போது எழுதிவிட்டோம். என்ன நடக்கப் போகிறதோ?

**காதலித்தது எங்களுக்கு தெரியாது"**

– அவளின் வீட்டுக்காரர்

"எங்களது மகளது காதல் தொடர்பு பற்றி அவள் காணாமல் போன நாள்வரை எங்களுக்கு எதுவுமே தெரியாது. அவள் ஒரு தடவை கூட இது தொடர்பில் கதைக்கவில்லை . நாங்கள் அடிக்கவுமில்லை ,அடைத்து வைக்கவுமில்லை. போனையும் பறித்து வைக்கவில்லை , அவள் காணாமல் போன அன்று கூட 'சார்ச்'சில் போட்டபடி போன் வீட்டில் அவளது அறையில் தான் இருந்தது. எங்களோடு பிரச்சினை என்பதால், இப்படித் தற்கொலை செய்வது என்றால் இப்படி வெளியே போய்த் தான் அவள் தூங்க வேண்டுமென்றில்லை. அவளின் அத்தான் விவசாய மருந்து விற்பனை செய்பவர். அதனால் வீட்டிலேயே நிறைய மருந்துப் போத்தல்கள் இருக்கு. அவள் அதை எடுத்துக் குடித்திருக்கலாமே. சரி, நாங்கள் அடைத்து வைத்தோமென்றால் எப்படி அவள் வேலைக்குப் போய்வந்தாள்?

## இனியும் காயப்படுத்தாதீர் !

*–இரு வீட்டாரினதும் கெஞ்சுதல்*

"இந்தத் தற்கொலை சம்பவம் தொடர்பில் சமூகவலைத் தளங்கள் மற்றும். இணையத்தளங்களில் பல்வேறுபட்ட விமர்சனங்களும் , கற்பனைக் கதைகளும், வதந்திகளும் வந்தபடி உள்ளன. இது எங்களுக்கு வேதனையாக உள்ளது. நாங்கள் வீட்டில் ஒருவரை இழந்திருக்கிறோம். அந்த வேதனையைப் புரியாது விசமத்தனமான கருத்துக்களைப் பகிர்ந்து எங்கள் மனதை இன்னும் வேதனைக்கு உட்படுத்துகின்றனர் . இவ்வாறு விசமத்தனமான கருத்துக்களை பகிர்ந்து ஏற்கனவே பெரும் வலியைச் சுமக்கும் எங்களை மேலும் காயப்படுத்தாதீர்கள்"

# ஏன் இந்த அவசரம்?

○ குகா




இராணுவ சிந்தனை கொண்ட ஜனாதிபதியிடம் சகல அதிகாரங்களும் குவியுமானால். நாட்டில் இராணுவ ஆட்சிதான் நடக்கப் போகின்றது



ஈழத் திருநாட்டின் பொருளாதாரம் என்றும் இல்லாத அளவுக்கு வீழ்ச்சி கண்டுள்ளது.

வேலையில்லாத் திண்டாட்டம் உச்சிமேல் எகிறியுள்ளது, வாழ்க்கைச் செலவு மலை போல் ஏறியுள்ளது, தேசியப் பிரச்சனையான இனப்பிரச்சனைக்கு எந்தவிதத் தீர்வும் கிட்டவில்லை. போதைவஸ்து பாவனை தலைவிரித்தாடுகிறது, வெளிநாட்டுக் கடன் சுமையாக ஏறியுள்ளது. இந்த நிலையில் அரசமைப்பில் 20ஆவது திருத்தத் துக்கு ஏன் அவசரம் காட்டப்படுகின்றது என்பதுதான் இன்று பலரிடமும் எழுந்துள்ள கேள்வியாகும்.

மஹிந்தவின் ‘பொதுஜன பெரமுன’ ஆரம்பிக்கப்பட்டுச் சிறிது காலத்தில் நடந்த உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் அமோக வெற்றி பெற்று தெற்கில் பெரும்பான்மையான சபைகளைக் கைப்பற்றியது. அதன்பின் நடந்த ஜனாதிபதித் தேர்தலிலும் அமோக வெற்றி பெற்று முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும் இராணுவ செல்வாக்கு பெற்றவருமான கோத்தாபய ராஜபக்சவை ஜனாதிபதியாக்கியது. அதனைத் தொடர்ந்து நடந்த நாடாளுமன்றத் தேர்தலிலும் அமோக வெற்றி பெற்று நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையையும் பெற்றுக் கொண்டது.

நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் 225 உறுப்பினர்களிடம் உள்ள அதிகாரங்களைப் பறித்து, தனி மனிதனிடம் ஒப்படைக்கவே 20ஆவது திருத்தத் துக்கு அரசு அவசரம் காட்டுகிறது. பிரதமர் அமைச் சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்களுக்கு உள்ள சகல அதிகாரங்களையும் பிடுங்கி அவற்றை ஜனாதிபதியின் கைகளில் ஒப்படைக்கவே கங்கணம் கட்டி நிற்கின்றது அரசு.20 ஆவது திருத்தத்துக்கு எதிர்க்கட்சிகளிடம் மட்டுமல்ல, அந்தத் திருத்தத்தின் சில விடயங்களுக்கு ஆளும் தரப்புக்குள்ளும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது.ஆனால் எத்தகைய எதிர்ப்புக் கிளம்பினாலும் 20ஆவது திருத்தத்தை நிறைவேற்றியே தீருவோம் என அரசு மார்தட்டிக் கொண்டு நிற்கின்றது.

இலங்கை ஒரு ஜனநாயக நாடு. நாட்டில் நல்லாட்சி ஒன்று அமைய வேண்டுமானால் சகல இன, மத மக்களுக்கும் மதிப்பளிக்க வேண்டும். அதை விடுத்து இது ஒரு பௌத்த நாடு என்ற கோட்பாட்டுடன் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. பௌத்தசிங்கள பேரினவாதத்தை விதைத்து வெற்றியை அறுவடை செய்த பெரமுன கட்சியினர், சர்வாதிகார ஆட்சி ஒன்றுக்குள் நாட்டை கொண்டு செல்வதற்கு இந்த 20ஆவது திருத்தம் உதவியாக அமையப்போகிறது. நாட்டில் ஏனைய இனங்களுக்கு, மதங்களுக்கு இடமில்லாத வகையில், ஒரு தனிமனிதன் முக்கியமான தீர்மானங்களை எடுக்க வசதியாக 20 ஆவது திருத்தம் அமையப்போகின்றது.

இராணுவ சிந்தனை கொண்ட ஜனாதிபதியிடம் சகல அதிகாரங்களும் குவியுமானால், நாட்டில் இராணுவ ஆட்சி தான் நடக்கப் போகின்றது என எச்சரிக்கிறார்கள் ஆய்வாளர்கள்.

சிவில் செயற்பாடுகளில் இராணுவத்தினரின் பங்கு உறுதி செய்யப்படப் போகின்றது. உயர் அதிகாரிகள் முதல் சிறு அதிகாரிகள் வரை இராணுவத்தினருக்கு சலாம் போடும் நிலை கூட வரலாம். அமைச்சுக்கள் மற்றும் அரச திணைக்களங்களில் எல்லாம் இராணுவ அதிகாரிகள் பணியாற்றக்கூடிய சூழல் உருவாகப் போகின்றது. யுத்தத்துக்காக படைகளில் சேர்க்கப்பட்ட படையினர் இனி சிவில் நடவடிக்கைகளில் தாராளமாக இணைக்கப்பட போகின்றார்கள்.மொத்தத்தில் நாட்டில் சிவில் ஆட்சி அல்ல இராணுவ ஆட்சி வரப்போகிறது. இதற்கு கட்டியம் கூறும் வகையில் சகல அதிகாரங்களும் தனிமனிதனின் கைகளுக்கு செல்கின்றன. இதற்கு வழி வகுக்கவே அவசர அவசரமாக வருகின்றது 20ஆவது திருத்தம். 20ஆவது திருத்தம் நாட்டில் உள்ள பிரச்சினைகளைத் தீர்க்கப் போகின்றதா? மோசமாக்கப் போகின்றதா? பொறுத்திருந்து பார்ப்போம். ■

# 20க்கு அப்பா யார்?

○ எஸ்.ராஜ்குமார்




இந்தா வருகிறது - அந்தா வருகிறதென்ற 20 ஆவது திருத்த சட்டம் இப்போது முட்டுச் சந்தியில் நின்று முட்டி நிற்கிறது.

20ஆவது திருத்தத்தில் பரிதாபகரமான விடயம் என்னவென்றால் இது “அப்பன் பெயர் தெரியாத பிள்ளை”என்று சஜித் கட்சியின் தேசிய அமைப்பாளரான திஸ்ஸ அத்தநாயக்க கூறியுள்ளதுதான். இந்தத் திருத்தச் சட்டத்தைதயாரித்தவர் யாரென்று கேட்டால் எவருமே நான்தான் என்று சொல்லிக்கொண்டு முன்வரும் நிலையில் இல்லை. இதனால் இந்த திருத்தச் சட்டத்தை அமைச்சரவையில் சமர்ப்பித்த நீதி அமைச்சர் அலிசப்ரியை அம்மாவாக எடுத்துக்கொள்ளலாம். ஆனால் இதனை தயாரித்தவர் யாரென்பது அவருக்கே கூடத் தெரியவில்லை என்பதுதான் வேடிக்கை. இதற்கு முன்னர் வந்த அரசமைப்புகளையும் சரி, திருத்தச் சட்ட மூலங்களையும் சரி நான் நீ என்று உரிமைகோரி பீத்திக்கொண்ட பல அமைச்சர்களும் சட்ட அறிஞர்களும் இந்த 20ஆவது திருத்த சட்ட விடயத்தில் சத்தமின்றியே இருக்கிறார்கள்.

19ஆவது திருத்தச் சட்டத்தில் இருந்த பிரதமரின் அதிகாரங்களைப் பிடுங்கிக்கொள்ள 20ஐ தான் நான் தயாரித்தேன் என்று உரிமை கோரப்போனால் எங்கே பிரதமரான மஹிந்தவின் வெறுப்புக்கு தாங்கள் ஆளாகி விடுவோமோ என்ற அச்சத்தில் எல்லோரும் ‘கம்’என்றிருக்கிறார்கள் . கடைசியாக உள்ளூரிலேயும் வெளிநாடுகளிலும் கெட்ட பெயரை சம்பாதித்து வைத்திருக்கும் இருந்த 20ஆவது திருத்தம் என்ற குழந்தைக்கு தானே அப்பா என்று வேறுவழியில்லாமல் உரிமை கோரியிருக்கிறார் ஜனாதிபதி கோத்தாபய .

முன்னர் நடைமுறையில் இருந்த 18 ஆவது திருத்தத்தை தட்டி நிமிர்த்தி ரிங்கரிங், வெல்டிங் செய்து கொஞ்சம் புதுப்பித்து தயாரிக்கப்பட்டதே இந்த 20 .ஆனாலும் இதுபற்றி ஜனாதிபதி ,பிரதமர் ஆகியோர்கூட தெளிவான நிலையில் இல்லை என்றே சொல்லப்படுகிறது. ஏனென்றால் இது பற்றி விரிவாக ஆராய்ந்து அறிக்கை ஒன்றைத் தரும்படி இருவரும் இரு வேறு குழுக்கள் அமைத்திருக்கிறார்கள்.

இதில் பிரதமரினால் நியமிக்கப்பட்ட மீளாய்வுக் குழுவுக்கு அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தலைமை வகிக்கிறார். இந்த குழு அமைச்சர் பீரிஸின் வீட்டில் அண்மையில் கூடிப் பேசி தமது முதலாவது அறிக்கையைப் பிரதமரிடம் சமர்ப்பித்திருக்கிறது. அதில் சர்ச்சைக்குரிய பல விடயங்களில் மாற்றம் வேண்டும் என்று சிபார்சு செய்யப்பட்டுள்ளது எனவும், அவை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும் என்றும் சொல்லப்பட்டது. ஆயினும் பின்னர் சமர்ப்பிக்கப்படவில்லை

ஜனாதிபதிக்கு அதிக அதிகாரங்களை வழங்கி ஒரு சர்வாதிகார ஆட்சி முறையை ஏற்படுத்த வழிவகுக்கும் என்ற ரீதியிலேயே எதிர்க்கட்சிகள் 20 ஐ எதிர்க்கின்றன. ஆனால் ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைப்பதற்கான எந்த சிபாரிசுகளும் இந்த பிரதமரினால் நியமிக்கப்பட்ட மீளாய்வுக் குழுவினால் பரிசீலிக்கப்பட்டதாகவே தெரியவில்லை.

எது எப்படியான போதிலும் இந்த 20 ஐ நிறைவேற்றியே தீருவோம் முன் வைத்த காலை பின்வைக்கமாட்டோம் என்கிறார் பிரதமர். தற்போது காலை முன்னேயும் பின்னேயும் வைத்து அதிகாரத்துடன் அசைந்து கொண்டிருக்கும் அவரை பொம்மையாக்கி விடும் 20 ஐ நிறைவேற்றுவதில் பிரதமருக்கு ஏன் தான் இவ்வளவு கொலைவெறி என்று தெரியவில்லை.

எது எப்படியோ எதிர்வரும் 22ஆம் திகதி 20 ஆவது திருத்தம் நாடாளுமன்றில் சமர்பிக்கப்பட உள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையில. இந்த 20 ஆவது திருத்தம் இன்னும் எத்தனை தடவை திருத்தப்படுமோ தெரியவில்லை. ■



புராதன தொழிநுட்பத்தின் மற்றுமொரு வடிவத்தைப் பறைசாற்றுகின்ற இப்பகுதியைக் கடந்து மலையில் மேல் நோக்கிச் செல்கின்றபோது ஒரே சீராக குடையப்பட்ட சிறிய சிறிய குழிகள் தென்படுகின்றன. மருந்துகள் மற்றும் பச்சிலைகளை அரைப்பதற்கான குழிகளாக அவை இருக்கலாம் என்கின்ற ஐதீகமும் உண்டு.

# வெடுக்குநாறிமலை:

# உலகறியாமல் உறங்கும் கதைகள்



○ சர்மிலா வினோதினி

வவுனியா வடக்கின் நெடுங்கேணி நகரிலிருந்து சுமார் ஏழு கிலோமீற்றர்கள் தூரத்தில் அமைந்திருக்கின்ற எல்லைக்கிராமங்களில் ஒன்றுதான் ஒலுமடு. ஒலு என்று சொல்லப்படுகின்ற ஒரு வகைத் தாவரச் செடிகள் இங்குள்ள குளத்தில் அதிகமாக வளர்ந்து நின்ற காரணத்தினால் ஒலுமடு என்ற காரணப் பெயரைப் பெற்றது இந்தக் கிராமம். எளிமையும் இயற்கை அழகும் நிறைந்திருக்கின்ற இந்தக் கிராமத்தின் மையப்பகுதியிலிருந்து வண்டில் பாதை வழியாக சுமார் நான்கு கிலோமீற்றர்கள் தூரம் வனப்பகுதிக்குள் பயணப்படுகின்ற போது இயற்கை அரணென நிமிர்ந்து நிற்கின்ற வெடுக்குநாறி மலைத் தொடரின் ஆரம்பப் பகுதியைக் காணலாம். பெரும் கற்கள் உருண்டு திரண்டு காட்டின் பெரு மரங்களின் இடையே உருட்டி விடப்பட்டதைப்போல காட்சியளிக்கும் சிறு குன்றுப் பகுதிகளும், ஓங்கி வளர்ந்து நிற்கின்ற காட்டு மரங்களும், அவற்றின் கீழ் உள்ள சிறு புதர்களும் கொடிகளும் செடிகளுமாக அந்த வனத்தோடு இணைந்த மலைக்குன்றுகள் பார்க்க அலாதியானவை.

**முகப்பில் வரவேற்கும் பிராமி**

காட்டின் மணத்தை நுகர்ந்துகொண்டும், காட்டின் ஒலியை செவிமடுத்துக் கொண்டும் நடந்து செல்ல வெடுக்குநாறி மலையின் முதற் பகுதியைக் காணலாம். மலையின் முன்னும் பின்னுமாக ஒரு வகை வெடுக்கு போன்ற நாற்றமடிக்கும் மரங்கள் காணப்படுவதால் வெடுக்குநாறி மலை என்கின்ற காரணப் பெயரை இந்த மலை பெற்றுக்கொண்டதென அறிய முடிகிறது. இந்தப்பகுதியிலுள்ள மலையில் தான் இப்போது பெரும் சர்ச்சைக்குரிய தொல்லியல் எச்சங்கள் வெளித் தெரிகின்றன. இங்குள்ள மலையின் முகப்புப் பகுதியில் புராதன பிராமி எழுத்துக்கள் பொறிக்கப்பட்டு அந்த எழுத்துக்கள் மழை மற்றும் வழிந்தோடும் நீரினால் அரிப்புக்கு உள்ளாகாத வகையில் எழுத்துக்களின் மேற்பகுதியில் மலையைக் குடைந்து சிறு ஆழத்தில் நீரோட வழி செய்யப்பட்டிருக்கிறது. இங்கு விநாயகர், அம்மன், வைரவர் ஆகிய தெய்வங்களுக்கு சிலை வைத்து வழிபடுகின்றார்கள் கிராம மக்கள். உன்னிப்பான அவதானத்திற்குரிய மலையின் இந்த முதற்பகுதியைக் கடந்து மேலும் சில பல அடிகள் பயணப்பட, மலைத்தொடரின் அடுத்த பகுதி வரவேற்கிறது. மென் சாய்வு கொண்ட இப்பகுதியால் மலையில் மேல் ஏறிச்செல்ல ஒரு அகழி போன்ற சிறிய நீர்த்தடாகம் வரவேற்கிறது. ஒரு மனிதனை மூடக்கூடிய அளவுக்கு நீர் நிறைந்து காணப்படுகின்ற இந்த நீர்த்தடாகத்தில் நீர் வற்றாமல் எப்பொழுதும் நிறைந்திருக்கும் என்கின்றார்கள் கிராம மக்கள். அந்த நீர்த்தடாகத்துக்கு மேலே மலையின் சற்று உயரமான பகுதியில் நாகத்தைபிரதிபலிக்கும்கற்தெய்வ வழிபாடு இடம்பெறுகிறது.

**மருந்துக் குழிகள்**

நீர்த்தேக்கத்தில் இருந்து பார்க்கின்ற போது மலைநோக்கிச் செல்லும் இடப்பகுதியின் உயரமான ஓரிடத்தில் மலையோடு தொடர்பற்ற, எங்கிருந்தோ கொண்டுவரப்பட்டு பொருத்தப்பட்டது போன்ற பெரும் கல் ஒன்று சிறு சிறு சதுரவடிவான கற்களை அடித்தளத் தாங்கிகளாக முண்டு கொடுக்கப்பட்டு நிமிர்த்தி வைக்கப்பட்டுள்ளது. புராதன தொழிநுட்பத்தின் இன்னும் ஒரு வடிவத்தை பறைசாற்றுகின்ற இப்பகுதியைக் கடந்து மலையில் மேல் நோக்கிச் செல்கின்ற போது ஒரேசீராக குடையப்பட்ட சிறிய சிறிய குழிகள் தென்படுகின்றன. மருந்துகள் மற்றும் பச்சிலைகளை அரைப்பதற்கான குழிகளாக அவை இருக்கலாம் என்கின்ற ஐதீகமும் உண்டு.





**நாகங்களின் தேசம்**

குழிகளைக் கடந்து இன்னும் மேற்சென்று கீழிறங்க மலைத்தொடரில் இயற்கையாகவே அமையப்பெற்ற சிறு குன்றொன்று தென்படுகின்றது. பார்ப்பதற்கு நாகத்தின் தலை போன்று தென்படுகின்ற அந்தக் குன்றில் பாம்பின் முகத்தில் தெரிகின்ற பக்க வளைவுகள் விளிம்புச் சதைகளைப்போன்ற உன்னிப்பான அவதானத்திற்குரிய சிற்ப வேலைப்பாடுகள் செதுக்கப்பட்டுள்ளன. நாக பாம்புகள் அவ்விடத்தில் உலவுவதாகவும் தாங்கள் பிரசாதமாக படைக்கின்ற பாலை அவை குடிப்பதாகவும் நம்புகின்றார்கள் கிராம மக்களும் பக்தர்களும்.

அந்தப்பகுதியில் இருந்து மலையில் செங்குத்தாக இன்னும் மேல் நோக்கிச் செல்ல மலையின் உச்சிப்பகுதிக்குச் செல்வதற்குரிய சிறு சமவெளிப் பகுதி தென்படுகின்றது. இச் சமவெளிப்பகுதிக்கு செல்வதற்காக அலுமினிய வேலைப்பாடுகளுடை படிகளை ஆலய நிர்வாகத்தின் முயற்சியால் அமைத்திருக்கிறார்கள். ஆனால் முழுமையாக அமைப்பதற்கு தொல்லியல் திணைக்களம் அனுமதியை வழங்காத நிலையில், அந்தச் செயற்பாட்டிற்கு எதிராக வழக்கும் தொடர்ந்திருக்கிறது திணைக்களம்.



**இராவணன் காலத்து சிவலிங்கம்**

மலையின் சிறு சமவெளிப்பகுதியிலிருந்து அப்பகுதியின் இரம்மியமான வனப்பையும் சூழலையும் அனுபவிக்க முடிகிறது. பின்னர் அங்கிருந்து மலையின் அடுத்த உச்சிக்கு ஏறிச் செல்வதற்கான எவ்விதமான படிகளோ, அமைப்புக்களோ அற்ற நிலையில் இயற்கையாக அமைக்கப்பட்டிருக்கின்ற சிறிய மரக்குற்றிகளிலான தாங்கிகளையும், பெருங் கொடிகளையும், மரங்களையும் பற்றிக்

(மறுபக்கம் பார்க்க)

# பொலிஸ்கார, ஆமிக்கார அடிப்பொடியளுக்கு...

**அவசரமா ஒரு கடுதாசி**

பொலிஸ்கார, ஆமிக்கார அடிப்பொடியளுக்கு வணக்கம்.

நான் நல்ல சுகம். உங்களுக்கு உடல் அளவிலை சுகம் இருந்தாலும் மனத்திலை சுகம் இல்லாமல் இருப்பியள் எண்டு எனக்குத் தெரியும். கரடுமுரடான றோட்டிலிலை கட்டை வண்டி போற மாதிரி...கடக்குப் பிடக் காத்தான் காரியம் போகுதாம்! சீராப் போகுதில்லை எண்டு கேள்வி, உண்மையோ?

தியாகி திலீபன்ரை நினைவு தினத்தோட, பொலிஸின்ரையும், ஆமிக்காரற்றையும் கூத்தும் துவங்கிவிட்டுது எண்டு சனம் கதைக்குது . சும்மா சொல்லப்படாது, தாச்சி மறிச்ச மாதிரித்தான் உங்கடை விளையாட்டும். நீங்கள் எதைச் செய்தால் அரசாங்கம் சந்தோஷப்படும் எண்டு நினைக்கிறியள். ஒரு கதைக்கு, "மூக்காலை தண்ணி வடியிற " ஆக்களைப் பிடிச்சுக் கொண்டு வாங்கோ எண்டு அரசாங்கம் சொன்னால், மூக்கடியில வேர்க்கிறவையளையும் பிடிச்சுக் கொண்டு போய் "இவைக்கும் மூக்காலை தண்ணிவடியுது" எண்டு சொல்லிக் குடுக்கிற விசுவாசம் உங்களுக்கு இருக்கு. உங்களையும் பிழை சொல்லேலாது. அதுதானே இஞ்சத்தை வழக்கம்.

அதை விடுங்கோ, உங்களுக்கு ஒண்டு தெரியுமோ? திலீபன் தியாகியாகி இப்ப 33 வருசங்களாச்சு. அந்தப்பெடி சாகேக்க துவக்கைத் தூக்கி போராடேல்லை. உண்ணாவிரதப் போராட்டந்தான் செய்தவன். இந்திய அரசாங்கம் இலங்கைத் தமிழருக்குத் தான் தீர்வு தேடித் தரலாம் எண்டு சொல்லிக் கொண்டு இஞ்சை வந்து நிக்கேக்கை, ஐஞ்சு அம்சக்கோரிக்கையை வைச்சுத் தண்ணி வெந்நி இல்லாமல் நல்லூரடியிலை உண்ணாவிரதம் இருந்தவன். அவன்ரை கோரிக்கை அப்பிடிச் செய்யேலாத ஒண்டு எண்டில்லை. இந்தியா நினைச்சிருந்தால் செய்திருக்கலாம். ஆனால், வீம்புக்கு இரண்டு அரசாங்கங்களும் வைச்சு இழுத்தடிச்சு, வேணும் எண்டு விசமத்துக்குத்தான் சாக விட்டவை. வீணா அந்தப்பெடி தன்னைப் பலி குடுத்ததுதான் மிச்சம்.ஆனால் அவன் நினைச்சமாதிரி இந்திய அரசாங்கத்தின்ரை சுயரூபம் எல்லாருக்கும் தெரிஞ்சு போச்சுதெல்லோ?

ஆனால் ஒண்டு தெரிய வேணும். இண்டைக்கும் இந்தியாவின்ரை தந்தை எண்டும், இந்தியாவின்ரை அடையாளம் எண்டும் சொல்லுற காந்தி அடிகள் தன்ரை கோரிக்கையை வைச்சுப்போராடக் கையாண்ட அதே ஆயுதத்தைத்தான் திலீபனும் கையிலை எடுத்தவன். காந்தி அடிகளைத் தலையிலை வைச்சுக் கொண்டாடுகிற இந்தியா, திலீபன்ரை கதையைக் காதிலை விழுத்தேல்லை. அதைப் பற்றின சரியான காரணம் 13 பிரச்சினைக்குப் பிறகு, சனத்துக்கு இப்ப விளங்கும். எங்கடை சனம் ஆகப் பேயரில்லை எண்டது அவைக்கு இப்ப தெரிஞ்சிருக்கும். எல்லாத்துக்கும் அரசியல் சுய நலந்தான் காரணம்.

அந்தக் காலத்து சம்பவங்கள் எனக்கு ஞாபகமிருக்கு, திலீபன் தியாகியான உடனை அவனைப் பற்றிப் பேப்பர் ஒண்டிலை ஒரு கேலிச்சித்திரம் வந்தது. திலீபன்ரை உடம்புக்கு மேலை இருந்து காந்தி அடிகள் பூப்போடுற மாதிரியும், அதுக்குப் பக்கத்திலை இரண்டு மூக்குக் கண்ணாடியளின்ரை படங்கள்.ஒண்டு காந்தியடிகளின்ரை. மற்றது திலீபன்ரை. இரண்டும் வேறை, வேறை வடிவமான கண்ணாடியள். ஆனால் ஒரு விசயத்தைத்தான் இரண்டுபேரும் பாத்தவை, ஆனால் வெவ்வேற கோணத்தில இருந்து பாத்தவை எண்டதை வடிவாச் சொல்லி இருந்தினம். ஆனால்,இந்திய அரசாங்கம் இரண்டையும் ஒண்டாப் பாக்கேல்லை எண்டது எங்கடை சனத்துக்கு இண்டைக்கும் வருத்தந்தான். எட திலீபனை விடுங்கோவன். பொது மக்களைப் பற்றியாவது அப்ப அவையள் கொஞ்சம் சிந்திச்சிருக்கலாமே! இண்டைக்கும் இந்தச் சிங்கள அரசோடை கதைச்சு ஒரு தீர்வைத் தேடித்தாறதுக்கு இந்தியா சிந்திக்கேல்லை எண்டதும் எங்கடை ஆக்களுக்குக் கவலைதான். அதைப் பற்றிக் கதைச்சால் பழைய ஞாபகம்தான் தொடர்ச்சியா வந்து கொண்டிருக்கும். பிறகு அதாலை வில்லங்கந்தான். அதை விடுங்கோ. சரி இப்ப உங்களிட்டை ஒரு ஞாயம் கேக்கவேணுமெண்டுதான் இந்தக் கடுதாசியை உங்களுக்கு எழுதிறன்.திலீபன்ரை நினைவு நாளைக் கொண்டாடுறதை வேண்டாம் எண்டு மறிச்சுப்போட்டீங்கள். புறத்திலை விளக்கு வைச்சு, பூப்போட்டுக் கொண்டாடுறதைத்தான் உங்களால மறிக்கலாம். மனசிலை அகவிளக்கு ஏற்றி அவனைக் கொண்டாறதை மறிக்க முடியாது. முடிஞ்சால் செய்து பாருங்கோ.

வாற கார்த்திகை மாதம் ஜே.வி.பியின்ரை கார்த்திகை வீரர்கள் தினம் வருகுது. அவை வந்து உவடத்துச் சுவரெல்லாம் நோட்டீஸ் ஒட்டி அதை அனுஷ்டிப்பினம். அதுக்கு நீங்கள் என்ன செய்யப் போறீங்கள்? அவையை ஒரு பக்கம் ஒட்டச் சொல்லிப்போட்டு, மற்றப்பக்கம் திரும்பிப் பாத்துக்கொண்டு நிப்பியளோ? இல்லாட்டி இப்ப மாதிரி நீதிமன்றத்துக்கு போய் தடை வாங்குவியளோ? பாத்துக் கொண்டிருப்பன். மறக்க வேண்டாம்.

தங்கள் மேல் அதி பட்சமுள்ள
அப்பாவி அன்னமுத்து.

# வெடுக்குநாறிமலை:



(தொடர்ச்சி)

கொண்டு மேலே ஏற முடிகின்றது. பெரும் பிரயத்தனத்தின்பின், மேல் நோக்கி ஏறிச் செல்ல மலையின் உச்சியில் கற் பாறைகளை அடுக்கி அவற்றின் மேல் அமைக்கப் பட்டிருக்கின்ற புராதன ஆதி இலிங்கேச்சரர் கண்களில் தென்படுகிறார். கூம்பு வடிவிலான பாறையை சதுரக் கற்களின்மேல் அடுக்கி ஒட்டி நிமிர்த்தி வைக்கப்பட்டிருப்பது போன்று தென்படுகின்றது மக்களின் நம்பிக்கைக்குரிய ஆதி இலிங்கேச்சரர் சிவலிங்கம். இந்தச் சிவலிங்கம் இராவணன் காலத்திற்குரியதாக இருக்கலாம் என்கின்ற நம்பிக்கையை வெளிப்படுத்துகின்றனர் கிராம மக்கள். இயற்கை மூலிகைகள் நிறைந்த அந்தப் பகுதியிலிருந்து இன்னும் சற்று மேல்நோக்கி ஏறிச்செல்ல, அந்த மலையின் சமவெளி தென்படுகின்றது. அங்கு சிவலிங்கம் ஒன்றைப் பிரதிட்டை செய்து வழிபடுகிறார்கள் கிராம மக்கள்.

சுமார் முன்நூறு அடிகளுக்கு மேற்பட்ட மலையுச்சியின் சமவெளியில் ஏறிநிற்க காட்டின் காற்று மேனியைத் தழுவ அங்கிருந்து வன்னிப் பிராந்தியத்தின் அழகை கண்டுகொள்ள முடிகின்றது. ஒரு பக்கம் வவுனியாவின் காட்சிகளும், மறுபக்கம் மதவாச்சியின் காட்சிகளும், இன்னும் ஒரு பக்கம் பதவியா போன்ற பிரதேசங்களும் தென்படுகின்றன என்பது கிராம மக்களின் கணிப்பு.

**நாகர்களின் பூமியா வெடுக்குநாறிமலை?**

புராதன இலங்கையில் நீர்ப்பாசனத் தொழில்நுட்பத்தை ஆரம்பித்து செயற்படுத்தியவர்கள் நாகர்கள்தான் என்பது சிரான் தெரணியகல உட்பட்ட வரலாற்று ஆய்வாளர்களின் கருத்தாகும். இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களில் நாகர்கள் வாழ்ந்ததற்கான எச்சங்கள் பரவியிருக்கின்றன. கிழக்கிலங்கையின் படுவான்கரையின் வெல்லாவெளியில் அமைந்திருக்கின்ற பிராமி சாசனங்களும் குடைவரை எச்சங்களும் இவற்றை பலப்படுத்துகின்றன.

இதேபோன்ற பிராமி எழுத்துக்களைக் கொண்ட சாசனம் இந்த வெடுக்கு நாறி மலை யிலும் பதியப் பட்டுள்ளது. பிராமி எழுத்துக்களை முதன் முதலில் வட இந்தியாவில் அசோகச் சக்கரவர்த்தி பயன்படுத்தினார் என்றும் பிற்காலத்தில் பரப்பப்பட்டு பின்னர் திராவிட மொழிக் குடும்பத்தோடு கலந்த காரணத்தினால் தமிழில் தமிழ் வரி வடிவத்திற்கு ஏற்ப பிராமி எழுத்துக்களை உள்வாங்கி இங்குள்ள மக்கள் பயன்படுத்தினார்கள் என்பதும் மொழியியலாளர்களின் கருத்தாகும்.

ஆக, நெடுங்கேணி ஒலுமடுவின் வெடுக்குநாறி மலைப் பிரதேசத்திலுள்ள இந்த பிராமி எழுந்துக்களோடு இணைந்த ஏனைய எச்சங்களும், நாக வழிபாடும், நீர்ப்பாசன அமைப்புக்களும் நாகர்களின் தொன்மத்தின் நீட்சி என்று கருதுவதற்கான வாய்ப்புக்கள் பல உள்ளன. இந்த மலைப்பகுதிக்கு அண்மையில் அமைந்துள்ள நாகர் குளம் என்கின்ற குளப்பகுதி இதனை மேலும் வலுப்படுத்துகின்றது. வட கிழக்கில் பூர்வீர்கமாக வாழ்கின்ற தமிழர்கள் நாகர்களின் வழி வந்தவர்கள் என்கின்ற வரலாற்று ஆசிரியர்களின் கூற்றுப்படி இந்த வெடுக்குநாறி மலையின் கதைகள் உலகறியப்பட வேண்டியவை.

**தடுக்கப்பட்ட பாதை**


ஆனால் தொல்லியல் திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள இந்த ஆலயப் பகுதியில் பக்தர்கள் வழிபாடுகளை நடத்துவதற்கும், இயல்பான நடமாட்டத்திற்கும் தடை விதிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வதும் இந்த நிலம் கொண்டிருக்கின்ற கதைகளை மாற்றுவதற்கான முயற்சிகளாகும்.

இங்கு கோயிலுக்குச் சென்று வருவதற்கென அமைக்கப்பட்டிருக்கின்ற ஒரு பகுதிக்கான படிகள் தவிர ஏனைய பகுதிகளுக்கான படிகளை அமைப்பதற்கு தொல்லியல் திணைக்களம் தடை விதித்துள்ளது.

அதே நேரத்திலே இந்த ஆலயப்பகுதிக்குச் செல்வதற்கான சுமார் நான்கு கிலோ மீற்றர்கள் தூரமுள்ள மண் பாதையில் உரிய முறையில் பாதைகளை அமைப்பதற்கு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் நிதி குறித்தொதுக்கப்பட்டிருக்கின்ற நிலையில், வன வளபாதுகாப்புத் திணைக்களம் அதற்கான அனுமதியைத் தடுத்து நிறுத்தி வைத்திருக்கின்றது. குறித்த அனுமதியைப் பெறுவதற்காக பல தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் முயற்சிகளை மேற்கொண்டபோதும் அனுமதி இன்னமும் கிடைக்கப்பெறவில்லை.

**அங்கொரு நீதி; இங்கொரு நீதியா?**

தொல்லியல் சின்னங்கள் முறையாகப் பராமரிக்கப் பட வேண்டிய அதே நேரத்திலே, வனங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை,



ஆனால் இலங்கையின் புராதன சின்னங்களில் ஒன்றாகிய சிகிரிய சிங்க மலைத்தொடரில் உரிய முறையில் படிகள் அமைக்கப்பட்டு சுற்றுலாப் பயணிகள் சென்று வரமுடியுமானால், வெடுக்குநாறி மலையில் படிகள் அமைத்து மக்கள் வழிபாடு செய்வதில் உள்ள தடைகள் என்ன?

பாதுகாக்கப்பட்ட உலக வனங்களில் ஒன்றாகிய சிங்கராஜ வனப்பகுதிக்கு மக்கள் செல்வதற்காக காட்டின் மக்கள் நடமாட்டம் உள்ள முதலாவது வலயப் பகுதிவரை கற்பாதைகள் அமைத்து சென்றுவர முடியுமென்றால் அதே போன்று வனத்தினை பாதிக்காத வகையில் கற்பாதைகளை அமைத்து பயணிகள் மற்றும் பக்தர்கள் உரிய முறையில் நடந்து சென்று வழிபாடுகளை நடத்தி வருகின்ற வகையில் வெடுக்குநாறி மலைக்குச் செல்லும் பாதையில் உரிய கற் பாதைகளை அமைப்பதற்கேனும் வனவளத் திணைக்களம் அனுமதியை வழங்குவதில் உள்ள தடைகள் என்ன?

இந்த ஆலயத்தின் தொன்மத்தை அறிந்த வெளியிடத்து மக்கள் கிராமத்துக்குச் சென்று ஆலயத்தைத் தேடி வழிபடச் செல்கின்றபோது இனம் தெரியாதோரால் கேள்விகளுக்கு உள்ளாக்கப்படுவதன் பின்னுள்ள கதைகள்தான் என்ன?? இவைதான் இன்று அந்தக் கிராம மக்களின் விடையற்ற வினாக்களாக உள்ளன.

ஆர்.பிரகாஷ்

# ஈரான் என்னும் பகடை



அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுவதற்கு இன்னமும் சில வாரங்களே எஞ்சியுள்ளன. வரும் நவம்பர் மாதம் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், வெகுவாகச் சரிவடைந்த தனது செல்வாக்கை மீண்டும் கட்டியெழுப்பும் நடவடிக்கையில் இறங்கியுள்ளார் தற்போதைய ஜனாதிபதியும், குடியரசுக் கட்சியின் வேட்பாளருமான ட்ரம்ப். இதற்காக அவர் இம்முறை ஈரானை இலக்குவைத்துள்ளார். ஈரானைப் பலிகொடுத்து ஆட்சியைத் தக்க வைப்பதுதான் ட்ரம்பின் திட்டம்.

**எழுச்சிபெற்ற பிடெனும் ட்ரம்பின் காய்நகர்த்தலும்**

ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டதும் குடியரசுக் கட்சி தனது வேட்பாளராக ட்ரம்ப்பை நிறுத்தியது. மறுமுனையில் ஜனநாயகக் கட்சியின் வேட்பாளர் யார் என்பது தொடர்பில் பெரும் இழுபறிநிலை நிலவியது. கடந்த முறை ட்ரம்பை எதிர்த்துப் போட்டியிட்ட ஹிலாரி கிளிங்டன்தான் இம்முறையும் களமிறக்கப்படுவார் என்று எதிர்பார்க்கப்பட்ட போதிலும் இறுதிக்கட்ட அதிரடி நடவடிக்கைகளால் பிடென் ஜனநாயகக் கட்சியின் வேட்பாளராக நிறுத்தப் பட்டார். ஒபாமா ஜனாதிபதியாகப் பதவி வகித்த காலத்தில் துணை ஜனாதிபதியாக இருந்தவர் பிடென். அதுதவிர அமெரிக்க அரசியலில் கனதியான, தாக்கம் மிக்க நபராகவும் அவர் உள்ளார். இதனால் இம்முறை தேர்தலில் ட்ரம்பை வீழ்த்த சரியான நபர் பிடென் என்று கருத்துக்கணிப்புக்கள் இருந்தன இருக்கின்றன.

மெக்சிக்கோவில் எல்லைச்சுவர் அமைத்தமை, அகதிகளை அமெரிக்காவுக்குள் தடுத்தமை, வேலையில்லாத் திண்டாட்டம், கொரோனாப் பெருந்தொற்று என்று ட்ரம்புக்கு ஏகப்பட்ட பின்னடைவுகள் இருந்தபோதிலும் தற்போது அவற்றையெல்லாம் சரி செய்து மீண்டும் ஜனாதிபதியாக ஆகிவிடவேண்டும் என்பதில் ட்ரம்ப் கண்ணும் கருத்துமாக உள்ளார். இதற்காக அவர் மூன்று விடயங்களைக் கையில் எடுத்துள்ளார். ஒன்று இஸ்ரேலுக்கு அங்கீகாரம் தேடிக்கொடுத்தல், இரண்டாவது வெள்ளையர்களின் வாக்குகளை இலக்குவைத்தல், மூன்றாவதும் முக்கியமானதும் உலகப்பொலிஸ் என்ற அந்தஸ்தில் அமெரிக்காவை தலைநிமிர வைத்தல் என்பனவாகும். இதில் இஸ்ரேல் மற்றும் அரபு இராச்சியத்துக்கு இடையில் அண்மையில் அமெரிக்காவின் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட வர்த்தக ஒப்பந்தத்தின் மூலம் அமெரிக்க வெள்ளையர்களின் வாக்குகளையும், இஸ்ரேல் ஆதரவாளர்களையும் கவர்ந்துவிட்டார் ட்ரம்ப்.

**உலகப்பொலிஸ்**

உலகில் வேறெந்த மக்களுக்கும் இல்லாத தலைக் கணம் ஒன்று அமெரிக்கர்களுக்கு உள்ளது. அது தாம்தான் உலகப்பொலிஸார் என்ற எண்ணவோட்டம். உலக அரசியலைத் தீர்மானிகும் சக்தி தாமே என்பதில் அவர்களுக்கு அவ்வளவு அலாதி பிரியம். இதனால் தான் ஒவ்வொரு ஜனாதிபதித் தேர்தலின்போதும் ஆட்சியில் இருக்கும் கட்சி உலக அளவில் பெரும் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளும். ஆட்சியைத் தக்கவைக்க முன்னெடுக்கும் பெரும் வியூகமாக இதை குடியரசுக் கட்சியும், ஜனநாயகக் கட்சியும் கைக்கொள்கின்றன. ட்ரம்பும் இதற்கு விதிவிலக்கல்லர். தாமே உலகப்பொலிஸ் என்று நிரூபிப்பதற்கு அவர் இம்முறை ஈரானைத் தெரிந்தெடுத்துள்ளார். ஈரான் மீதான பொருளாதாரத் தடைகள், ஆக்கிரமிப்புகள், இராணுவ அச்சுறுத்தல்கள், நேரடித் தாக்குதல்கள் என்பவற்றைக் கடந்த சில மாதங்களாக மேற்கொண்டுவரும் ட்ரம்ப் தற்போது அவற்றை அதிகப்படுத்தியுள்ளார். 'அமெரிக்காவை ஈரான் தாக்கினால் ஆயிரம் மடங்கு பதிலடி கொடுக்கப்படும். ஈரான் தரைமட்டமாகும்' என்ற அவரது எச்சரிக்கை தற்போது பல அதிர்வலைகளை உலக அரங்கில் தோற்றுவித்துள்ளன. அமெரிக்காவின் இராணுவ நடவடிக்கையால் ஏற்கனவே தனது முக்கிய தளபதியான சுலைமானியை இழந்த ஈரானும் ட்ரம்ப் எதிர்பார்த்ததுபோல் கடும் துலங்கல்களை வெளிப்படுத்த ஆரம்பித்து விட்டது. இந்த மோதல்கள் மேலும் முற்றி அது இராணுவ நடவடிக்கை வரையில் விரிவடைந்தால்போதும், ட்ரம்ப்தான் அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு ஜனாதிபதி. ட்ரம்ப் ஜனாதிபதியாவது கடந்தமுறை ரஷ்யாவின் கைகளில் இருந்ததைப் போன்று இம்முறை அது ஈரானின் கைகளுக்கு மாறியிருக்கிறது. இனியெல்லாம் ஈரான் விட்ட வழிதான்!

---

# 'தல' தரிசனம்



சுமார் ஒன்றரை வருடங்களின் பின்னர் மீண்டும் இன்று கிரிக்கெட் மைதானத்துக்குத் திரும்புகின்றார் டோனி. கடந்த வருடம் இங்கிலாந்தில் நடைபெற்ற உலகக் கிண்ணத் தொடரின் அரையிறுதி ஆட்டத்தில் நியூசிலாந்திடம் தோல்வியடைந்து வெளியேறியது இந்திய அணி. இந்தத் தொடரின் பின்னர் டோனி தொடர்ந்து ஓய்வில் இருந்து வந்தார். ஓரிரு தொடர்களில் அவர் புறக்கணிக்கப்பட்டார். இவ்வாறிருக்கையில் கடந்த மாதம் 15ஆம் திகதி இரவு தமது ஓய்வு முடிவை அவர் அறிவித்தார். ஓய்வின் பின்னர் டோனி இன்றையதினமே( செப்ரெம்பர் 19) மீண்டும் கிரிக்கெட் மைதானத்துக்குத் திரும்புகின்றார்.

ஐ.பி.எல் தொடர் இன்று ஆரம்பமாகின்றது. இன்றைய முதலாவது ஆட்டத்தில் மும்பை - சென்னை அணிகள் மோதுகின்றன. இன்றைய ஆட்டம்தான் டோனி நீண்ட இடைவெளியின் பின்னர் களமிறங்கும் ஆட்டமாகும். இன்றைய இந்த ஆட்டம் தொலைக்காட்சியில் அதிகமானோரோல் பார்க்கப்பட்ட ஆட்டம் என்ற சாதனையைப் படைத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஏனெனில் 'தல' தரிசனம் இன்றாச்சே!.

---

ஆர்.லயனல்


# வேண்டாம் ரசிகர்கள்!



சர்வதேச அந்தஸ்துபெற்ற ரென்னிஸ் தொடர்களில் ஒன்றான பிரெஞ்சுத் தொடருக்கு ரசிகர்களை அனுமதித்தமையைக் கடுமையாக எதிர்த்துள்ளர் நடால். கொரோனா பெருந்தொற்றுக் காரணமாக இந்த ஆண்டு நடைபெறவிருந்த விம்பிள்டன் தொடர் கைவிடப்பட்டது. ஆஸ்திரேலியத் தொடர் அண்மையில் நடந்து முடிந்தது. இதில் ஆண்கள் பிரிவில் தியமும், பெண்கள் பிரிவில் ஓசாகாவும் சம்பியனாகினர். அடுத்ததாக களிமண் தரை ஆட்டமான பிரெஞ்சுத் தொடர் நடைபெறவுள்ளது. இந்தத் தொடரை ரசிகர்கள் நேரில் பார்ப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதற்கு கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளார் நடால். 'கொரோனா பெருந்தொற்றுக்கு மத்தியில் இந்த முடிவு பிற்போக்கானது' என்று விமர்சித்துள்ளார் நடால். நியாயமான கோபம்தானே!

---

# மும்பைக்கு அடிவிழுமா?



நடக்குமா நடக்காதா என்ற பெரும் சந்தேகத்தில் இருந்த ஐ.பி.எல் தொடர் அனைத்துச் சட்டச் சிக்கல்களையும் தீர்த்து இன்று கோலாகலமாக அரங்கேறுகின்றது. நடப்புச் சம்பியன் என்ற அந்தஸ்துடன் களமிறங்கும் மும்பை இந்தியன்ஸ் அணி இந்தத் தொடரில் பின்னடைவைச் சந்திக்கும் என்கின்றனர் கிரிக்கெட் வல்லுநர்கள். மும்பை இந்தியன்ஸ் அணி இதுவரை 4 தடவைகள் கிண்ணத்தைக் கைப்பற்றிய போதிலும், அந்த அணியின் லீக் சுற்றுப் பெறுபேறுகள் ஒப்பீட்டளவில் சற்றுப் பின்டைவே. மும்பைக்கு வெளியில் பெரும்பாலும் பல ஆட்டங்களில் தடுமாற்றத்தைக்காட்டும் அந்த அணி மும்பை - வான்கடே மைதானத்தில் சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்தும். ஆக, சொந்த மண் பலம்தான் மும்பையின் பெரும் எழுச்சி. இந்த வருடத் தொடர் நடைபெறுவதோ ஐக்கிய அரபு இராச்சியத்தில். சொந்த மண் பலம் என்பது இம்முறை எந்த அணிகளுக்கும் இல்லை. இதனால்தான் மும்பை இந்தியன்ஸ் அணி இம்முறை வாங்கிக்கட்டும் என்கின்றனர் அவதானிகள். பார்ப்போமே!